ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ப்ராஷ்யம்

[ஸ்ருதப்ரகாசிகா ஸஹிதம்]

தமிழ் மொழி பெயர்ப்பு.

[இரண்டாவது வால்யூம்]

ஜந்மாத்யதிகரணம்,

சாஸ்த்ரயோநித்வாதிகரணம்,

ஸமந்வயாதிகரணம்

அடங்கியது.

இவ்வ

திருச்சினாப்பள்ளி

அட்வகேட் ஸ்ரீமத் உ.வே. மீமாம்ஸா ரத்னம்

A. V. கோபாலாச்சாரியார் M.A., B.L., ஸ்வாமிகளால்

மொழிபெயர்க்கப்பெற்று

மேடி ஸ்வாமிகளால் உபகரிக்கப்பட்ட அதிகரண ஸங்க்ரஹமும்,

அரும்பத விளக்கமும் சேர்க்கப்பட்டுள்ளன.

ஸ்ரீரங்கம்

ஸ்ரீ பாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்புச் சங்கத்து பிரஸிடெண்டு

திருப்புறம்பயம், ப்ரபந்ந வித்வான் ஸ்ரீமாந்

T. D. இராமஸ்வாமி நாயடு அவர்களால்

ஸ்ரீரங்கம்

ஸ்ரீ விலாஸம் அச்சியந்திரசாலையில்,

பதிப்பிக்கப்பெற்றது.

1937

Copy Right.

ரூ. 3—8—0.

ஸ்ரீ:

அறிவிப்பு.

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்புக் கமிட்டி ப்ரசுரங்கள்:—

	ரூ.	அ.	பை.
ஸ்ரீ பாஷ்யம் தமிழ்மொழி பெயர்ப்பு (ச்ருதப்ரகாசிகா ஸஹிதம்)–			
முதல் வால்யூம் ...	7	8	0
இரண்டாவது ,, ...	3	8	0
குறிப்பு:— ஷை இரண்டு வால்யூம்களும் ஏக காலத்தில் வாங்குபவர்களுக்கு ரூ. 9—0—0க்குக் கொடுக்கப்படும்.			
திருவாய்மொழி ஈட்டின் ப்ரமாணத்திரட்டு (ப்ரமாணங்களுக்கு ஆகரமும் பதவுரையும்)– ரப் காபி ...	1	8	0
ஷை கிளேஸ் காபி ...	2	0	0
ஸ்ரீவசனபூஷண ப்ரமாணத்திரட்டும் அரும்பத விளக்கமும் இரண்டாவது பதிப்பு ...	1	0	0
திருமந்த்ரார்த்த ப்ரமாணத் திரட்டும் அரும்பத விளக்கமும் இரண்டாவது பதிப்பு ...	அச்சில்		
தத்வத்ரய ப்ரமாணத்திரட்டு ...	0	8	0
அர்த்த பஞ்சக வியாக்யானம் ...	0	8	0
ஆழ்வாராசார்யாள் அபிதான விளக்கம் ...	0	4	0
ஸ்ரீ ஆராவமுதன் பெருமை ...	0	2	0
கோயில் திருவத்யயநோத்சவச் சிறப்பு ...	0	0	9

☞ ஷை க்ரந்தங்கள் கிடைக்குமிடங்கள் :—

(i) R. A. பங்காருஸ்வாமி நாயடு,
தெற்கு ராயகோபுரம் எக்ஸ்டென்ஷன், ஸ்ரீரங்கம்.

(ii) S. ராமஸ்வாமி நாயடு,
52, பிள்ளையார்கோவில் தெரு, திருவல்லிக்கேணி P. O. (மதராஸ்)

(iii) T. D. ராமஸ்வாமி நாயடு,
திருப்புறம்பயம் P. O. (கும்பகோணம்).

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

விஜ்ஞாபனம்.

ஒரு காலத்தில் "குப்பை உயர்ந்தது, கோபுரம் தாழ்ந்தது" என்ற முறையில், நம் வைதிக மதம் குன்றி பாஹ்ய குத்ருஷ்டி மதங்கள் தலை தூக்கி உலகம் நாஸ்திகத்தைத் தழுவி சீர் குலைந்து இருளடைந்து தாழ்வுற்றது. இத்தை அறிந்தல்லவோ, "தாழ்வொன்றில்லா மறை தாழ்ந்து" இத்யாதியில் நம் பெரியாரும் அங்கலையைப் பணித்தனர். அவ்வமயம் திருவவதரித்தருளிய எம்பெருமானார் மதாந்தரங்களைக் களைந்து, வைதிக மதம் செழித்தோங்குதற்குக் கருவியாகத் தம் பேரறிவாலும், பேராற்றலாலும் ப்ரஹ்ம ஸூத்திரங்களுக்கு அவ்வருகில்லாத ஓர் அரிய பெரிய பாஷ்யத்தை வெளியிட்டருளினர். இம்மேதை உலகிலுள்ள பாஷ்யங்கள் பலவற்றிலும் தலைசிறந்து உலவி வைதிக மதச்சிறப்பிற்குப் பேருதவி புரிந்து வருகின்றது. இந்தப் பாஷ்யமோ! வடமொழியிலிருப்பதால் தத்வங்களைப் பலரும் எளிதில் ஆராய்ந்தறிந்து உய்வதற்கில்லாமல் பெருங்குறையாய் உள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன், திருவரங்கம் பெரிய கோயிலின் கண் இருந்த காரப்பங்காடு நியாய வேதாந்த வித்வான் ஸ்ரீமத். உ. வே. **தேசிவரதாசாரிய ஸ்வாமிகள் ஸ்ரீ** பாஷ்யத்தின் பெருமைக்கும், அதில் தமக்குள்ள ஜ்ஞானத்திற்கும் தகுதியாக உடையவர் சன்னிதியில், ஸ்ரீ பாஷ்ய காலக்ஷேபத்தை நடாத்தியருளினார்கள். அப்போது அக்கோஷ்டியில் அன்வயித்துச் சீரிய பொருள்களைச் செவி யேற்ற பாகவதர்களுள் பலர், பின்புள்ளோரும் ஸ்ரீ பாஷ்யத்தின் இனிய சுவையைச் சுவைத்து உஜ்ஜீவிப்பதற்குத் தக்க உபாயம் அப் பாஷ்யத்தைத் தமிழில் மொழி பெயர்த்தலே என அறுதியிட்டனர்

பெரிய பெருமாள், தாம் அத்யயன உற்சவம் கண்டருளும் இராப்பத்தில் ஆயிரக்கால் மண்டபத்தில் ஸ்ரீவைஷ்ணவ மஹான்கள் பலரைத்திரட்டி "ஸ்ரீ பாஷ்யம் தமிழ் மொழி பெயர்ப்புச் சங்கம்" என்னும் மகுடம் பூண்ட ஒரு சங்கத்தை நிறுவி, அவர்கள் ஆர்வத்தைத் தலைக்கட்டி வைத்தனர்.

இச் சங்கத்தார், பொருளையும், காலத்தின் அருமையையும், சிரமத்தின் மிகுதியையும் நினைத்தாது, திருச்சி செயின்ட் ஜோஸப்ஸ் காலேஜ் ஸம்ஸ்கிருத தலைமைப் பண்டிதர் மஹாமஹோபாத்யாய ஸ்ரீமத்.உ.வே. **T V. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமிகளைக்** கொண்டு, ப்ரஹ்ம ஸூத்திரங்களுக்கு முதலாயும் சிறந்ததாயுமுள்ள ஜிஜ்ஞாஸாதிகரணத்தைச் சுருதப்ரகாசிகையுள்பட ஸ்ரீ **பாஷ்யத்தைச்** செந்தமிழில் நேர்மை பட மொழி பெயர்ப்பித்து வெளி

யிட்ட இச்செயலை அறியாத ஸ்ரீவைஷ்ணவர் ஒருவருமிலர். இந்த அரிய செயல் காரியகர மாகுமாறு, ஸ்ரீவில்லிபுத்தூர் கந்தாடை ஸ்ரீமத்.உ.வே. ஸ்ரீ நிவாஸாசாரிய ஸ்வாமிகள் மிக்க கருணையுடன் திருச்சி நம் பிள்ளை சபையில், ஷே அச்சிட்ட மொழிபெயர்ப்பைத் தழுவி இனிமை பட யாவருக்கும் புலனுகுமாறு ஒரு முறை காலக்ஷேபம் ஸாதித்து, சாத்து முறையையும் விபவமாய் நடாத்தியருளினர்கள். இவ்வனுபவம், மிகுதியுள்ள ஸூத்திரங்கள் யாவையும் இங்ஙனே தமிழ்படுத்த அவர்கள் மனத்தைத் தூண் டிற்று.

இவர்கள் ஆர்வத்தை அறிந்த திருச்சி அட்வகேட், மீமாம்ஸா ரத்னம் ஸ்ரீமத். உ. வே. **A.V. கோபாலாசாரியார்** M.A.,B.L, **ஸ்வாமி** களோ! தமக்குக் காரியாந்தரங்கள் பல இருப்பினும் அவைகளைப் புறக் கணித்து, ஸ்ரீ பாஷ்யத்தின், மேல் மூன்று அதிகரணங்களை எளிய நடையில் சுருகப்ரகாசிகையுடன் தமிழ்படுத்தி, பின்னும் தாம் நுணுகி ஆராய்ந்த அர்த்தங்கள் பலவற்றையும் தொகுத்து அநுபந்தத்தில் விளக்கியும், அதிகரணங்களுக்குச் சுருக்கமாகப் பொருளுரைத்தும் நம் ஸித்தாந்தத் திற்கு உதவி புரிந்தனர். இந்த ஸ்வாமிகள், அநந்திய ப்ரயோசனமாய்ச் செய்த இவ்வுதவிக்குக் கைம்மாறு அவர்களுக்குப் பல்லாண்டு இசைப்பதைத் தவிர செய்யும் காரியம் வேறு ஒன்று மிலது.

இவர்களுக்கு உதவியாய் நின்று, சாதித்த அர்த்தங்கள் ஒன்றையும் விடாமல் பிழையறப் பட்டோலை கொண்ட, ஸ்ரீரங்கம் உயர்தரக் கல்லூரி ப்ரபந்த உபாத்தியாயர் ஸ்ரீமத்.உ.வே. **N.K. இராகவாசாரிய ஸ்வாமி** களுக்கு நன்றி செலுத்த இச்சங்கத்தார் என்றும் கடமைப்பட்டுள்ளனர். இவர்களால் உபகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பை அச்சேற்றும் பொறுப்பை வகித்தும், அத்தால் நேரும் தன்பங்கள் பலவற்றையும் பொறுத்தும் புத்தக வடிவமாகக் கொண்டுவந்த ஸ்ரீரங்கம் ஆனரரி மாஜிஸ்டிரேட் ஸ்ரீமான் **R.A. பங்காருஸ்வாமி நாயடு** அவர்களின் ஒப்பற்ற உதவிக்குப் பெரிய பெரு மாளே அருள் புரிவாராக. இந்நூலை அச்சேற்றிய ஸ்ரீரங்கம் "ஸ்ரீ விலாஸ அச்சாபீஸ்" தலைவர் ஸ்ரீமத்.உ.வே. **S.M. ஸுந்தரராஜ அய்யங்கார் ஸ்வாமிகள்** தகைமையும் பெரிதும் பாராட்டத் தக்கதே.

அறிவிற் சிறந்த பெரியோர் செய்தற்குரிய இந்தச் செயலை, அறிவு மிம் மற்றும் பலவற்றிலும் பயனற்ற அடியேன் கொண்ட இச் சாகஸ சுருத் யத்தை நலம் பெறச்செய்த அரங்க மாளிகையில் அனந்தன் மேல் அறிதுயில் அமர்ந்த அண்ணலை நாளும் இறைஞ்சும்,

தாழ்மையுள்ள,

T. D. இராமஸ்வாமி இராமாநுஜ தாசன்,
[திருப்புறம்பயம் — திருக்குடந்தை]
"ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்புச் சங்கம்"
அக்கிராசனர்.

ஸ்ரீரங்கம்,
18-6-1937.

விசுத்தி பத்ரிகை.

பக்கம்.	வரி.	அசுத்தம்.	சுத்தம்.
10	33	வேனும்	வேணும்
26	28	வேறு	வேறன்று
43	18	நிர்வசனங்கள்	நிர்வசனங்கள்.
47	16	யத்	யத:
48	8	தோஷன்களில்	தோஷங்களின்
,,	28	வாராது	வரும்
64	29	சுத்தோதாத்த	அந்தோதாத்த
73	14ம் வரி முழுவதும்		இந்த வரியை ஸ்ரீ பாஷ்யத்தில் சேர்த்துக்கொள்க.
79	16	லஷணமாக	லக்ஷணமாக
82	23	நிருபிக்கிற	நிரூபிக்கிற
,,	24	சாத்ர	சாஸ்த்ர
83	6	கொள்ளளாம்	கொள்ளலாம்
,,	9	மாணங்களில்	மானங்களுள்
85	27	ஸாஸ்த்ரம்	சாஸ்த்ரம்
,,	32	க்ராஹ	க்ராஹக
89	29	விளக்கம்	விளக்கும்
,,	30	வ்யுத்பத்தி	உத்பத்தி
90	32	தவிர	தவிர-ஒன்றும்
91	19	ப்ரம்ம	ப்ரம்மம்
93	27	சாஸ்த்ரவிஷய	சாஸ்த்ரவாக்ய
94	24	வ்ருத்தி	வ்யக்தி
,,	29	வ்ருத்தி	வ்யக்தி
95	7	த்ரஷ்டம்	த்ருஷ்டம்
96	21	சில	சிர
97	32	த்ருஷ்டம்	அத்ருஷ்டம்
105	22	நிமிச்சோ	மூச்சோ
105	24	ஸாத்ய	ஸாத்யம்
,,	32	ஒரு சேதனன்	(விட்டுவிட)
124	11	மூகலியதை	மூதலியதை
146	25	சர்வேஸ்வரன்	ஸர்வேச்வரன்

விசுத்தி பத்ரிகை (தொடர்ச்சி).

பக்கம்.	வரி.	அசுத்தம்.	சுத்தம்.
178	33	அர்த்ததத்தை	‡ அனர்த்தத்தை
191	13	உபகாரத்தை	உபஹாரத்தை
202	14	ஏப்பட்ட	ஏற்பட்ட
204	3	மந்தாக்நிர்நாம்	மந்தாக்நிர்நாம்ப்
,,	6	களஞ்சபக்ஷி	† களஞ்சபக்ஷி
205	8	அக்ஷரகங்ளின்	அக்ஷரங்களின்
207	21	பாக்கியமும்	வாக்கியமும்
208	24	ஸந்தோஷம்	ஸந்தோஷ
212	2	நிஷ்வ ஷ்வ	நிஷ் ஷ்வ
217	16	அதிகாரத்துக்கு	அதிகாரிச்சு
222	16	பாரூவபமா	பாவரூபமா
223	15	விருப்பத்	விருப்பத்தி
269	13	ஆகுமோ	ஆகும்
272	24	ஹேயத்வ	ஹேத்வ
273	8	த்யாநய	த்யாநஸ்ய
,,	,,	த்யேயஸ்த்யா	த்யேயத்யா
279	27	விப்ரதிஷேதம்	விப்ரதிஷேதம் என்பது
293	18	வ்யத்தி	வ்யக்தி
300	7	கூணாஷிவ	கூணாயிவ
302	26	காலங்களையும்	காமங்களையும்
338	14	தக்ஷணமே	தத்க்ஷணமே
350	15	க்ரஹதம்	க்ரஹணம்
353	6	தாமி	தர்மி
355	18	ஸொந்தம்	ஸ்வந்தமென்கிற ஆகாரம்
,,	27	யாதலல்	யாதலால்
357	17	கண்டோக்தமாகத்	கண்டோக்தமாகக்
366	2	உள்ளவேயுள்ளவே	உள்ளவே

குறிப்பு:—

‡ இந்த வார்த்தை சில பிரதிகளில் சரியாக அச்சடிக்கப் பட்டிருக்கிறது.

கீழே காட்டியதை 204ம் பக்கத்தில் அரும்பதமாகச் சேர்த்துக்கொள்க:—

† விஷம் பூசின அம்பினால் கொல்லப்பட்ட ஜந்துவின் மாமிசத்தை

——

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீமதே ராமானுஜாய நம: ॥

ஸ்ரீபாஷ்யகாரரருளிச்செய்த

ஸ்ரீ பாஷ்யம்

முதல் அத்யாயம்.

முதல் பாதம்—இரண்டாவது அதிகரணம்.

—*—

ஜந்மாத்யதிகரணம்.

ஸ்ரீஹாஷ்ருஷீ ॥

கிம் வா நஹஸ வ்ருஹ—யஸ ஜிஜ்ஞாஸ்ய—வ்ருத உதாஹோ—

கிம் புநஸ்தத்ப்ரஹ்ம—யத் ஜிஜ்ஞாஸ்யமுச்யத இத்யத்ராஹ—

ஸ்ரீபாஷ்யத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு.

—(*)—

விரும்பி விசாரித்து அறிய வேண்டுமென்று கூறப்படும் அந்தப் பொருள் யாதாகும்? என்கிற ஸங்கை வர அந்த விஷயத்தில் கூறுகிறார்—

ஸ்ரீ ஸுதர்சனபட்டரருளிச்செய்த

ஸ்ரீச்ருதப்ரகாசிகையின் தமிழ் மொழிபெயர்ப்பு.

அதிகரணங்களுக்கு ஏழு விதமான சங்கதிகள் உண்டு. சாஸ்த்ரம்,* காண்டம்,

---

அநுபந்தம்—

*சாஸ்த்ரம் என்பது இருபது அத்யாயங்களடங்கிய வேதார்த்த விசார ரூபமான மீமாம்சா சாஸ்த்ரம். இங்கே தைத்திரீய ச்ருதியின் பொருளை விசாரித்து நிர்ணயம் செய்வதால் இது மீமாம்சா சாஸ்த்ரத்தில் சேரும். காண்டம் என்பது

ஸ்ரீ ॥ ஜ்ஞாஜ்ஞாப்⁴யாம் ॥ ஜந்மாத்³யஸ்ய யத:

ஸூ. ஜந்மாத்³யஸ்ய யத:

உற்பத்தி முதலியது இதற்கு எதிலிருந்தோ

த்விகம், அத்யாயம், பாதம், பேடிகை, அதிகரணம் என்கிற ஏழு ஸம்பந்தங்களைக் கொண்டு ஏழுவிதமாகும். இந்த ஏழு ஸங்கதிகளில் மற்ற ஆறு ஸங்கதிகளும் ஸ்பஷ்டமாயிருப்பதால் அதிகரணஸங்கதியை மட்டும் கூறுகிறார் கிம் புந: என்று. சாஸ்த்ர ஸங்கதியோவெனில் வேதார்த்தத்தை விசாரிக்கும் தன்மையால் மிகத்தெளிவானது வேதாந்தத்தின் அர்த்தத்தை விசாரிக்கும் தன்மையால் காண்டஸங்கதியும், காரணத்தைப் பற்றியதால் த்விக ஸங்கதியும், காரணத்தைப் பற்றிய உபநிஷத் வாக்யத்தை ந்யாயங்களைக் கொண்டு அர்த்தத்தை விசாரிப்பதால் அத்யாய ஸங்கதியும், லக்ஷணத்தின் அஸம்பவய். என்கிற சங்கையைத் தவிர்ப்பதில் நோக்கு உடையதால் பாத ஸங்கதியும், சாஸ்த்ராரம்பத்தை ஸமர்த்திப்பதில் நோக்குடையதால் பேடிகா ஸங்கதியும் அப்படியே மிகத் தெளிவானது. ஆகையால் "கிம் புந:" என்று தொடங்கும் பாஷ்யத்தால் (அதிகரணஸங்கதியென்கிற) *அவாந்தர ஸங்கதி கூறப்படுகிறது. 'ஜிஜ்ஞாஸ்யம்' என்கிற பாஷ்யபதத்திற்கு விசாரிக்கத் தக்கது என்று

உபநிஷத்துக்களாகிய ப்ரும்ம காண்டம். ப்ரும்ம பாகமான உபநிஷத்துக்களின் அர்த்தத்தை விசாரிப்பதால் இந்த அதிகரணம் ப்ரும்ம காண்டத்தில் ஸங்கதமாகும் 'த்விகம்' என்பது ப்ரும்ம ஸூத்ரகளில் முன்பாதியாகிய முதலிரண்டு அத்யாயங்கள். நான்கு அத்யாயங்களடங்கிய ப்ரும்ம ஸூத்ரம் இரண்டு இரட்டைகளாகும். முதலிரண்டு அத்யாயங்கள் லித்தமான ப்ரும்மத்தின் ஸ்வரூபம் முதலியவைகளைப்பற்றி விசாரிப்பவை. பின்னிரண்டு அத்யாயகளும் ஸாதன ஸாத்யங்களைப் பற்றியவை. இவ்வதிகரணம் ப்ரும்மத்தின் லக்ஷணத்தை விசாரிப்பதால் முன்னிரட்டையில் சேரப் பொருந்தும். இந்த முதலத்யாயம் ஸமந்வயாத்யாயமென்று பெயர்படும். காரணத்தைச் சொல்லும் ச்ருதிகளும் காரணத்தோடு இன்றியமையாது சேரும் குணங்களைச் சொல்லும ச்ருதிகளும் ப்ரும்மத்தை தாத்பர்யத்துடன் கூறுகின்றன என்பது ஸமந்வயாத்யாயத்தின் முக்ய நோக்கு. இங்கே தைத்திரீயச்ருதியிலுள்ள காரணவாக்யத்தை ப்ரும்மத்தினிடத்தில் ஸமந்வயம் செய்வதால் முதலத்யாயத்தில் இந்த அதிகரணம் ஸங்கதமாகும். 'பாதம்' என்பது இந்த சாஸ்த்ரத்தின் நான்கு அத்யாயகளின் ஒவ்வொரு அத்யாயத்திலுமுள்ள நான்கு பாதங்களையும் சொல்லும்.

* ஒவ்வொரு பாதத்திற்கும் ஒவ்வொரு முக்யமான நோக்குண்டு. இச்சப் பாதத்தை அயோக வ்யவச்சேத பாதம் என்பர். ப்ரஹ்மத்திற்கு கூறப்படும் ஸர்வ காரணத்வம் முதலான லக்ஷணம் ப்ரஹ்மத்திற்குப் பொருந்தவே பொருந்தாது என்கிற ஆக்ஷேபத்தை நீக்குவது அயோக வ்யவச்சேதமாகும். அயோகம் என்றால் பொருந்தாமை. காரணத்வம் என்பது ப்ரமத்திற்கு ஸம்பவிக்காது என்கிற ஆக்ஷேபம் காரணத்வாயோக ஆக்ஷேபம். அந்த ஆக்ஷேபத்தை நீக்கி காரணத்வத்தை

ஜந்மாதீதி ॥ ஸ்ருஷ்டிஸ்திதிப்ரளயே । தத்ஸாமாந்யஜ்ஞானோ

ஜந்மாதீதி ॥ ஸ்ருஷ்டிஸ்திதிப்ரளயம். தத்ஸாமாந்யஜ்ஞானோ

ஜந்மாதி என்றால் ஸ்ருஷ்டி ஸ்திதி ப்ரளயம் ஆகிய மூன்று அடங்கிய ஸமுதாயம் என்று பொருள். இந்த ஜந்மாதி என்கிற பதத்தில் உள்ள ஸமாஸம் பஹுவ்ரீஹி ஸமாஸமாகும். ஸமாஸத்திலுள்ள தனித்தனிப்ப

பொருள். மற்ற எல்லா புருஷார்த்தங்களையும், அவற்றின் ஸாதனங்களையும் விட்டு விட்டுப்ராப்யமாகவும், உபாயமாகவும் எது அறியத்தக்கது என்று முன் கூறப்பட்டதோ அது என்று அர்த்தம். ப்ராப்யமாகவும் ப்ராபகமாகவும் அல்லவா ப்ரும்மம உபநிஷத்துக்களின் முதலெடுப்பில் தோன்றிய பொருளாகக் கொள்ளப் பட்டது. ஜிஜ்ஞாஸ்யம் என்கிற இந்த பாஷ்யபதத்திலுள் ப்ரணவம், வேதம், ப்ரக்ருதி, முதலிய தாழ்ந்த பொருள்கள் ப்ரும்ம சப்தத்திலுள் உபசாரத்தால் சொல்லப்படுவதெல்லாம் விலக்கப்படும் என்று சிலர்* வ்யாக்யானம் செய்தது ஸரியல்ல. மற்ற பொருள்களையெல்லாம் தவிர்க்கும்படியான லக்ஷணம் மேலேயல்லவா சொல்லப்பட்டு அதனுல் அந்த விலக்குதல் ஸித்திக்கப் போகிறது. ப்ரும்ம சப்தத்தால் கூறப்படும் பொருள் ஸ்வரூபத்தாலும், குணங்களாலும் தனக்கு மேற்பட்ட உயர்வற்ற பெருமையையுடையது. 'ப்ருஹதி' 'ப்ரும்மயதி' (விருத்தியடைகிறது; பிறரை வ்ருத்தி செய்கிறது; பெரிதாக்குகிறது; என்கிற ச்ருதியாலும், (பெருமையாலும், பெருகச்செய்வதாலும் ப்ரும்மம என்று உணர்க்கப்படுகிறது) என்கிற ஸ்ம்ருதியாலும், ஏற்பட்ட பதார்த்தநிர்வசனத்தால் இவ்விதமே ப்ரும்மசப்தத்திற்குப்பொருள். அந்த விஷயத்தில் "ப்ராம்மணனே எல்லா தேவதைகளுமாவான்." "இந்த்ரனே உனக்கு மேற்பட்டவரில்லை." "அக்நி எல்லா தேவதைகளுமாவார்." 'ருத்ரன் ஒருவரே." "ஸோமர் வீசுகிறார்; எல்லா புத்திகளுக்கும அவர் உத்பாதகர், ஸ்வர்கத்திற்கும் உத்பாதகர்; பூமிக்கும் உத்பாதகர்; அக்நிக்கும் உத்பாதகர்; ஸூர்ய

நிலைநிறுத்துவதில் தாத்பர்யம் இருப்பதால் இந்தப் பாதத்தில் இது ஸங்கதம். படிகை என்பது ஒவ்வொரு பாதத்திற்குள் ஏற்படும் விபாகம். சில அதிகரணங்கள் சேர்ந்து அந்தந்தப் பாதத்தின் கருத்திற்கு இசைந்த ஒவ்வொரு விஷயங்களை விளக்கும். இந்தப் பாதத்தில் மூதல் நான்கு அதிகரணங்களும் இந்த வேதாந்த மீமாம்ஸாசாஸ்த்ரத்தின் ஆரம்பத்தை ஸமர்த்திப்பதால் உபோத்காதம் என்கிற பேடிகையாகும். இந்த அதிகரணமும் இந்த சாஸ்த்ரத்தின் ஆரம்பத்தை ஸமர்த்திப்பதால் இந்த பேடிகையில் இது ஸங்கதமாகும். அதிகரண ஸங்கதி எனபது முன்னதிகரணத்திற்கும் பின்னதிகரணத்திற்கும் தடர்ச்சி என்கிற பொருத்தம்.

* சிலரென்பது ச்ருதப்ரகாசிகைக்கு முன்பு மேகநாதஸூரிகளால் ஸ்ரீபாஷ்யத்திற்கு செய்யப் பட்ட வ்யாக்யானத்தைக் குறிக்கிறது. 'ஜிஜ்ஞாஸ்யம்' என்கிற பாஷ்யபதம் முன் ஸூத்ரத்திற்கும் இந்த ஸூத்ரத்திற்கும் ஸங்கதியை ஸூசிக்கிறதே யொழிய ப்ரஹ்மசப்தத்தின் பொருளாகிய ப்ரணவம் முதலியதை விலக்குவதில் நோக்குடையதல்ல, என்று ச்ருதப்ரகாசிகையின் தாத்பர்யம்.

வஹ்ன்வீஹி: । கவ்ய - கவிகர்மவிவியவிதிதரவநவ்ய நியததெஶ

பஹ்ன்வ்ரீஹி: ! அஸ்ய – அசிந்த்யவிவிதவிசித்ரரசநஸ்ய நியததேஶ

தங்களின் பொருள்களைக் காட்டிலும் வேறேதோர் பொருளே முக்கியமாகக் குறிப்பது பஹ்ன்வ்ரீஹி ஸமாஸமாகும். பஹ்ன்வ்ரீஹியிலும் இது தத் குணஸம்விக்ஞானபஹு என்று சொல்லப்படும் பஹ்ன்வ்ரீஹியர்கும்.

அஸ்ய - நிர்தேஶபதற்கேபறிதான அநேகவித விசித்ர அமைப்பையுடை யதும், எந்தெந்த தேசத்தில் எந்தெந்தக்காலத்தில் ப்ரம்மா முதலாக புழு

ஞ்சும் உத்பாதகர்; இந்த்ரனுக்கும் உத்பாதகர்; விஷ்ணுவுக்கும் உத்பாதகர்.' 'அப்புக்கள (ஜலங்களே) இவையெல்லாம்." இவை முதலிய ச்ருதி வாக்யங்களால் ப்ராம்மணர், அக்நி, இந்த்ரன் முதலியவர்களுக்கு ஒப்பார் மிக்காரிலாமை காணப்ப டுவதால் மேற்பட்ட பொருளின் உண்மைகலக்கமாயிருக்கிறது. ஆகையால் 'அவை ருஞ் தாபத்ரயங்களால் வருந்துமவரால் விரும்பியறியவேண்டிய அந்த ப்ரும்மம் என்ன லக்ஷணமுடையது' என்பது பாஷ்யத்தின் ப்ரச்நத்திற்குப் பொருள். கூறிய எல்லாவற்றிற்கும் ஒப்பார் மிக்காரிலாமை காணப்பட்டாலும் அது பரஸ்ப ரவிரோதத்தால் தடையுப் படுவதாலும், ஸாமான்ய ஸ்தோத்ரம் முதலிய வேறு ரீராக்யகளுடைய வாக்யங்களில் சொல்லப் படுவதாலும், ஆதரிக்கத் தக்கதல்ல. உண்மையை விளக்குவதையே முக்கிய நோக்காகவுடைய ஸ்ருஷ்டி ப்ரளயங்களைச் சொல்லும் சந்தர்ப்பங்களில் எது உயர்வற உயர்வையுடையதாகக் கூறப்படுகிறதோ அதுவே விசாரிக்கத் தக்கது என்கிற அபிப்பிராயத்தால் "யதோ வா இமாநி" என்று தொடங்கிய ச்ருதி வாக்யம் ப்ரவர்த்தித்தது என்கிற இவ்வர்த்தத்தைத் திரு வுள்ளத்திற்கொண்டு ஸூத்ரகாரரால் இந்த ஜந்மாதிஸூத்ரம் செய்தருளப்பட்டது என்கிற அபிப்பிராயத்தைக் கொண்டு "விசாரிக்கப்பட வேண்டியதாகச் சொன்ன † அந்த ப்ரும்மம் எதுவாகும்" என்று ஸ்ரீபாஷ்யகாரரால் ஸாதிக்கப்பட்டதே யொழிய எது ப்ரும்மம் என்று கேள்வி அமைக்கப்படவில்லை. ஜந்மாத்யஸ்ய யத: என்று ஸூத்ரத்தை வரைகிறார். ஸூத்ரத்தின் முதல் பதமாகிய 'ஜந்மாதி' என் பதற்கு ஸ்ருஷ்டி ஸ்திதி ப்ரளயங்கள் சேர்ந்த ஸமுதாயம் என்று வ்யாக்யானம் செய்

† ப்ரம்மம் என்பதற்கு நிரதிசயமான பெருமையையுடைய வஸ்து என்று சப்தார்த்தம். தனக்கு மேற்பட்டதில்லை யென்று பல பொருள்கள் அங்கங்கே ச்ரு திகளில் மேன்பார்வைக்குக் காணப் படுகின்றன. அதனால் அநேக வஸ்துக்கள் ப்ரும்மமாகுமென்று கூறப்பட்டது போல் காணுகிறது. ப்ரும்மத்தை விசாரிக்க வேண்டுமென்று முதல் ஸூத்ரத்தில் ப்ரதிஜ்ஞைசெய்து சாஸ்த்ரம் ஆரம்பிக்கிறீர: பல ப்ரும்மங்கள் ச்ருதிகளில் காணப்படுகின்றனவே; அவற்றுள் நீர் விசாரிக்கவே ண்டியசாகச் சொல்லும் அந்த ப்ரும்மம் எது? என்ற கேள்விக்கு உத்தரமாக ஸூத் காரர் இந்த ஸூத்ரத்தை அருளிச் செய்தீர் என்கிற பாஷ்ய வாக்யத்தில் எது ப்ரம்மம் என்று கேள்க்காமல், எது அந்த ப்ரம்மம் என்று கேள்வி கேள்ப்பதால் பொருள் இப்படி ஏற்படுகிறது.

காலபலபோகப்ரஹ்மாதிஸ்தம்பபர்யந்தக்ஷேத்ரஜ்ஞமிஸ்ரஸ்ய ஜகத:

பர்யந்தம தங்கள் தங்களுக்கு நியமிக்கப்பட்ட பலன்களே அநுபவிப்பவர் அடங்கியதுமான உலகத்தினுடைய

கிறார். ஸூத்ரத்திலுள்ள மற்ற இரண்டு பதங்களும் ஸூத்ர வாக்யத்தின் பொருளைச் சேர்த்துக் கூறும்பொழுது வ்யாக்யானம் செய்யப்படும். முதல் பதத்தின் பொருளை விளக்குவதற்கு அது என்ன ஸமாஸம் என்றும் அந்த ஸமாஸத்தின் பொருள் இன்னதென்றும் தீர்மானிக்க வேண்டியிருப்பதால் அதைத் தீர்மானிப்பதற்கு வேறு வாக்யங்களைக் கொண்டு தெளிவாக்கவேண்டும். அந்த ஸமாஸத்தைத் தெளிவு செய்ய வேண்டி அபேக்ஷிதமான வேறு தனி வாக்யத்தை ஸூத்ரவாக்யத்தின் மொத்தப் பொருளைக் கூறும் பாஷ்யவாக்யத்திற்குள் அடக்குவது அசக்யமானபடியால் அந்த ஸமாஸத்தை தனி வாக்யத்தால் இங்கே வ்யாக்யானம் செய்கிறார்.

"ஸ்ருஷ்டி ஸ்திதி ப்ரளயம்" என்கிற பாஷ்ய பதத்தில் ஸ்ருஷ்டி என்பது உற்பத்தியைச் சொல்லும். "ஸ்ருஷ்டிஸ்திதய்ந்தகாலங்களில் ஸ்ருஷ்டிஸ்திதய்ந்தங்களைச் செய்யுமது." என்பது முதலான வசனங்களில் இவ்வர்த்தத்தில் "ஸ்ருஷ்டி*" சப்தத்தின் ப்ரயோகத்தைக் காண்கிறோம். செய்யப்படும் பொருள் செய்விக்கும் பொருள் இவற்றின் செய்கைகளைச் சொல்லும் பதங்களை வேற்றுமையின்றிக் கலந்து ப்ரயோகிப்பது ப்ரும்மத்திற்கு செய்விப்பது என்கிற நிமித்தகாரணத்தன்மையும், செய்யப்படுவது என்கிற உபாதான காரணத் தன்மையும் உள்ளது என்பதை விளக்குவதற்காக. "ஸ்ருஷ்டி ஸ்திதி ப்ரளயம்" என்கிற பாஷ்யபதம் ஸமுதாயம் என்கிற அர்த்தத்தையுடைய த்வந்த்வ ஸமாஸமாகும். ஒரே கார்யத்தைச் செய்வதில் ஒன்றுக் கொன்று ஸஹாயம் செய்து கொண்டு, செய்கை எல்லாவற்றிற்கும் ஸமமாயிருந்து பல பொருள்கள் ஒன்றோடொன்று ஒரு த்வந்த்வ ஸமாஸத்தில் சேர்ந்திருப்பதை இதரேதர யோகம் (ஒன்றோடொன்று ஸம்பந்தம்) என்

* ஸ்ருஷ்டி எனும் பதம் படைத்தல் என்கிற செய்கையைச் சொல்லும். இதைச் செய்விக்கிறவனுடைய வ்யாபாரம் என்பர். அதாவது ப்ரயோஜகவ்யாபாரம். வ்யாபாரம் என்பது செய்கை. ஜன்மம் - உற்பத்தி முதலிய பதங்களையும் ஸ்ருஷ்டி முதலிய பதங்களையும் ஒரே பொருளைச் சொல்வது போல் இங்கே ப்ரயோகம் செய்யப்படுவதற்கு என்ன தாத்பர்யமென்றால் ப்ரும்மம் ப்ரயோஜகமாகவும் ஸ்ருஷ்டிப்பதாகவும், ப்ரயோஜ்யமாகவும், ஸ்ருஷ்டிக்கப் படுவதாகவும் உள்ளது என்பதை விளக்குவதேயாகும். ஸூத்ரத்திலுள்ள ஜன்மசப்தத்திற்கு ஸ்ருஷ்டி என்று பாஷ்யத்தில் பொருள் கூறப்பட்டதால் இவ்விரண்டு வ்யாபாரங்களும் நிமித்தகாரணமும், உபாதானகாரணமுமான ப்ரஹ்மத்திற்கு உள்ளது என்பதைக்காட்டுகிறது. அந்தப்பதார்த்தங்களே ஸ்ருஷ்டிக்கும் ப்ரஹ்மம் ஸ்ருஷ்டிக்கப்படும் ஒவ்வொரு பதார்த்தங்களுக்குள்ளும் அந்தர்யாமியாகவும், நியந்தாவாகவும், கல்யாணமும் அமைத்துச் சொல்லும்.

யதஃ - யஷ்மாதவெழுஷ்ராளிவிலஹேயப்ரத்யநீகஷ்வரூபவாத்ருஷ்ஷ

யத: - யஸ்மாத் ஸர்வேஷ்வராந்நிகிலஹேயப்ரத்யநீகஸ்வரூபாத் ஸத்யஸங்

யதஃ - எந்த ஸர்வேஸ்வரனும், எல்லாத் தீங்குகளுக்கும் விரோதியான ஸ்வரூபத்தையுடையவனும், ஸங்கல்பித்ததை ஸத்யமாகச் செய்யும்

பர். அதற்கு உதாஹரணம்— தர்சபூர்ணமாஸங்கள் ஒரு த்வந்த்வமாய்ச் சேர்ந்து ஸ்வர்க்கம் என்னும் பலத்தைக் குறித்து இரண்டும் ஸமமாய் ஒன்றோடொன்று கலந்து உண்டுபண்ணுவது போலாகும் இந்த பாஷ்ய பதத்தில் மூன்றும் சேர்ந்து கடிய ஸமூஹத்தையே குறிப்பதில் திருவுள்ளம் இப்படி ஸமுதாயத்தைச் சொல்லுவதில் நோக்கு இருப்பதால் இதை ஸமாஹாரம் என்பர். இது ஸமாஹாரத்வந்த்வமாவதால் பாஷ்ய பதத்தில் அம்நிணையும் ஏற்படுகிறது. அதனால் இங்கே பாஷ்யபதத்தில் "ஸ்ருஷ்டிஸ்திதிப்ரளயம்" என்று ஸமாஹாரார்த்தத்தில் த்வந்த்வம் ஏற்பட்டது. வாகயத்தின் பொருளை எடுத்துரைக்கும் மேல் பாஷ்யத்தில் "ஸ்ருஷ்டிஸ்திதிப்ரளயங்கள்" என்றபன்மையுடன் இதரேதரயோகத்வந்த்வ ஸமாஸப்ரயோகம் செய்யப்பட்டது. இரண்டுக்கும் ப்ரயோஜனம் ஒன்றேயாகையால் இரண்டு விதப்ரயோகங்களும் செய்யப்பட்டன. "ஜன்மாதி என்று" என்கிற பாஷ்யகண்டத்தில் 'என்று' என்று கூறுவதால் அங்கே ஒருமையில் தாத்பர்யம் என்று விளங்குகிறது. பாஷ்யத்தில் ஸூத்ரபதங்களின் அர்த்தத்தைக் கூறுமிடத்தில் ஸ்ருஷ்டிஸ்திதிப்ரளயம் என்று ஒருமைச் சொல்லால் ஸூத்ரபத†த்திலுள்ள ஒருமை அநுஸரிக்கப்பட்டது. ஸூத்ரத்தில் ஒருமைச் சொல்லாக அமைத்தது ஸ்ருஷ்டிஸ்திதிப்ரளயம் ஆகிய மூன்றும் சேர்ந்தே லக்ஷணமாகும்; ஒவ்வொன்றுமட்டும் லக்ஷணமாகாது என்பதைத் தெரிவிப்பதற்காக. ஸமுதாயந்தான் லக்ஷணம் என்றது ஸ்ருதியினுடைய ஸ்வாரஸ்யத்தால் நிஸ்சயிக்கப் படுகிறது. "எதிலிருந்து இந்தப் ப்ராணிகளெல்லாம் பிறக்கின்றனவோ, எதனால் பிறந்தனவெல்லாம் ஜீவிக்கின்றனவோ, லயமடையுங்கால் எதனிடத்தில் எல்லாம் லயிக்கின்றனவோ" என்று தடங்கிய தைத்திரீயஸ்ருதியில் ஒவ்வொரு வாக்யத்திலும் அது பிரம்மம் என்று கூறப்படவில்லை. (மூன்று வாக்யங்களுக்கும் முடிவிலே ஒரு தடவை அது பிரம்மம் என்று கூறப்பட்டது.) மூன்றொழில்களும் சேர்ந்து ஒரே லக்ஷணமாகக் கொள்ளாமல் மூன்று லக்ஷணங்கள் கூறப்பட்டன என்று ஒப்புக்கொள்வதானால், ஒன்று தவிர மற்ற லக்ஷணங்கள் வீணாகப்போம். இங்கே ஒரு ஆக்ஷேபம் வரக்கூடும் மூன்றும் சேர்ந்த ஸமுதாயம் ஸரியான லக்ஷணமாகாது. ஸமுதாயத்தில் சேர்ந்த மூன்றில் ஒவ்வொன்றினாலும் விலக்கவேண்டிய பொருள்கள் கிடைக்கமாட்டா. உலகத்தின் உற்பத்தியில் நிமித்த காரணமாயும், உபாதானகாரணமாயும் இருக்கக்கூடிய வஸ்து ப்ரம்மம் தவிர வேறு எது இருக்கக் கூடும்? ஸ்ருஷ்டிகாரணமென்று கூறியபிறகும் கூட ஸ்திதிகாரணமென்றும், ப்ரளயகாரணமென்றும், லக்ஷணத்தில் சேர்த்துச்

† ஸூத்ரபதம்—"ஜன்மாதி".

ஶாஸ்ஜ்ஞாநாநந்தாத்யநந்தகல்யாணகுணாஸ்ஸவத்ஜ்ஞாஸ்ஸவத்ஶக்தேஃ

கல்பாத்ஜ்ஞாந்தாத்யநந்தகல்யாணகுணத் ஸர்வஜ்ஞாத் ஸர்வஶக்தேஃ

திறமுடையவனும், ஞானம், ஆனந்தம் முதலிய அநந்தமான மங்களகுணங்

சொல்லியே தான் இதர வஸ்துக்களைத் தவிர்க்க வேண்டுமோ? முத்தொழில்களில் முதற் தொழிலே மட்டும் லக்ஷணமாகக் கூறினால் போதாதோ? இப்படிக் கேள்வி வந்தால் அது ஸரி. லக்ஷணத்தினால் மற்றைய வஸ்துக்களைத் தவிர்க்கவேண்டுமென்கிற ப்ரயோஜனத்தை நாம் ஆசைப்படவில்லை. ஶ்ருதியை அநுஸரிப்பதில் ஆசையுடைய ஸூத்ரகாரரால் இப்படிக் கூறப்பட்டது. ஶ்ருதியோவென்றால் "அதை விரும்பி விசாரணை செய்" என்று விதிக்கவிரும்பிய உபாஸனத்திற்கு உபயோகமாக உபாதானவுபயர்வு என்னும் மஹிமைக்கு விரோதமாக ரக்ஷணகாரணம், லயகாரணம், வேறொரு பொருளாகுமோ? அந்தப் பெருமையும் இதற்கு இல்லையே என்கிற ஶங்கையைப் போக்குவதற்காக ஸூத்ரகாரர் லக்ஷணத்தை லக்ஷணமாகக் கூறியது. ஸங்கேதப்பட்டதை விலக்குவதனாலே கூட லக்ஷணம் ப்ரயோஜனமுடையதாகும். லக்ஷணத்தில் குறிக்கவேண்டிய ஆகாரத்திற்கு விரோதமான சங்கையை விலக்காவிட்டால் லக்ஷணத்தால் குறிக்கவேண்டிய ஆகாரத்தின் நிஶ்சயம் ஏற்படமாட்டாது. ஜன்மாதி முதலிய முத்தொழில்களில் ஒவ்வொரு தொழிலுக்கு மட்டிலும் காரணமாயிருப்பது லக்ஷணத்தால் காட்டப்படவேண்டிய ஆகாரத்திற்கு விரோதமான குறைவு ஶங்கையைப் போக்கடிக்கத் திறமையுடையதல்ல. ஏனென்றால், உற்பத்தி காரணம் என்று சொன்னபின்பும் ரக்ஷை முதலியவற்றிற்குக் காரணத்வத்தையும் கூறுவிட்டால் அதற்கு வேண்டிய ஞானஶக்திகள் இல்லாமையாலும், ஸ்திதி, ப்ரளயம் இவ்விரண்டிற்கும் காரணம் வேறொன்று இருக்கக் கூடியதாலும், உற்பத்திக்கு மாத்திரம் காரணமான வஸ்துவிற்கு தன்னிலும் நிக்காரிலாத பெருமை இல்லாமற்போம். மோக்ஷமென்பது லயத்தில் அடங்கியதாலும், மோக்ஷம் கொடுப்பதற்காக உபாஸிக்கப்படவேண்டிய வஸ்துவே தான் ப்ராப்யமானபடியாலும், மோக்ஷமளிப்பதற்கும் ப்ராப்யமாயிருப்பதற்கும் அதுகுணமான குணங்கள் குறைந்து போவதால் அவைகளினால் ஏற்படும் உயர்வும் ஸித்திக்காது. ஆகையால் உற்பத்திகாரணம் என்பது மட்டும் ஸமஸ்த பொருள்களையும் விலக்குவதற்கு ஸமர்த்தமானாலும், உற்பத்தி முதலிய முத்தொழிற் கூட்டத்திற்கும் காரணம் என்பதே எல்லையில்லாத உயர்வுக்கு அநுகூலமாயிருப்பதால், ஸ்ருஷ்டிஸ்திதிப்ரளயங்களாகிய தொழிற் கூட்டத்திற்குக் காரணமாயிருக்கை என்பது லக்ஷணமென்று ஸூசிப்பிக்கப் பட்டது. இங்கே ஆக்ஷேபம்— ஸமுதாயமே லக்ஷணமென்று இங்கே தாத்பர்யம் சொல்ல வொண்ணாது. ஏனெனில், "ஜன்மாதி" என்கிற பதத்தில் உள்ள பஹுவ்ரீஹி ஸமாஸத்திற்கு ஸமாஸத்திலுள்ள பதங்களையன்றி வேறு பொருளை முக்யமாகக் காட்டுவது ஸ்வபாவமானபடியால் ஜன்மம் என்பது அந்த ஸமாஸபதத்தினால் குறிக்கப் படும் முச்சப் பொருளில் சேராமல் போய்விடும். இப்படி ஶங்கை வர பாஷ்யகாரர் தந்தையை என்று திடஞ்செய்கிறார். பஹுவ்ரீஹி ஸமாஸம் இருவகைப் படும். தத்குணஸம்விஜ்ஞானபஹுவ்ரீஹி என்றும், அதத்குணஸம்விஜ்ஞானபஹுவ்ரீஹி என்றும் இரண்டு வகை. அவற்றுள் முதலாவதற்கு உதாஹரணம் "ஸர்வ முதலிய சப்தங்கள் ஸர்வ

வாத்ஸல்யாதி³குணைகாஸ்ரயதயா வாங்மநஸாநாஸாத³நீயாபரிச்சே²த்³யமஹிமா

பரமகாருணிகாத் பரஸ்மாத் பும்ஸ: ஸ்ருஷ்டிஸ்திதிப்ரளயா: ப்ரவ

கல்யாணகுணங்களையுடையவனும், ஸர்வக்ஞனும், ஸர்வஸக்தியும், எல்லையில்லாத கருணை யுடையவனுமாகிய பரமபுருஷனிடமிருந்து ஸ்ருஷ்டி, ஸ்திதி, ப்ரளயங்கள்

நாமசப்தங்கள்", "தொங்கும் காதுகளையுடையவனை அழைத்துவா" முதலியவை. இரண்டாவதற்கு உதாஹரணம்— விசித்திரமான பசுக்களையுடையவனை† அழைத்துவா" என்பது போன்றது. 'தத்' எனகிற பதத்திற்கு குறிக்கப்படும் முக்யப்பொருள் என்றும் 'குணம்' என்கிற பதத்திற்கு முக்யமல்லாத விசேஷணமென்றும் இங்கே பொருள். '-ஸ' என்பதற்கு சேர்ந்து ஒன்றுகளென்று பொருள். விசேஷணத்தையும், முக்யப் பொருளையும் ஒரே கார்யத்தில் சேர்த்து அன்வயிப்பதால், ஒன்றுக இந்த ஸமாஸம் அர்த்தம் காட்டுகிறது என்று பொருள். இப்படிச் சொன்னாலும் ஸமாஸமாகிய மொத்தப் பதத்திலுள்ள உட்பதங்களைக் காட்டிலும் வேறான பதார்த்தத்தையே முக்யமாகக் கூறவேண்டுமென்கிற பஹுவ்ரீஹி ஸமாஸத்தின் நியமத்திற்கு விரோதப் வரமாட்டாது. எனெனில், ஸமாஸத்திலுள்ள பதங்களால் சொல்லப்படும் பொருள்களடங்கிய கூட்டம் என்பதும், அந்தக் கூட்டத்தில் சேர்ந்தது என்பதும், வேறு பதார்த்தம் என்கிற கருத்துடன் சொல்வது நன்கு பொருந்தத் தடையில்லை. ஸமாஸத்திற்குள்ளிருக்கிற பதத்தினால் சொல்லப் படும் பொருளை எல்லாம் கூடிய ஸமுதாயத்தில் சேர்ந்திருப்பதென்கிற ஆகாரத்தினால் வேறு பதார்த்தமாகும் என்பதுயுக்தமே. ஒரொரு தனிப்பதம் மட்டும் அந்த ஆகாரத்துடன் அதை போதிக்கமாட்டாது† 'அஸ்ய' என்று வ்யாக்யானம் செய்ய வேண்

* அழைத்துவரும் வ்யாபாரத்தில் காதை விட்டுவிட்டு புருஷனை மாத்திரம் அழைத்துவருவதில்லை. லம்பகர்ணம் என்கிற ஸமாஸபதம் அழைத்துவரவேண்டிய பொருளைக்கூறுகிறது. கர்ணம் என்கிற பதத்திற்குப்பொருளான காதும் அதற்குள் சேருகிறது. அப்படியே இங்கே ஜகத்தும் ஸமாஸத்திற்குப் பொருளான கூட்டத்தில் சேருகிறது.

‡ இங்கே பசுக்களையும் சேர்த்து அழைத்துவருவதில்லை.

† ஒரு கூட்டத்தில சேர்ந்திருப்பதனால் ஸ்வயம் தனக்குள்ள மஹிமைக்கு மேல் அதிகமாயித்த மஹிமை இருக்கலாம். அதைக்கொண்டு தனித்தனியே உள்ள வஸ்துக்களை விட கூட்டத்திலுள்ள அந்த வஸ்துக்களை வேறென்று சொல்லுவது. பஞ்சவடி ஆச்ரமத்தில் இளையபெருமாளைப் பார்த்துப் பேசிக்கொண்டிருக்கையில் 'பரதனுமும், சத்ருக்நனுமும், உன்னுமும் நான் என்றுகொல் கூடுவதோ'' என்று பகவான் ஸ்மரித்தார். அவர்களாண்மையில் தனிமையிலுள்ள லக்ஷ்மணனைக் காட்டிலும், அவர்களுடன் கலந்தகுழாத்திலுள்ள லக்ஷ்மணன் விலக்ஷணன் என்று சாக்பர்யம் கூறுவது போல.

ஸ்ரீபாஷ்யம் :—

தஜ்ஜை தஸ ஷ்ருஹ்தி ஸூத்ராயுஃ॥ ஷ்ருஷ்வை வாரூணீஃ

ர்தந்தே! தத்ப்ரஹ்மேதி ஸூத்ரார்த்த:!! ப்ருகுர்வை வாருணி:

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

ப்ரவர்த்திக்கின்றனவோ அது ப்ரம்மம் என்று ஸூத்ரத்தின் பொருள்.

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

டிய ஸூத்ரபதத்தை எடுக்கிறார். அசிந்த்ய என்று ஆரம்பித்து அதை வ்யாக்யானம் செய்தருளுகிறார்.

"அஸ்ய" என்கிற பதத்திற்கு "ஜகத்திற்கு" என்று இவ்வளவு மட்டும் பொருள் சொல்லவேண்டியிருக்க, ஏன் வ்யாக்யானம் விரிவுற வேண்டுமென்றால்; ஸூத்ரகாரர் சொல்ல விரும்பிய அர்த்தத்தைச் சொல்லுவதற்காக. அவர் சொல்ல விரும்பும் அர்த்தம் என்பது ஸ்ருதியின் தாற்பரியத்தைக்கொண்டு தெரிந்துகொள்வது. ஸ்ருதியின் தாற்பரியம் எப்படித் தெரிகிறதென்றால்; கூறுவோம்:—"எதிலிருந்து இந்த பூதங்கள் பிறக்கின்றன". என்கிறவிடத்தில் "பூதம்" என்கிற ஸப்தத்தினாலேயே கார்யவர்க்கம் என்று பொருள்பட்டிருந்தும், "இந்த" என்கிற பதம் உபயோகப்பதால் அது கார்யவர்க்கத்தை கைக்குப் புலப்படுத்தும் ப்ரமாணமாகிய ப்ரத்யக்ஷத்தால் ஏற்படும் ஆகாரவிஶேஷங்களைக் காட்டுவதில் தாத்பர்யமுள்ளது. அதில் ஜகத்தின் தோற்றத்தை* மட்டும் சொல்வதாகக் கொள்வது ப்ரஹ்மத்தை விரும்பி யறிய முயல்வதென்னும் ஜிக்ஞாஸைக்கு உபயோகப்பட்டதல்ல! "இந்த" என்பதால் ஆஸ்சர்யப்படத்தக்க விசித்ரமான தன்மை காணப்படுவதைச் சொல்வது, இப்படிக்கொத்த விசித்ர கார்யங்களை உண்டுபண்ணுவதற்கு ஒருகுணமான குணத்தின் ஏற்றத்தையுடையது ப்ரஹ்மம் என்று தெரிவிப்பதற்காக. ஸ்ருதிவாக்யத்திலிருக்கும் "இதம்" ஸப்தத்தையே கொண்டு "அஸ்ய" என்று ஸூத்ரத்தில் கார்யமான ஜகத்தைக் குறிப்பிடும் ஸூத்ரகாரருக்கும் இப்படிக் காட்டுவதில் தான் தாற்பர்யம்.

"ஜகத்தினுடைய" என்பதைக் காட்ட "இவைகள்" என்று ஸ்ருதியில் பன்மையை ப்ரயோகித்திருந்தும், ஸூத்ரத்தில் ஒருமையைப் ப்ரயோகித்திருப்பது உலகம் யாவையும் ஒரு சிறுகார்யம் போல் ஒரே கர்த்தாவையுடையது என்று

அநுபதம்—

* 'ஜகத்து தோற்றமேயொழிய உண்மையல்ல. ப்ரஹ்மத்தினிடத்தில் ஜகத்து வெறும் கல்பனையாகத் தோன்றுகிறது' என்கிற அத்வைத பக்ஷத்தை இங்கே விலக்குகிறார்.

ஸ்ரீபாஷ்யம் :—

வருணம் பிதரமுபஸஸார । அதீஹி பகவோ ப்ரஹ்மேத்யாரப்ய

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

வருணருடைய புத்ரரான ஹ்ருகு என்பவர் தகப்பனாரான வருணருடைய சமீபம் சென்றார். பகவானே! "ப்ரஹ்மத்தை யறியச் செய்ய

ச்ருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

காட்டுவதற்காகவும், "பூதம்" என்கிற ஸ்ருதிபதம் தேவர் முதலிய நான்குவிதப் பிராணிகளே டட்டும் குறிப்பதல்லாமல், உண்டாவது என்கிற செய்கையையுடைய ஸ்ருஷ்டிக்கப்படும் எல்லா வஸ்துக்களின் ஸமுதாயமான உலகத்தைச்சொல்லுவதில் நோக்குடையது என்பதைக் காட்டுவதற்காகவும்; இதனாலேதான் பாஷ்யத்தில் 'ஜகத்' என்று மொத்தமாகக் கூறப்பட்டது. அதில் கார்யவர்க்கம் சித்தாயும், அசித்தாயும் இருப்பதால் அந்தந்த ப்ரமாணத்தால் ஏற்படும் சித் அசித் இவைகளின் விசித்ரத்தன்மையை "அசிந்த்ய" என்று தொடங்கி இரண்டு பதங்களால் கூறுகிறார். இதுகே ஒரு ஆக்ஷேபம். பூர்வமீமாம்ஸையில் கிரஹாதி காணத்தில் "கிரஹம் §யென்னும் பாத்திரத்தைத் துடைக்கிறான்" என்கிற வாக்யத்தில் உத்தேசிக்கப்படும் "கிரஹம்" என்கிற பதத்தில் உள்ள விசேஷணமாகிய ஒருமை, எண்ணிக்கையில் நோக்கில்லாததால் 'அங்கு ஒருமையில் தாற்பர்யமில்லை'. அசாவது ஒரு பாத்திரம் என்று அர்த்தமல்ல என்று கூறப்பட்டது. அந்த ந்யாயத்தால் ப்ரஸித்தமாய்த் தெரிந்ததைச் சொல்வதைப்போல இருப்பதால் அனுவாதமான "இந்த" என்கிற ஸப்தத்திற்கு இங்கே உத்தேசிக்கப்படும் ஜகத்துக்கு விசேஷணமாவதில் தாற்பர்யமில்லாமையால் இப்படி வ்யாக்யானம் செய்யக்

அநுபதம்—

§ கிரஹாதிகரணமென்பது பூர்வமீமாம்ஸையின் மூன்றாவது அத்யாயத்தில் முதல் பாதத்தில் உள்ளது. ஜ்யோதிஷ்டோமயாகத்தில் தசா பவித்ரத்தால் கிரஹமென்னும் யாகபாத்ரத்தைத் துடைக்கவேண்டுமென்று விதிக்கப்படுகிறது. அங்கே பாத்ரஸப்தத்தில் ஒருமை காண்பதால் ஒரு பாத்ரத்தைமட்டும் தான் துடைக்கவேண்டும். பசுவைக்கொண்டு யாகம் செய்யவும் என்கிற விதியில் ஸ்ருதியில் உபயோகித்த ஒருமையை அனுஸரித்து ஒரே பசுவைக்கொள்வதுபோல ஒரு பாத்ரத்தைத்தான் துடைக்கவேண்டும் என்று பூர்வபக்ஷம். துடைக்கவேண்டும் என்கிற விதிக்கு உத்தேஸ்யமான பாத்ரத்தைச்சொல்லும் கிரஹ என்கிற ஸப்தத்தில் விசேஷணமாயுள்ள ஒருமை என்கிற எண்ணிக்கையையும் சேர்த்து அர்த்தம் கொள்ளவேணும் என்று ஆக்ஷேபம். அங்கே பாத்ரம் என்பதை ஸாமான்யமாய்க் கொள்ளவேணுமே யொழிய எண்ணிக்கையில் விவக்ஷையில்லை. அந்த யாகத்தில்

ஸ்ரீபாஷ்யம் :—

யதொ வா இமாநி பூதாநி ஜாயந்தே । யேந ஜாதாநி ஜீவந்தி । யத்

யதோவா இமாநி பூதாநி ஜாயந்தே ! யேந ஜாதாநி ஜீவந்தி ! யத்

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

வேண்டும்" என்று ஆரம்பித்து "எதிலிருந்து இந்த பூதங்கள் பிறக்கின்றனவோ; எதனாலே பிறந்தனவெல்லாம் ஜீவிக்கின்றனவோ; ப்ரளயம் அடை

ச்ருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

கூடாது. இப்படி ஆக்ஷேபிப்பது கூடாது. க்ரஹாதிகரணத்தில் உத்தேசிக்கப்படும் வஸ்துவில் விசேஷணங்களிலெல்லாம் தாத்பர்யம் நிஷேதிக்கப்படவில்லை. ஆனால் ஒரு அனுவாதமான சொல்லுக்கு மூலமான அதன் ப்ராப்தி யேற்படும் வாக்யத்தில் கூறப்பட்ட பொருளுக்கு விரோதமான விசேஷணங்களிலல்லவா தாத்பர்யமில்லை யென்று கூறப்பட்டது. அங்கே விதிக்கப்படும் மூலவாக்யத்தில் வ்யக்தமாய்க்கூறப் பட்டுள்ள க்ரஹபாத்ரங்களின் பன்மைக்கு (அதாவது பத்துப்பாத்ரங்கள் என்ப தற்கு) ஒருமை விருத்தமாகும். இப்படிக்கொள்ளாவிடில் 'எட்டுவருஷமுள்ள ப்ராம் மணனை உபனயனம் செய்துவைக்கவேண்டும்." என்கிறவிடத்திலும் எட்டுவயது முதலிய விசேஷணத்திலும் தாத்பர்யமில்லையென்று சொல்லும்படி வரும். இந்த தைத்திரீய ச்ருதியிலோ வென்றால், மூன் மூலவாக்யங்களிலுள்ள ஜகத்தின் விசித்ர

அநுபதம்—

பத்துப்பாத்ரங்களிருப்பதாக முன்பே சொல்லப்பட்டிருக்கிறது. பாத்ரங்கள் பலவாயிருப்பதாலும், அந்தப் பன்மையை அனுஸரித்து ஒருமையையுள்ளி, பாத்ரம் என்கிற தன்மையையுடைய பத்துப்பாத்ரங்களையும் அர்த்தமாகக்கொண்டு எல்லாவற்றையும் துடைக்கவேண்டும் என்று ஸித்தாந்தம். அதுபோல் இங்கே இந்த பூதங்கள் என்கிற பதங்களிலும் ப்ரத்யக்ஷத்தாலும், பன்மையாலும் ஏற்படுகிற ஆஸ்சர்யமான அமைப்புடைய ஜகத்தின் ஆகாரங்களை விவக்ஷிக்கக்கூடாது என்று ஆக்ஷேபம். ஜகத்காரணத்வத்தைச்சொல்லும் முன் ச்ருதிவாக்யங்களில் ஜகத்தின் விசித்ரமான அமைப்பைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. இந்த பூதங்கள் என்று ப்ரத்யக்ஷமாகக் காட்டி அதை அனுவாதம் செய்வதால் நமக்கு ப்ரத்யக்ஷத்தால் காண்கிற அமைப்பின் ஆஸ்சர்யத்தையும் காட்ட நோக்கு இருப்பதாகத் தெரிகிறது. ஆகையால் எப்படி முன் வாக்யத்தில் க்ரஹங்கள் பத்து என்று கூறியதை அனுஸரித்து அதை அனுவதித்து, துடைத்தல் என்னும் ஸம்ஸ்காரத்தை விதிக்கும் பத்துப்பாத்ரங்களும் விஷயமென்று கொள்ளுகிறோமோ அதுபோல் இங்கேயும் இந்த பூதங்கள் என்கிற விடத்திலும் மூன் ப்ரமாணங்களை அனுஸரித்து ஆஸ்சர்யமான ஜகத்தின் ஆகாரங்களையும் அர்த்தம் கொள்ளவேணும்.

ஸ்ரீபாஷ்யம் :—

யதோ வா இமானி பூதானி ஜாயந்தே । யேன ஜாதானி ஜீவந்தி ।
யத்ப்ரயந்த்யபிஸம்விஸந்தி । தத்விஜிஜ்ஞாஸஸ்வ । தத்ப்ரஹ்மேதி ஸ்ருயதே ।

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

கிறவைகள் எதனுள் ப்ரவேஸித்து அடங்குகின்றனவோ அதை விரும்பி நீ அறியவேண்டும். அது ப்ரஹ்மம'' என்று ஸ்ருதியில் கேழ்க்கிறோம்.

ச்ருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

மான தன்மையே ஸ்பஷ்டமாக பேற்படுகிறது. அல்லது * வேறுவிதமாயும் சொல்லலாம். எவ்விடத்தில் ப்ரயோகம் பண்ணப்படுகிற ஸப்தத்திற்கு அர்த்தத்தைச் சொன்னல் அன்வயம் ஒட்டாமல் வீணாக நேருமோ அவ்விடத்தில் அங்கே உத்தேசிக்கப்பட்ட பொருளின் விசேஷணத்தில் தாற்பர்யம் ஆங்காங்கு அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இப்படி வ்யாக்யானம் செய்வது யுக்தமாகும். அசேதன பாகத்தில் விசித்ரத்தன்மையைக் காட்டுகிறார் அசிந்த்ய என்று ஆரம்பித்ததனால். ஜீவர்கள் செய்யக்கூடியதாக நினைக்க அஸாத்யமாயிருப்பது அசிந்த்யமான தன்மை. ஆகாயம், வாயு, முதலிய பேதங்களால் பல்வகையான தன்மை. அதில் ஒன்றொன்றும் அனேகப் பிரிவுகளாவதால் விசித்ரமான தன்மை. இப்படிக் கொத்த அமைப்பையுடையது என்று பொருள். இந்த பதத்தில் ரசனை யென்பது ஸ்வபாவத்தைச் சொல்லும். இதற்கு மேல் சேதனங்களுடைய விசித்ரத்தன்மையைக் கூறுகிறார் நியத வென்று தொடங்கி. இன்ன தேசத்தில் இன்ன காலத்தில் இன்ன பலம் இன்னாரால் அனுபவிக்கபட வேண்டுமென்கிற நியதி ப்ரஹ்மா தொடங்கி எறும்பு ஈறாக எல்லோருக்கும் ஸமானமாக நடக்கும். ப்ரஹ்மாவுக்கும் தன்னுடைய கணக்கினால அளவிடப்பட்ட நூறுவருஷத்திற்கு மேல் ஜீவிக்கவும், வேறு அண்டத்

அநுபதம்—

*இங்கே வேறு ப்ரகாரமாக ஸமாதானம் கூறுவதற்கு ஆரம்பிக்கிறார். ஏனெனில், கிரஹவாக்யத்தில் ஸம்மார்ஜன விதிக்கு உத்தேஸ்யமான கிரஹம் என்கிற பதத்தில் ப்ரயோகிக்கப்பட்ட ஒருமை என்கிற விஸேஷணத்தைத் தள்ளினோம். இங்கே ஜந்மம் என்பதற்கு உத்தேஸ்யமான இந்த பூதங்கள் என்பதில் ப்ரத்யக்ஷம் மூலியதால் புத்திக்குக் கொண்டுவரப்படும் ஆஸ்சர்யாகாரம் முதலிய விஸேஷணத்தைத் தள்ளாமல் எடுத்துக்கொள்ளுகிறோம். இதற்கு அந்த அதிகரணம் நேர்த்ருஷ்டாந்தமாகவில்லை. முன் ஏற்பட்டிருப்பதை எடுத்துக்கொள்வது என்பது மட்டும் இரண்டாம் பாதத்திற்கும் பொது. பூர்வமீமாம்ஸையில் ஆறாவது அத்யாயத்தின் நான்காவது பாதத்தின் ஒன்பதாவது அதிகரணத்தில் "எவனுடைய இரண்டு அக்னிகளும் அணைந்துபோகுங்கால் ஆதித்யன் உதயமாகிறாரோ, அல்லது அஸ்தமடைகிறாரோ, திரும்பவும் அக்னியை ஆதானம் செய்வது தான் அவனுக்கு ப்ராயஸ்சித்தம்".

ஸ்ரீபாஷ்யம் :—

தத்ர ஸம்ஶய: । கிமஸ்மாத் வாக்யாத் ப்ரஹ்மலக்ஷணம் ப்ரதிபத்தும்

தத்ர ஸம்ஶய: । கிமஸ்மாத் வாக்யாத் ப்ரஹ்மலக்ஷணத: ப்ரதிபத்தும்

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

அந்த விஷயத்தில் ஸம்ஶயம். இந்த வாக்யத்திலிருந்து ப்ரஹ்மத்தை

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

தில் பிரவேஶிக்கவும், தனக்குள்ள அண்டாதிபத்யத்திற்கு அதிகமான பலத்தை யனுபவிக்கவும் இயலாது. இப்படி சித்துக்களிலும் அசித்துக்களிலும் வைசித்ரியத் தைக் காட்டுவதனால், ஜீவ ஸாமான்யத்திற்கும் ஸ்ருஷ்டிக்கக் கூடாமை ஸூசிப்பிக் கப்பட்டது. ஸூத்ரத்திலுள்ள மூன்றுவது பதத்தை எடுக்கிறார்—யத: என்று. மூன் பதத்திற்கு ஶ்ருதியின் தாத்பர்யத்தை யனுஸரித்து வ்யாக்யானம் செய்யப் பட்டது. இவ்விடத்தில் அப்படிப்பட்ட பதம் ஶ்ருதியில் கேழ்க்கப்படாமலிருந் தும் எப்படி அனேக விஶேஷணங்களைவைத்து வ்யாக்யானம் செய்கிறார் என்று கேழ்க்கக்கூடும். அதற்கு பதில் கூறுவோம். "யத:" (எதிலிருந்து) "யேந" (எதனாலே) "யத்" (எதை) என்று மூன்பே ப்ரஸித்தமாகத் தெரிந்தவிஷயம் போல் குறிப்பிடுவது மூன்பே இந்த விஷயத்தைச்சொல்லும் ஶ்ருதிவாக்யத்தை யபேக்ஷிக்கிறதல்லவா? அப்படி யபேக்ஷிப்பதில் மூன் வாக்யங்களில் ஜகத்காரண மாய் இருப்பதற்கும், விரும்பி விசாரிக்கப்படவேண்டியதற்கும், அனுகூலமான எந்த

அநும்பதம்—

என்ற வாக்யத்தைப்பற்றி விசாரிக்கப்படுகிறது. கார்ஹபத்யம், ஆஹவநீயம் என் கிற இரண்டு அக்நிகளும் சேர்ந்து அணைந்தால்தான் புனராதாநம் என்கிற ப்ராயஶ் சித்தமா அல்லது ஒன்றொன்று அணைந்தாலே இந்த ப்ராயஶ்சித்தமா? ப்ராயஶ் சித்தத்திற்கு நிமித்தமான நெருப்பு அணைவதை அறுவதிக்கும் ஶ்ருதி பதங் களான "இரண்டு அக்நிகள்" என்பதில் இரட்டை எண்ணிக்கை அக்நிக்கு விஶேஷணமாகத் தெரிவதில் இரண்டு என்னும் எண்ணிக்கையில் தாத்பர்யம் கொண்டால் இரண்டு அக்நிகளும் சேர்ந்து அணைந்தால் தான் ப்ராயஶ்சித்தவிதி உண்டு, இல்லாவிடில் இல்லை என்கிற ஸித்தாந்தம் ஸித்திக்கும். விதிக்கப்படும் ப்ராயஶ்சித்தமான அக்நி ஆதாநத்தின் ஸ்வபாவ மென்னவென்றால், இரண்டக்நி களையும் சேர்த்துத்தான் ஆதாநம் செய்யவேண்டும். ஒன்றைமட்டும் ஆதாநம் செய்வதில்லை. விதிக்கப்படும் ஆதாநக்ரியை இரண்டையும் சேர்த்து உள்ள தாதலால் அதை யனுஸரித்து இங்கே இரண்டக்நிகள் என்கிற விஶேஷணத்தை விடாமல் கொள்ளவேணும். அதை விட்டால் விதிக்கப்படும் ஆதாநத்தின் ஸ்வபா வத்திற்கு விரோதமாக ஒரு அக்நி என்பது ஒட்டாமற்போம். இது நேர் த்ருஷ் டாந்தமாகும்.

ஸ்ரீ பாஷ்யம் :—

ஸக்ஷாத், நவேதி॥ கிம் வ்யாக்யானம் । நஸக்ஷாதி । நசாவஜ்ஞாநாயோ

ஸக்யதே, நவேதி!! கிம்ப்ராப்தம்! நஸக்யமிதி! நதாவஜ்ஜ்ஞம்மாதயோ

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

லக்ஷணை மூலமாக அறியக்கூடுமா, அல்லது கூடாதா. இங்கே என்ன பூர்வ பக்ஷம்? கூடாது என்று. உத்பத்தி முதலியவைகள் விசேஷணமாக

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

தர்மங்களே உடையதாக எந்த வஸ்து கூறப்பட்டதோ; அப்படிப்பட்ட தர்மங்களோடு கூடிய அதே வஸ்துதான் இந்த ஸ்ருதியில் "எது" என்கிற பதத்தினால் தாற்பர்யமாகிறது என்று ஸூத்ரகாரருடைய அபிப்ராயமென்று திருவுள்ளம்பற்றி அந்தந்த தர்மங்களோடு கூடிய அந்தக் குறிப்பிட்ட வஸ்துவில் ஸூத்ரத்திலுள்ள "யத:" (எதிலிருந்து) என்கிற பஞ்சமிக்கு தாற்பர்யமென்று கூறப்பட்டது. "யத:" என்கிற பதத்தில் 'தஸி' என்கிற விகுதி எல்லா வேற்றுமைகளுக்கும் பொருந்துமாதலால் வேறொரு வேற்றுமையாக ஸங்கிக்கவும் இடமுண்டாகும். உலகத்திற்கு உற்பத்தி முதலியவை எதில் உண்டாகின்றனவோ என்று தேசத்தையும் காலத்தையும்போல் இடவேற்றுமையாக ஆதாரமான இடமாயிருப்பதே ப்ரஹ்மத்திற்கு லக்ஷணமென்று நினைக்க இடமுண்டாகும். இம்மாதிரியே "யத:" என்பதில் 'தஸில்' என்கிற விகுதியைக் கொண்டாலும், ஒருமை, இருமை, பன்மை முதலிய எல்லாவற்றிற்கும் அதுவே பொருந்துமாகையால் ஜகத்காரணத்தைச் சொல்லும் ஸ்ருதிவாக்யங்களில் "ஸத்" "ப்ரஹ்ம" முதலிய பல பெயர்களால் காரணப்பொருளைக் குறிப்பதால் காரணம் பலவோ வென்கிற ஸங்கையுண்டாகும். இவ்விரண்டு ஸங்கைகளையும் நீக்குவதற்காகவே "எதனிடமிருந்து" என்று கூறப்பட்டது. உபாயமாகவும், உபேயமாகவும் அறியப்படவேண்டியதற்கும், காரணத்தன்மைக்கும், உபயோகமான அந்தந்த மூன்று ஸ்ருதிவாக்யங்களில் ஏற்பட்டு, இந்த ஸ்ருதியும் தாற்பர்யம் கொள்ளும் தர்மங்களே விளக்குகிறார் ஸ்ரீவ என்று ஆரம்பித்து. தரிமூர்த்திகளும் அபஸங்கள். ப்ரஹ்மம் என்பது அந்த அம்ஸங்களையுடைய அம்ஸி (பாகங்களையுடைய முழுவஸ்து) என்பது யாதவப்ரகாசருடைய பக்ஷம். ப்ரக்ருதி ஜீவர்கள் காரணம் என்பது சிலர் மதம். இப்படி அதிகமாயும் குறைவாயும் தத்வத்தைச் சொல்லுவதை நீக்குவதற்காக "ஈஸ்வரர்களுக்கெல்லாம் மேற்பட்ட உத்தமனான அந்த மஹேஸ்வரனே" "அவர் காரணம்" "காரணங்களான இந்த்ரியங்களுக்கு அதிபதியாயிருப்பவர்" இது முதலான ஸ்ருதிகளையனுஸரித்து "ஸர்வேஸ்வரனிடமிருந்து" என்று கூறப்பட்டது. காரணத்தைச்சொல்லும் வாக்யத்திற்கு உபயோகியான (காரணத்தை காரணமாயிருக்கும் தன்மையால் வரக்கூடிய தோஷங்களில்லையென்று ஸூத்ரமாக விளக்கும்) ஸாதக *வாக்யங்

அநுபதம்—

* ப்ரஹ்மம் உபாதான காரணமாவதால் அதற்கு விகாரம் என்கிற அஸூத்தி

Acc. No. 329
dt. 7.11.77

ஸ்ரீபாஷ்யம் :—

விசேஷணகேந ஹ்ரூ ஹ்ரூ மகூயதே । கேநகவிசேஷணவ்ரவ்ருதகேந

விசேஷணத்வேந ப்ரஹ்ம லகூயந்தி! அநேகவிஷேண வ்யாவ்ருத்தத்வேந

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

ப்ரஹ்மத்தைக் காட்டக்கூடியவையல்ல. பல விசேஷக்களால் மற்றப் பொருள்கள் விலக்கப்படுவதால் ப்ரஹ்மம் அனேகம் என்று வரத்தெரியும்.

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

களில் ஸித்திப்பதும், விரும்பியறிவதற்கு உபயோகமுமான ஜீவன்களையும் அசித்தையும் தவிர்ப்பதமான ஆகாரத்தைக் காட்டுகிறார் நிகிலஹேயப்ரத்யநீக ஸ்வரூபத்திலிருந்து என்று. "நிகில" என்கிற ஸப்தத்தினால் அசித்துக்குள்ள தீங்குகளான † ஆறு விகாரங்களையும், சித்துக்குள்ள க்லேசம், கர்மம், விபாகம், ஆசயம், என்னும் தீங்குகளையும் சொல்லுகிறது. கேட்டிற்கு யோக்யமாயிருந்து அதில்லாமலிருப்பதைத் தவிர்ப்பதற்கு "ப்ரத்யநீக" (விரோதி) என்கிற ஸப்தம் ப்ரயோகிக்கப்பட்டது. ப்ரத்யநீகனுயிருந்தால் ஜகத்திற்கு உபாதான காரணமென்பது பொருந்தாதே யென்ற ஆக்ஷேபத்தை நீக்குவதற்காக ஸ்வரூப முடையவன் என்று கூறினர். ஒரு வாரம் (இடை) இல்லாமல் ஸாக்ஷாத்தாக ஹேயத்தினுடைய ஸம்பந்தத்தைத் தவிர்க்கப்பட்டதே யொழிய பரம்பரையாக (இன்னொரு பொருள் மூலமாக) ஹேயத்தின் ஸம்பந்தத்தைத் தவிர்க்கவேண்டியதில்லை. ஹேய ப்ரத்யநீகனென்றால் ஹேயத்தின் ஒட்டுதலுக்கு விரோதியாயிருப்பதாலும், தனக்கு ப்ரதிகூலமானதை உண்டுபண்ணுவது கூடாதாகையாலும், தனக்கு விசேஷணங்களான சித், அசித்துக்கள் என்கிற அம்ஸத்திலும் ஹேயம் இருக்கக்கூடாதே என்று ஆக்ஷேபம் வரக்கூறுகிறார் ஸத்ய ஸங்கல்பனிடமிருந்து என்று. தன் ஸங்கல்பத்திற்குத் தக்கபடி ஹேயத்தின் ஸம்பந்தத்தையும் ஆஸ்ரிதர்களிடத்தில் அதன் நிவ்ருத்தியையும் செய்ய ஸாமர்த்தியமுடையவன். மேலும் தியதெனப்படுவனவெல்லாம் ஈஸ்வரனே யபேக்ஷித்து தியனவாகா. ஏனென்றால், அவன் ஸங்கல்பத்தினாலே நிவர்த்திக்கக் கூடுமாகையால் அவனுக்கு லீலா ரஸத்தைக்கொடுக்கும் என்று தாத்பர்யம். ஸத்ய ஸங்கல்பத்வம் என்பது ஹேய ப்ரத்யநீகத்வம் என்கிற குணத்தை ஸாதிப்பதமன்றி காரணத்வத்திற்கும் அறிய ஆசைப்பட வேண்டியதற்கும் உப

அநுபதம்—

வரத்தெரியும். காரணமான ப்ரஹ்மத்திற்கு விகாரம் முதலிய அஸுத்தி இல்லை யென்று ப்ரஹ்ம ஸ்வரூபத்தை ஸுத்தமாக விளக்கும் வாக்யம் ஸோதக வாக்யம்.

† ஊர்மிஷட்கம் அதாவது ஆறு அலைகள் என்று சொல்லப்படும் தாக மிஸ்ரத்வம் முதலிய ஆறு தோஷங்கள். அல்லது யாஸ்கர் கூறியுள்ள பிறப்பு முதலிய ஆறு விகாரங்கள்.

ஸ்ரீபாஷ்யம் :—

ஏவமணோரபி நகஸ்ய வஸ்தோ: । விஶேஷணகம் ஹி வ்யாவர்தகம் ।

ப்ரஹ்மணோऽபி நகஸ்ய வஸ்தோ: । விஶேஷணத்வம் ஹி வ்யாவர்த்தகத்வம்!!

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

விஶேஷணமாவது என்றால் அது மற்றப் பொருள்களை நீக்கி மற்றப் பொருள்களிலிருந்து நீங்கிய விஶேஷ்ய வஸ்துவைக் காட்டவேண்டும்.

ச்ருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

யோகமுள்ளதாகும். "ஹேய ப்ரத்யனீகனிடமிருந்து" "ஸத்ய ஸங்கல்பனிடத்திலிருந்து" என்கிற இரண்டு பதங்களினால் "அபஹதபாப்மா" (பாபமற்றவன்) முதலிய ச்ருதிவாக்யங்களை நினைவூட்டுகிறார். ஆசையுடன் அறியவேண்டியதற்கு உபயோகமான ஸ்வரூபத்தின் கல்யாண ஸ்வபாவத்தைக் கூறுகிறார் ஜ்ஞாந என்று ஆரம்பித்து. ஆனந்தத் தன்மையென்பது தனக்கு அனுகூலமாயிருக்கை. "ஆதலியன" என்கிற ஸப்தத்தால் ஸத்யத்தன்மை என்பதையும், அநந்தமாயிருக்கை என்பதையும் கொள்ளவேணும். ஹேய ப்ரத்யனீகமென்பது முன்பே சொல்லப்பட்டது. "ஞானம்" "ஆநந்தம்" என்கிற ஸப்தங்கள் ஞானத்தன்மை, ஆநந்தத் தன்மையென்று தன்மையை முக்யமாகக் குறிக்கும் சொல்.† 'இருமையும், ஒருமையும் சொல்லுமிடத்தில் த்விவசனமும், ஏகவசனமும் ப்ரயோகிக்க' என்கிற பாணினி ஸூத்ரத்தில் 'த்வி' என்பதினால் இருமைத் தன்மையையும் 'ஏக' என்பதினால் ஒருமைத் தன்மையையும் சூசிப்பது போலவே இங்கும். ஞானத் தன்மையும், ஆநந்தத் தன்மையும், ஸத்யத் தன்மையும், ஒரு இடத்தில் மட்டும் உள்ளதல்ல, ஸ்வரூபம் முழுவதும் உள்ளது என்று அனந்த ஸப்தத்தின் பொருள். முதலியன என்கிற ஸப்தத்தினால் அநந்தத் தன்மையும் க்ரஹிக்கப்பட்டாலும் எங்கும் வ்யாபிக்கும் தன்மைக்கு எல்லையில்லாத காலம் என்பதைச் சேர்த்துக்கொள்ளலாமாதலாலும், எல்லாப் பொருள்களோடும் ஒன்றுகச் சொல்லக்கூடிய தன்மைக்கு நித்யத்வத்தையும், ஸர்வ வ்யாபித்வத்தையும் சேர்த்துக்கொள்ளலாமாதலாலும், விரோதம் வராது. கல்யாணத்தன்மை என்பது தன்னை யணுபவிக்கும் பிறருக்கும் அனுகூலமாயிருக்கை. ஞானத்தன்மை முதலிய கல்யாண குணங்கள் எவருக்கு உண்டோ; அவரிடமிருந்து என்று பொருள். எப்படி ஒளிக்கு ஆஸ்ரயமான தீபத்தில் ஒளியைத் தவிர ஆஸ்ரய பாகத்திலேயே நான்கு அங்குல அளவு ரூப முடைமை, சுடராயிருக்கை முதலிய குணங்கள் உள்ளனவோ; அப்படியே ப்ரும்மத்திற்கும் ஞானத்தன்மையும், ஆனந்தத் தன்மையும், எக்காலத்தும் ஏகரூபமாயிருக்கும் தன்மையும் ஸ்வரூபத்திற்கு ஏற்பட்ட குணங்கள். ஸ்வரூபமும்

அநுபதம்—

† இதை பாவப்ரதான நிர்தேஸம் என்று சொல்லுவர்.

ஸ்ரீபாஷ்யம் :—

நந॰ தெவத தஸ்ஸாமோ யுவா லொஹிதாக்ஷஸ்ஸவிஸோண உதரு

நங் தேவதத்தஸ்ஸ்யாமோ யுவா லோஹிதாக்ஷஸ்ஸமபரிமாண இத்யத்ர

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

தேவதத்தன் கருமையாயும் சிறுவனுயும், சிவந்த கண்களையுடையவனுயும், சிரான உருவத்தையுடையவனுயும் இருப்பவன் என்கிறவிடத்தில் அனேக

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

தர்மமும் இரண்டும் ஞானமாயிருந்தாலும் இரண்டும் தனித்ரவ்யமானதால் விரோதமில்லை. ஸ்வரூபம் தர்மம் ஆகிய இரண்டிற்கும் ஞானத்தன்மை யென்பதும் ஆனந்தத்தன்மை பென்பதும் பொதுவான ஆகாரம். எப்படி மனுஷ்யனுகவேயிருக்கும் அரசனுக்கு மனுஷ்யர்கள் பரிகரங்கள் என்று சொன்னபொழுது வ்யக்தி பேதத்தால் விரோதம் வாராமலிருக்கிறதோ, மனுஷ்யத் தன்மை என்பது இருவருக்கும் பொதுவான ஆகாரமாகிறதோ; அதுபோன்றதாகும். ஞானம் என்கிற தர்ம மூடைமையைக் கூறுகிறார் ஸர்வஜ்ஞனிடமிருந்து என்று. ஸர்வக்ஞனுயிருக்கும் தன்மை நிமித்த காரணமாவதற்கு உபயோகப்பட்டது. ஸர்வ ஸக்தனுயிருக்கை உபாதான காரணமாவதற்கு உபயோகப்பட்டது. இதனுல் சித்துக்களையும் அசித்துக்களையும் சரீரமாகவுடையதென்று அபிப்ராயமாகிறது. அப்படிக்கில்லாவிட்டால் உபாதான காரணமாவது ஸம்பவிக்காது. மேலும் ஸர்வக்ஞத்வம் என்பது உபாஸகர்களால் அபேக்ஷிக்கப்படுவதான அவர்கள் ப்ரதிபந்தங்களையும், அவற்றைப் போக்கும் வழியையும், அறிவதற்கு உபயோகமாகும். எல்லையிலாத கருணையுடைமை விரும்பி அறியப்படுவதற்கும் காரணத் தன்மைக்கும் உபயோகமானது. ப்ரளய காலத்தில் இல்லாததுபோல இருக்கும்படியான சேதனர்களின் ஸமுதாயத்தைக் கடாக்ஷித்து தயையினுலல்லவா ஸ்ருஷ்டி தொடங்குகிறது. ஆஸ்ரிதர்கள் விஷயத்தில் ஸௌலப்யமும் தயையினுலே தான். "தாய், தந்தை, உடன் பிறந்தவன், வஸிக்குமிடம், ஸரணம், தோழன், கதி, இவைகளெல்லாம் நாராயணன்" என்றல்லவோ ஸ்ருதி.* இப்படிப்பட்ட ஈஸ்வரன் உபாயமாகட்டும்; உபேயம் வேறே வென்று ஸங்கைவரக் கூறுகிறார் பாஸ்மாத் (எல்லாவற்றிற்கும் மேற்பட்ட) என்று. இவ்விடத்திலும், "தாய், தந்தை" என்று சொல்லும் ஸ்ருதி அனுஸந்திக்கத் தக்கது. இன்ன தேவதை என்று நிர்ணயித்துக் கொள்வதற்காக புருஷனிடமிருந்து என்று கூறினர். "வேதமந்த்ரத்தில் சொல்லியிருப்பதால் சாகம் §

அநுபந்தம்—

* ஸ்ருதாலோபநிஷத்து.

§ இதை ஸாமான்ய விஸேஷ ந்யாயம் என்பர். அக்நீஷோமயீயத்தில் ஒரு பசுவை ஆலம்பனம் செய்ய வேண்டுமென்று பொதுவாக பசுவென்று சொல்லப்

ஸ்ரீபாஷ்யம் :—

விஶேஷணவஶாத்வேகஸ்யைவ தேவஸ்ய ப்ரதீயதே। ஏவம

விஶேஷணபஶாத்வேகஸ்யைவ தேவதஸ்ய ப்ரதீயதே! ஏவம

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

விஶேஷணங்கள் இருந்தும் ஒரே தேவதத்தன் க்ரஹிக்கப்படுகிறானே அப்

ச்ருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

என்கிற ஆடாகும்" என்கிற ஜைமினி ஸூத்ரத்தின் ந்யாயத்தைக்கொண்டு காரணத்தைச் சொல்லும் ஸ்ருதிகளில் "ஸத்" "ப்ரம்மம்" "ஆத்மா" முதலிய பொதுச்சொற்கள் "புருஷன்" "நாராயணன்" முதலிய குறிப்புச் சொற்களில் தாத்பர்யத்தை நிலைப்பதால் எல்லா ஸ்ருதிகளுக்கும் நாராயணனே முடிவாகத் தங்குமிடமாவான் என்பது "எதனிடமிருந்து இவையெல்லாம் பிறக்கின்றனவோ" என்கிற ஸ்ருதிக்குத் தாத்பர்யமென்பது ஸூத்ரகாரர் அபிப்ராயமென்று பாஷ்யகாரர் திருவுள்ளம். 'புருஷனிடமிருந்து' என்பதனால் காரணமான வஸ்து மூன்று பங்கு விஸ்தாரமுள்ள நித்ய விபூதியை உடையதென்று ஸூசிக்கப்படுகிறது புருஷஸூக்தத்தில் "இவருடைய அப்ராக்ருத லோகம் அம்ருதமாயுள்ளது மூன்று பாகம்" என்று சொல்லியிருப்பதால். ஸூக்தார்த்தம் என்று கூறியிருப்பதற்கு ஸூத்ரத்தின் அக்ஷரங்களின் அர்த்தம், மோக்ஷ தாத்பர்யார்த்தம், ஆகிய இரண்டும் என்று அர்த்தம். இதன் பேரில் ஶங்கை—ஈஶ்வரனுக்கு லக்ஷணம் சொல்ல வேண்டுமென்று விரும்பினால் அவன் ஒருவனுக்கே அமையக்கூடிய ஸர்வக்ஞத்வம் முதலிய குணங்களைச் சொல்லும் ஸத்யம், ஞானம் முதலிய ஸ்ருதி வாக்யங்களை ஆதரிக்காமல் உற்பத்தி முதலியவைகளுக்குக் காரணமாகுதல் என்பதை ஏன் ஸூத்ரமாக அமைத்தார்? இதற்கு பதில் கூறுவோம். குணங்களைக்கொண்டு ஸ்வரூபத்திற்கு லக்ஷணம் சொன்னால் ஸ்வரூபத்திற்கு வெளிப்பட்ட விபூதிகளை உபாலிக்கப்பட வேண்டிய வஸ்துவிற்குள் † சேர்க்கப்படாததாகத் தோன்றும். ஸ்ருஷ்டி

அரும்பதம்—

பட்டிருக்கிறது. இன்ன பசு விஶேஷமென்று அங்கே தெரியாவிட்டாலும் அது ஸம்பந்தமான மந்த்ரத்தில் சாகம் அதாவது வெள்ளாடு என்கிற பசு விஶேஷத்தைச் சொல்லி அதன் வபையைக் குறிக்கிறபடியால் விதி வாக்யத்தில் சொல்லிய பசு ஶப்தத்தை சாகம் என்கிற குறிப்பிட்ட பசுவை மட்டும் சொல்வதாக ஸங்கோசப்படுத்தி அர்த்தம் செய்வோம்.

†முக்தி காலத்தில் அடைந்து அனுபவிக்கவேண்டிய ப்ரஹ்மம் உபய விபூதிகளோடும் அநந்த கல்யாண குணங்களோடும் விஶிஷ்டமான ப்ரஹ்மம். ப்ராப்யமான அப்படிக் கொத்த ப்ரஹ்மந்தான் ஜிக்ஞாஸ்யம். ஜிக்ஞாஸ்யமான ப்ரஹ்மத்

ஸ்ரீபாஷ்யம் :—

தூவெ யூகூவெ வ ஸ்வ ஹூ ஸவ தி। நெவம। தத்ர ஸ்ரூணாஞ்தரேணை

.த்ராப்யேகமேவ் ப்ரஹ்ம பவதி! நைவம்! தத்ர ப்ரமாணாந்தரேண

ஸ்ரீபாஷ்யம் தமிழ்.மொழிபெயர்ப்பு—

படியே இங்கும் ஒரே ப்ரஹ்மம் க்ரஹிக்கப்படலாமே என்று சொன்னால்; அது கூடாது. அந்தவிடத்தில் வேறு ப்ரமாணத்தால் விசேஷ்யன் ஒரு

சீருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

முதலிய தொழில்களுக்கு விஷயமான விபூதிகளைக்கொண்டு ஸ்வரூபத்தைக் காட்ட லக்ஷணம் சொன்னால்; அந்த விபூதிகளை நியமிப்பது தாங்குவது முதலியவற்றிற்கு அவஸ்யமாக குணங்கள் அபேக்ஷிதமாகையால் அந்த குணங்கள் உபாஸிக்கப்பட வேண்டிய வஸ்துவிற்குள் சேராமல் வெளிப்பட்டுப் போகும் என்று ஐயுற இடமில்லை. ஆகையால் விரும்பி யறியவேண்டிய வஸ்துவிற்குள் குணங்களைப்போல விபூதியும் சேரவேண்டுமென்பதைத் தெரிவிப்பதற்காக "ஜன்மம் முதலியது" என்கிற லக்ஷணம் ஸூத்ரத்தால் அமைக்கப்பட்டது. விபூதியையும் உபாஸிக்கப்பட வேண்டிய பொருளுக்குள் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பது "மூன்று ‡ விதமான உபாஸனம்" என்கிற இந்த முதல் பாதத்தின் கடைசி ஸூத்ரத்தினாலும், தத்க்ரது *ந்யாயத்தாலும் ஸித்திக்கும். இப்படிச் சொன்னாலும் மூன்று பங்காகிய நித்ய விபூதியானது ஜன்மம் முதலியதற்கு விஷயமாகாததால் முழு விபூதியும் உபாஸ்யத்தில் சேருவது என்பது ஸித்திக்கமாட்டாதே என்று ஆக்ஷேபித்தால், அது கூடாது. நித்ய விபூதியானது உற்பத்தி முதலியதற்கு விஷயமாகாவிட்டா

அநுபதம்—

திற்கே இங்கே லக்ஷணம் கூறுகிறார். ஆகையால் உபயவிபூதிகளையும் எல்லா குணங்களும் சேர்ந்திருப்பதாக லக்ஷணம் கூறுவது அழகு. காரணத்வத்தையும் மோக்ஷமென்கிற பலத்திற்கு ஆதாரத்வத்தையும் இந்த லக்ஷணம் சொல்லுகிறபடியால் இரண்டு விபூதிகளோடும் காரணத்வத்திற்கு வேண்டிய குணங்களோடும் கூடிய ப்ரஹ்மத்தை லக்ஷணத்தால் காட்டியதாகும். குணங்களைச் சொல்லும் ஸத்யஜ்ஞாநாதி லக்ஷணத்தைச்சொன்னால் விபூதிகள் க்ரஹிக்கப்படமாட்டா. இந்த லக்ஷணத்தில் விபூதிகள் குணங்கள் எல்லாம் க்ரஹிக்கப்படும்.

‡இந்த ஸூத்ரம் இந்தப் பாதத்தின் கடைசி ஸூத்ரம். பரமாத்மாவின் உபாஸனம் மூன்று விதமாகும். ஸ்வரூபத்தைமட்டும் உபாஸிப்பது ஒரு ப்ரகாரம். சேதன ஸரீரகமாய் ப்ரமத்தை உபாஸிப்பது இரண்டாம் விதம். போக்யங்களையும், போகோபகரணங்களையும் ஸரீரமாக உடைய ப்ரஹ்மத்தை உபாஸிப்பது மூன்றும் விதம்.

*க்ரது என்பது எண்ணத்தையும் த்யானத்தையும் சொல்லும். எப்படி

ஸ்ரீபாஷ்யம் :—

கார்ய கீதைரேகஸ்மிந்நேவ விஶேஷணாநாமுபஸம்ஹாரः। கார்ய

க்யப்ரதீதேரேகஸ்மிந்நேவ விஶேஷணாமுபஸம்ஹாரः! அந்யதா

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

வனேயென்று தெரிவதால் ஒருவனிடத்திலேயே பல விஶேஷணங்களையும் கூட்டி அன்வயம் செய்கிறோம். இல்லாவிடில் அங்கும் விஶேஷணத்தின்

ச்ருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

லும் முடிவில் எதை அடைகின்றனவோ என்கிற ப்ரளயத்தைச்சொல்லும் கடைசி வாக்யத்திலிருக்கிற "எதை" என்கிற ஶப்தத்தால் சொல்லப்படும் முக்தர்களால் அடையத்தக்க ப்ரம்மமென்பதில் சேர்ந்து விடுமாகையால் இதை விவரிப்போம்— ப்ரளயத்தையடையும்படியான் என்கிற சொல் முடிவான லயம் என்ற மோக்ஷமுள் பட எல்லாப்ரளயங்களையும், சொல்லுமாதலால் எது என்கிற ஶப்தத்தினால் முக்தர் களால் அடையப்படும நித்ய விபூதியோடு கூடிய ப்ரம்மமும் குறிக்கப்பட்டதாகும். அடையப்படும் தசையில் எவ்வித ஆகாரங்களோடு கூடியதாக மற்ற ப்ரமாணங்க ளால் ஏற்படுகின்றதோ அந்த ஆகாரங்களோடு கூடிய ப்ரம்மம் இங்கே முன்பே ப்ர ஸித்தமென்று அனுவாதம் செய்யப்படுகிறது. மற்ற ப்ரமாணங்களும் இரண்டு விபூதிகளோடும் கூடிய பரிபூரண ப்ரம்மத்தையடையப்படுவதாகக் கூறுகின்றன அடையப்படவேண்டிய ஆகாரத்திற்கு உபாஸிக்கப்படவேண்டும் தன்மை தத்க்ரது ந்யாயத்தால் ஸித்திக்கிறது. ஆகையால் இவ்விதமாக லக்ஷணத்திற்குள் அடங்கிய லயம் என்கிற அம்ஶத்தினால் காட்டப்படும் நித்ய விபூதியும் அறிய வேண்டியதற் குள் சேருவது அவஶ்யமென்று ஸூத்ரத்தினால் ஏற்படுகிறது. இங்கே ஒரு ஶங்கை— "யத:" என்கிற ஸூத்ரபதத்திலுள்ள ஐந்தாம் வேற்றுமைக்கு உபாதானகாரணம் என்பதைக்காட்டுவதில் நோக்காததால் ப்ரம்மம் உபாதானம் என்று சொன்ன தாக ஏற்பட்டு நிமித்த காரணம் வேறொன்று என்று தோன்றுவதால் உபாதானம் மட்டும் பகவான் நாராயணன்; மஹேஶ்வரன் நிமித்த காரணன் என்று சொல்லு கிற வ்யோமாதீதர் என்பவருடைய பக்ஷத்திற்கு இடமுண்டாகும். இப்படிச் சங் கிப்பது கூடாது. 'யத:' என்கிற பதத்தில் ஐந்தாம் வேற்றுமை ஹேது என்பதை மட்டும் பொதுவாகக்காட்டும். ஹேது வென்கிற பொது அர்த்தம்தான் இங்கேயுள்ள

அநுபதம்—

ப்ரஹ்மத்தை எண்ணி த்யானிக்கிறவனே, அப்படி அந்த ப்ரஹ்மத்தை யடைகிறான் என்பது தத்க்ரது ந்யாயம். இது உபநிஷத்துக்களில் மூன்று இடங்களில் சொல்லப் பட்டிருக்கிறது. உபய விபூதிவிஶிஷ்டப்ரஹ்மம் ப்ராப்யமாதலால் அதை அடை வதற்கு அப்படியே அதை உபாஸிப்பது ஸ்வரஸமாகையால் அதை நன்கு காட்டும் இந்த காரணத்வலக்ஷணங்களே அமைப்பது அழகாகும்.

ஸ்ரீபாஷ்யம் :—

தத்ராவி வ்யாவர்த்தகத்வேநாநேககுணயோகிஹாரூபி ஈத்ர கூடஸ்தவத

தத்ராபி வ்யாவர்த்தகத்வேநாநேகத்வமபரிஹார்யம்! அத்ர த்வநேநைவ

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

விலக்குகிற ஸ்வபாவத்தால் பன்மை வந்தே தீரும். இங்கேயோ இந்த விரோ

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

தென்பது உற்பத்தி, ஸ்திதி, லயம், மூன்றுக்கும் பொதுவாயிருப்பதால் தெளிவாகி றது. ஜன்மமடையும் வஸ்துவின் உபாதானகாரணத்திற்கு பாணினிஸூத்ரத்தில் "அபா தானம்" என்று பெயரிடுவது போல் ஸ்திதி என்கிற ரக்ஷணத்தைச் செய்வதற்கும், லயத்திற்கு ஆதாரமாவதற்கும் ஆதாரமென்கிற பெயர் விதிக்கப்படவில்லை. ஆகை யால் இதில் இந்த ஐந்தாம் வேற்றுமை ஹேது என்கிற பொதுவான அர்த்தத்தைக் கொண்டே ஏற்பட்டதாகும். ஆகையால் நிமித்த காரணம் உபாதானகாரணம் என் கிற இரண்டுக்கும் ஹேதுவாயிருக்கும் தன்மை பொதுவாயிருக்கிறபடியால் "யத:" என்கிற ஸப்தத்தினால் இரண்டுவித காரணங்களையும் சேர்த்துக் கொண்டதாகும். "எதிலிருந்து இவை யெல்லாம்" என்று தொடங்கிய வாக்யத்தில் யத: என்கிற பதம் இரண்டு காரணங்களையும் உட்கொள்வதால் ஸூத்திரத்திலுள்ள அந்தப்பதத்திற் கும், அப்படியே இரண்டையும் உட்கொள்வதாக அர்த்தம் செய்வது யுக்தம். இங் கே ஒரு ஸங்கை.—

ணத்தில் ஒரு பிரிவாவது வெகுதூரம் என்ற பொருள். முன் அனுபவித்ததற்கு அதிகமான விஷயம் இருக்க ந்யாயமில்லை யென்பதைக் காட்டுகிறார்—"முன் அனுபவித்ததற்குமேல் அதிகமான விஷயமிருக்கக் காரணம் இல்லாமையால்" என்று. காரணம் என்பதற்கு இந்த்ரியதோடு ஸம்பந்தம் என்று பொருள். ஸரியான ஜ்ஞானத்திற்கு காரணமில்லாமையால் ப்ராமாண்யமில்லை யென்று பொருள். முன் பார்த்ததற்குமேல் அதிகவிஷய முண்டென்று சொல்லும் பக்ஷத்தில் தூஷணம் கூறுகிறார்—"அப்படிக்கிருந்தால்" என்று. இந்த்ரியத்தோடு ஸம்பந்தம் இல்லாதிருக்கையிலே முன் அனுபவித்ததற்கு அதிகமான விஷயம் இப்போது க்ரஹிக்கப்படுகிறதென்றால் அது தோஷத்தாலேயே யேற்பட்டவேண்டியிருப்பதால் ப்ராந்தியே யாகுமென்று பொருள். இரண்டுவிதமான அனுமானங்களுக்கும் * விஷயமாகாதென்று கூறுகிறார்—"நாபி" என்று. நியதம் என்பதற்கு வ்யாபிக்கப்பட்

அநுபதம்—

* 'ஸாமான்யதோத்ருஷ்டம்' என்றும் 'விஸேஷதோத்ருஷ்டம்' என்றும் சொல்லிய இரண்டுவித அனுமானங்கள்.

ஸ்ரீபாஷ்யம்:—

ஸம்பந்தாவதாரணவிரஹாந்ந விஶேஷதோத்ருஷ்டம். ஸமஸ்தவஸ்துஸா
ஹாத்காரதந்நிர்மாணஸமர்த்தபுருஷவிஶேஷநியதம் ஸாமாந்யதோ
த்ருஷ்டமபி ந லிங்கமுபலப்யதே! நநு ச ஜகதः கார்யத்வம் தது
பாதாநோபகரண ஸம்ப்ரதாந ப்ரயோஜநாபிஜ்ஞ கர்த்ருகத்வ
வ்யாப்தம், அசேதநாரப்தத்வம் ஜகதஸ்சைகசேதநாதீநத்வேந வ்யா
ப்தம், ஸர்வம் ஹி கடாதிகார்யம் ததுபாதாநோபகரணஸம்ப்ர

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

தானேயாகும். அனுமானமும் ப்ரஹ்மத்தைக் காட்டமாட்டாது. குறிப்பிட்ட விஷயத்தைப் பார்த்திருப்பதிலிருந்து ஏற்படும் விஶேஷதோத்ருஷ்டம் என்கிற அனுமானம் அதைக்காட்டுமா? அல்லது பொதுவாகப் பல விஷயங்களைப் பார்த்திருப்பதிலிருந்து ஏற்படும் ஸாமான்யதோத்ருஷ்டம் என்கிற அனுமானம் அதைக்காட்டுமா? இந்த்ரியங்களுக்கு எட்டாத பொருள் விஷயத்தில் அதற்கும் நாம் ஸாதிக்கவேண்டிய ஸாத்யத்திற்கும் ஸம்பந்தத்தை கவனிக்க இயலாததால் விஶேஷதோத்ருஷ்டம் என்கிற அனுமானத்திற்கு இடமில்லை. உலகத்திலுள்ள எல்லா வஸ்துக்களையும் நேரில் கண்டு அவற்றை ஸ்ருஷ்டிசெய்யும் ஸாமர்த்யமுடைய ஒரு விஶிஷ்ட புருஷனுக்கு உரியதான பொதுவில் பார்க்கப்பட்ட ஒரு லிங்கம் (அடையாளம், ஹேது)

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

டத என்று பொருள். ஸித்சார்தியைப்போல் ஆக்ஷேபிக்கும் வாதியைப்பார்த்து பூர்வபக்ஷியில் ஏகதேஶி ஆக்ஷேபிக்கிறான் "நநு ச" என்று. நையாயிகர்களில் ஏகதேஶிகளால் கூறப்பட்ட அனுமானத்தைக் கூறுவதால் பூர்வபக்ஷியில் ஏகதேஶியாவான். ஸம்ப்ரதாநம் என்பதற்கு போக்தா (அனுபவிப்பவன்) என்று பொருள். ப்ரயோஜனம் என்பதற்கு விநியோகம் என்று பொருள். ஒரே கர்த்தாவிஞல் செய்யப்படுகிறது என்பது ஸித்திப்பதற்காக வேறொரு அனுமானத்தைக் கூறுகிறார்— "அசேதன" என்று. உபாதாநம் முதலியதை யறிந்த கர்த்தாவை யுடையது என்

ஸ்ரீ பாஷ்யம் :—

தாநவ யொஜநாஜ்ஞகர்த்ருகம் த்ருஷ்டம் । அசேதநாரப்தமசேதநம்
வபுஸ்ரீரமேகசேதநாதீநஞ்ச । ஸாவயவத்வேந ஜகத: கார்யத்வம் ॥

ஸ்ரீ பாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

காணப்படுகிறதில்லை. இன்னமும் கேட்போம். ஜகத் என்பது செய்யப் படவேண்டியதற்கு அதற்குவேண்டிய உபாதாநத்ரவ்யங்களையும் உபகரணங் களையும் அது யார் யாருக்கு எப்படி யெப்படி அனுபவிக்க விநியோகம்செய்ய வேண்டுமென்பதையும், அதன் ப்ரயோஜநத்தையும் நன்கறிந்த ஒரு கர்த்தா இருந்துதீரவேண்டும். அப்படி ஒரு கர்த்தா இருக்கவேண்டியது ஜகத்தின் கார்யத்வத்திற்கு வ்யாபகமாகும். ஜகத் அசேதனப்பொருள்களால் ஏற்படு வது என்பது ஒரே சேதனனுக்கு அதீநமாகவே இருந்து தீரவேண்டுமென் கிற ந்யாயம் உண்டு. சுடம் முதலிய எல்லாக் கார்யமும், அதன் உபாதா நத்தையும், உபகரணங்களையும், அதை அனுபவிக்கவேண்டியவர்களையும் ப்ர யோஜனத்தையும் நன்முறை அறிந்த ஒரு கர்த்தாவை யுடையதென்று கண் டிருக்கிறோம். அசேதனங்களால் ஆரம்பிக்கப்பட்டதும், வ்யாதியில்லாதது

சந்தப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

பதில் த்ருஷ்டாந்தம் † கூறுகிறார்—"எல்லாம்" என்று. ஒரு சேதனனுக்கே அதீ நமாயிருப்பதற்கு ¶ த்ருஷ்டாந்தம் கூறுகிறார்—"அசேதன" என்று. நோயுடைய சரீரத்தையும் அயலானுடைய சரீரத்தையும் விலக்குவதற்காக "அரோக" என்கிற ஸப்தமும், "ஸ்வ" என்கிற ஸப்தமும். கார்யத்வம் என்பது ஸித்தித்தல்லவோ உபாதானம் முதலியதையறிந்த கர்த்தாவால் செய்யப்படுவது ஸித்திக்கும் என்று கேள்க்கக்கூறுகிறார்—"அவயவத்தோடு கூடியிருப்பதால்" என்று. § இதனால் அசே தனங்களால் ஆரம்பிக்கப்பட்டது என்கிற ஹேதுவானது அஸித்தமோ வென்கிற

அநுபதம்—

† சுடம் முதலியது த்ருஷ்டாந்தம்.

¶ இந்த அநுமானங்கள் ஸித்தித்ரயத்தில் ஸ்ரீ ஆளவந்தாரால் காட்டப்பட் டிருக்கின்றன. ஸித்தித்ரயத்தின் பங்க்திகள் கௌரவத்தால் பாஷ்யத்தில் நினைக்கப் பட்டிருக்கின்றன. இப்படியே முதல் அதிகரணத்திலும் நன்வேகசேதநாரப்தம்

§ ஜகத்திற்கு கார்யத்வத்தை ஒப்புக்கொண்டாலல்லவோ, அது செய்யப்படும்

ஸ்ரீபாஷ்யம் —

உச்யதே— கிமிதமேகசேதநாதீநத்வம் ? ந தாவதாத்மாயத்தோத்பத்தி

உச்யதே—கிமிதமேகசேதநாதீநத்வம் ? ந தாவத்தாயத்தோத்பத்தி

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

மான ஒருவன் ஸரீரம் ஒரே சேதனனுக்கு அதீனமானது. ஜகத்துக்கு காரணத்வம் அது அவயவங்களையுடையதென்கிற ஹேதுவினால் விளக்கும்.

இதற்கு பதில் கூறுவோம்:—ஒரே சேதனனுக்கு அதீனமானது என்று சொல்லுகிறீரே ! அது என்ன ? அந்தப் பொருளின் உத்பத்தியும் ஸ்திதியும் அந்த ஒரு சேதனனை ஆஸ்ரயித்திருப்பது அதுவாகும் என்று சொல்ல

ச்ருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு —

ஸங்கையும் பரிஹரிக்கப்பட்டதாகிறது. இப்படிப் பூர்வபக்ஷியில் ஏகதேசியால் கூறப்பட்ட அர்த்தத்தை ஸித்தாந்தியில் ஏகதேஸி தூஷிக்கிறான் "சொல்வோம்" என்று. பின்னால் கூறிய அனுமானத்தை அப்பொழுதுதான் புத்தியில் வந்ததால் ‡ முதலில் தூஷிக்கிறார்—"இது என்ன" என்று. ஒரே சேதனனுக்கு அதீனமாயிருக்கை என்பது உத்பத்தி ஸ்திதி இரண்டும் அவன் அதீனமென்பதா அல்லது அதன் ப்ரவ்ருத்தி அவன் அதீனமென்பதா என்று இரண்டு விதமாக விகல்பித்து முதலாவதில் உத்பத்தி ஸ்திதிகள் அவன் அதீனமாயிருக்கை என்பது அவனுடைய இச்சைக்கு அதீநமாயிருக்கை என்று எண்ணமா ? அல்லது அவனுடைய அத்ருஷ்டத்திற்கு அதீநமாயிருக்கை என்று பொருளா ? இந்த விகல்பங்களெல்லாம் ஸம்சயம் என்று காட்டுவதற்கு நிந்தையான 'கிம்' ஸப்தம். அவனுடைய இச்சையைப் பொருத்தது உத்பத்தி ஸ்திதிகள் என்பது கண்டதில்லாதலால் த்ருஷ்டாந்தத்தில்

அநுபதம்—

கார்யமாகையால் சேதனை ஒரு கர்த்தாவால் செய்யப்பட்டிருக்கவேண்டுமென்று நீங்கள் ஊஹிக்கலாம். ஜகத்து செய்யப்பட்ட காரணமென்று நாங்கள் ஒப்புகொள்வதில்லை. நீங்கள் அதை ஸாதித்துவிட்டு அல்லவா கார்யத்வத்தை ஹேதுவாகக் கொள்ளலாம்; இப்படி தார்க்கிகர்களைக்கேழ்க்க, அவர்கள் ஸாவயவத்வம் என்கிற ஹேதுவைக்கொண்டு கார்யத்வத்தை ஸாதிக்கவேண்டும் என்கிறார்கள். எது எது அவயவ பாகமுடையதோ அது அது கார்யம். கூடத்தைப்போல என்று அவர்கள் அனுமானம். ஜகத்தின் அவயவங்களைப் பிரிக்கக்கூடுமாகையால் அதுவும் கார்யமாகும்.

‡ பின் கூறிய அனுமானம் ஸ்ருதியில் அப்பொழுதுதான் வந்து அப்படியே நினைவிலிருப்பதால் அதை முதலில் எடுத்து தூஷிக்கிறார்.

ஸ்ரீபாஷ்யம்:—

ஸித்திகூவம், ஊஷ்டாஹொ ஹி வாயுவிகலஸ்யாஸ் । ந ஹ்யரோகம் ஸ்வஸரீரமேகசேதநாயத்தோத்பத்திஸ்திதி சச்சரீரஸ்ய போக்தருணம் பார்யாதி ஸர்வ சேதநாநாம் அத்ருஷ்ட ஜந்யத்வாத்ததுத்பத்தி ஸ்திதயோ: !

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

இயலாது. ஏனெனில்; வ்யாதியில்லாத தன்ஸரீரம ஒன்று நீங்கள் சொல்லும் த்ருஷ்டாந்தத்தில் (ஏகசேதன அதீநம்) ஒரு சேதனனுக்கு அதீநமாயிருக்கை என்கிற ஸாத்யம் இல்லாமல்போகுமே. சோகமில்லாத ஒருவன் ஸரீரம் அவனொருவனையே ஆஸ்ரயித்த உத்பத்தி ஸ்திதிகளையுள்ளதல்லவே. அவன் ஸரீரத்தை யனுபவிக்கும் போக்தாக்களான பார்யை முதலிய எல்லாச் சேத

சீநதப்ராகாசிகை தமிழ் மொழி பெயர்ப்பு—

ஸாத்யம் இல்லையென்கிற தூஷணம் § எல்லோருக்கும் தெரிந்திருப்பதால் இரண்டாவது கோடியை தூஷிக்கிறார்—"தீருஷ்டாந்தமோ" என்று. ஸாத்யமில்லாமையை விவரிக்கிறார்—"அல்லவா" என்று. ஏன் என்று கேள்க்கக்கூறுகிறார்—"அவனுடைய ஸரீரத்தின்" என்று. அல்லது வேறு விதமாயும் அர்த்தம் சொல்லலாம் "ந தாவத்" என்று ஆரம்பித்த பாஷ்ய கிரந்தம் அவனிச்சையைப்பொருத்த உத்பத்தி ஸ்திதிகளையுடையதற்கும் அவை அவனதருஷ்டத்தைப் பொருத்திருப்பதற்கும் பொதுவாகும். அதில் இச்சையைப்பொருத்தது 'என்கிற பக்ஷத்தில் த்ருஷ்டாந்தத்தில் ஸாத்ய

அநுபதம்—

§ த்ருஷ்டாந்தத்தில் ஸாத்யவைகல்யம் ஒரு தூஷணம். வைகல்யம் என்பது இல்லாமை. ஸாத்யமில்லாமை என்பது ஸாத்யவைகல்யம். ஒரு சேதனனுக்கே அதீனமாயிருத்தல் ஸாத்யம். அதை ஸாதித்தால்தான் ஈஸ்வரனென்கிற ஒரு சேதனனுக்கு ஜகத் என்னும் கார்யம் அதீனமென்று ஸாதிக்க யத்னப்படலாம் இந்த அனுமானத்தில் யாது மில்லாத நம சொந்த சரீரம் ஒரு சேதனனுக்கு அதீனமாயிருக்கை யென்பதற்கு உற்பத்தி ஸ்திதிகள் அவனிச்சையைப் பொருத்தசென்று பொருள் சொன்னார். நம்முடைய ஸரீரத்தின் உத்பத்தி முதலியது நம்முடைய இச்சையைப் பொருத்திருக்காததால் நம்முடைய சரீரம் என்னும் த்ருஷ்டாந்தத்தில் ஸாத்யமில்லை யென்கிற விரோதம். இது ஸ்பஷ்டமாயிருப்பதால் இதை ஸ்ரீ பாஷ்யகாரர் விவரிக்கவில்லை.

ஸ்ரீபாஷ்யம் —

கிஞ்ச, ஶரீராவயவிநः ஸ்வாவயவஸமவேதசாரூபாஸ்திரவயவ ஸம்ஶ்லேஷவிஶேஷவ்யதிரேகேண ந சேதநமபேக்ஷதே, ப்ராணந

கிஞ்ச, ஶரீராவயவிநः ஸ்வாவயவ ஸமவேதசாரூபாஸ்திரவயவ் ஸம்ஶ்லேஷவிசேஷவ்யதிரேகேண ந சேதநமபேக்ஷதே, ப்ராணந

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

னர்களுடைய அத்ருஷ்டாயத்தம் அதன் உத்பத்திஸ்திதிகள். மேலும் ஶரீரம் என்கிற அவயவ ஸமுதாயத்தின் அவயவங்களின் பரஸ்பரம் நெருக்கமான சேர்க்கை யென்கிற ஸ்திதியானது அவயவங்களை ஒருவிதமாக ஒன்றோடொன்று சேர்த்துவைத்துக் கொள்ளும் வ்யாபாரத்தில் தவிர மற்ற விதமாய் அவ்வுடம்புக்கு உரிய சேதனனை யபேக்ஷிக்கிறதில்லை. மூச்சுவிடுகி

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

மில்லையென்கிற தோஷம் ஸ்பஷ்டம் ஆகையால் அத்ருஷ்டாதீநம் என்கிற பக்ஷத்தில் ஸாத்யமில்லாமையை விவரிக்கிறார்—'இல்லையே' என்று. உத்பத்தியும் ஸ்திதியும் சேர்ந்து தூஷிக்கப்படுகிறது இப்போது ஸ்திதியைத் தனியாகப்பிரித்து தூஷிக்க ஆரம்பிக்கிறார்—"மேலும்" என்று. தன்னுடைய அவயவங்களில் பொருந்தியிருப்பது ஸ்திதியென்று சொல்லுவதை வைஶேஷிகர் முதலியவர் மதத்தை யனுஸரித்ததினால் 'சேதனனை அபேக்ஷிக்கிறதில்லை' என்று. சேதனனுடைய அபேக்ஷை வஸ்துஸ்வரூபத்தாலேயே இருக்கலாம், அத்ருஷ்டமூலமாகவும் இருக்கலாம், அல்லது இச்சை மூலமாகவும் இருக்கலாம். இதில் வஸ்துஸ்வரூபம் மட்டும் ஸ்திதிக்குக் காரணமாகாது. ஏனெனில் ஸ்வரூபமிருக்கையிலும் விநாஶம் ஏற்படுகிறது. அத்ருஷ்டத்தைப் பொருத்தது என்பதற்கு முன்பே பதில் கூறப்பட்டதால் இச்சையைப் பொருத்ததென்கிற பக்ஷம் இதனால் தூஷிக்கப்படுகிறது. சேதனனுடைய இச்சையை அபேக்ஷிக்கிறதில்லை என்று பொருள். அழியும் வரையில் ஓடியாமல் அசிதிலமாயிருப்பது ஸ்திதி என்று சொல்லுவதும் இதனால் பதில் கூறியதாகிறது என்கிற அபிப்பிராயத்தால் அதைச் சொல்லவில்லை. பிறகு ஏற்கனவே கூறியவிகல்பங்களின் தூஷணத்தினால் நிராஸிக்கப்பட்டிருந்தாலும், அதில் ஒரு கோடியை வேறொரு தூஷணமும் இருப்பதால் எடுத்து தூஷிக்கிறார்—"ப்ராணனும்" என்று. ப்ராணன ரூபமான என்பதற்கு ஐந்து வ்ருத்திகளையுடைய மூச்சு என்கிற ப்ராணனோடு கூடியதென்று அர்த்தம். நாம் காணவில்லை என்பதற்கு "வாயும்*(பாதம்)" என்கிற தோஷத்தில்

அநுபதம்—

* பக்ஷத்தில் ஸாத்யமில்லை யென்று ப்ரபலமான வேறு ப்ரமாணத்தால் நிச்சயமாக ஏற்படுவதால், ஸாத்யம் இல்லையென்று பாதிக்கப்படுகிறது. ஆகையால் இந்த

ஶ்ரீபாஷ்யம் :—

யகூஷணா து ஸ்ரீதிः வகூஷக்வாஹிஶேத கூஷிதிஜலயிஶஹீயராஶள ந
ஸம்ஹவதீதி வகூஷவகூஷாநாமதாஶேகரூபாம் ஸ்ரீதிம் நோவலபா
மஹே ! ததாயத்தவ்ருத்தித்வம் தததீநத்வமிதி சேத் அநேகசேதன

ஶ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

றது என்கிற ஸ்திதி நீர் பகூஷமாகக்கொள்ளும் பூமி, ஸமுத்ரம், பர்வகம் முத லியவற்றில் ஒட்டாதாகையால் பகூஷ்ம ஸபகூஷம் முதலிய எல்லாப் பொருள் களிலும் ஒரேவிதமாய்க் கூடியிருக்கும் ஸ்திதியை நாம் காண்கிறதில்லை. ஒன் றுக்கு அதீநமசயிருப்பதென்பது அதன் ப்ரவ்ருத்தி அதை அண்டியிருப்பதே

சந்தப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு —

தாத்பர்யம். ஒரு சேதனனுக்கு அதீநமாயிருப்பதென்பது ப்ரவ்ருத்தி அவனைப் பொ ருத்திருப்பதென்கிற கூஷியை ஸங்கிக்கிறார்—"அவனைப்பொருத்து" என்று அசே தனங்களால் ஆரம்பிக்கப்பட்டது என்கிற ஹேதுவுக்கு வ்யபிசாரதோஷம் ‡ உண் டென்று கூறுகிறார்—"அனேகம்" என்று. அனேக சேதனர்களால் ஸாத்யங்களில்

அநுமானத்திற்குவாய தோஷம் வருகிறது. (நெருப்பு உஷ்ணமல்ல.) "பதார்த்த மாயிருப்பதால்" என்று அநுமானம் ப்ரயோகித்தால் "உஷ்ணமல்ல" என்கிற ஸாத் யம் நெருப்பு என்கிற பகூஷத்தில் ப்ரபலமான ப்ரத்யகூஷ ப்ரமாணத்தால் பாதிக்கப் படுகிறது. ஒரு கார்யத்தின் ஸ்திதி நிமிச்சோடிருத்தல் என்று சொன்னால் அசே தனமான கல் முதலியதில் மூச்சுக் காற்று இல்லையென்று ப்ரத்யகூஷத்தால் ஏற்படுவ தால் அந்த ஸாத்ய ப்ரத்யகூஷத்தால் பாதிதமாகும்.

‡ ஸாத்யமில்லாத பொருளுக்கு விபகூஷம் என்று பெயர். ஸாத்யமில்லாத விப கூஷத்திலும் ஹேதுவிருத்தால் அதை வ்யபிசாரதோஷமென்றும், அனைகாந்திக தோ ஷம் என்றும் சொல்லுவர். ஸாத்யம் நிஸ்சயமாயிருப்பது ஸபகூஷம். ஸாத்யமிரு பது ஸந்தேஹமாயிருப்பது பகூஷம். பகூஷம், ஸபகூஷம், விபகூஷம், எல்லாத்திலும் பொதுவாயிருக்கும் ஹேதுவை ஸாதாரணானைகாந்திகம் என்று சொல்லுகிறது. மண் டபம், கோபுரம், மாளிகை, ரதம் முதலிய அசேதனங்களைக்கொண்டு ஆரம்பிக்கப் பட்ட கார்யம் அநேகசேதனர்களால் சேர்ந்து செய்யப்படுவதைக்காண்கிறோம். ஒரு சேதனனுக்கு அதீனம் ஒரு சேதனன் என்னும் ஸாத்யம் அங்கே கிடையாது.

ஸ்ரீபாஷ்யம்:—

ஸாயேஷ்ட குருதராதஸ்ரிலாமஹீருஹாதிஷ்ட வ்யபிசாரः ।
சேதநமாத்ராதீநத்வே ஸித்தஸாத்யதா ॥

கிஞ்ச, உபயவாதிஸித்தாநாம் ஜீவாநாமேவ லாகவேந கர்த்ரு

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

என்று சொன்னால் பல சேதனர்களால் ஸாதிக்கப்படும் மிகப் பெரிய தேர், கல், வ்ருக்ஷம் முதலிய பொருள்களில் ஒரு சேதனனுக்கு அதீனமாயிருப்பதைக் காணுமையால் வ்யபிசாரம் வரும். ஏதோ ஒரு சேதனனுக்கு அதீநமாயிருப்பதுதான் ஏகசேதனாதீநத்வம் என்று சொன்னால் நாங்கள் ஒப்புக்கொள்வதற்குமேல் ஒன்றையும் புதிதாக ஸாதிக்காததால் ஸித்தஸாத்யதை யென்கிற தோஷம் வரும்.

மேலும், நாமிருவரும் ஒப்புக்கொள்ளும் ஜீவர்களுக்கே கல்பனலாகவம் என்கிற ந்யாயத்தை முன்னிட்டு ஜகத் கர்த்ருத்வத்தை ஒப்புக்கொள்

சுருதப்ரகாசிகை தமிழ் மொழி பெயர்ப்பு—

என்பதற்கு அனேக சேதனர்களால் ப்ரவர்த்திக்கப்படுவதில் என்று பொருள். ஒரே சேதனனால் என்று பூர்வபக்ஷி சொல்லவிரும்பாவிட்டால் நாம் ஒப்புக்கொண்டதையே அவன் ஸாதிக்கயத்தனப்படுவதால் ஸித்தஸாத்ய † மென்கிற தோஷம் வருமென்று கூறுகிறார்—"சேதனமாத்ர" என்று. இப்படி ஒரு சேதனனுக்கு அதீநமாயிருக்கை யென்பது நிரஸிக்கப்பட்டது. கார்யத்வம் என்கிற ஹேதுவும் முன்பே சித்தத்தை ஸாதிப்பதாகும் என்று எதிரி பக்ஷத்தில் கல்பனை அதிகமாக செய்யவேண்டியிருக்கிறதென்றும், தம் பக்ஷத்தில் கல்பனை லகுவாயிருக்கிறதென்றும், தர்க்கமென்னும் யுக்தியைக்கொண்டு கூறுகிறார்.—"மேலும்" என்று. வாதி பிரதிவாதி இருவரும் ஒப்

அநுபதம்—

† ஒரு சேதனனுக்கு அதீநமாயிருத்தல் என்பதை ஸாதிக்காமல் விட்டுவிட்டு பல சேதனர்களுக்கு அதீநமாயிருப்பதை ஆக்ஷேபிக்காமல் பொதுவாக சேதனனுக்கு அதீனமாயிருப்பதை மட்டும் ஸாதிக்கிறோம் என்று சொன்னால், அது நாங்கள் ஒப்புக்கொள்வதுதானே. எங்களுக்கும் ஸாத்யமானதை நீங்கள் ஸாதிப்பானேன்? ஸித்தத்தை ஸாதிக்கிறது என்கிற தோஷம் உங்களுக்கு வருகிறது.

ஸ்ரீ பாஷ்யம்—

கூஹ்ய-வமதோ ய-க்தஃ। ந ச ஜீவாநாம் உபாதாநாத்ந ஜ்ஞாதயா கர்த்ருத்வாஸம்பவஃ, ஸர்வேஷாமேவ சேதநாநாம் ப்ருதிவ்யாத்யு பாதாநயாகாத்யுபகரணஸாக்ஷாத்கார ஸாமர்த்யாத்। யதேதா நீம் ப்ருதிவ்யாதயோ யாகாதயஶ்ச ப்ரத்யக்ஷமீக்ஷ்யந்தே। உபகரண பூதயாகாதிஶக்திரூபாபூர்வாதிஶப்தவாச்யாத்ருஷ்ட ஸாக்ஷாத்கா

ஸ்ரீ பாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

வது யுக்தமாகும். ஜீவர்களுக்கு உபாதானம் முதலியதின் ஜ்ஞானமில்லாத தால் அவர்களுக்கு ஜகத் கர்த்ருத்வம் ஸம்பவிக்காது என்று சொல்லமுடியாது. எல்லாச் சேதனர்களுக்கும் பூமி முதலியதின் உபாதாநத்தையும், யாகம் முதலியதின் உபகரணங்களையும் ஸாக்ஷாத்கரிக்க ஸாமர்த்யமுண்டு. எப்படி இப்பொழுது பூமி முதலியவைகளும் யாகம் முதலியவைகளும் ப்ரத்யக்ஷமாய்க் காணப்படுகின்றனவோ (அப்படியே முன்பும் இருக்கக்கூடும்) யாகம் முதலியவற்றால் ஏற்பட்ட புண்யஶக்தியான அபூர்வம் முதலிய ஶப்தங்களால் சொல்லப்படும் அத்ருஷ்டத்தைக் கண்ணால் காணக்கூடாமற்போ

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

புக்கொண்டவர்களான என்கிற சொல்லால் லகுவாயிருப்பதற்குக்காரணம் சொல்லப்பட்டது. "முன்பே சுலுப்தமாயும் ஸித்தமாயும் இருப்பதற்கும், புதிதாகக் கற்பிக்கப்படவேண்டியதற்கும் விரோதம் வருங்காலத்தில் முன்பே ஸித்தமானதைக் ரஹிப்பதுதான் யுக்தம்" என்றல்லவோ பெரியோர் பணிப்பர். வேறு மார்க்கம் ஸம்பவித்தாலல்லவா கல்பனையில் லாகவத்தைக் கொள்ளலாம். வேறு மார்க்கம் ஸம்பவிக்காத விடத்தில் அதிகமாக ஒன்றைக் கல்பிப்பது தோஷமாகாது என்று ஆக்ஷேபனை வரக் கூறுகிறார்—"அப்படியில்லை" என்று. ஏன் அப்படி என்று கேள்விக்குக் கூறுகிறார்—"ஏல்லா" என்று. முன் காலத்தில் சேதனர்களுக்கு ஸூக்ஷ்மமான பொருள்களைப் பார்ப்பதற்கு ஸாமர்த்யத்தை இப்பொழுது இருக்கும் ந்யாயத்தைக் கொண்டே காட்டுகிறார் — "எப்படி" என்று "இப்பொழுது" என்று. இப்படியே முற்காலத்திலும் என்று தாத்பர்யம். தர்மத்தையும் அதர்மத்தையும் ஸாக்ஷாத்கரிக்கக் கூடாமையால் கர்த்ருத்வமே கூடாது என்று ஶங்கைப் பட்டுக் கூறுகிறார் — "உபகாணம்" என்று, "யாகம் முதலியதின் ஶக்தி" என்று. யாகம் முதலியதால் தான் ஆத்மாவு

ஸ்ரீபாஷ்யம் —

ராஹாவேவி தெதநாநாம் நகர்த்ருத்வாநுபபத்தேः, தத்ஸாக்ஷாத்கா
ராநபேக்ஷணாத்கார்யாரம்பஸ்ய ! ஸக்திமத்ஸாக்ஷாத்கார ஏவ ஹி
காரயாரம்போபயோகீ ! ஸக்தேஸ்து ஜ்ஞாநமாத்ரமேவோபயு

ராபாவேபி சேதநாநாம் ந கர்த்ருத்வாநுபபத்தேः, தத்ஸாக்ஷாத்கா
ராநபேக்ஷணாத்கார்யாரம்பஸ்ய ! ஸக்திமத்ஸாக்ஷாத்கார ஏவ ஹி
கார்யாரம்போபயோகீ ! ஸக்தேஸ்து ஜ்ஞாநமாத்ரமேவோபயு

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

ஞனும், சேதனர்களுக்கு ஜகத் கர்த்ருத்வம் அனுபபந்நமாகாது. ஒரு கார்யத்தைச் செய்ய ஆரம்பிப்பதற்கு அதற்கு உபகரணமான அத்ருஷ்டத்தையும் ஸாக்ஷாத்கரிக்கவேணுமென்கிற அபேக்ஷையில்லை. ஒரு கார்யத்தை யாரம்பிப்பதற்கு ஸக்தியுடைய பொருளை ஸாக்ஷாத்கரிப்பதே உபயோகப்படும். பொருளின் ஸக்தியின் ஜ்ஞானம் மட்டும் உபயோகப்படுமேயொழிய

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

க்கு உண்டாகும் அதிசயம் என்கிற ஸக்தி என்று பொருள். § எனென்று கேழ்க்கக்கூறுகிறார் — "அதன் ஸாக்ஷாத் காரம்" என்று. அப்படியானால் குடம் முதலியதைச் செய்வதில் மண் முதலியதை ஸாக்ஷாத் கரிப்பது நியதமல்ல வென்று எப்படிக் கூடும் என்று கேழ்க்கக் கூறுகிறார் — "ஸக்தியுடையதின்" என்று. ஸக்தியுடையது என்கிற ஸப்தத்திற்கு ஸக்தியோடு ஸம்பந்தப் பட்டது என்று பொருள். உண்டாக்கப்படுவது உண்டாக்குவது என்கிற ஜந்ய ஜநகபாவம் ஒருவிதமான ஸம்பந்தமானதால் அத்ருஷ்டமென்னும் ஸக்தியை யுண்டு பண்ணும் யாகம் முதலியதை ஸக்தியுடையது என்று பேசுவது. ஸக்தியும் அபேக்ஷிக்கப் படுவதால் அதன் ஸாக்ஷாத்காரமும் அபேக்ஷிக்கப்படும். அப்படியில்லாவிட்டால் பொருள்களின் ஸக்திகளே தெரிந்துகொள்ளாமலே மனுஷ்யர்கள் அந்த ஸக்திகளைக்கொண்டு அந்தந்தக் கார்யத்தைச் செய்வார்களென்று வருமேயென்று கேழ்க்கக் கூறுகிறார்—"ஸக்திக்கோ" என்று. "து" என்கிற ஸப்தத்திற்கு ஸக்தியுடைய வஸ்துவைப்போல ஸக்தியையும் அறியவேண்டியது முக்யந்தானென்று காட்டுவதற்காக ஸக்தியின் ஸாக்ஷாத்காரம் வேண்

அநுபதம்—

§ யாகத்தினாலுண்டாகும் புண்யம் அபூர்வம். அத்ருஷ்டம் என்கிற ஸக்தி ஆத்மாவில் உண்டாகிற தென்று அவர்கள் பக்ஷம். அந்த ஸக்தி அப்படியே ஆத்மாவிலிருந்து பின்பு விபாக காலத்தில் பலத்தைக் கொடுக்கிறது.

ஶ்ரீபாஷ்யம்:—

ஜ்யதே, ந ஸாக்ஷாத்காரः, ந ஹி குலாலாதயः கார்யோபகரண பூததண்டசக்ராதிவத்தச்சக்திமபி ஸாக்ஷாத்க்ருத்ய கடமணிகாதிகார்ய மாரபந்தே ! இஹ து சேதநாநாமாகமாவகதயாகாதிஶக்திவிஶேஷாணாம் கார்யாரம்போ நாநுபபந்நः ॥

ஜ்யதே, ந ஸாக்ஷாத்காரः, ந ஹி குலாலாதயः கார்யோபகரண பூததண்டசக்ராதிவத்தச்சக்திமபி ஸாக்ஷாத்க்ருத்ய கடமணிகாதிகார்ய மாரபந்தே ! இஹ து சேதநாநாமாகமாவகதயாகாதிஶக்திவிஶேஷாணாம் கார்யாரம்போ நாநுபபந்நः !!

ஶ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

அதைக் கண்ணால் பார்க்கவேண்டுமென்பதில்லை. குயவர் முதலியவர் செய்யும் பொருள்களுக்கு உபகரணமான தண்டம் சக்ரம் முதலியதைக் கண்ணால் பார்ப்பதுபோல், அவைகளின் ஶக்தியையும் கண்ணால் பார்த்துவிட்டுத்தான் குடம், சால் முதலிய கார்யங்களை ஆரம்பிக்கிறார்களென்பதில்லையே. ப்ரக்ருத விஷயத்திலேயோவென்றால், ஶாஸ்த்ரத்தால் தெரிந்துகொள்ளப்பட்ட யாகம் முதலியதின் ஶக்தி விஶேஷத்தோடுகூடிய சேதனர்கள் ஜகத் என்னும் கார்யத்தை ஆரம்பிப்பது அனுபபந்நமாகாது.

சீந்தப்பாகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

டியதில்லை என்பதைக் காட்டுகிறார்—"இல்லையே" என்று. ஶக்தியின் ஸாக்ஷாத்காரம் வேண்டாமற்போனாலும் ஶக்தியின் ஜ்ஞானம்மட்டும் போதும். அதுமட்டும் போதும் என்பது குயவனுடைய தண்ட சக்ரங்களில் அன்வயத்தாலும் வ்யதிரேகத்தாலும் ஸித்திக்கும். § யாகம் முதலியதிலோ இது எப்படிக்கூடும் என்று கேழ்க்கக்கூடுகிறார்—"இங்கேயோ" என்று. இப்படிக்கு எதிராளி ஒப்புக்கொள்வதையே ஸாதிக்க யத்நப்படுவது என்கிற ஸித்த ஸாதன தோஷம் கூறப்பட்டது.

அநுபதம்—

§ அன்வயம் என்பது சேர்க்கை. வ்யதிரேகம் என்பது பிரிவு. ஒன்றிருந்தால் தான் மற்றொன்றிருக்குமானால் அதை அன்வயமென்றும் ஒன்றில்லையானால் மற்றொன்றும் இருப்பதில்லை யென்றால் அதை வ்யதிரேகமென்றும் சொல்லுவர். காரணமிருந்தால்தான் கார்யமிருக்கும்; காரணமில்லையானால் கார்யமிராது. அன்வய வ்யதிரேகங்களிரண்டும் கூடியிருப்பதைக்கொண்டு கார்யகாரணபாவத்தை நிச்சயம் செய்வர். இன்னவஸ்துவிற்கு இன்ன ஶக்தி யுண்டென்று கர்த்தாவிற்குத்தெரியும்; அந்த வஸ்துவைக் கண்ணாலே காணவேண்டுமென்று அவஸ்யமில்லை.

ஸ்ரீபாஷ்யம் :—

கிஞ்ச, யத்கர்தீயம் ஸ்ரேயோவாஹாதாதி விஜ்ஞாநம் ச, ததேவ கிஞ்ச, யச்சக்யக்ரியம் ஸக்யோபாதாநாதி விஜ்ஞாநம் ச, ததேவ

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

மேலும், எது செய்வதற்கு ஸாத்யமோ; எதை செய்வதற்கு அபேக்ஷிக்கப்படும் உபாதானம் முதலியதின் ஜ்ஞானம் எந்தக்காரியத்

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

பிறகு கார்யத்வம் என்கிற ஹேதுவில் இரண்டு உபாதிகளைக்காட்டி ‡ ஸோபாதிக மென்கிற தோஷத்தைக் கூறுகிறார் “மேலும்” என்று. உபாதி என்பது ஸாதனத்

அநுபதம்—

‡ கார்யத்வத்தைக்கொண்டு ஒரு கர்த்தாவை யுடையது என்று ஸாதிக்கும் அனுமானத்தில், கார்யத்வம் என்கிற ஹேதுவில் இரண்டு உபாதிகள் உண்டு. சரீரத் தோடிருக்கும் கர்த்தாவையுடைய என்பதும், பரிமித ஜ்ஞானஸக்திகளையுடைய ஸர் வஜ்ஞனல்லாத ஒரு கர்த்தாவை யுடையது என்பதும் இரண்டு உபாதிகள். நெருப் பின் இருப்பைக்கொண்டு புகை யுண்டென்று ஸாதிக்கையில் நெருப்பு என்கிற ஹே துவில் ஈரவிறகின் சேர்க்கை யென்பது உபாதியாகும். புகை யென்னும் ஸாத்ய தித்தும் அந்த உபாதிக்கும் வ்யாப்தியுண்டு. புகையிருக்குமிடமெல்லாம் ஈரவிற கின் ஸம்பந்தமிருக்கும், ஈரவிறகிருக்குமிடமெல்லால் புகையிருக்கும். இங்கேயுள்ள வ்யாப்தியை ஸமவ்யாப்தியென்பர். இரண்டும் நியதமாய்ப் பலவிடங்களில் கூடவே பிரியாதிருப்பதை ஸமவ்யாப்தியென்று சொல்லுவர். இது இருக்குமிடமெல்லாம் அதுவும் இருக்கும். அது இருக்குமிடமெல்லாம் இதுவும் இருக்கும். இது ஸமவ் யாப்தி இங்கே ஸாத்யமான புகைக்கும் உபாதியான ஈரவிறகின் சேர்க்கைக்கும் வ்யாப்திண்டேயொழிய உபாதியான ஈரவிறகின் சேர்க்கைக்கு ஹேதுவான நெருப்பை வ்யாபிக்கும் தன்மையில்லை. அதாவது; ஈரவிறகின் சேர்க்கை யில்லாத விடத்திலும் நெருப்பைக்காண்கிறோம். பழுக்கக் காய்ச்சின இரும்புத்துண்டில் ஈரவிறகின் சேர்க்கையில்லை. புகையும் இல்லை. ஆனால் நெருப்பு உண்டு. ஸாத் யத்தோடு ஸமான வ்யாப்தியுடையதும் ஸாதனத்தை வ்யாபிக்காததுமான உபா தியையுடைய ஹேது ஸோபாதிகமென்று சொல்லப்படும். அது தோஷமுள்ளது ஸரியான ஹேதுவல்ல. நெருப்பு இருப்பதைக்கொண்டு புகையும் இருந்தே தீரும் என்று ஸாதிக்கப்பார்த்தால் இந்த உபாதி தோஷம் வரும். கர்த்தாவையுடைய தெல்லாம் ஸரீரத்தோடு கூடிய கர்த்தாவை யுடையது, பரிமிதமான ஜ்ஞானஸக்தி களையுடைய கர்த்தாவை யுடையது என்பதை எங்கும் காண்கிறோம். ஆனால் கார்யத் வம் என்கிற ஹேது உள்ளவிடமெல்லாம் ஸரீரரான கர்த்தா இருக்கவேண்டுமென்

ஸ்ரீபாஷ்யம்—

தஜ்ஜன்யஜ்ஞாநம் பூர்வம் । உஹீஉஹீயமாநஉஹாணவாதிக்வமக்ய
க்ரியமமக்யோபாதாநாதிவிஜ்ஞாநம் வெதி ந வெதநகர்த்ருகம்
கதா வடநிர்மாதிவஜாதீய மகர்மக்ரிய மக்யோபாதாநாதிவிஜ்ஞா

ததபிஜ்ஞகர்த்ருகம் த்ருஷ்டம் ! மஹீமஹீதரமஹாரண்யவாதித்வமக்ய
க்ரியமமக்யோபாதாநாதிவிஜ்ஞாநம் சேதி ந சேதநகர்த்ருகம் !
அதோகடமணிகாதி ஜாதீய மக்யக்ரிய மக்யோபாதாநாதிவிஜ்ஞா ।

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

தின் விஷயத்தில் ஸாத்யமாகுமோ, அந்தக் காரியந்தான் அதை யறிந்த கர்த்தாவை உடையதாகக் காண்கிறோம். பூமி, பர்வதம், மஹா ஸமுத்திரம் முதலியதுகளோவென்றால், செய்ய ஸாத்யமில்லாததும், வேண்டிய தரவியங்களின் அறிவு அஸாத்யமாயும் இருப்பதால் ஜீவனால் செய்யப்படுவதாகாது. ஆகையால் குடம், சால் முதலியதைப்போன்ற செய்ய ஸாத்யப்பட்டதும் செய்வதற்கு வேண்டிய த்ரவியம் முதலியதை அறிய ஸாத்யப்பட்டதுமான பொருள்களில் உள்ள கார்யத்வம்தான் புத்தி யோடு கூடிய கர்த்தாவை முன்னிட்டே யிருக்கும் கார்யங்கள் என்பதை

சீநுதப்ராகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

தை வ்யாபிக்காமல் ¶ இருக்கவேண்டியது அவஸ்யமாதலால் ஹேதுவென்னும் ஸாத நத்தை வ்யாபிக்கவில்லையென்பதைக் கூறுகிறார்—"பூமி பர்வதம் முதலியது" என்று. உபாதியென்பது ஸாத்யத்தோடு கூட ஸமானமான வ்யாப்தியை யுடையதாயிருக்க வேண்டியதால் அந்த ஸமவ்யாப்தியைக் § கூறுகிறார்— "ஆகையாலே" என்று. ஸோபாதிகமாயிருந்தால் ஸாத்யத்தால் ஹேது வ்யாபிக்கப்படாததால் உபாதி தூஷணமாகும். அத்ருஷ்டத்தோடு கூடிய ஜீவனால் செய்யப்படுவதைத் தள்ளுவதற்

அநுபதம்—

கிற நிர்பந்தமில்லை. இப்படி இரண்டு உபாதிகளால் இந்த கார்யத்வம் என்கிற ஹேது தோஷமுள்ளதாகும்.

¶ ஈரவிறகின் சேர்க்கை யென்கிற உபாதி தெருப்பென்னும் ஹேதுவை வ்யாபிக்கிறதில்லை. ஆகையால் அது உபாதியாகலாம். பர்வதம், பூமி, ஸமுத்ரம் முதலிய கார்யங்களுக்கு ஸரீரத்தோடு ஒரு கர்த்தா வுளனென்பதை நாம் கண்டதில்லை.

§ ஸாத்யத்திற்கும் உபாதிக்கும் ஸமமான வ்யாப்தி இருக்கவேண்டும்.

ஸ்ரீபாஷ்யம் :—

நவஸ்துகதமேவ கார்யத்வம் புத்திமத்கர்த்ரு பூர்வகத்வஸாதநே
ப்ரபவதி ! கிஞ்ச, கடாதிகார்யமநீஸ்வரேணல்பஜ்ஞாநஸக்திநா ஸஶரீ
ரேண பரிக்ரஹவதா அநாப்தகாமேந நிர்மிதம் த்ருஷ்டமிதி ததா
விதமேவ சேதநம் கர்த்தாரம் ஸாதயன் அயம் கார்யத்வஹேது: ஸிஷா

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

ஸாதிப்பதில் ஸமர்த்தமாகும். மேலும் குடம் முதலிய கார்யம் ஈச்வரனில் லாதவனும், ஸ்வல்பஜ்ஞான சக்திகளையுடையவனும், ஸரீரமுடையவனும், பரிக்ரஹங்களை (சுற்றிய ஜனங்களை) யுடையவனும், ஆப்தகாமனல்லாதவனுமான சேதனனால் செய்யப்படுகிறதாகவே காண்கிறபடியால் அப்படிக்கொத்த சேதனனை கர்த்தாவை ஸாதிக்கும்படியான கார்யத்வமென்கிற ஹேது ஸாதிக்க வேண்டுமென்று பூர்வபக்ஷி ஆசைப்படும் புருஷனுக்கு இருப்பதாகச்சொல்

ச்ருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

காக 'புத்தியோடு கூடிய கர்த்தாவை முன்னிட்டுக்கொண்டு ஏற்படுகிறது என்பதை ஸாதிப்பதில்' என்று கூறப்பட்டது. பிறகு கார்யத்வம் என்கிற ஹேது † இஷ்ட விபரீதத்தை ஸாதித்து விருத்தமாகும் என்று கூறுகிறார்—'மேலும்" என்று. அநீஸ்வரன் என்பதற்கு கர்மவஸ்யன் என்று பொருள். பரிக்ரஹத்தையுடையவன் என்பதற்கு உபகரணங்களை யுடையவன் என்று பொருள். இப்படி ஆக்ஷேபித்தால்

அநுபதம்—

† ஹேது தோஷங்களில் விருத்தம் என்பது ஒரு தோஷம். ஸாத்யம் இல்லாமையை ஒரு ஹேது ஸாதித்தால் அந்த ஹேதுவை விருத்தம் என்று சொல்லுகிறது. கார்யத்வம் என்கிற ஹேது ஸரீரத்தோடு கூடியவனும். அல்ப ஜ்ஞான ஸக்திகளை யுடையவனுமான ஒரு கர்த்தாவை ஸாதிப்பதால் ஸரீரமில்லாதவனும் ஸர்வஜ்ஞனும் ஸர்வஸக்தியுமான ஈஸ்வரனென்னும் கர்த்தாவை ஸாதிப்பதற்கு அது நேர் விரோதமாகும். ஸாத்யத்தின் அபாவத்தால் வ்யாப்தமான ஹேதுவை விருத்த ஹேதுவென்பர்.

ஸ்ரீபாஷ்யம் :—

யயிஷிதவ-ரு-ஷஷவாவுஜ்ஞாஸவெவுஸ்வயுழி விவரீதஸாயநாஷி
ரு-ஜ்ஸ: வ்யாஸு। ந வைதாவதா ஸவயுாந-ரோநொவெஹவ வம
ம்ஸ: । ஷிம்மிநி வ ரோணாஞரு-மொவரெ ஷிம்மவவொவஷ்யாவிதா
வீவரீதவிஸெஷாஷ்ஸு வ ரோணவ்ருகிஹ தமதயொ நிவதுஞெ।
ஊவ தரு வஸகவைதரவ ரோணாவிஷயெ ஷிம்மிநி நிவிஷ நிஜுாண
வதரு-ரெ ஸுயவவ்ருதிரெகாவமதாவிநாஸாவநியரோ யஜுாஸ் ஸவவு

தயிஷிதபுருஷஸார்வஜ்ஞ்யஸர்வைஸ்வர்யாதிவிபரீதஸாதநாத்வி
ருத்த: ஸ்யாத்! ந சைதாவதா ஸர்வாநுமாநோச்சேதப்ரஸங்
க:! லிங்கிநி ப்ரமாணாந்தரகோசரே லிங்கபலோபஸ்தாபிதா
விபரீதவிஸேஷாஸ்தத்ப்ரமாணப்ரதிஹதகதயோ நிவர்த்தந்தே!
இஹ து ஸகலேதரப்ரமாணவிஷயே லிங்கிநி நிகிலநிர்மாண
சதுரே அந்வயவ்யதிரேகாவகதாவிநாபாவநியமா தர்மா: ஸர்வ

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

ஆம் ஸர்வஜ்ஞத்வம் ஸர்வைச்வர்யம் முதலிய குணங்களுக்கு விபரீதமான குணங்களை ஸாதிப்பதால் விருத்தமாகும். இப்படி சுருதி சொன்னால் எல்லா அனுமானங்களும் அஸ்தமித்துப்போகும்படி வருமென்று நீர் சொல்ல இயலாது. வேறு ப்ரமாணங்களுக்கு எட்டக்கூடிய ஸாத்யத்தில் ஹேதுவின் பலத்தினால் அறிவுக்கு வரும் விபரீதமான விசேஷ தர்மங்கள் அந்த பக்ஷத்தைக்காட்டும் மற்ற பிரமாணங்களால் அடிபட்டு ஒடிப்போகும். மற்ற எல்லாப் பிரமாணங்களுக்கும் எட்டாத எல்லாவற்றையும் ஸ்ருஷ்டிக்க ஸமர்த்தன் என்பதை ஸாதிக்கும் இவ்விடத்தில் அந்வயவ்யதிரேகங்களால் நியமேன

சேதநப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

எல்லா அனுமானங்களும் நீக்கிவிடுமென்று ஸங்கித்துக்கூறுகிறார்—"அல்ல" என்று எப்படியென்று கேள்க்கக்கூறுகிறார் "லிங்கமுடையதில்" என்று. பக்ஷத்திலேயும் அப்படித்தானே இருக்குமென்று கேள்க்க கூறுகிறார்—"இங்கோ" என்று. "து" என்கிற பதத்தினால் ஏற்படும் வைஷம்யத்தைக் காட்டுகிறார்—"நிவர்த்திக்கும்" என்று. விதாந்தத்தில் ஏகதேசியின் மதத்தை முடிக்கிறார்— "ஆகையாலே" என்று. ஈச்வரன் ஸித்திப்பானேயானால் ஸாஸ்த்ரத்தைத்தவிர வேறொன்று அவன் விஷயத்தில் ப்ரமாணமாகாது என்று பொருள். ஆகையால் என்பதற்கு ஸித்த ஸாதனம், ஸோபாதிகம், விருத்தம் என்கிற தோஷங்கள் இருப்பதால் என்று

ஸ்ரீபாஷ்யம் :—

வாவாவிஶேஷேண ப்ரவ்ருத்தே, நிவர்தகப்ரமாணாபாவாத் ததைவாவதிஷ்டதே, அத ஆகமாத்ருதே கதமீஶ்வர: ஸேத்ஸ்யதி ?

அத்ராஹு:— ஸாவயவத்வாதேவ ஜகத: கார்யத்வம் ந ப்ரத்யா

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

பிரியாமல் கூட இருப்பதாகக்கண்டிருக்கும் தர்மங்களெல்லாம் வரத்தெரியும். அப்படி வரத்தெரியும் தர்மங்களை விலக்குவதற்கு வேறு பிரமாணத்தின் ஸஹாயம் இல்லாததால் வரத்தெரிந்தது வந்து அப்படியே நிற்கும். ஆகையால் சாந்நிதியில்லாமல் ஈச்வரன் எப்படி ஸித்திப்பான் ?

இப்படி கேட்பதற்கு சிலர் பின்வருமாறு பதில் கூறுகிறார்கள். ஜகத் அவயவங்களை யுடையது என்கிற ஒரு ஹேதுவின் பலம் எமக்கிருப்பதால்

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

பொருள். பிறகு ஸாகூத்தான ¶ பூர்வபக்ஷியை ப்ரஸ்தாவிக்கிறார்—"இங்கே கூறினார்கள்" என்று. கார்யத்வம் என்கிற ஹேது அடியோடு அஸித்தம் † என்கிற ஸங்கையைப் போக்குகிறார்—"ஸாவயவத்வத்தாலே" என்று, "ஸாவயவத்வத்தாலேயே" என்று. முன்பு சொல்லப்பட்டதினாலேயே என்று பொருள். இதனால் வேறு ஹேதுவும் உண்டென்று ஸூசிக்கப்படுகிறது. இப்படி ஸாகூத்தாக உரைப்பதினாலும், அபிப்ராய மாத்ரத்தினால் ஸூசிப்பதாலும் ஸித்திக்கும் ஹேதுக்களை அநுமா

அநுபதம்—

¶ கோரான பூர்வபக்ஷி தார்க்கிகர், அநுமானத்தால் ஈச்வரனை ஸாதிப்பவர். மற்றொரு பூர்வபக்ஷி, ஈச்வரனையே ஒப்புக்கொள்ளாத மீமாம்ஸகர்.

† ஹேது வென்பது இரண்டுவாதியும் ஒப்புக்கொள்ளவேண்டியபடி ப்ரஸித்தமாயிருக்கவேண்டும். பூமி முதலியதற்கு கார்யத்வத்தை யார் ஒப்புக்கொண்டார். பூமி நித்யமாயும் ஒருவராலும் செய்யப்படாததாயுமிருக்கலாம். பூர்வமீமாம்ஸகர் ஸ்ருஷ்டியையும் ப்ரளயத்தையும் ஒப்புக்கொள்வதில்லை.

ஸ்ரீபாஷ்யம் :—

வ்யாதாம ஸக்யதே । ஹவந்தி ச ப்ரயொகாஃ, விவாஹாத்யாஸிதம் பூஜுதராதி, கார்யம் ஸாவயவத்வாத் கடாதிவத் । ததா, விவாஹா

க்யாதும் ஸக்யதே ! பவந்தி ச ப்ரயோகாः, விவாதாத்யாஸிதம் பூபுதராதி, கார்யம் ஸாவயவத்வாத் கடாதிவத் ! ததா, விவாதா

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

ஜகத்தின் கார்யத்வத்தை நீங்கள் இல்லையென்று சொல்வது ஸக்யமல்ல. இந்த விஷயத்தில் அநுமானங்களும் உண்டு. விவாத விஷயமான பூமி, பர்வதம் முதலியது கார்யமே (செய்யப்படுவதுதான்), அவயவங்களை யுடையது என்கிற ஹேதுவினால். குடம் முதலியதைப்போல. அப்படியே 'விவாத

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

நங்களால் விவரிக்கிறார் "உண்டு" என்று. "விவாதப்படுகிற" என்னும் பதத்திற்கு பூமி பர்வத முதலியது என்கிற பதம் விவரணமாகும்." ஆதி ஸப்தத்தால் அபிப்ரீயப்படும் வஸ்துவிசேஷங்களை விவாதப்படுகிற என்கிற பதம் ஸங்கிரஹிக்கும் அல்லது வேறு விதமாயும் சொல்லலாம். பக்ஷமாக எடுத்துக்கொள்ளப்பட்ட பூமி பர்வதம் முதலிய வஸ்துக்களிலேயே எதிராளியால் ஒப்புக்கொள்ளப்படும் அம்ஸங்களை விட்டுவிடுவதற்காக தரரார்ப்படுகிற என்கிற பதம். பெரிய குழிகளை மூடுவதால் ஏற்படுகிற பூமி பாகங்களும் ஸகரபுத்ரர்கள் முதலியவர்களால் ஏற்படுகிற ஸமுத்ரபாகங்களும், அஸ்த்ரம் முதலியதால் ஏற்படும் பர்வதம் முதலியதும் உள்ளனவல்லவா? ப்ரளயத்திலும் ஸமுத்ரம் இருப்பதனால் ஒன்றுமில்லாமலிருக்கையாலும் ஸ்ருஷ்டி கர்த்தாவின் ஸரீரம் இருப்பதாலும் இவைகளுக்கு கார்யத்வம் இராதே யென்கிற ஸங்கையைக் காட்டுவதற்காக ப்ரதிஜ்ஞா வாக்யத்தைத் திருப்பிச்சொல்லி ஸமுத்ரம் உடம்பு என்கிற ஸப்தத்தை ப்ரயோகிக்கிறார். இரண்டாவது, மூன்றுவது அனுமானங்களுக்கு மத்தியில் * மஹத்வம் என்கிற பதத்தினால் பரமாணு விலக்கப்படுகிறது. கிரியையோடு கூடியது, மூர்த்தமானது என்கிற ஸப்தங்களால் ஆகாசம் ¶

அநுபதம்—

* தார்க்கிகர்களுக்கு பரமாணு நித்யம். அதற்குக் கார்யத்வம் இல்லை. அதைப் பக்ஷத்திலிருந்து விலக்கி விடுவதற்காக 'பெரியதாயிருக்கிற' என்கிற விசேஷணத்தைச் சேர்க்கிறார்கள்,

¶ ஆகாஸம் என்பது அவர்கள் மதத்தில் நித்யம். அதை பக்ஷத்திலிருந்து விலக்க 'மூர்த்தம் அதாவது உருவமுள்ள' என்னும் விசேஷணத்தைச் சேர்க்கிறார்கள்.

ஸ்ரீபாஷ்யம் :—

யாவதிதமவநிஜலதிமஹீதராதிகார்யம் மஹத்த்வேஸதி க்ரியாவத்த்வாத் கட
வத் ! தநுபுவநாதிகார்யம் மஹத்த்வே ஸதி மூர்த்தத்வாத் கடவ

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

விஷயமான பூமி, ஸமுத்திரம், பர்வதம் முதலியது கார்யமாகும். பெரிதா யிருக்கையில் செய்கை யுடையதாயிருக்கிற ஹேதுவினாலே, குடத்தைப் போல'. உடம்பு, பூமி முதலியது கார்யமாகும். பெரிதாயிருக்கையில்

ச்ருதப்ரகாசிகை தமிழ் மொழி பெயர்ப்பு—

மூதலியன தள்ளப்படுகின்றன. பூமி பர்வதம் இவ்விரண்டு பதார்த்தங்களுக்கு நடுவில் ஸமுத்ரமென்பதை வைத்ததற்கு ஸமுத்ரத்தைப்போல் அவ்விரண்டுக்கும் கம்பம் உண்டு என்பதை விளக்குவதற்காக.§ உத்பாதங்களில் பூமிக்கும் பர்வதங்களுக்கும் கம்பம் ப்ரஸித்தமல்லவா? ஸரீரம் என்பதை பக்ஷத்தில் சேர்த்துக்கொள்வது யுக்தமல்லவே, நம்முடைய ஸரீரத்தை பக்ஷத்தில் சேர்த்துக்கொண்டால் நாம் ஒப்புக் கொள்வதையே ஸாதிப்பது என்கிற தோஷமும் ஈச்வரனுடைய ஸரீரத்தை பக்ஷத்தில் சேர்த்துக்கொள்ளுகிறோமென்றால் அவர்கள் சபையில் ஈச்வரனுக்கு ஸரீரமில்லாததால் ஆச்ரயாஸித்தி ‡ யென்கிற தோஷமும் வருமேயென்று ஆக்ஷேபித்தால் அது கூடாதென்கிறோம். ஸரீரத்தை பக்ஷத்தில் சேர்த்துச் சொல்லவேண்டுமென்று

உந்தும்பதம்—

§ இந்தப் பணிப்பின் அழகை அளவிடமுடியாது. ஸமுத்ரம் ஆடி அலைத்துக் கொந்தளிக்கிறது. அதைப்போல் பூமியும் மலையும் ஆடி எண்ணிறந்த தீங்கை விளைவிக்கச்கூடியதே யென்பதை அழகாகக் காட்டுகிறார். ஸ்திரையென்று பூமிக்குப் பெயரிருந்தாலும், அது ஆடி நம்மையழிக்கும் அவஸரமும் உண்டு.

‡ ஸாதிக்கவேண்டிய தர்மத்திற்கு ஆச்ரயம் பக்ஷம். பக்ஷத்தில் ஒரு தர்மம் இருக்கிறதென்று ஸாதிக்கவேணும். பக்ஷமே இல்லாதபொருளாகிவிட்டால் ஸாதிக்க வேண்டிய தர்மத்திற்கு ஆச்ரயமே அஸித்தமாகும். பக்ஷமே இலலையென்கிற தோஷத்தை ஆச்ரயாஸித்தி என்பர். ஆகாயத்தாமரை என்னும் பக்ஷத்தில் வாஸனையென்னும் தர்மத்தை ஸாதிக்கப்பார்த்தால் ஆகாயத்தாமரை யென்கிற பக்ஷமேயில்லாததால் ஆச்ரயாஸித்தி என்னும் தோஷம் வரும். அதுபோல இங்கே ஈச்வர ஸரீரமென்பதே ஆகாயத்தாமரை யாதலால் அது பக்ஷமாகாது என்று பூர்வ பக்ஷியின் ஆக்ஷேபம்.

ஸ்ரீபாஷ்யம் :—

திதி । ஸாவயவேஷ்ட ஏவேஷ்ட இதமேவ க்ரியதே நேதரதிதி காரயுக்வஸ்ய நியாமகம் ஸாவயவத்வாதிரேகிரூபாந்தரம் நோபலபா

திதி ! ஸாவயவேஷ்ட த்ரவ்யேஷ்ட இதமேவ க்ரியதே நேதரதிதி கார்யத்வஸ்ய நியாமகம் ஸாவயவத்வாதிரேகிரூபாந்தரம் நோபலபா

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

புலன்களுக்குத் தெரியும்படி யிருப்பதால், குடத்தைப்போல' என்று. அவயவங்களை யுடைய திரவியங்களில் "இதுதான் செய்யப்படுகிறது வேறொன்று செய்யப்படுவதல்ல" என்று கார்யத்வம் எங்கே யிருக்கும் எங்கே யிராது என்பதைத் தீர்மானிக்க 'அவயவத்தோடு கூடியிருப்பது' என்கிறதைக் காட்

கீருதப்ராகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு —

எங்களுக்கு அவ்வளவு அவஸ்யமான நிர்பந்தமில்லை. அதையும் சேர்த்துச் சொல்வது எங்கள் பக்ஷத்தில் ஒப்புக்கொள்ளப்படுகிற ஈஸ்வர ஸரீரமும் கார்யந்தான் என்பதை ஜ்ஞாபிப்பதற்காக. அல்லது வேறு விதமாயும் சொல்லலாம். 'ஸாவயவமாயிருப்பதாலேயே' என்று ஆரம்பித்த க்ரந்தத்திற்கு இப்படி அபிப்ராயம். ஸாவயவமாயிருப்பதால் உச்பத்தி யுள்ளது என்பதை ஸாதித்து அதனால் கர்த்தாவை யுடையது என்பதை ஸாதிக்கவில்லை. ஆனால் ஸாவயவமென்பதினாலேயே ப்ரயத்னத்தால் ஸாதிக்கப்படுகிறதென்கிற கார்யத்வத்தை ஸாதிக்கிறோம். ஒரு செய்கை யென்பது ஆஸ்ரயமில்லாமல் ஏற்படாததால் அதற்கு ஆஸ்ரயமான செய்கிறவன் பொதுவில் ஸித்திக்கிறான். இப்படியானால் செய்யப்படுகிறது என்கிற ஹேதுவால் கர்த்தாவை யுடையது என்று ஸாதிக்கப்பட்டால் ஹேதுவுக்கும் ஸாத்யத்திற்கும் யாதொரு பேதமுமில்லாதசால் இரண்டு மொன்றேயாகுமென்கிற தோஷம் வருமே; வராது. செய்கையினால் ஸாதிக்கப்படுகிறதென்பது ஹேது. 'உபாதானம் முதலியவைகளைத் தெரிந்த ஒரு கர்த்தாவை யுடையது' என்பது ஸாத்யம். இப்படி யிரண்டுக்கும் பேதமுள்ளது. இதனாலேதான் மேலே 'செய்யப்படுகிறதென்று கூறுகிறார். உண்டாகிறதென்று கூறவில்லை. செய்யப்படுகிறது என்பதை நிச்சயித்துக்கொண்டு அப்பொழுதே செய்கிறவனுக்கு அதன் ஜ்ஞானம் ஸக்தி முதலிய விசித்ரத்தன்மையை ஊஹிக்கிறான், என்றும் கூறப்படுகிறது. இப்படி ப்ரயத்னத்தால் ஸாதிக்கப்படுகிறதென்கிற ஸாத்யத்தில் ஸரீரமும் விவாதப்பட்டதில்சேர்ந்ததால் பக்ஷமாகலாம். பிறகு ஸோபாதிகமென்கிற தோஷத்தைப் பொதுவாக நிராகரிக்கிறார் (ஸாவயவங்களில்) என்று. இங்கே ஸாவயவத்வமென்பது மற்ற ஹேதுக்களையும் உபலக்ஷணமாகக் காட்டும். 'பெரியதாயிருக்கையில் செய்கை யுடைமை' 'பெரிதாயிருக்கையில் கண்ணுக்குப்புலப்படும்படி உருவத்தோடிருத்தல்' என்கிற ஹேதுக்களும் ஸாவயவத்வம் இருக்குமிடத்தில் இருந்துகொண்டு அதோடு ஸமமாக வியாபித்திருப்பதால் அவ்விரண்டு ஹேதுக்களிலும் உபாதிதோஷம் இதனால் பரிஹரிக்கப்பட்டதாகும். 'ரூபாத்

ஸ்ரீபாஷ்யம் :—

ஸஹ। கார்யகுவ்ய திநிடதம ஸகர்ய கம ஸகர்யவாஹா ஸாதிவிஜ்ஞா
நகுவஸ்ரோவலப்யத இதிசேத், ந। கார்யகுவேநாநுமதேபி விஷ
யே ஜ்ஞாநஸக்தீ கார்யாநுமேயே இத்யங்யத்ராபி ஸாவயவத்வாதிநா
கார்யத்வம் ஜ்ஞாதமிதி தே ச ப்ரதிபந்நே ஏவேதி ந கஸ்சித்விஸேஷ:।
ததாஹி, கடமணிகாதிஷு க்ருதேஷு கார்யதர்ஸநாநுமித

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

டிலும் வேறு ப்ரகாரத்தை நாம் காண்கிறதில்லை. கார்யத்வமிருக்குமிடமெல்லாம் தவாமல் கூட இருக்கும் 'செய்ய ஸாத்தியமானது' என்கிற தர்மமும் 'செய்வதற்கு வேண்டிய த்ரவியம் முதலியதை அறிவது ஸாத்யம்' என்னும் தர்மமும் காணப்படுகிறதே என்று கேட்டால், அப்படியல்ல என்று கூறுவோம். செய்யப்படுகிறதென்று ஒப்புக்கொள்ளும் விஷயத்தில் கூட ஞானமும் ஸக்தியும் கார்யத்தைக்கொண்டு அனுமிக்கப்படுவதால் மற்ற விஷயங்களிலும் அவயவங்களோடு இருப்பது முதலியதைக்கொண்டு கார்யத்வம் அறியப்பட்டதாகிறதால் ஞானமும் ஸக்தியும் அதோடுகூட அறியப்பட்டதாகிறதால் யாதொரு விசேஷமும் இல்லை. எப்படியென்றால், குடம், சால் முதலியவை செய்யப்பட்டபின் அந்தக் காரியத்தைப் பார்த்தவனுல் அதைச்

ச்ருதப்ரகாசிகை தமிழ் மொழி பெயர்ப்பு—

தரம்' என்கிற பாஷ்யபதத்திற்கு 'வேறு ப்ரகாரம்' என்று பொருள். உபாதி தோஷம் இருக்குமோவென்று சங்கிக்கிறார்— "கார்யத்வத்தில்" என்று. பரிஹரிக்கிறார் 'இல்லை' யென்று. 'செய்யப்படுகிறதாக ஒப்புக்கொள்ளப்படுகிறதில்' என்பது ஸந்தேஹமில்லாமல் ஸாத்யமிருக்கும்படியான ஸபக்ஷங்களைக் குறிக்கிறது. 'வேறிடத்தில்' என்கிற பாஷ்ய பதத்திற்கு 'பக்ஷத்தில்' என்று அர்த்தம். ஸபக்ஷமாகிய குடம் முதலியதில் ஞானமும் சக்தியும் செய்யப்படும் தன்மையினுல் ஊஹிக்கப்படுகின்றன. அதுபோல் பக்ஷத்திலும் செய்யப்படும் தன்மை ஏற்படுவதால் ஞானமும் ஸக்தியும் ஊஹிக்கக்கூடுமாகையால் செய்வதற்கு அஸாத்யமென்பதும், அறிவதற்கு அஸாத்யமென்பதும் சொல்ல இயலாது என்று பொருள். அப்படியே விளக்கிக் காட்டுகிறார் 'ததா ஹி' என்று. இங்கே எது உபாதியென்று உமக்கபிப்பிராயம்?

ஸ்ரீபாஷ்யம் :—

கர்த்ருகததந்நிர்மாணஶக்திஜ்ஞாநஃ புருஷோ த்ருஷ்டபூர்வம் விசித்ரஸந்நி
வேஶம் நரேந்த்ரபவநமாலோக்ய அவயவஸந்நிவேஶவிஶேஷேண
தஸ்ய கார்யத்வம் நிஶ்சித்ய ததாநீமேவ கர்த்துஸ்தத்ஜ்ஞாநஶக்திவைசித்ர்ய

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

செய்தவன் அதைச் செய்வதற்கு வேண்டியதான ஞானஶக்திகளை யுடைய வனுப் இருக்கவேண்டுமென்று ஊஹித்துக்கொள்ளும் புருஷன் முன் பார்த் திராததும் விசித்திரமான அவயவ ஸந்நிவேஶங்களை யுடையதுமான அரசன் அரண்மனையைப்பார்த்து அநேக அவயவங்கள் அழகாய் சேர்ந்திருப்பதைக் கொண்டு இது செய்யப்பட்டது என்று நிச்சயித்துக்கொண்டு அப்பொழுதே அதைச் செய்தவன் அதற்கு வேண்டிய விசித்திரமான ஞான ஶக்திகளை

சுருதப்ரகாசிகை தமிழ் மொழி பெயர்ப்பு—

செய்வதற்குக் கூடியதென்னும் உபாதானம் முதலியதின் ஞானம் ஸாத்யமாயிருக் கிறதென்பதும் உபாதியென்று சொல்லுகிறீரே. அது அந்தக்காரியத்தைச் செய்யா தவனுக்கா? அல்லது அதைச் செய்கிறவனுக்கா? செய்யாதவனுக்கு என்கிற முதல் கக்ஷி ஒட்டாது. ஏனென்றால் ஸபக்ஷமான கூடம் முதலியதில் அதைக்காணவில்லை. இரண்டாவது கக்ஷியிலும் உபாதி ஏற்படமாட்டாது. ஏனென்றால் பக்ஷத்திலும் அதைக் காண்கிறோம். எல்லா ஸபக்ஷங்களிலும் பொருந்தியிருப்பதும், பக்ஷங்களில் இல்லாதிருப்பதும், அல்லவோ உபாதியாகும் என்று அபிப்ராயம் செய்கிறவ னுக்கு அதன் ஞானம், ஶக்தி இவைகளின் விசித்ரத்தன்மை என்கிற பாஷ்ய பதங் களுக்கு மேலே சொல்லியபடி இப்படியா அப்படியா என்று விகல்பித்துக் கேட்ப தில் நோக்கு. அதனால் என்ன கிடைத்தது என்று கேழ்க்கக்கூறுகிறார்— "ஆகை யால்" என்று. ஆகையால் என்கிற பாஷ்ய பதத்திற்கு ஸாவயவத்வம் முதலிய ஹேதுக்களில் உபாதிதோஷம் இல்லாததால் என்று பொருள். இப்படிக்கு ஸாவய வத்வம் என்கிற ஹேதுவினால் ப்ரயத்னத்தால் செய்யக்கூடியது என்கிற கார்யத் வத்தை ஸாதிக்கும் பொழுது 'செய்யக்கூடியது' என்பது உபாதியாகும் என்று கூறிய ஆக்ஷேபம் பரிஹரிக்கப்பட்டது. இதனால் உத்பத்தி யுடையதாதலால் ஒரு கர்த்தாவை யுடையதாகும் என்பதை ஸாதிக்கையில், உத்பத்தி யுடையது என்கிற ஹேதுவும் உபாதிதோஷமில்லாததாகும். ஸாவயவத்வமென்கிற ஹேதுவினால் உத் பத்தி யுள்ளது என்பதை ஸாதிக்கையிலோவென்றால், புல் முதலியதில் உபாதி

ஸ்ரீபாஷ்யம்:—

உந்நிநொதி। கூதஸ்நுஹுவ்நாஹெः கூயுக்வே விஜெ ஸவு ஸாக்ஷாத்காரதஜ்ஜிஜ்ஞாஸாநிவ்ருத்தெः கூஜிஸ் வ்ருத்ஷவிஜெஷः ஸித்யெத்யெவ ॥

கிஞ்ச, ஸவுஷெதநாநாம் யஜ்ஞாயுஷுகிர்திதெவி ஸ்வஜ்ஞாவொ வஹொமெ வெதநாநயிஷ்டியொஸ்தியொரவெதநயொः ஸமஜ்ஜஸத்வ

மநுமிநோதி அதஸ்தநுபவநாதேः கார்யத்வே ஸித்தே ஸர்வ ஸாக்ஷாத்கார தந்நிர்மாணதிநிபுணः கஸ்சித் புருஷவிஜெஷः ஸித்யேத்யேவ !!

கிஞ்ச, ஸர்வசேதநாநாம் தர்மாதர்மநிமித்தேபி ஸுகது:கோ பபோகே சேதநாநதிஷ்டிதயோஸ்தயோரசேதநயோः பலஹேது

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

யுடையவனென்று அனுமானம் செய்கிறான். ஆகையால் உடம்பு, உலகம் முதலியது கார்யந்தான் என்று ஸித்திப்பதால் எல்லாவற்றையும் ஸாக்ஷாத் கரிப்பதற்கும் ஸ்ருஷ்டி முதலியது செய்வதற்கும் வேண்டிய ஸாமர்த்தியத் தையுடைய ஒரு விலக்ஷணமான புருஷன் கட்டாயம் ஸித்திக்கிறான்.

மேலும், எல்லா சேதனர்களுக்கும் ஸுக துக்கங்களை அனுபவிப்பது புண்யபாபத்தைப் பொருத்ததானபடியால் ஒரு சேதனனால் நியமிக்கப்படா மல் அசேதனமான புண்யபாபங்கள் பலானுபவத்தைக்கொடுக்கக் காரண

சந்தப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

யைக் காணுதலால் உபாதி வ்யபிசாரிதமாகிறது. § உண்டாகும்படியான புல் முதலி யது நம்போன்றவர்களுக்கு செய்யக்கூடியதல்லவே. ஸித்தஸாதநம் என்கிற தோ ஷத்தைப் போக்கவும், வேறு ஒரு அனுமானத்தை எடுத்துக்காட்டவும் கூறுகிறார் "மேலும்" என்று. "தர்மத்தையும் அதர்மத்தையும் காரணமாகவுடைய" என்கிற பாஷ்ய பகுதியால் ஸித்தஸாதனம் என்கிற ஸங்கையை ஸமாதிக்கிறார். "சேதன

அநுபதம்—

§ புல் என்னும் கார்யத்தில் ஸாக்ஷாத்கர்யத்வம் (கண்ணால் செய்யக்கூடியதாயிருப் பது) என்கிற உபாதியைக் காணோம் ஆகையால் எதிரிசொன்ன உபாதி, கார்யமாக உள்ள புல்லில் இல்லாதிருப்பதால் உபாதி தோஷம் இல்லை.

ஸ்ரீபாஷ்யம் :—

கூநஈவவதெதி: வவயூகூஈநஈமாணவவயூவஹயஉஊாநஉதஈஈ:
கஸிஊஷ்யுஃ, வயயூகிநாநயிஷ்டிதஸ்ய வாஸ்யாஉஈவெதநஸ்ய தெஸ

த்வாநுபபத்தே: ஸர்வகர்மாநுகுணஸர்வபலப்ரதாநசதுர:
கஸ்சிதாஸ்தேயஃ, வர்த்தகிநாநதிஷ்டிதஸ்ய வாஸ்யாதேரசேதநஸ்ய தெஸ

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

மாகமாட்டா வாகையால் எல்லாக் கர்மங்களுக்கும் அனுகுணமாக ஸகலபலன்களையும் கொடுப்பதற்கு வல்லவனான ஒருவனை ஒப்புக்கொள்ள வேண்டுவது அவசியம். தச்சனால் நியமிக்கப்படாத வாச்சி முதலிய அசேதனமான கருவி

ச்ருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு —

னால் நியமிக்கப்படாதிருக்கிற தர்மாதர்மங்களுக்கு ஸுகதுக்கமாகிய பலத்தைக் கொடுப்பது ஒவ்வாதாதலால்" என்கிற பாஷ்ய பதங்களால் அன்வய வியாப்தியை ¶ த்ருடப்படுத்துவதற்காக வ்யதிரேக வியாப்தி கூறப்பட்டது. த்ருஷ்டாந்தம் கூறுகிறார்—"தக்ஷனால்" என்று. "தேசம், காலம் முதலிய அநேக பரிகரங்களும் கூடியிருக்கையாலும்" என்கிற பாஷ்யபதங்கள் ப்ரயோஜித்தது வாச்சி முதலிய ஆயுதங்கள் யாகத்தின் யூபஸ்தம்பம் முதலியன செய்வதற்கு முடியாமலிருப்பது சேதனன் தவிர மற்ற ஸஹகாரிகள் கூடியிராத காரணத்தினாலோ வென்கிற ஸந்தேஹத்தைப் போக்குவதற்காக. தர்மமும் அதர்மமும் அவைகளை ஸாக்ஷாத்கரிக்க வல்லமையுடைய ஒரு சேதனனால் நியமிக்கப் பட்டால்தான் பலம்கொடுக்கிறதென்கிற கார்யத்தைச்செய்ய யோக்யமாகும். ஏனென்றால் அவைகள் வாச்சி முதலிய ஆயுதங்களைப்போல் அசேதனமாயிருப்பதால் என்பது இங்கே ஒரு அனுமானமாகும். ஜீவர்கள் தர்மத்தையும் அதர்மத்தையும் ஸாக்ஷாத்கரித்து அந்த அறிவுடன் அவைகளை நியமிக்க யோக்யதையில்லாததால் ஜீவர்களைக் காட்டிலும் வைலக்ஷண்யம் ஸித்திக்கிறது. (சேதனனால்) நியமிக்கப்படாததற்கு ஒரு கார்யத்தைச் செய்ய யோக்யதையில்லாததாலும், ஜீவர்களுக்கெல்

அநுபதம்—

¶ புண்யபாபங்களால் உண்டாகும் அத்ருஷ்டம் பலம் கொடுக்கையில் அது அசேதனமாகையால் அதை நியமிக்கும் ஒரு சேதனன் இருக்கவேண்டும். அதை நியமிக்க ஜீவர்களாகிய சேதனர்களுக்கே அடியோடு ஸக்தியில்லாததால் ஜீவர்களுக்கு மேற்பட்ட ஒரு சேதனன் அதை நியமிக்கவேணும். அவன் ஈச்வரன் என்று அவர்கள் ஸாதிக்கும் க்ரமம் சேதனனால் நியமிக்கப்படாமல் தர்மாதர்மங்கள் பலத்தை கொடுக்க சக்தமல்லவென்பது வ்யதிரேக வ்யாப்தி. இது அன்வயவ்யாப்தியை த்ருடப்படுத்தும்.

ஸ்ரீபாஷ்யம்:—

காலாத்யநேகபரிகரஸந்நிதாநேபி யூபாதிநிர்மாணஸாதநத்வாத
ர்ஸநாத்! பீஜாங்குராதே: பக்ஷாந்தர்பாவேந தை: வ்யபிசாரா

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

கார்யத்தைச்செய்யவேண்டியதற்கு உபயோகமான தேசம், காலம் முதலிய அனேக கார்யங்கள் நிறைந்திருந்தாலும் யூபம் (யாகஸ்தம்பம்) முதலியதைச் செய்ய வல்லதாகக் காணோம். "விதையிலிருந்து மூளை உண்டாகிறது" முதலியதும் ஸாதிக்கவேண்டிய பக்ஷத்தில் சேர்ந்துவிட்டதாலும் (இரு பக்ஷிக்கா

ச்ருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

லாம் அதை ஸாக்ஷாத்கரித்து நியமிக்க யோக்யதையில்லாததாலும், ஸித்தத்தையே ஸாதிக்கிறதென்கிற தோஷம் பரிஹரிக்கப்பட்டது. * செய்கிறவன் ஒருவன் இல்லையானால் கார்யம் எப்படி உண்டாகும் என்கிற தர்க்கக்கேள்விக்கு ‡ ஸமாதானமாக ப்ராணிகளின் ஸுகம் முதலியதை விளைவிக்கும் அத்ருஷ்டத்தினால் கார்யம் உண்டாவது கூடும் என்று சொல்லும் பதிலும் இதனாலே பரிஹரிக்கப்பட்டதாகிறது. ஒரு சேதனனால் உள்ளிருந்து நியமிக்கப்படாததும் ஸ்வயம் அசேதனமுமான விரை முதலியது மூளையை உண்டாக்கக் காண்கிறோமே என வ்யபிசாரம் ஏற்படுமோ வென்கிற ஸங்கையைப் பரிஹரிக்கிறார்—"பீஜாங்குரம் முதலியதின்" என்று. கார்யத்வம்

அநுபதம்—

* சேதனரான கர்த்தாவை ஸாதிப்பதில் அந்த சேதன கர்த்தா ஜீவனாயிருக்கட்டுமே யென்று ஸித்த ஸாதன தோஷம் சொல்லப்பட்டது. ஜீவர்களாகிய எல்லா சேதனர்க்குமே ஸாத்யமல்லவென்றால், அவர்களுக்கு மேற்பட்ட ஈச்வரனென்னும் சேதனன் கர்த்தாவாக ஸித்திப்பதால் ஸித்தத்தையே ஸாதிப்பதென்கிற தோஷம் இல்லை.

‡ புகையென்னும் ஹேதுவைக்கொண்டு நெருப்பை ஸாதிக்கும் அனுமானத்தில் புகை யிருக்குமிடமெல்லாம் நெருப்பு இருக்கவே தீரும் என்று ஸாத்யத்திற்கும் ஹேதுவிற்கும் வ்யாப்தி காட்டவேண்டும். அந்த வ்யாப்தியை ஆக்ஷேபிப்பதற்காக "ஹேதுவான புகை யிருக்கட்டும், நெருப்பில்லாமலிருக்கட்டுமே" என்று எதிரி சங்கைசெய்தால் அந்த ஸங்கையைப் போக்குவதற்காக அனுகூல தர்க்கம் என்கிற ஒரு பலத்தை நாம் காட்டவேண்டும். "நெருப்பில்லையேயானால் புகையும் இராது" என்று நாம் பதில் சொல்லுவது அனுகூலதர்க்கம். அந்த அனுகூல தர்க்கத்தினால்

ஸ்ரீபாஷ்யம் :—

வாஹநம் ஸ்ரௌத்ரியவேதாஹாநாமநபிஜ்ஞதா விஜ்ரும்பிதம் ! தத

பாதநம் ஸ்ரோத்ரியவேதாலாநாமநபிஜ்ஞதா விஜ்ரும்பிதம் ! தத

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

ர்களும் ஒப்புக்கொண்ட த்ருஷ்டாந்தமாக அவைகளை உதாஹரிக்க முடியாத தாலும்) அவைகளைக்கொண்டு எங்கள் வியாப்திக்குவ்யபிசாரம் சொல்லப் பார்ப்பது வேதம்படித்த வேதாளங்களின் அஜ்ஞானத்தின் பரப்பேயாகும்.

சந்ரதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

என்கிற ஹேது மூல முதலியதில் இல்லாததால் வ்யபிசார தோஷம் வருமோ என் பதற்கு பரிஹாரம் அங்குரம் என்கிற ஸப்தத்தை எடுத்ததிலுல் பலித்தது. சேதன ஞல் எண்ணப்படாமலே அங்குரம் ¶ போல தேஹம் முழுவதும் மயிர்க்கூச்சல் முத லியதை உண்டுபண்ணும் ஸுகம் முதலியது ஸ்வயம் அசேதனமாயும் வேறொரு சேத

அநுபதம்—

எதிரியினுடைய ஸங்கை பரிஹரிக்கப்படுகிறது. இந்த தர்க்கம் அணுமானத்திற்கு அனுக்ராஹகம், அதாவது பலங்கட்டுகிறதென்பர். இங்கே "கார்யத்வம் இருக்கட் டும். அதற்கு ஒரு சேதனகர்த்தா இல்லாதிருக்கட்டுமே" என்று கார்யத்வ ஹேது வுக்கும், ஸகர்த்ருகத்வம் என்கிற ஸாத்ய ஹேதுவிற்கும் வ்யாப்தியை அழிக்கப் பார்த்தால், "கர்த்தா இல்லாவிட்டால் கார்யமும் உண்டாகாமலிருக்கவேண்டும்" என்று அனுகூல தர்க்கம் சொல்லுவர். வீரை மூளைக்கும்பொழுது கார்யம் இருக்கி றது. கர்த்தாவைக் காணுமே என்று நாம் கேட்டால் அந்த மூளையையும் பக்ஷத் தில் சேர்த்துக்கொண்டு அங்கேயும் கர்த்தா உண்டென்று ஸாதிக்கிறோம் என்று அவர்கள் பதில். அத்ருஷ்டத்திற்கு ப்ரேரகனை ஈச்வரனென்னும் சேதனன் அந்த விரைக்குள்ளிருந்து மூளை யென்னும் அக்கார்யத்தைச் செய்கிறானென்று இந்த அனுமானத்தைக்கொண்டு ஸாதிக்கிறோமென்று அவர்கள் எண்ணம். தார்க்கி கன் வேதாந்திகளான வைதிகர்களே வேதம்படித்த வேதாளங்கள் என்று இகழ் கிறான்.

¶ பீஜாங்குரம் என்று விதை போட்டதிலிருந்து மூளை முளைப்பதைச் சொல் லுவது. அங்கே ஜீவகோடியில் சேராதவனும் ஜீவர்களுடைய புண்யபாபங் களென்னும் அத்ருஷ்டத்திற்கு அதிஷ்டாதாவான ஈச்வரனென்னும் சேதனன் கர்த்தா. "அங்குரம்" என்கிற ஸப்தத்தை எடுத்தது இன்னமொரு விதத்திலும் உபயோகப்பட்டதென்று வேடிக்கையாக ஸ்ரீ ஸுதர்சன பட்டர் காட்டுகிறார்.

ஸ்ரீபாஷ்யம் :—

வஸ வஸ்வாதிஸிவஸ்ய ஸிவாஸவஸநஸி தயெவ। ந ச வாவவெநா

ஏவ ஸகாதிபிர்வ்யபிசாரவசநமபி தததவ ! ந ச லாகவேநோ

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

இதேகாரணத்தினால் ஸுகம் முதலியதைக்கொண்டு வ்யபிசாரம் சொல்லப் பார்ப்பதும் அப்படியே ஆகும். கல்பிப்பதில் லாகவம் என்கிற நியாயத்தைக்

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

னனால் உள்புகுந்து நியமிக்கப்படாததாலும் அசேதனத்வம் என்கிற ஹேதுவுக்கும் வ்யபிசாரம் வருமோ என்று ஸங்கித்துப் பரிஹரிக்கிறார்—"அதனாலேயே" என்று. ஆதி ஸப்தத்தால் துக்கம் முதலியதையும் சேதனனால் நியமிக்கப்படாததும் ஸுகம் முதலியதை யுண்டுபண்ணுவதுமான மனஸு முதலியதையும் கொள்ளவேணும். இதனால் நம்முடைய இச்சையில்லாமலேயே தானாக உண்டாகும் அந்த ஸுகதுக்கங்களாலும் அவைகளால் ஏற்படும் மயிர்க்கூச்சல், உடம்பு நடுக்கம் முதலியதாலும் கார்யத்வம் என்கிற ஹேதுவுக்குவ்யபிசாரம் கூறியது பரிஹரிக்கப்பட்டதாகும். லாகவம் § (சுருக்கம்) என்கிற ந்யாயத்தால் ஹேதுவிற்கு வேறு காரணத்தால் இருக்குமோ வென்கிற அந்யதா ஸித்தி தோஷத்தையும், ஒப்புக்கொண்டதையே ஸாதிக்கிறதென்கிற ஸித்த ஸாதந தோஷத்தையும் ஸங்கித்துப் பரிஹரிக்கிறார்—"ந ச"

அநுபதம்—

ஸுகம் பயம் முதலிய ஹேதுக்களால் உடம்பில் மூளைகள் கிளம்புவதுபோல மயிர்கள் கூச்சுக் கூச்சாகக் கிளம்புவதையும் சொல்லும். அதற்கும் ஜீவர்களாகிய நாம் நமது புத்தி பூர்வகமாகக் காரணமாவதில்லை. நம்முடம்பில் உண்டாகும் மயிர் மூளைகளுக்கே நாம் காரணமாவதில்லையே, மண்ணில் முளை கிளம்புவதற்கோ நாம் காரணமாவோம் என்று வேடிக்கை. நமக்குண்டாகும் ஸுகரூபமான மயிர்க்கூச்சலுக்கும் நம்முடைய புண்யாபுண்யங்களென்னும் அதிருஷ்டத்திற்கு அதிஷ்டாதாவான ஈச்வரனேதான் காரணம்.

§ "லாகவம்" சேதனன் கர்த்தாவாக இருக்கட்டும் அந்த கர்த்தா ஜீவகோடியில் சேர்ந்தவனாக இருக்கட்டுமே. ஜீவகோடிக்கு மேற்பட்ட ஈச்வரனென்னும் சேதனனைப் புதிதாகக் கற்பிப்பது கௌரவம் (வீண் அதிகப்படி) அல்லவா என்று தார்க்கிகர் பேரில் நம்முடைய ஆக்ஷேபம். ஜீவர்கள் ஒருவருக்குமே இந்த ஸக்தியில்லாததால் அவர்களுக்கு மேற்பட்ட ஒரு ஈச்வரனை ஒப்புக்கொண்டுதான் தீரவேண்டும், அதிகமாக ஒரு ஈச்வரனைக் கல்பிக்கும் கௌரவத்தை ஸஹிக்கத்தான் வேண்டும் என்பது தார்க்கிகர் பதில்.

ஶ்ரீபாஷ்யம் :—

ஸயவாதிஸம்ப்ரதிபந்நக்ஷேத்ரஜ்ஞாநாமேவ ஈத்ருஶாதிஷ்டாத்ருத்வகல்பநம் யுக்தம்! தேஷாம் ஸூக்ஷ்மவ்யவஹிதவிப்ரக்ருஷ்டதர்ஶநாஶக்தி நிஶ்சயாத்! தர்ஶநாநுகுணைவ ஹி ஸர்வத்ர கல்பநா! ந ச

ஶ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

கொண்டு இருநிறத்தாரும் ஒப்புக்கொண்ட ஜீவர்களுக்கே இப்படி நியமிக்கும் ஸாமர்த்தியம் உண்டு என்று கல்பிப்பது யுக்தமல்ல. ஏனெனில் ஸூக்ஷ்ம வஸ்துக்களையும், மறைந்த வஸ்துக்களையும், தூரத்திலிருக்கும் வஸ்துக்களையும் பார்க்கும் ஶக்தி அவர்களுக்கு ஒருக்காலுமில்லை யென்பதை நாம் நிச்சயமாய் அறிவோம். பலவிடங்களில் பார்க்கிற அனுபவத்தைக்கொண்

சுருதப்ரகாசிகை தமிழ் மொழி பெயர்ப்பு—

என்று. என்? என்று கேள்வி வர, இப்படிக்கொத்த என்கிற ஶப்தத்தினால் அபிப்ராயப்பட்ட ஹேதுவை விவரிக்கிறார்—"அவர்களுக்கு" என்று. ஒரே இந்த்ரியம் கல்பித்தால் போதும் என்று சொல்லுவதில் லாகவம் இருந்தபோதிலும் ஒரே இந்த்ரியம் ஶப்தம் முதலிய எல்லா விஷயங்களையும் க்ரஹிப்பதற்கு ஶக்தியில்லாததால் பல இந்த்ரியங்களைக் கல்பிக்கிறோமல்லவா? இதனால் லாகவத்திற்காக ஶக்தியில்லாத வஸ்துவுக்கு ஒரு கார்யத்தைச்செய்யும் ஸாமர்த்யத்தைக் கல்பிப்பது யுக்தமாகாதென்று தாத்பர்யம். அதையே விளக்குகிறார்—"தர்ஶந" என்று. எது யுக்தமோ அதையல்லவா கல்பிக்கலாம். ஜீவர்களுக்கு ஸூக்ஷ்மத்தையும், மறைந்திருப்பதையும் பார்க்கும் ஶக்தி காண்கிறதில்லையே என்று பொருள். ஶக்தியுடைய பொருளின் ஸாக்ஷாத்காரந்தானே வேண்டும். ஶக்தியின் ஸாக்ஷாத்காரம் வேண்டியதில்லையே என்று சொன்ன கக்ஷியும் ஸூக்ஷ்மம், மறைந்தது என்கிற பாஷ்ய பதங்களால் பரிஹரிக்கப்பட்டது. ஶக்தியோடே கூடிய பரமாணு ‡ முதலியவற்றை

அநுபந்தம்—

‡ பரமாணுக்களைக்கொண்டு ஜகத் ஸ்ருஷ்டியாகவேண்டும். பரமாணுக்கள் ஒரு ஜீவனுடைய புலன்களுக்கும் புலப்படுகிறதில்லை. ஜீவராயிருப்பவர் எப்படிப் பரமாணுக்களைக்கண்டு அவற்றைக்கொண்டு உலகத்தை ஸ்ருஷ்டிக்கக்கூடும் என்று ஜீவர்களுக்கே அடியோடு உலகஸ்ருஷ்டி ஸாமர்த்யம் இல்லை யென்ற ஜீவராஶியையே ஜகத்கர்த்ருத்வஸம்பாவனையிலிருந்து தள்ளிவிடலாம் என்பது தார்க்கிகர் கொள்கை.

ஸ்ரீபாஷ்யம் :—

க்ஷேத்ரஜ்ஞவதீஶ்வரஸ்யாஶக்திர்நிஶ்சயோஸ்தி । கத: ப்ரமாணாந்தரதோ
ந தத்ஸித்த்யநுபபத்தி: । ஸமர்த்தகர்த்ருபூர்வகத்வநியதகார்யத்வ
ஹேதுநா ஸித்யந் ஸ்வாபாவிகஸர்வார்த்தஸாக்ஷாத்காரதந்நியமநஶக்தி

க்ஷேத்ரஜ்ஞவதீஶ்வரஸ்யாஶக்திர்நிஶ்சயோஸ்தி ! அத: ப்ரமாணாந்தரதோ
ந தத்ஸித்த்யநுபபத்தி: ! ஸமர்த்தகர்த்ருபூர்வகத்வநியதகார்யத்வ
ஹேதுநா ஸித்யந் ஸ்வாபாவிகஸர்வார்த்தஸாக்ஷாத்காரதந்நியமநஶக்தி

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

டல்லவோ கல்பனை என்பதை எங்கும் செய்யக்கூடும். ஜீவர்களைப்போல ஈச்வரனுக்கும் அசக்தி உண்டென்கிற நிச்சயம் நமக்கில்லையே. ஆகையால் வேறு ப்ரமாணத்தால் ஈச்வரனை ஸாதிப்பதில் யாதொரு அனுபபத்தியுமில்லை. கார்யத்வமென்கிற ஹேதுவினால் அதைச் செய்வதற்கு வேண்டிய ஒரு ஸாமர்த்தியமுடைய ஒரு கர்த்தாவினால் தான் அது செய்யப்பட்டிருக்கவே ணுமென்கிற வியாப்தியினால் ஸித்திக்கும். கர்த்தா ஸ்வபாவத்தாலேயே ஸர்வ வஸ்துக்களையும் ஸாக்ஷாத்கரிக்கவும் நியமிக்கவும் ஶக்தியோடு கூடியவ

ச்ருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

சேதனன் ஸாக்ஷாத்கரிக்க யோக்யதை யில்லாமையால் ஈச்வரனிடத்தில் அத்தமாதிரி ஸாமர்த்யக்குறைவு இல்லையே எனக் கூறுகிறார். ஒரு அவாந்தரமான அனுமானத்தால் ஈச்வரனை ஸாதிப்பதை முடிவாக ஸமர்த்திப்பிக்கிறார்—"ஆகையால்" என்று. வியாப்தியின் பலத்தால் கார்யத்திறகு வேண்டிய ஜ்ஞானத்தையும் ஶக்தியையுமுடைய ஒரு கர்த்தா ஸித்திக்கட்டும். அவன் ஏன் ஜீவர்களைக்காட்டிலும் விலக்ஷணமான ஒரு சேதனனாக இருக்கவேண்டும்? ஜ்ஞானம் என்பது ஶரீரம் இந்திரியம் முதலியதை அபேக்ஷித்தல்லவா உண்டாகுமென்று ஶங்கைவர ஹேதுபக்ஷத்தில் இருக்கும் † பலத்தினாலேற்படும் விஷயத்தைக் கூறுகிறார்— "ஸமர்த்தனை"

அநுபதம்—

† கார்யத்வம் என்பது ஹேது. அதி பக்ஷமாகிய பூமி முதலிய நம் ஶக்திக்கு எட்டாத அத்புதமான பெரும் பொருள்களிலும் இருக்கிறது. ஹேது பக்ஷத்திலிருப்பதை பக்ஷதர்மதை என்று சொல்லுவர். பூமி முதலியது செய்யப்படும் கார்யமாகையால் அதைச் செய்ய ஸமர்த்தியமுடைய ஜீவாதிரிக்தமான ஒரு சேதனனை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். செய்யப்படும் பொருள்தான் என்று நிச்சயம் ஏற்படுகையில் அதைச் செய்ய ஸமர்த்தமான ஒரு விலக்ஷணமான கர்த்தா இருந்தே தீரவேண்டும் என்பது தார்க்கிகர் கக்ஷி.

ஸ்ரீபாஷ்யம் :—

ஸம்பந்த ஏவ ஸித்த்யதி! யத்த்வநைஸ்வர்யாத்யாபாதநேந தர்மவிசேஷ
விபரீதஸாதநத்வமுக்தம்! ததநுமாநவ்ருத்தாபிஜ்ஞத்வநிபந்தநம்!
பைக்ஷே ஸஹத்ருஷ்டாநாம் ஸர்வேஷாம் கார்யஸ்யாஹேதுபூதா
நாம் ச தர்மாணும் லிங்கிங்யப்ராப்தே:! ஏததுக்தம் பவதி— கேந

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

னுகவே ஸித்திக்கிறான். உலகத்தில் கர்த்தாக்களுள் கண்டிருக்கிறபடி அநீச்வரத்வம் முதலிய ஈச்வரனுக்கு ஒவ்வாத விருத்த தர்மங்கள் இப்படி அனுமிப்பதால் ஸாதிக்கப்படும்படி வருமேயென்று நீர் கூறியது அனுமானத்தின் மார்க்கத்தை தெரியாமையாலேயே. ஸபக்ஷங்களில் கூடப் பார்க்கப்பட்டாலும் கார்யத்தை உண்டுபண்ணுவதற்கு ஹேதுவல்லாத எல்லாதர்மங்களும் ஸாதிக்கப்படும் பொருளுக்கு வர இடமில்லை. இதை விவரிப்போம். ஒருவனால் செய்யப்படும் ஒரு வஸ்து தான் உண்டாவதற்கு தன்னைச் செய்பவனுக்கு தன்னைச் செய்வதற்கு வேண்டிய ஸாமர்த்தியத்

சீநதப்ரகாசிகை தமிழ் மொழி பெயர்ப்பு—

என்று. ஸ்வாபாவிகமில்லாவிட்டால் கர்மானுகுணமாக ஸ்வல்ப (அளவிடக்கூடிய) ஜ்ஞானத்தையும் ஸக்தியையும் உடைமைதான் ஏற்படுமே என்று, அதை விளக்குவதற்காக ஸ்வபாவமாகவே எல்லாப் பொருள்களையும் ஸாக்ஷாத்கரிக்கக்கூடிய என்கிற சப்தங்கள் ப்ரயோகிக்கப்பட்டன. அதன்மேல் கார்யத்வமென்கிற ஹேது விருத்தமாகும் என்கிற தூஷணத்தைப் பரிஹரிக்கிறார்.—"யத்து" என்று. எப்படி யென்று கேள்க்கக்கூறுகிறார்.—"ஸபக்ஷத்தில்" என்று. கூட இருக்க காண்கையால் மட்டும் சரீரம் முதலியது இருக்க நேரிடுமென்று தோஷம் கூறுகிறீரா? அல்லது அதுவும் காரணமாகிற ஹேது கோடியில் சேருகிறதென்கிறீரா? முதல் பக்ஷம் ஒவ்வாது. ஏனெனில், அதிப்ரஸங்கம் வரும். உமக்கும் அநிஷ்டங்களும் அதனால் வரும். இரண்டாவது பக்ஷியும் ஒவ்வாது. அவை காரணகோடியில் சேரவில்லையே என்று அபிப்பிராயம். "கார்யத்திற்கு காரணமாகாத" என்கிறதனால் வியாப்தியில்லை என்பதைக் காட்டுகிறார். எல்லாப்பக்ஷங்களிலும் கூடக் காணப்படுவதால் கார்யத்திற்கும் காரணமாகவேண்டுமென்று சொன்னால் எப்படி சிலது மட்டும் வராதென்றும் சிலது வருமென்றும் கேள்வி வரக்கூறுகிறார்—"இப்படியே" என்று. விரோதத்தைப் பரிஹரிப்பதற்காக வேண்டியது வேண்டாதது என்றும் அம்சங்க

ஸ்ரீபாஷ்யம் :—

ஸ்வநிர்மாணம் ஸ்வோத்பத்தயே கர்த்து: ஸ்வநிர்மாணஸாமர்த்யம் ஸ்வோபாதானோபகரணஜ்ஞானம் சாபேக்ஷதே। ந ஹ்யந்யஸாமர்த்யமந்யஜ்ஞானம் வ, ஹேதுத்வாபாத்। ஸ்வநிர்மாணஸாமர்த்யஸ்வோபாதானோபகரணஜ்ஞானாப்யாமேவ ஸ்வோத்பத்தாவுபபத்தே

சித் கிஞ்சித் க்ரியமாணம் ஸ்வோத்பத்தயே கர்த்து: ! ஸ்வநிர்மாணஸாமர்த்யம் ஸ்வோபாதானோபகரணஜ்ஞானம் சாபேக்ஷதே! ந த்வந்யா ஸாமர்த்யமந்யாஜ்ஞானம் ச, ஹேதுத்வாபாத் ! ஸ்வநிர்மாணஸாமர்த்யஸ்வோபாதானோபகரணஜ்ஞானாப்யாமேவ ஸ்வோத்பத்தாவுபபத்தே

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

‡ தத் என்கிற ஸூத்ர பதத்திற்கு முன் ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட ஸாஸ்த்ர

ஸ்ரீபாஷ்யம் :—

திஷ்ண । யத்நஸ்ஸித்தவஸ்துபரேஷ்வபி வர்தமேத் ஜாதஃ நாயம்

திஷ்ண ! யத்புநஸ்ஸித்தவஸ்துபரேஷ்வபி புத்ரஸ்தே ஜாத: நாயம்

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

வாகக் காணப்பட்டுளது. விதத்மான பொருள்களைச் சொல்லுவதில் நோக்
குடையதான "உனக்குப் பிள்ளை பிறந்துளன்" "இது பாம்பல்ல" "இது

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

ப்ரமாதா † க்களுடைய ப்ரவ்ருத்தியையாவது நிவ்ருத்தியையாவது விளக்க வில்
லையோ அது வரையில் அபேக்ஷை பாக்கியில்லாமல் பூர்ணமான ஒரு அர்த்
தத்தை விளக்கமாட்டா என்று வார்த்திக ‡ மூண்டு—"ஸாஸ்திரத்தின்" என்று
கட்டளை யிடுவதாலல்லவோ ஸாஸ்த்ர மென்னும் பெயர். ஸாஸ மென்பது ஒரு
செய்கையை செய்விக்கையாவது விலக்குவதாவது ஆகும். அந்த விஷயத்தில்
"நித்யமான வேதத்காலாவது க்ருதகமான ஸ்ம்ருதி ப்ரமாணத்தாலாவது ஒரு
செய்கையை செய்வதோ அதினின்று ஒழிவதோ மனுஷ்யர்களுக்கு எதனல் உப
தேசிக்கப் படுமோ அது § ஸாஸ்த்ரம் என்பது யுக்தமாகும் என்று வார்த்திகம்.
ப்ரமாணங்கள் தங்களுக்கு விஷயமான பொருளைத் தெரியப்படுத்துவதோடு நிற்

அரும்பதம் :—

யோநித்வம் என்று ஸ்ரீபாஷ்யகாரர் அர்த்தம். அதுதான் இங்கே ஸாத்யம். ப்ரஹ்
மம் ஸாஸ்த்ரயோநி (ஸாஸ்த்ரப்ரதிபாத்யம்) என்று இங்கே ஸாதிக்கப் படுகிறது
"ஸமந்வயாத்" என்பது ஹேது. "ப்ரஹ்மம் ஸாஸ்த்ர யோநித்வத்தை யுடையது
வேதாந்த வாக்யங்களோடு ஸ்வயம் ப்ரயோஜனமாக அந்வயிக்கிற படியால்" என்று
ஸூத்ரார்த்தம்.

† ப்ரமாதா— அறிகிறவன், ப்ரமாணத்தைக் கொண்டு தெரிந்து கொள்ளுகிற
வன்.

‡ இது குமாரில பட்டர் ஸ்லோகம். கோமம் விளைப்பதைச் செய், அநர்த்தம்
விளைப்பதைச்செய்யாதே என்ற இரண்டு வழிகளிலொன்றைக் காட்டாத வரையில்
வாக்யத்திற்கு ப்ரயோஜன மில்லை. ஒரு ப்ரயோஜன முள்ள க்ரியையில் அந்வயிக்
காத வரையில் வாக்யம் பூர்ணமல்ல. அது குறைவானதே.

§ ஸாஸநம் செய்வதால் (கட்டளையிடுவதால்) ஸாஸ்த்ரமென்று பெயர். இது
வும் குமாரிலர் ஸ்லோகம். இன்னதைச் செய், இன்னதைச் செய்யாதே யென்று
சொல்வது ஆக்ஞையாகும். ப்ரவ்ருத்தியும் நிவ்ருத்தியும் தான் ஆக்ஞைக்கு விஷய
மாகும், அதுவேஸாஸ்த்ரமாகும் என்று பூர்வபக்ஷம்.

ஸ்ரீபாஷ்யம் :—

ஸவைஷா ரஜ்ஜுரேஷ உத்யாதிஷ்ண ஹஷ்டரூபநிவ்ருத்திரூபவத்ரூ

ஸர்ப்போ ரஜ்ஜுரேஷ இத்யாதிஷ்ண ஹர்ஷபயநிவ்ருத்திரூபவத்

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

கயிறு" முதலிய வாக்யங்களில் சந்தோஷம் பயம் நீக்குவது ஆகிய புரு

சந்தப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

கும் என்று முன் கூறியதை ஸங்கித்து அதில குறிப்பிட்ட ப்ரமாணத்தில் * மட்டும் தான் உண்டு என்று வ்யவஸ்தையை ஏற்படுத்தி ஸாஸ்த்ர மென்னும் ப்ரமாணம் மட்டும் ப்ரயோஜன முள்ளதாகத் தான் இருந்து தீரவேணும் என்பதைக் கூறுகிறார்—"அப்படிக்கிருந்தாலும்" என்று. அதை உபபாதிக்கிறார்—"ந ஹி" என்று. அப்படிக் காண்பதில்லை என்பது மட்டுமல்ல. அதற்கு அனுபபத்தியும் உண்டு என்கிறார் "ந கஞ்சித்" என்று. கஞ்சித் என்பதற்கு தனக்கோ அல்லது பிறர்க்கோ என்றுவது, அல்பமோ அதிகமோ என்றுவது பொருள். ஒரு வாக்யத்தை ப்ரயோகம் செய்வதற்கு ப்ரயத்னம் வேண்டியிருப்பதாலும், ப்ரயோஜன மில்லாமல் ஒரு ப்ரயத்னத்தைச் செய்வது ஒட்டாதாகையாலும் என்று பொருள். வாக்யங்கள் ப்ரயோஜனமுடையதாய் இருக்கவேணுமென்பது அவஸ்யமாகையால் தானே புனருக்தி என்னும் திருப்பிச் சொல்லுதல் ப்ரயோஜனமில்லாமையால் தூஷணமாகிறது. ப்ரயோஜன மில்லாதவாக்யத்தை ப்ரயோகிப்பதும், அதைக்கேட்பதும் அனுபபன்னமாகட்டும். அதனால் ப்ரயோஜன முடைய வாக்யங்களெல்லாம் ப்ரவ்ருத்தியை யாவது நிவ்ருத்தியை யாவது சொல்வதாயிருக்கவேணும் என்று நீர் சொல்லும் நிர்பந்தத்திற்கு என்ன கூடிவரும், ஸித்தப்பொருளைச் சொல்லும் பாக்யமும் ப்ரயோஜனத்தில் முடிவுடையதாயிருக்கலாமே என்று கேழ்க்கக் கூறுகிறார்—"அந்த ப்ரயோஜனமும்" என்று. உலகத்திலும் வேதத்திலும் செய்வதையும் செய்யாமையையும்சொல்லுவதில் நோக்குடையதாகக் காட்டுகிறார்—"பொருளை யபேக்ஷிப்பவன்" என்று. செய்தலையும் விலக்குதலையும் சொல்லாமலிருந்தால் வாக்யம் ப்ரயோஜன முடையதாகக் கண்டிருக்கிறோமே என்று ஸங்கை வரஸித்தமான பொருளைச் சொல்லுவதாகச் சொன்ன வாக்யத்தை தூஷிப்பதற்காக அனுவதிக்கிறார்—'யத் புந:" என்று

அரும்பதம்:—.

* குறிப்பிட்ட ப்ரமாணம் என்பது இங்கே ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தைச் சொல்லும். ப்ரத்யக்ஷம் நமக்கு வேண்டுவது, வேண்டாதது, உபயோகமுள்ளது, உபயோகமற்றது முதலிய எல்லாவற்றையும் காட்டும். உபயோகமற்ற கல்லைக் காட்டினாலும் அதற்கு ப்ராமாண்ய முண்டு.

ஸ்ரீபாஷ்யம் :—

ஷாயூரவயோ ஒ ஷ ஊத்ரு ஸ்துதி। தத்ர கிம் வஸ்து ஜந்ராஹ்யமுபாஸ்ய

ஷார்த்தாங்வயோ த்ரஷ்ட இத்யுக்தம்! தத்ர கிம் புத்ரஜந்மாத்யர்த்தாத்

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

ஷார்த்தங்களோடு கூடியிருத்தல் காணப்பட்டுளதே என்று முன்பே சொன்னோமே யென்று நீர் கேட்டால் அது விஷயத்தில் பிள்ளை பிறந்தது முதலிய

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு —

இப்படியா அப்படியா என்று விகல்ப்பிக்கிறார்— "அங்கே" என்று. முதல் ¶ கோடி ஒட்டாததால் இரண்டாவது கோடியை ஒப்புக் கொள்ளுகிறார்—"இருப்பதைக் கூட" என்று. தூஷிக்கிறார் "அப்படியானால்" என்று. ஆகையினால் என்று ஆரம்பித்த பாஷ்ய வாக்யத்தோடு பூர்வபக்ஷம் முடிந்தது. பழைய மாயாவாதி § பக்ஷங்கள் இரண்டு உண்டு. அதில் ஒன்று ப்ரபஞ்சத்தை ப்ரபஞ்சமே யில்லாமல் செய்ய வேண்டு மென்று ஒரு விதியைச் சொல்லுவது. அதற்கு நிஷ்ப்ரபஞ்சீக

அரும்பதம்:—

¶ பிள்ளை பிறந்தது என்பது தெரிந்தால் தானே அந்த அறிவு ஸந்தோஷத்தைக் கொடுக்கும். பிள்ளை பிறந்தது வாஸ்தவமாயிருந்தாலும் பிறந்தது தெரியாவிட்டால் ஸந்தோஷத்தை கொடுக்காதே: "பிறந்தது மாத்ரத்தால் ஸந்தோஷமா?" என்பது பாஷ்யத்தில் முதல் கோடி. அது மட்டும் போதாது என்று அந்த கோடியை விட்டு விட்டு பிறந்ததின் ஞானத்தால் ஸந்தோஷமா? என்கிற இரண்டாவது கோடியை மட்டும் பற்றி பாஷ்யத்தில் விசாரிக்கத் தொடங்கி அதை ஒப்புக் கொள்ளுகிறார். "பிள்ளை பிறந்த செய்தியின் ஜ்ஞானம் தானே ஸந்தோஷ மென்னும் ப்ரயோஜனத்தை கொடுக்கிறது; செய்தி பொய்யாயினும் ஸந்தோஷமென்னும் ப்ரயோஜனம் ஒருவாறு ஏற்பட்டு விடுமே. ஆகையால் ஸந்தோஷ மென்னும் ப்ரயோஜனம் உண்டானலும் கேட்ட செய்தி உண்மை என்று நிச்சயம் ஏற்படாதே; ஆகையால் ஸந்தோஷம் ப்ரயோஜனத்தை உண்டு பண்ணினதால் மட்டும் அந்த வாக்யம் ப்ரமாணம் தான் என்கிற நிச்சயம் ஏற்படாதே; ஸித்தத்தைச் சொல்லும் வாக்யங்களில் ஸித்தப்பொருளின் ஜ்ஞானம் மட்டுந்தான் ப்ரயோஜனம். அதனால் விஷயம் பொய் நிஜமென்று ஏற்படாது. ஆகையால் வேதாந்தங்கள் அறிவிக்கும் ஸித்தமான ப்ரஹ்மம் உண்மையென்று நிச்சயம் இராது.

§ நிஷ்ப்ரபஞ்சீகரண விதிவாதமும், த்யாகநியோகவாதமும் ஸங்கராசாரியருக்கும் முந்திய பழைய மாயாவாதங்கள். அவ்விரண்டுக்கும் ஜரன் மாயாவாதம் என்று பெயர். இந்தப்பெயர் ஸ்ரீபாஷ்யத்திற்கு முந்திய பழைய பிறர் நூல்களிலும் காணப்

ஸ்ரீபாஷ்யம்:—

வாராஷாயாஃவாவிஃ, உத தத்ஜ்ஞாநாதிதி விவேசநீயஃ। ஸதோ
வ்யஜ்ஞாதஸ்யாபுருஷார்த்தத்வேந தத் ஜ்ஞாநாதிதி சேத்,
தர்ஹி ஸத்யப்யர்த்தே ஜ்ஞாநாதேவ புருஷார்த்தஸ்ஸித்யதீச்யர்த்த
வாதஸ்யாபாவேந ப்ரயோஜநபர்யவஸாயிநோபி ஶாஸ்த்ரஸ்ய நார்த்த

புருஷார்த்தாவாப்திஃ உத தத்ஜ்ஞாநாதிதி விவேசநீயஃ! ஸதோ
ப்யஜ்ஞாதஸ்யாபுருஷார்த்தத்வேந தத் ஜ்ஞாநாதிதி சேத்,
தர்ஹி ஸத்யப்யர்த்தே ஜ்ஞாநாதேவ புருஷார்த்தஸ்ஸித்யதீச்யர்த்த
பரத்வாபாவேந ப்ரயோஜநபர்யவஸாயிநோபி ஶாஸ்த்ரஸ்ய நார்த்த

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

நடப்பினால் புருஷார்த்தமென்னும் ப்ரயோஜனம் அடையப்படுகிறதா அல்லது "பிள்ளை பிறந்தது" முதலியதின் அறிவினுலா (தெரிந்துகொள்வதினுலா) என்று பகுத்தறிய வேண்டும். ஒரு ஸந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய பொருள் ஏற்பட்டிருந்தாலும் அதனால் மட்டும் புருஷார்த்தம் கிடைத்துவிடாதே, அப்படி யேற்பட்டிருப்பது அறியப்பட்ட பிறகுதானே ஸந்தோஷம் கிடைக்கும் என்று சொல்லுவீரேயானால் பொருள் உண்மையில் ஏற்பட்டிராவிடினும் பொருள் ஏற்பட்டதாக அறிவு ஏற்பட்டால் அதைக்கொண்டே சந்தோஷம் விளைக்குமாகையால் உண்மையில் ஒரு பொருள் உளதென்று தத்வம் அறிவிப்பதில் தாத்பர்யமில்லாமலே உளதென்று பேசி ஶாஸ்த்ரம் ஸந்தோஷத்தைக் கொடுத்து ப்ரயோஜன முடையதாகச் கூடுமாதலால் ஶாஸ்த்ரத்திற்கு முன்பேயுள்ள விஷயப்பொருள்களின் உண்மையை

சந்தப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

ரண நியோகவாத மென்று பெயர். மற்றொன்று த்யானத்தில் விதியைச் சொல்லும் வாதம். அதற்கு "த்யான நியோக வாதம்" என்று பெயர் இவ்விரண்டு மதங்களையும் த்யான நியோகவாதியின் வாயைக் கொண்டு ஶங்கராதி மதத்தையும் தூஷிக்க இவ

அரும்பதம்:—

ப்படுகிறது. அது தெரியாத ஆதுனிகர் நாம் புதிதாக பெயரிட்டோமென்று தூஷிக்கிறார்கள். இவ்விரண்டு பழைய மாயாவாதங்களும் சங்கரபாஷ்யத்தில் விஸ்தாரமாக தூஷிக்கப்பட்டன. நிஷ்ப்ரபஞ்சநிரணவாதம் கௌட பீமாம்ஸகருடைய வாதமென்று ஸர்வார்த்த ஸித்தியில் காட்டப்பட்டுள்ளது. த்யான நியோக வாதம் என்பது மண்டனமிஶ்ரருடைய வாதம்.

ஸ்ரீபாஷ்யம் :—

ஸர்வத்ரவ ப்ராமாண்யே । தஸ்மாத்ஸர்வத்ர ப்ரவ்ருத்திநிவ்ருத்திபரத்வேந
ஜ்ஞானபரத்வேந வா ப்ரயோஜநபர்யவஸாநமித்யஸ்யாபி வாக்யஸ்ய

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

உணர்த்துவதில் ப்ராமாண்யம் இல்லை என்றுதானே ஏற்படும். ஆகையால் எல்லா விடங்களிலும் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளை யுணர்த்துதலாலாவது (ஸந்தோஷமான) பொருளின் அறிவை உணர்த்துதலாலாவதுதான் ப்ரயோஜன மூடைமை என்று முடிவு ஏற்படுவதால் ஒரு வாக்யத்திற்கும் முன்பேயுள்ள

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

வதிகரண பூர்வபக்ஷியைக் குறித்து ஸித்தாந்தத்தை ஸாதிக்கப் போகிறவராய் ¶

அரும்பதம் :—

¶ ஸங்கர பாஷ்யத்தில் ஸமந்வயாதிகரணத்தில் த்யாக நியோகவாதம் அத்வை தியால் விஸ்தாரமாக தூஷிக்கப்படுகிறது. இங்கே ஸ்ரீபாஷ்யகாரர் அந்த க்ரமத்தை மாற்றி த்யாக நியோக வாதியைக்கொண்டு அத்வைதத்தை தூஷிப்பதாக வைத் திருக்கிறார். அதனால் அத்வைதத்தைக் காட்டிலும் அவர்கள் தூஷிக்கும் த்யான நியோக வாதமே சிறந்தது என்று ஸ்ரீபாஷ்ய காரர் வ்யஞ்சனம் செய்கிறார். இங்கே குமாரில பட்டர் மதத்தை யனுசரித்த மீமாம்ஸகர் ப்ர பஞ்சம் ஸத்ய மென்று ஒப்புக் கொண்டு ஒரு கார்யத்தை விதிக்காமல் வீண் கதை சொல்லும் உபநிஷத்துக்கள் ப்ரமாண மல்ல வென்று ஆக்ஷேபிக்கி றார். அவரே தான் இந்த அதிகரணத்தில் முதல் முதல் கடைசி வரையில் முக்ய மான பூர்வபக்ஷி. (ii) அவர் பேரில் நிஷ்ப்ரபஞ்சைகரணவாதி உபநிஷத்துக்கள் விதிக் கும் முறையாக ப்ரபஞ்சத்தைத் தொலைக்கக் கட்டளை யிடுவதாகப் பொருள் சொல்லி ப்ரபஞ்சம் பொய் என்றுசொல்லி உபநிஷத்துக்கள் அத்விதீயமான ப்ரஹ்ம விஷயத்தில் ப்ரமாணமென்று ஸாதிக்க வருகிறார். (iii) அவரை அதிகரண பூர்வ பக்ஷி (மீமாம்ஸகர்) தூஷிக்கிறார். அந்த வாதம் அதோடு போகிறது. அதன் பேரில் த்யான நியோகவாதி ப்ரஹ்ம விஷயமான த்யானத்தை விதிக்கும் விதியைக் காட்டி மீமாம்ஸகர் சொல்லுகிற வழியில் விதிப்பது (கட்டளை யிடுவது) மூலமாகவே வேதாந்தங்களுக்கு ப்ரஹ்ம விஷயத்தில் ப்ராமாண்யத்தை உபபாதிக்கிறார்— இவ ரும் ப்ரபஞ்சம் பொய் யென்றும், ப்ரஹ்மம் ஒன்றே உளதென்றும் சொல்லுகிறவர். (iv) அந்த த்யான நியோகவாதி பேரில் ஸங்கராத்வைவாதி ஸங்கர பாஷ்யத்தில் ஸமந்வயாதிகரணத்தில் கூறியபடி கண்டிசொல்லித் தம் அத்வைத வாதத்தை ஸ்தா

ஸ்ரீபாஷ்யம் :—

வஸ்துநி தாத்பர்யாலம்பவாந்ந வேதாந்தாஃ வஸ்துநம் ப்ரஹ்ம ப்ரதிபாதயந்தீ ।

அத்ர கஶ்சிதாஹ—வேதாந்தவாக்யாந்யபி கார்யபரதயைவ ப்ரஹ்மணி ப்ரமாணபாவமநுபவந்தி கதம், நிஷ்ப்ரபஞ்ச மத்விதீயம் ஜ்ஞாநே

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

வஸ்துவஸ்து விஷயத்தில் தாத்பர்யம் ஸம்பவிக்கமாட்டாதாதலால் வஸ்துவான ப்ரஹ்மத்தை வேதாந்தங்கள் உணர்த்தமாட்டா.

இங்கே ஒருவர் கூறுகிறார்—வேதாந்த வாக்யங்கள் கூட அநுஷ்டிக்க வேண்டிய ஒரு கார்யத்தைச் சொல்லிக்கொண்டே ப்ரஹ்மவிஷயத்தில் ப்ரமாண்யத்தை அடைகின்றன. அதெங்கனே யென்றால்;— ப்ரபஞ்ச சூன்ய

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

இப்பொழுது நிஷ்ப்ரபஞ்சீகரண நியோகவாதத்தை ப்ரஸ்தாவிக்கிறார்— "இங்கே ஒருவர் சொன்னார்" என்று. அதை ப்ரதிக்ஞை செய்கிறார்—"வேதாந்த" என்று,

---

அரும்பதம்:—

பிக்கிறார். (v) ஶங்கராத்வைதத்தை த்யான நியோகவாதி நிரஸிக்கிறார். (vi) த்யான நியோக வாதி பேரில் பேதா பேத வாதி கூறி சொல்லி பேதா பேத வாதத்தை ஸமர்த்திக்கிறார். (vii) பேதா பேத வாதத்தைத் யானநியோகவாதி நிரஸித்துத் தன் வாதம்தான் ஸரி யென்கிறார். (viii) அதன் பேரில் த்யான நியோக வாதத்தை இவ்வதிகரணத்தின் முக்ய பூர்வபக்ஷியாகிய மீமாம்ஸகர் தூஷித்து ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளையுபதேசிக்காத வேதாந்தங்கள் ப்ரஹ்ம ஸ்வரூப விஷயத்தில் ப்ரமாண மல்ல வென்று அதிகரண பூர்வ பக்ஷத்தை முடிவு கட்டுகிறார். (ix) அத்தப் பூர்வபக்ஷத்தை ஸித்தாந்தி தூஷித்து ப்ரஹ்மம் ஸ்வயம் ஆனந்த ரூபமான ஸர்வோத்க்ருஷ்ட புருஷார்த்த மானதால் அதன் ஸ்வரூபத்தை யுபதேசிக்கும் உபநிஷத்துக்கள் ப்ரமாணமே யென்றும் ப்ரஹ்மத்யானத்தை விதிக்கும் வாக்யங்களும் ஸ்வர்காதிகளைப் போன்ற பலமாகிய ப்ரஹ்ம விஷயத்திலும் ப்ரமாணமே யென்று ஸாதிக்கிறார். இது இங்கே வாதக்ரமம்.

ஶ்ரீபாஷ்யம் :—

கூஸம ஸ்ருஷ்டாத்வித்யயா ஸப்ரபஞ்சதயா ப்ரதீயமானம் நிஷ்ப்ர
பஞ்சம் குர்வாகிதி, ப்ரஹ்மண: ப்ரபஞ்சப்ரவிலயசாரேண விதிவிஷய

ஶ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

மாயும் (நிஷ்ப்ரபஞ்சமாயும்) அத்விதீயமாயும், ஞானஸம் ஒன்றே யுடையதா யும் உள்ள ப்ரஹ்மம் அநாதியான அவித்யையினால் ப்ரபஞ்சத்தோடு கூடியது போல் தோன்றுவதை ப்ரபஞ்சமற்றதாகச் (நிஷ்ப்ரபஞ்சமாக) செய்யக்கட வன் என்று. ப்ரபஞ்சத்தின் தொலைதல் மூலமாக ப்ரஹ்மம் விதிக்குவிஷய

ச்ருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

செய்ய வேண்டியதைச் சொல்லும் வாக்யத்திற்கு ஸித்தமான பொருளே ப்ராமாண் யம் இல்லை யென்பது எப்படி என்று ஆக்ஷேபத்தை மனத்தில் கொண்டு கேள்விக்கிறார்— "எப் படி" என்று. பதில் கூறுகிறார்—"நிஷ்ப்ரபஞ்சம்" என்று. "செய்யக் கடவன்" என்கிற விடத்தில் 'இதி' என்கிற ஶப்தத்திற்கு இந்த ப்ரகாரம் என்று பொருள். நிஷ் ப்ரபஞ்சம் செய்கிறது என்னும் விதியோடு ப்ரஹ்மத்திற்கு எப்படி அன்வயம் என்று கேட்க அன்வயத்தைக் கூறுகிறார்—"ப்ரஹ்மத்திற்கு" என்று. இந்த விதிக்கு விஷய மென்னும் முறையில் ப்ரஹ்மத்திற்கு அன்வயம் † என்று பொருள். ஸ்வபாவத்தில்

அநுபதம் :—

† "நியோகம்" என்பது விதியைச் சொல்லும். விதி என்பது ஒரு செய்கை யைக் கட்டளையிடும். விதி என்கிற அர்த்தத்திலும் நியோக ஶப்தம் இந்த அதிகர ணத்தில் ப்ரயோகிக்கப்படுகிறது. நியோகம் என்பது விதிக்கப்படும் செய்கையால் உண்டாகும் அத்ருஷ்ட சக்தியையும் சொல்லும். அந்த அத்ருஷ்ட சக்தியால் தான் கடைசியில் பலம் ஸித்திப்பது. அந்த ஶக்தியைக் கார்யம் என்றும் அபூர்வம் என் றும் சொல்லுவதுண்டு. அந்த அத்ருஷ்ட ஶக்தி என்னும் பொருளிலும் நியோக ஶப்தம் ப்ரயோகிக்கப்படுகிறது. ஸந்தர்ப்பத்திற்கேற்றவாறு பொருள் கொள்ள வேண்டும். நிஷ்ப்ரபஞ்சீகரண நியோகம் என்னும் பேச்சில் நியோகத்திற்கு விதி என்று பொருள். செய்கையைச் சொன்னால் தான் வேதாந்த வாக்யங்களுக்கு ப்ரா மாண்யமுண்டென்று மீமாம்ஸகர்கள் நிர்பந்திப்பதற்குப் பயந்து ஓர் விதிக்கு ப்ரஹ் மத்தை விஷயமாக்கி இந்த வாதமும் த்யான விதி வாதமும் ஏற்பட்டன. இவ்வி ரண்டு வாதிகளுக்கும் எப்படியாவது ப்ரபஞ்சத்தை இல்லை செய்து கேவல ப்ரஹ்மம்

ஸ்ரீபாஷ்யம் :—

சுஜிதீ। கோஸௌ ஃ ஷ்ரூஷ்ரூஷுரஸ்மிவஸ்ரூவஸ்ரூவிஷயவாரேண

த்வமிதி; கோஸௌ த்ரஷ்ட்ருத்ருச்யரூபப்ரபஞ்சப்ரவிலயசாரேண

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

மாகும் என்று தாத்பர்யம். காண்பவனும் காணப்படுவதுமான ப்ரபஞ்சம்

சந்தப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

முன்பே ஸித்தமான பொருளான ப்ரஹ்மம் செய் என்னும் ஒரு விதிக்கு விஷயமாவது ஒட்டாதே என்கிற ஸங்கையைப் பரிஹரிப்பதற்காக ப்ரபஞ்சம் நன்றாய் விலயமடைந்து கண்ணுக்குத் தெரியாமல் போவதின் மூலமாய் என்று கூறப்பட்டது. இங்கே முன்பே ஸித்தமான ப்ரஹ்மம் ஒரு வேறு ஆகாரம் வருவதைக் கொண்டு ஸாத்யமும் ஆகலாமாதலால் விரோதம் இல்லை என்பது உட்கருத்து. ‡ இங்கேயோவென்றால், “இதி” என்கிற ஸப்தம் இந்த ப்ரகரணத்தின் முடிவைக் காட்டும் அல்லது எப்படி என்கிற கேள்விக்கு பதிலானபடியால் இப்படி என்றும் அர்த்தம் சொல்லலாம். வேதத்தில் விதி வாக்யத்தைக் காட்டுவதற்காக ஆகாங்க்ஷையை விளைப்பி விடுகிறார்—“அது எது” என்று. சில பொருளை நாம்ப்படித்துவதற்கே

அநுபதம்:—

மட்டும் மீதியாய் நிற்கும் நிலையை ஸம்பாதிக்கவேண்டுமென்று ஆசை. அத்வைதத்தில் தான் அவர்களுக்கும் நோக்கு. அத்வைதிகள் ப்ரஹ்ம ஸ்வரூபத்தை மட்டும் போதிக்கும் ஸ்வரூப வாக்யங்களைக் கொண்டு அத்விதீய ப்ரஹ்மத்தை ஸ்தாபிக்கிறார்கள். இவ்விரண்டு பழைய மாயா வாதிகளும் ப்ரஹ்மத்தை விஷயமாகவுடைய ஒரு செய்கையை வேதாந்தங்கள் ப்ரதிபாதிப்பதாகச் சொல்லி அதன் மூலமாக இரண்டாம் பொருளில்லாத ஒரே ப்ரஹ்மத்தை ஸ்தாபிக்கிறார்கள்.

‡ நிஷ்ப்ரபஞ்சீகரண வாதி சொல்லும் விதியாவது; “ஆகாயம் பொய்யான விசித்ர வர்ணக்கோட்டைகளோடு கூடியிருப்பதாகத் தோன்றுவது போல தோன்றுதல் மட்டுமேயான ப்ரபஞ்சத்தோடு கூடியது போல் தோற்றும் ப்ரஹ்மத்தை நிஷ்ப்ரபஞ்சமாகச் (ப்ரபஞ்ச சூன்யமாக) செய்யவேண்டும்” என்று வேதாந்தங்கள் கட்டளையிடுவதாக ஒரு விதியைக் கல்பிக்கிறார்கள். ப்ரபஞ்சமென்னும் த்வைதத்தை அடியோடு தொலைத்தால் தான் அத்விதீயமான ப்ரஹ்மத்தின் தெளிவான அனுபவம் ஏற்படும். ‘ஸ்வர்க்கத்தை இச்சிப்பவன் யாகத்தை யநுஷ்டிக்க வேண்டியது போல் அத்விதீயமான ஏக ப்ரஹ்மானுபவத்தை விரும்புகிறவன் அவ்வனுபவத்திற்கு விரோதியான ப்ரபஞ்சமென்னும் பொய் தோற்றத்தின் தொலைதலைச் செய்ய வேண்டும். இப்பொய்த் தோற்றமாகிய அக்ஞான விருள் ப்ரஹ்மத்தை யறிய வொட்டாமல் மூடியிருக்கிறது. “இருட்டிலுள்ள ஒரு பொருளையறிய இருட்டைத் தொலைப்பது

ஸ்ரீபாஷ்யம்:—

வாயுர்ஜ்யோதிரகாஸவ்ருவிஷயோ வியிः । ந த்ருஷ்டேர்த்ரஷ்டா

ஸாத்யஜ்ஞானைகரஸப்ரஹ்மவிஷயோ விதி: ! ந த்ருஷ்டேர்த்ரஷ்டா

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

தொலைவதன் மூலமாய் ஸாத்யமான ஆகாரத்தையுடைய ஞானைகரஸமான ப்ரஹ்மத்தை விஷயமாகவுடைய விதிவாக்யம் எதுவென்னில்— " காக்ஷியைக்

ச்ருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

ஸக்தியில்லாதவனுக்கு எல்லா ப்ரபஞ்சத்தையும் நாசஞ் செய்யும்படி விதிப்பது அஸக்யமாகும் என்று அபிப்ராயம். ¶ "விதி" என்கிற பாஷ்ய பதத்திற்கு விதி வாக்யம் என்று அர்த்தம். நம்முடைய அக்ஞானத்தால் கல்பிக்கப்பட்ட ப்ரபஞ்சத்திற்கு நம்முடைய புத்தி, அதாவது நினைப்பை, விட்டு விடுவது மட்டும் என்கிற விஷயம்

அநுபதம்:—

போல" என்று ஸங்கர பாஷ்யத்தில் இதை விளக்கியுளது. "ந த்ருஷ்டேः" என்று ஸ்ரீ பாஷ்யத்தில் காட்டிய வாக்யம் இந்த வாதி சொல்லும் விதி. த்ருஷ்டியென்பது காக்ஷியறிவு. மதி என்பது மனத்தின் அறிவு. அறிவு என்பது ப்ரஹ்மம். "அறிவைக் காட்டிலும் வேருன அறிகிறவனைப் பாராதே" என்று அந்த விதிக்கு அவர்கள் சொல்லும் பொருள். த்ருஷ்டா மந்தா என்பதனால் அறிகிறவனையும் அறியப்படும் ப்ரபஞ்சத்தையும் சேர்த்துக் கொண்டு த்ருஷ்டி மதி என்கிற அறிவைத் தவிர மற்ற ப்ரபஞ்சம் முழுவதையும் பொருளாகக் கொள்ளவேண்டும். பாராதே நினையாதே என்று ச்ருதியில் நிஷேதக் கட்டளையிருப்பதைக் கொண்டு "அறிவு என்னும் ப்ரஹ்மத்தைத் தவிர மற்றதையெல்லாம் தொலைப்பாய்" என்று ஒரு விதி கல்பிக்கிறார்கள். இது தான் அவர்கள் சொல்லும் நிஷ்ப்ரபஞ்சீகரண விதி.

† இந்த விதிக்கு ப்ரஹ்மம் எப்படி விஷயமாகிறதென்று ஆக்ஷேபம். ப்ரபஞ்சத்தோடு கூடிய ப்ரஹ்மத்தை ப்ரபஞ்சமற்ற ப்ரஹ்மமாகச் செய்வதால் செய்யப்படும் ப்ரபஞ்ச சூந்யமான ஆகாரத்தோடு ஸாத்யத்வம் வருகிறது; ஆகையால் ப்ரபஞ்சம் தொலைதல் என்கிற க்ரியை மூலமாக ப்ரஹ்மம் இந்த விதிக்கு விஷயமாகலாமென்று அந்த வாதி சருத்து.

¶ ப்ரபஞ்சம் முழுவதையும் தொலை என்று கட்டளையிட்டால் அது அஸாத்யமல்லவா? அஸாத்யத்தை விதிக்கக் கூடுமோவென்று அவர்கள் பேரில் ஆக்ஷேபம். நம் புத்தியால் இல்லை செய்து விடுவதென்பது மட்டும் தான் தாத்பர்யமென்று பதில்.

ஸ்ரீபாஷ்யம் :—

ரம வைஷ்ணவ நமதேர்மந்தாரம மந்வீதா இத்யாதி: । த்ரஷ்ட்ருத்ருச்ய ரூபபேதரஹிதம் த்ருஷ்டிமாத்ரம் ப்ரஹ்ம குர்யாதித்யர்த்த: । ஸ்வத

ரம் பஸ்யே: நமதேர்மந்தாரம் மந்வீதா இத்யாதி: ! த்ரஷ்ட்ருத்ருச்ய ரூபபேதரஹிதம் த்ருஷ்டிமாத்ரம் ப்ரஹ்ம குர்யாதித்யர்த்த: ! ஸ்வத

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

காண்கிறவனைப் பார்க்காதே; எண்ணத்தை யெண்ணுகிறவனை எண்ணாதே முதலிய விதிவாக்யங்கள் அப்படிப்பட்ட விதிகள். பார்க்கிறவன், பார்க்கப் படும் பொருள் என்கிற பேதம் அடியோடு இல்லாமல், கேவலம் அறிவு மாத்ர மாக ப்ரஹ்மத்தைச் செய்யக்கடவன் என்று இந்த விதிகளின் பொருள்.

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

(அழிவு) ஸாத்யமாகும் என்கிற அபிப்ராயத்தைக் கொண்டு வாக்யத்தை எடுக் கிறார் —"நதீருஷ்டேர்" என்று. த்ருஷ்டியைச். காட்டிலும் வேறானது என் பது அறியப்படும் பதார்த்தங்களுக்கும் பொதுவானதால் அவைகளின் நிஷே தமும் பலிக்கும். ‡ முதலான என்கிற டாஷ்ய பதத்தால் எடுக்கப்பட்ட மற்ற ஸ்ருதிகளால் அது கண்டோக்தமாகச் சொல்லப் பட்டிருக்கிறது அடி யோடு நிவ்ருத்தி இதற்கு மூன் ஸித்தமல்லாததால் இதை விதிப்பது கூடுமென்று பொருள். ஸாத்யமென்கிற பாஷ்ய பதத்திற்கு அடியோடு ஒழிந்து போவதைச் சொல்லுவதில் நோக்கு. மட்டும் என்ற ஸப்தத்தினால் பார்க்கிறவன், பார்க்கப்படும் பொருள் என்னும் பேதங்களைக் கல்பனை செய்யும் அ ஞானத்தின் ஒழிவும் அதனு லேயே அந்த ஒழிவு ஆத்யந்திகம் என்பதும் ஸித்திக்கும். ஸித்தமான ப்ரஹ்மம் எப் படி விதிக்கப்படும் எனகிற ஸங்கை வர ப்ரபஞ்சத்தின் ஒழிதல் வழியாக அது விதி க்கு விஷயமாகலாம் என்று முன்பே சொல்ல விரும்பிய அர்த்தத்தை விஸ்தரித்துக் கூறுகிறார்—"ஸ்வதஸ்ஸித்தமாய் இருந்தாலும்" என்று. அல்லது இன்னொரு ப்ரகா ரம் பொருள் சொல்லலாம். "முன்பு செய்கையல்லாதது விதிக்கு விஷயமாவது அனுபபந்நம்' என்று ஸங்கிக்கும் அனுபபத்தி பரிஹரிக்கப்பட்டது. இங்கோவென்றால் ஸ்வதஸ்ஸித்தமான என்று ஆரம்பித்த பாஷ்ய வாக்யத்தால் ப்ரபஞ்சம் தொலைவதின் மூலமாய் முன்பே ஸித்தமான பொருளுக்கும் விதி விஷயமாகை அனுசிதமல்லவென் றும் பரிஹரிக்கப்படுகிறது என்று வ்யத்யாஸம். ஸ்வர்க்கம் முதலியதும் செய்கை யல்ல; அது ஸித்தமல்ல; அது ஸாத்யமேயாகும். இவ்விதசரணத்திற்கு பூர்வ

அநுபந்தம்—

‡ முதலான ஸ்ருதிகள் என்பது "நேஹ நாநாஸ்தி கிஞ்சந" என்று வேறு பொருள் எல்லாவற்றையும் நிஷேதிக்கும் ஸ்ருதி முதலியது.

ஸ்ரீபாஷ்யம் :—

ஸ்வாபாவிகஸ்வரூபதிரோதாநபூர்வகதிவ்யாத்மஸ்வரூபாவிர்பாவரூபா

ஸ்ஸித்தஸ்யாபி ப்ரஹ்மணோ நிஷ்ப்ரபஞ்சதாரூபேண கார்யத்வமவிருத்த

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

ப்ரஹ்மம் தன்னுடைய ஸ்வபாவத்தால் ஸாத்யரூபமல்லாமல் ஸித்தமாயிருந்தாலும்; ப்ரபஞ்சம் அற்றுப்போய் நிஷ்பஞ்சமாயிருத்தல் என்கிற ஆகாரத்தாலே ப்ரஹ்மம் விதியினால் போதிக்கப்படும் செய்கைக்கு விஷயமாவது

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

பக்ஷியான மீமாம்ஸகர் அவரை தூஷிக்கிறார்—"அது அயுக்தம்" என்று, எப்படி என்று கேழ்க்கக் கூறுகிறார்—"நியோகம்" என்று. ஒன்றை விசேஷமாகக் குறிப்பது விஷயம் என்கிற வ்யுத்பத்தியினால் யாகாதிகள் விஷயமாகும். ஒரு வ்யாபாரத்தினால் ஸாதிக்கப்படவேண்டிய அத்ருஷ்டத்தைத் தெரிந்துகொள்ளுங் காலத்தில் அந்த வ்யாபாரம் இன்னதென்று குறித்துக் காட்டுவதால் யாகம் விஷயமாகும். அந்த அத்ருஷ்டமென்னும் கார்யத்தை உண்டாக்குவதற்கு அதுவே ஸாதனம் (காரணம்) ஆகும். "வக்தவ்யங்கள்" என்கிற பாஷ்ய பதத்திற்கு உம்மால் சொல்ல முடியாது என்று பொருள். ‡ முதலில் விதியினால் கட்டளையிடப்படுகிறவனுக்கு நியோஜ்யனுக்கு இருக்கவேண்டிய விசேஷணமாகிய நியோஜ்ய விசேஷணமென்பதை தூஷிப்பதற்காகக் கூறுகிறார்—"தத்ர" என்று. "தத்ர" என்பதற்கு அவைகள் சொல்லவேண்டியிருப்பதில் என்று பொருள். கட்டளையிடப்படும் நியோஜ்யனுக்கு இருக்

அநுபதம் :—

‡ நியோகம் என்னும் விதிக்கு ஆறு வேண்டும். நியோகம் என்னும் கட்டளை விதியாகும். அதற்கு ஐந்து அங்கங்கள் வேண்டும். (i) கட்டளையிடப்படுகிறவன்—நியோஜ்யன். அவனே தான் கட்டளையை யனுஷ்டிக்கும் கர்த்தா; அவனே ப்ரயோக்தா வென்று பாஷ்பத்தில் ஸாதித்தார். கட்டளையிடப்படும் தசையில் அவன் நியோஜ்யன்; அனுஷ்டிக்கும் தசையில் அவனே ப்ரயோக்தா. (ii) நியோஜ்யனுக்கு விசேஷணமென்பது அதிகாரி விசேஷணம். என்ன விசேஷணங்களுடையவனைக் குறித்து விதி கட்டளையிடுகிறதோ அந்த விசேஷணங்கள் நியோஜ்ய விசேஷணங்கள். ஸ்வர்க்கத்தை ஆசைப்படுகிறவனுக்கு யாகத்தை விதித்தளது. ஸ்வர்கமடைய ஆசை அந்த விதியில் நியோஜ்ய விசேஷணம். "உயிருள்ள வரையில் அக்னி ஹோத்ர ஹோமம் செய்யவேண்டும்" என்னும் விதியில் ஜீவனம் அகாவது உயிரோடிருத்தல் நியோஜ்ய விசேஷணம். (iii) கட்டளையிடப்படும் செய்கை கட்டளைக்கு விஷயம். யாகம் கட்டளைக்கு விஷயமாகும். (iv) அதுவே பலத்தை ஸாதிக்

ஸ்ரீபாஷ்யம் :—

திதி ॥ தத்ர-தந்த்ரம், நியோகவாக்யார்த்தவாதிநா ஹி நியோகः, நியோ
ஜ்யவிஸேஷணம், விஷயः, கரணம், இதிகர்த்தவ்யதா, ப்ரயோக்தா ச வ
க்தவ்யாः । தத்ர ஹி நியோஜ்ய விஸேஷணாநுவாதேயம் । தத்ர

மிதி ! ததயுக்தம், நியோகவாக்யார்த்தவாதிநா ஹி நியோகः, நியோ
ஜ்ய விஸேஷணம், விஷயः, கரணம், இதி கர்த்தவ்யதா, ப்ரயோக்தா ச வ
க்தவ்யாः ! தத்ர ஹி நியோஜ்ய விஸேஷண மநுபாதேயம் ! தச்ச

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

விருத்தமல்ல என்று. இப்படி அந்த நிஷ்ப்ரபஞ்சீகரண வாதி சொல்லுவது யுக்தமல்ல. விதி வாக்யத்தின் அர்த்தம் நியோக மென்னும் கட்டளை யென்றும் சொல்லும் வாதியால் நியோகமென்னும் கட்டளை, கட்டளையிடப்படும் அதிகாரிக்கு இருக்கவேண்டிய விஸேஷணம், கட்டளையிடப்படும் விஷயம், அதை நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஸாதநம், அதை இன்ன ப்ரகாரம் செய்யவேண்டும் என்கிற முறையாகிய அங்கங்கள், கட்டளையை அனுஷ்டிப்பவன் ஆகிய இவற்றையெல்லாம் சொல்லி நிரூபிக்கவேண்டும். அவைகளில் கட்டளையிடப்படுகிற அதிகாரத்துக்கு விஸேஷணமென்கிற நியோஜ்ய விஸேஷணம் விதிக்கத்தக்கதல்ல. அது நிமித்தமென்றும், பலம் என்றும் இரு

சீருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

கவேண்டிய விஸேஷணம் உபாதேயமாகாது. உபாதேயம் என்பதற்கு விதிக்கத்தக்கது என்று அர்த்தம். அப்படி இல்லாதிருப்பது அநுபாதேயம். § இதுவா அதுவா என்று விகல்பித்து தூஷிப்பதற்காக விஸேஷணமென்பது இரண்டு வித

அரும்பதம்:—

துக் கொடுக்கும் ஆகாரத்தால் கரணம், ஸாதநம் என்று சொல்லப்படும். (v) செய்கையைச் செய்யும் முறையாக விதிக்கப்படும் அங்கங்கள் இதி கர்த்தவ்யதை எனப்படும். இம்மாதிரியாகச் செய்யவேண்டுமென்று அதற்குப் பொருள். நியோஜ்ய விஸேஷண மென்பது விதிக்கத்தக்கதல்ல. அது முன்பே விதிக்கமாயிருக்க வேண்டும்.

§ ஸ்வர்க்கத்தில் ஆசை யென்பதும் ஜீவனம் என்பதும் முன்பே விதிக்கமாயிருப்பதால் விதிக்கத் தக்கதல்ல. நிமித்த மென்றும் பயனில் ஆசையென்றும் இரண்டு விதம். ஜீவனம் புத்ர ஜன்மம் முதலியது விதிக்கு நிமித்தம். ஸ்வர்க்காதிகள் பயன்.

ஸ்ரீபாஷ்யம்:—

நிமித்தம் ஸமிதி ஸ்யா। கத² கிம் நியோஜ்யவிஸோஷணம், தத² கிம் நிமித்தம் வலம் வெதி விவெசநீயம்। ஸ்வரூபாநுபயாயாதா²ர்ஹ்யாத்தஸ்ய நியோஜ்யவிஸோஷணம், தர்ஹி ந தந்நிமித்தம், ஜீவநாதிவத்தஸ்யா

நிமித்தம் பலமிதி த்விதா! அத்ர கிம் நியோஜ்யவிஸோஷணம், தச்ச கிம் நிமித்தம் பலம் வேதி விவேசநீயம்! ப்ரஹ்மஸ்வரூபயாதாத்ம்யாநுபவஸ்சேந்நியோஜ்யவிஸோஷணம், தர்ஹி ந தந்நிமித்தம், ஜீவநாதிவத்தஸ்யா

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

வகைப்படும். இங்கே நியோஜ்ய விஸோஷணம் இன்னதென்றும், அது நிமித்தமா அல்லது பலமா வென்றும் விசாரிக்கவேண்டும். ப்ரஹ்ம ஸ்வரூபத்தின் உண்மையில் உண்மையான அனுபவந்தான் கட்டளையிடப்படும் அதிகாரிக்கு விஸோஷணமென்றால், அது நிமித்தமாகாது. ஏனென்றால் உயிரிருப்பது முதலியதைப் போல் அது ஏற்கனவே யிருப்பதான ஹித்தமல்லவே

ச்ருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

மென்பதைக் கூறுகிறார்—"அதுவோ" என்று. அதனால் என்னவென்று கேள்க்கக் கூறுகிறார்—"இங்கே" என்று. இங்கே என்பதற்கு நிஷ்ப்ரபஞ்சீகரண விதியில் என்று தாத்பர்யம். நியோஜ்யனுக்கு விஸோஷணமென்பதின் ஸ்வரூபம் இப்படி என்று சொல்லுகிறீரோ என்று ஸங்கித்துக் கேட்கிறார்—"ப்ரஹ்ம ஸ்வரூபத்தின்" என்று. ¶ நிமித்தமாவதை தூஷிக்கிறார்—"அப்படியானால்" என்று. ஏனென்று கேள்க்கக் கூறுகிறார்—"ஜீவனம்" என்று. அதாவது உயிரோடிருக்கை; அது போல் என்று. "உயிரிருக்கும் வரையில் அக்நி ஹோத்ரத்தை ஹோமம் செய்ப்பதால் எப்படி நிமித்தமாகிறதோ அப்படி இங்கே இல்லை என்று தாத்பர்யம். புத்திரன் பிறப்பது முதலியதைப் போல் எப்பொழுது ஸித்திக்கிறதோ அப்பொழுது நிமி

அநுபதம்—

¶ இந்த வாக்கி இரண்டு விதமாகக் கூறி சொல்லக் கூடும். ஒன்று பொய்ப்ரபஞ்சத்தைத் தொலைத்தல் யாகத்தைப் போல விஷயமாகலாம்; மோக்ஷம் பயனாகலாம் என்பது. இரண்டாவது ப்ரபஞ்சம் தொலைவது பயன்; ப்ரஹ்ம ஜ்ஞானம் யாகத்தைப் போல விஷயம் என்பது. இரண்டாவது பக்ஷத்தில் அத்விதீய ப்ரஹ்ம ஜ்ஞானத்தால் பொய் ப்ரபஞ்சம் தானே தொலையுமாதலால் நியோகத்தாலுண்டாகும் அத்ருஷ்ட மென்னும் நியோக சக்தியால் ஆக வேண்டிய பயன் ஒன்றுமில்லை. ஆகையால் அத்ருஷ்டத்தை யுண்டுபண்ணுவதற்காக நியோகம் சொல்லுவது வீணே.

ஸ்ரீ பாஷ்யம் :—

ஸித்தத்வாத்! நிமித்தத்வே ச தஸ்ய நித்யத்வேநாபவர்கோத்தரகாலமபி
ஜீவநநிமித்தாக்நிஹோத்ராதிவத் நித்யதத்விஷயாநுஷ்டாந ப்ரஸங்கः!
நாபி பலம், நையோகிகபலத்வேந ஸ்வர்காதிவதநித்யத்வப்ரஸங்

ஸ்ரீ பாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

அது நிமித்தமென்று சொன்னால் ப்ரஹ்ம ஸ்வரூபத்தின் அனுபவம் நித்ய மாக இருக்கவேண்டியதால், மோக்ஷத்திற்குப் பிறகு கூட உயிரிருப்பதை நிமித்தமாக உடைய அக்நி ஹோத்ராதிகளைப் போல நித்யமாய் அதை அனு ஷ்டிக்க வேண்டி வரும். ப்ரஹ்ம ஸ்வரூபத்தின் யதார்த்தமான அனுபவம் இந்த விதிக்குப் பலமும் ஆகாது. அது விதியினால் உண்டாகும் பலமானால் ஸ்வர்காதி பலங்களைப் போல அதுவும் அநித்யமாக வேண்டி வரும். இந்த

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

த்தமாகும் என்று சொல்லுவதற்கு பதில் கூறுகிறார்—"நிமித்தமானால்" என்று. மோக்ஷத்திற்குப் பிறகு கூட இந்த விதியை அனுஷ்டிக்கவேணும் என்று ஆபத்தி கொடுக்க இடமில்லை. நிமித்தம் உள்ள போதெல்லாம் அனுஷ்டிக்கவேணுமென்கிற நியமம் கிடையாது. அனுஷ்டிப்பதற்கு வேண்டிய பரிகரங்கள் இல்லாத போது அதைச் செய்யவேணுமென்கிற நியமமில்லாமையைக் காண்கிறோம். ஆகையால் கர ணங்களும் ஸரீரமும் மோக்ஷ காலத்தில் இல்லாததால் அப்பொழுது அனுஷ்டிப்பது கிடையாது என்று சொல்வீரேயானால் ஸந்தோஷம். உமது பேரில் தூஷணத்தை நீர் வெளியாக்குகிறீர். எப்படி என்றால், ப்ரபஞ்சத்தோடு கூடியதாக அனுபவிப் பது உண்மையான அனுபவமல்லாததால் மோக்ஷத்திற்குப் பிறகு தான் உண்மையான அனுபவம் வரக் கூடும். அப்பொழுது சரணகளேபரமில்லாத போதும் இந்த விதி யை அனுஷ்டிப்பது ஸாத்யமா அஸாத்யமா? அஸாத்யமென்றால் அதை விதிப் பதென்பதே கூடாது. ஆகையால் ஸாத்யமென்று சொல்லவேணும். ஆகையால் ப்ரஹ்ம ஸ்வரூபத்தின் உண்மையின் அனுபவம் என்கிற நிமித்தம் நித்யமானபடி யாலும் அந்த நிமித்தத்தைப் பற்றி வருகிற இந்த நைமித்திகவிதி எப்பொழுதும் அனுஷ்டிக்க ஸாத்யமான படியாலும், நித்யமாகவே அதை அனுஷ்டிக்க வேண்டி வரும் என்று தாத்பர்யம். உலமாக விசேஷணமாகும் என்கிற பக்ஷத் தில் தூஷணத்தைக் கூறுகிறார்— "அதுவுமாகாது" என்று. இந்த நியோ

ஸ்ரீபாஷ்யம் :—

ராஜ, கு ஶாத் நியோஜவிஷயः। ஜ்ஞெ ஹெவெகிஜெஜ। ந, கிஜ்ஞ நித்யக்ஷேநாஜவ்யரூபத்வாத் அபாவார்த்தத்வாச்ச। நிஷ்வஂவம் ஜ்ர ஜ்ஞ ஸாத்யமிதி சேத், ஸாத்யத்வேபி பலத்வமேவ। அபாவார்த்தத்வாந்ந விதிவிஷயத்வம் ஸாத்யத்வம் ச கஸ்ய। கிம் ப்ரஜ்ஞமணः, உத ப்ரப

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

விதிக்கு விஷயமென்ன ? ப்ரஹ்மந்தான் என்று சொன்னல் அது ஒட்டாது. ஏனென்றல்—ப்ரஹ்மம் நித்யமாயும், ஸாதிக்கத்தக்கதல்லாமலும், க்ரியாரூப மல்லாமலும் இருப்பதால் அது நியோகத்திற்கு விஷயமாகாது. ப்ரபஞ்சம் நீங்கின ப்ரஹ்மம் ஸாத்யமாகலாமென்றல் ; ஸாத்யமென்றலும் அது பலந் தானேயாகும். க்ரியா ரூபமல்லாததால் விதிக்கு விஷயமாகாது. ஸாதிக்கப் படும் தன்மை என்பது எதற்கு ? ப்ரஹ்மத்திற்கா அல்லது ப்ரபஞ்சத்தின்

ச்ருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

கத்திற்கு விஷயம் ஏற்படாது என்று ஸாதிப்பதற்காக கூறுகிறார்—" எது " என்று. ஸங்கிக்கிறார்—"ப்ரஹ்மந்தான்" என்று. தூஷிக்கிறார்—"இல்லை" என்று. ஹேதுவைக்கூறுகிறார்—"அதினுடைய" என்று. "அபவ்யரூபத்வாத்" என்கிற பாஷ்ய பதத்திற்கு "ஸாதிக்கத்தகாததாகையால்" என்று பொருள். "அபாவார்த்தத்வாச்ச" என்பதை விவரிப்போம். ‡பாவார்த்தங்கள் என்பது க்ரியையைச்சொல்லும் ஸப்தங் கள். "க்ரியாரூபமல்லாமையால" என்று பொருள். ஸாதிக்கப்படுவது என்பது பலத்திற்கும் உண்டாதலால் பாவார்த்தத்வம் என்பது அதை விலக்கும். அவ்விரண்டும் இல்லாமையால் என்று பொருள். ‡ ப்ரபஞ்ச ஸத்யமாயிருப்பது என்கிற ஆசாரத்தால் ஸாத்யமாகலாமே என்று ஸங்கிக்கிறார்— "நிஷ்ப்ரபஞ்சம்" என்று. அதை நிரஸனம் செய்கிறார் —'ஸாத்யமானலும்' என்று. "பலத்வம் தானே"

அரும்பதம் :—

§ "பாவார்த்தங்கள் கர்ம ஸப்தங்கள்; அவற்றிலிருந்து க்ரியை (செய்கை) பொருளாக எற்படும்" என்று ஜைமினி ஸூத்ரம்.

‡ ப்ரஹ்ம மென்பது செய்கையுமாகாது. ஸித்தமாகையால் ஸாத்யமுமாகாது.

ஸ்ரீபாஷ்யம்:—

ஂவ நிவ்ருத்தேஃ। ந தாவஸ ப்ரஹ்மணஃ, விஜ்ஞாஸ கநித்யத்வப்ரஸ
ங்ஜ। கஸ்ய வ ஂவ நிவ்ருத்தேஃ, ந தர்ஹி ப்ரஹ்மணஃ ஸாத்யத்வம்।

ஞ்ச நிவ்ருத்தேஃ! ந தாவத் ப்ரஹ்மணஃ, ஸித்தத்வாத் அநித்யத்வப்ரஸ
க்தேஶ்ச! அத ப்ரபஞ்ச நிவ்ருத்தேஃ, ந தர்ஹி ப்ரஹ்மணஃ ஸாத்யத்வம்!

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

நிவர்த்திக்கா? ப்ரஹ்மத்திற்கு என்று சொல்லமுடியாது. ஏனெனில் அது ஸாத்யமென்றால் அதற்கு அநித்யம் வரும். ப்ரபஞ்சத்தின் நிவ்ருத்திக்குத் தான் ஸாத்யத்வம் என்றால் ப்ரஹ்மத்திற்கு ஸாத்யத்வம் சொல்லும் உங்கள் கக்ஷி போய் விடும். ப்ரபஞ்சத்தின் நிவ்ருத்தி தான் விதிக்கு

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

என்று. விஷயமாக வேண்டியதற்கு பலம் தவிர வேறு இருக்க வேண்டும். பலத்தைக் காட்டிலும் வேறுகாதாதலால் விஷயமாவது அயுக்தம் என்று தாத்பர்யம். வேறு ஹேதுவை கண்டோக்தமாய்க் காட்டப் போகிறவராய் விஷயமாவதை தூஷிக்கிறார்— "பாவார்த்தமாகாததால் விதிக்க விஷயமாகாது" என்று விஜிஜ்ஞாஸிடம் † விஷயமாகாது என்பதில் அனுபபத்தி சொல்லப் பட்டது. பிறகு விஜ்ஞேயப்ரபஞ்சத்திற்கும், விஜ்ஞேயஞ்ஜத்திற்கும் விஷயமாவதில் அனுபபத்தியைச் சொல்லப் போகிறவராக விகல்பிப்பதற்கு கேள்க்கிறார் — "ஸாத்யத்வமோ" என்று. அல்லது வேறு விதமாகவும் பொருள் சொல்லலாம். விஜிஜ்ஞாஸிடம் ஸாத்யமாகலாமென்று ஒப்புக்கொண்டு அது விஷயமாவதை தூஷித்தார். இப்பொழுது விஜிஜ்ஞாஸிடம் ஸாத்யமேயாகாது என்று தூஷிப்பதற்காக விகல்பிக்கிறார்— "ஸாத்யத்வமோ" என்று. விஜிஜ்ஞாஸிடம் ஸாத்யமாவது உபபந்நமல்ல வென்பது விஜ்ஞேயஞ்ஜம், விஜ்ஞேயம் இவ்விரண்டிற்கும் ஸாத்யத்வம் என்பது அனுபபந்நமென்பதாலே தானே கூடும். அங்கே "இரண்டிற்கும்" என்று ஒரு மூன்றாவது விகல்பம் எடுக்காததற்கு காரணம் மற்ற இரண்டு விகல்பஸிரஸ்ஸுகளிலும் உள்ள தூஷணங்களைப்போலவே இதிலும் தூஷணமிருப்பது தான். முதல் ஸிரஸை தூஷிக்கிறார்—"ந தாவத்" என்று. ஏன் என்று கேள்க்கக் கூறுகிறார்—"ஸித்தமாகையாலும் அநித்யத்வம் வருமாகையாலும்" என்று. ஸித்தமான படியால் ஸாத்

அநுபதம்:—

¶ ப்ரபஞ்சம் தொலைந்த ப்ரஹ்மம் விஜிஜ்ஞாஸிடம். அது ஸாத்யமாகாது. விஜ்ஞேயம் ப்ரஹ்மம். விஜ்ஞேயஞ்ஜம் ப்ரபஞ்சமில்லாமை.

ஸ்ரீபாஷ்யம் :—

ப்ரபஞ்சநிவ்ருத்திரேவ விதிவிஷய இதி சேத்! ந, தஸ்யாः பல
த்வேந விதிவிஷயத்வாயோகாத்! ப்ரபஞ்ச நிவ்ருத்திரேவ ஹி மோக்ஷः
ஸ ச பலம்! அஸ்ய ச நியோக விஷயத்வே நியோகாத் ப்ரபஞ்ச நிவ்ரு
த்திः, ப்ரபஞ்ச நிவ்ருத்யா நியோக இதி இதரேதராஶ்ரயத்வம்! அபிச

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

விஷயம் என்று சொன்னால் அது ஒட்டாது. ஏனென்றால் ப்ரபஞ்சம் தொ
லைவது பலமாகையால் அது விதிக்கு விஷயமாவது கூடாது. ப்ரபஞ்ச நிவ்
ருத்தி தானே மோக்ஷம். மோக்ஷந் தான் பலம். அது விதிக்கு விஷயமா
னால் நியோகமென்னும் விதிக் கட்டளையால் ப்ரபஞ்சத்தின் நிவ்ருத்தி ஏற்ப

ச்ருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

யத்வம் இல்லை ஸாத்யத்வத்தை ஒப்புக்கொண்டாலோ பாரூபமாயிருக்கையில்§ ஸா
த்யமாகையால் அநித்யத்வம் வரும் என்று அர்த்தம் இரண்டாவதை ஸங்கிக்கிறார்—
"பிறது" என்று. தூஷிக்கிறார் "அப்படிக்கில்லை" என்று. ப்ரபஞ்சத்தின் தொலைதல்
ஸாத்யமானால் ப்ரஹ்மத்திற்கு ஸாத்யத்வம் இல்லாததால் அது விதி விஷயமாகாது
என்று அர்த்தம். ப்ரபஞ்சத்தின் நிவ்ருத்தி விதி விஷயமாகட்டுமே என்று ஸங்கித்த
தூஷிக்கிறார்—'ப்ரபஞ்ச" என்று. அது பலமாவதை உபபாதிக்கிறார்—"ப்ரபஞ்ச
நிவ்ருத்தியே" என்று. ப்ரபஞ்ச நிவ்ருத்தியே மோக்ஷமாகட்டும். அதனால் அது
விஷயமாவது ஏன் கூடாது எனறு கேள்க்கக் கூறுகிறார்—"அதுவோ" என்று. ப்ர
பஞ்ச நிவ்ருத்தி மோக்ஷரூபமாகையாலும், மோக்ஷம் பலமாகையாலும், பல
மான மோக்ஷம் விதிக்கு விஷயமாகாது என்று தாத்பர்யம். மற்றோரு

அரும்பதம்:—

§ இங்கே பாவம் என்பதற்கு அபாவமல்லாத ஒரு உள்ள பொருள் என்று
அர்த்தம். த்வம்சம் (நாசம்) என்பது அபாவம்; அது ஸாத்யம், ஆனால் அது அநித்ய
மல்ல. ஆகையால் அபாவத்தை விலக்க "பாவப் பொருளான" என்று இங்கே
விசேஷணம். ப்ரஹ்மம் என்பது ஒரு பொருள் (பாவம்). அது ஸாத்யமானால் அநித்
யமாகும் என்று இந்த அநுமானத்தால் ஏற்படுகிறது.

ஸ்ரீபாஷ்யம் :—

கிம் நிவர்த்தநீயஃ ப்ரபஞ்சஃ மித்யாரூபஃ, ஸத்யோவா! மித்யாரூ
பத்வே ஜ்ஞாந நிவர்த்யத்வாதேவ நியோகோ ந கிஞ்சித் ப்ரயோஜநம்!
நியோகஸ்து நிவர்த்தகஜ்ஞாநமுத்பாத்ய தத்வாரேண ப்ரபஞ்சஸ்ய நிவ

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

டும். ப்ரபஞ்சத்தின் நிவ்ருத்தியால் நியோகம் என்று அந்யோந்யாஸ்ரய தோஷம் வரும். மேலும் தொலைக்க வேண்டிய ப்ரபஞ்சம் பொய்யா, ஸத்யமா? பொய்யென்றால், ஜ்ஞானத்தினாலேயே அதைப் போக்கக் கூடுமாதலால் நியோகத்தினால் யாதொரு உபயோகமும் இல்லை. நியோகமோவென்

சந்த்ரகாசிகை தமிழ்மொழி பெயர்ப்பு—

தூஷணம் கூறுகிறார்—"இதந்து" என்று. அஸ்யாஃ என்று ஸ்த்ரீலிங்கமாகச் சொல்ல வேண்டியிருக்க பல மென்கிற ஆகாரத்தைக் காட்ட விரும்பத்தால் அஸ்ய என்று (நபும்ஸக) ப்ரயோகம் செய்தார். பலத்வம் விஷயத்வம் என்கிற இரண்டு ஆகாரங்களை ஒப்புக் கொண்டால் ப்ரபஞ்ச நிவ்ருத்தி பலமாயிருப்பதால் நியோகத்தால் ஸாத்யமாகும், விஷயமாயிருப்பதால் ப்ரபஞ்ச நிவ்ருத்தியினால் நியோகம் ஸித்திக்கும் என்று ஒன்றை யொன்று ஆஸ்ரயிக்கிறது என்னும் தோஷம் வரும் என்று தாத்பர்யம். நிஷ்ப்ரபஞ்சைகரணவாதத்தில் இன்னொரு ப்ரகாரமாக தூஷணம் கூறுகிறார்—"மேலும்" என்ற. மற்றொரு விதமாயும் பொருள் சொல்லலாம். நியோகத்திற்கு விஷயத்தை தூஷிப்பதால் அந்யோந்யாஸ்ரய தோஷம் அங்கே வருவது நியோகத்திற்கும் தூஷணமாகும். (வேறு ப்ரகாரத்தாலும்) நியோகத்தை தூஷிக்கிறார்—"மேலும்" என்று. தூஷிப்பதற்காக விகல்பிக்கிறார்—"கிம்" என்று. முதல் விகல்பத்தை தூஷிக்கிறார்—"மித்யை" என்று. ப்ரயோஜனத்தை ஸங்கிக்கிறார்—"நியோகமோ" என்று தூஷிக்கிறார்—"அது" என்று ஸ்வ வாக்யத்திலிருந்து என்கிற பாஷ்ய பதத்திற்கு ப்ரபஞ்சத்தின் மித்யாத்வத்தையும் ப்ரஹ்மத்தின் நிர் விஶேஷத்வத்தையும் சொல்லும் வாக்யத்திலிருந்து ‡ என்று அர்த்தம். நியோகம் நிஷ்பலம் என்று தூஷிப்பதால் நியோஜ்ய விஶேஷணமும்

அநுபதம்:—

‡ பொய்யாகத் தோன்றும் ப்ரபஞ்சத்தோடு கூடிய ப்ரஹ்மத்தை ப்ரபஞ்சசூந்யமாகச் செய்யவேண்டுமென்று அவர்கள் சொல்லும் விதி வாக்யத்தில்

ஸ்ரீபாஷ்யம் :—

தத்ர இதி சேத், தத் ஸ்வவாக்யாதேவ ஜ்ஞாதமிதி நியோகேந ப்ர
யோஜநம், வாக்யார்த்த ஜ்ஞாநாதேவ ப்ராஹ்மவ்யதிரிக்தஸ்ய க்ருத்ஸ்நஸ்ய
மித்யாபூதஸ்ய ப்ரபஞ்சஸ்ய பாதிதத்வாத் பைரிகரஸ்ய நியோக
ஸ்யாஸித்திஸ்ச ! ப்ரபஞ்சஸ்ய நிவர்த்யத்வே ப்ரபஞ்சநிவர்த்தகோ

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

ஸ்ரீல் ப்ரபஞ்சத்தைப் போக்கும் ஜ்ஞானத்தை யுண்டு பண்ணி அதன் மூலமாக ப்ரபஞ்சத்தைப் போக்கும் என்று நீங்கள் சொன்னீர்; அப்படிப் போக்கும் ஜ்ஞானம் நியோகம் இருக்கும் வாக்யத்தாலேயே உண்டாகி விடுவதால் விதியி னல் யாதொரு ப்ரயோஜனமும் இல்லை. இந்த வாக்யத்தினுலுண்டாகும் ஜ்ஞானத்தினுலேயே ப்ரஹ்மத்தைத்தவிர பொய்யான மற்ற ப்ரபஞ்சம் முழு வதும் பாதிக்கப்படுகிறபடியால் அங்கம் முதலிய பரிகரங்களோடு கூடிய நியோகமே ஸித்திக்கமாட்டாது. ப்ரபஞ்சம் தொலைக்கப்படவேண்டும் விஷ

ச்ருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

தூஷிக்கப்பட்டதாகும் நியோகத்தினுல் ஸாதிக்கப்படும் பலம் தானே பலமென் னும் முறையில் நியோஜ்ய வி ரூஷணமாகும். இங்கே பலம் ஒட்டாததால் அது வும் கூடாது. வேறு தூஷணம் கூறுகிறார்—"வாக்யார்த்த ஜ்ஞானத்தினுலேயே" † என்று. முன்பு விகல்பிக்கப்பட்ட இரண்டு ஸிரஸ்ஸுகளில் இரண்டாவது ஸிர ஸை தூஷிப்பதற்காகக் கூறுகிறார்—"ப்ரபஞ்சத்தின்" என்று. ப்ரபஞ்சம் ஸத்யமா னதால் அது நியோகத்தினுல் தொலைக்கப்படும் என்று சொல்லுகையில் என்று அர்த்

அநுபதம்:—

† அவர்கள் சொல்லும் விதி வாக்யத்தின் பொருளினுலேயே ப்ரபஞ்சம் பொய் யென்றும், ப்ரஹ்மம் ஸகல விசேஷ சூன்யமென்றும் தெரிந்து விடுவதால், அந்த அறிவு வந்த பிறகு விதிக்கு அங்கங்கள் ஏது, விதியின் அநுஷ்டானம் ஏது, விதி யாலுண்டாகும் நியோகமென்னும் அதிருஷ்டமேது, உலகமே பொய்யென்று ஒடிப் போய் விட்டதே.

ஸ்ரீ பாஷ்யம் :—

நியோமः கிம் ப்ரஹ்ம ஸ்வரூபமேவ, உத தத்வ்யதிரிக்தः। யதி ப்ரஹ்மஸ்வரூபமேவ நிவர்த்தகஸ்ய நித்யதயா நிவர்த்ய ப்ரபஞ்ச ஸத்பாவ ஏவ ந ஸம்பவதி, நித்யத்வேந நியோகஸ்ய விஷயாநுஷ்டாநஸாத்யத்வம் ச ந கடதே. அத ப்ரஹ்ம ஸ்வரூப வ்யதிரிக்தः

நியோகः கிம் ப்ரஹ்ம ஸ்வரூபமேவ, உத தத்வ்யதிரிக்தः! யதி ப்ரஹ்மஸ்வரூபமேவ நிவர்த்தகஸ்ய நித்யதயா நிவர்த்ய ப்ரபஞ்ச ஸத்பாவ ஏவ ந ஸம்பவதி, நித்யத்வேந நியோகஸ்ய விஷயாநுஷ்டாநஸாத்யத்வம் ச ந கடதே. அத ப்ரஹ்ம ஸ்வரூப வ்யதிரிக்தः

ஸ்ரீ பாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

யத்தில் ப்ரபஞ்சத்தைத் தொலைக்கும் நியோகம் ப்ரஹ்ம ஸ்வரூபமா அல்லது அதனினும் வேறு? ப்ரஹ்ம ஸ்வரூபமே நியோகம் என்றால் ப்ரபஞ்சத்தை நிவர்த்திக்கும் ப்ரஹ்மம் நித்யமானபடியால் நிவர்த்திக்கப்படவேண்டிய ப்ரபஞ்சம் இருப்பதே அஸம்பாவிதமாகும். நியோகம் நித்யமாவதால் அது அதன் விஷயத்தை யனுஷ்டிப்பதனால் ஸாதிக்கப்படுவதென்பது கூடாமற் போம். ப்ரபஞ்சத்தைப் போக்கும் நியோகம் ப்ரஹ்ம ஸ்வரூபத்தைக் காட்டிலும் வேறு என்றால் அது ப்ரபஞ்சம் முழுவதும் தொலைவது என்கிற

சீருதப்ராகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

தம். ¶ என்ன என்று ஆரம்பித்து விகல்பித்து முதல் ஸிரஸை தூஷிக்கிறார்—"யதி" என்று ஆரம்பித்து. இரண்டாவதை தூஷிப்பதற்காக அவர்கள் ஒப்புக்கொள்வது இன்னது என்பதைப் பற்றி ஸங்கிக்கிறார்—"நல்லது" என்று தூஷிக்கிறார்—"அது" என்று. 'தஸ்ய' என்று ஆரம்பித்து "நஷ்டः" என்னும் வரையிலுள்ள பாஷ்ய வாக்யத்தினால் இந்த நிஷ்ப்ரபஞ்சீகரண நியோகத்தை யனுஷ்டிப்பதில் ப்ரயோக்தாவும்‡

அரும்பதம்:—

¶ ஜ்ஞானத்தினால் தொலைவது பொய்ப் பொருளாகும்; பழுதையில் தோன்றும் பொய்ப் பாம்பு பழுதை தானென்னும் தத்வ ஜ்ஞானத்தால் தொலையும். நியோகத்தின் அதிருஷ்ட சக்தியால் தொலைவது உண்மையாயிருந்த பொருளா யிருக்கவேண்டும், ஸோதரைப் பார்ப்பதால் உண்டாகும் அதிருஷ்ட புண்யத்தால் நிஜமாயிருந்த ப்ரும்மஹத்யாதி தோஷம் தொலையும்.

‡ நியோகம் என்பது ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறானால், ப்ரஹ்மத்தைத்

ஸ்ரீபாஷ்யம்:—

𑌤𑌸𑍍𑌯 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍂𑌪𑌵𑌿𑌷𑌯𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌸𑌾𑌧𑍍𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌪𑍍𑌰𑌯𑍋𑌕𑍍𑌤𑌾 𑌚 𑌨𑌷𑍍𑌟 𑌇𑌤𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌭𑌾𑌵𑌾𑌦𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌃। 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍂𑌪𑌵𑌿𑌷𑌯𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑍇𑌨𑍈𑌵 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌸𑍍𑌯 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌤𑍍𑌵𑌾𑌨𑍍𑌨 𑌨𑌿𑌯𑍋𑌗𑌨𑌿𑌷𑍍𑌪𑌾𑌦𑍍𑌯𑌂 𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌖𑍍𑌯𑌂 𑌫𑌲𑌮𑍍। 𑌕𑌿𑌞𑍍𑌚

தஸ்ய க்ருத்ஸ்நப்ரபஞ்சநிவ்ருத்திரூபவிஷயாநுஷ்டாநஸாத்யத்வேந ப்ரயோக்தா ச நஷ்ட இத்யாஸ்ரயாபாவாதஸித்தி: ! ப்ரபஞ்சநிவ்ருத்திரூபவிஷயாநுஷ்டாநேநைவ ப்ரஹ்மஸ்வரூபவ்யதிரிக்தஸ்ய க்ருத்ஸ்நஸ்ய நிவ்ருத்தத்வாத் ந நியோகநிஷ்பாத்யம்மோக்ஷாக்யம்பலம் ! கிஞ்ச,

---

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

அதன் விஷயத்தின் அனுஷ்டானத்தால் ஸாதிக்கப்படவேண்டியதாகையால் அனுஷ்டிப்பவனும், நஷ்டமாய்ப் போய் விடுவதால் அனுஷ்டானத்திற்கு ஆஸ்ரயமேயில்லாததால் அது ஸித்திக்காமற் போகும். ப்ரபஞ்ச நிவ்ருத்தியென்கிற விதி விஷயத்தை அனுஷ்டிப்பதினுலேயே ப்ரஹ்மஸ்வரூபத்தைத் தவிர மற்றெல்லாம் போய்விடுவதால் நியோகத்தினுல் மோக்ஷமென்கிற பலம் ஸாதிக்கக்கூடியதல்ல. மேலும், ப்ரபஞ்ச நிவ்ருத்தியென்கிற நியோகத்தின் ஸாதநமென்கிற கரணத்திற்கு அங்கங்களில்லாததாலும், அங்கங்களால் உப

ச்ருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

(அதாவது கர்த்தாவும்) ஸித்திக்கமாட்டான் என்னும் தூஷணமும் சொல்லியதாகிறது. ப்ரபஞ்ச நிவ்ருத்தி என்று ஆரம்பித்த வாக்யத்தால் ப்ரபஞ்சம் ஸத்யமானுலும் பலம் ஸித்தியாது § என்று சொல்லுவதின் மூலமாய் நியோகம் தூஷிக்கப்பட்டது நியோகத்திற்கு ஸாதனமான கரணத்தையும் அதை யநுஷ்டிக்கவேண்டிய ப்ரகாரமான 'இதிகர்த்தவ்யதை' என்னும் அங்கங்களையும் தூஷிக்கிருர்—"மேலும்" என்று.

அரும்பதம்:—

தவிர மற்றதையெல்லாம் தொலைக்கவேண்டியதே நியோக வியாபாரமாகையால், ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேருன கர்த்தாவும் தொலைந்தால் தானே நிஷ்ப்ரபஞ்சமாகச் செய்யும் நியோகம் நிறைவேறும். நியோகத்தை யனுஷ்டிக்கும் கர்த்தாவும் தொலைய வேண்டியதால் நியோகச் செய்கைக்கு ஆஸ்ரயனுன கர்த்தாவே யில்லாமல் போய்விடுவானே யென்று தூஷணம். பாஷ்யத்தில் "ஆஸ்ரய" பதத்திற்கு கர்த்தா என்று பொருள். இந்த வாதத்தில் கர்த்தாவும் ஸித்திக்கமாட்டானென்று ஆக்ஷேபம்

§ "ப்ரபஞ்சத்தை சூந்யமாக்கு, (இல்லாமற் செய்)" என்கிற கட்டளையை

ஸ்ரீபாஷ்யம் :—

வைஷ்ணவ நிவ்ருத்தேர்நியோமகரணஸ்ய இதிகர்த்தவ்யதாபாவாத், அநுபக்ருதஸ்ய ச கரணத்வாயோகாத், ந கரணத்வம்! கதமிதி கர்த்தவ்யதாபாவ இதி சேத் இத்தம், அஸ்யேதி கர்த்தவ்யதாபாவரூபா,

---

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

காரம் பெறுதது கரணமாவது கூடாதாகையாலும், அதற்குக் கரணத்வமே லித்திக்காது. 'இதிகர்த்தவ்யதை' யென்னும் அங்கங்கள் இல்லையென்று எப்படி நீர் சொல்லக்கூடுமென்று நீர் கேட்பீரோ, அது எப்படி யென்று விவரிக்கிறோம். இந்த ப்ரபஞ்ச நிவ்ருத்தியென்னும் நீர் சொல்லும் கரணத் திற்கு இதிகர்த்தவ்யதை யென்னும் அங்கம் பாவரூபமா அல்லது அபாவ ரூபமா? பாவரூபமான இதிகர்த்தவ்யதை கரணத்தின் ஸ்வரூபத்தை உண்டு

சீநதப்ராகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

அங்கங்கள் ஏற்படாது என்பதை விவரிக்கக் கூறுகிறார்— 'எப்படி' என்று. பதில் கூறுகிறார்— "இப்படி" என்று. பாவரூபம் என்கிற பக்ஷத்தில் இரண்டு ப்ர காரங்களைக் கூறுகிறார்— 'பாவநபழம்' என்று. வ்ரீஹி என்னும் தானியங் களை உலக்கையால் அவகாதம் செய்யவேணும். அதாவது குத்தவேணும் என் னும் விதியில் அவகாதம் யாகத்தின் ஸ்ரீரத்தை உண்டுபண்ணுவதில் த்ருஷ்ட முறையாக உபயோகப்பட்டு கரண ஸ்ரீர நிஷ்பாதகமான ‡ அங்கமாகும்.

அநும்பதம்:—

யனுஷ்டிக்கும் போதே, அதாவது சூந்யதையை த்யானம் செய்யும் போதே ப்ரஹ்ம மம் தவிர மற்றதெல்லாம் இல்லாமற் போகிறபடியால், இந்த விதியின் அனுஷ்டா னத்தால் ஓர் அத்ருஷ்ட ஸக்தி எப்படியுண்டாகும்? ஸக்தியே உண்டாக முடியாத தால் அதனால் மோக்ஷமென்னும் பலம் எப்படி உண்டாக்கப்படும்? ஆகையால் இந்த வாதி ஆசைப்படுகிறபடி நியோகமென்னும் அத்ருஷ்ட சக்தி யுண்டாகி அதி மோக்ஷ மென்னும் பயனை யளிக்குமென்பது ஸாத்யமேயல்ல.

‡ "யாகம் என்னும் ஸாதனத்திற்கு, க்ருதிக்கு" அங்கங்கள் வேண்டும். அங்கங் களுக்கு 'இதிகர்த்தவ்யதை' என்று பெயர். அங்கங்கள் யாகத்திற்கு ஏதேனுமொரு விதத்தில் உபகாரம் செய்யும். 'ஸங்நிபத்ய உபகாரகம்', "ஆராத் உபகாரகம்"

ஸ்ரீபாஷ்யம் :—

கஹாவரூபிவாவா। ஹாவரூபிவா ச கரணஸரீரநிஷ்பத்திதஹநரூ

அபாவரூபாவா! பாவரூபா ச கரணஸரீரநிஷ்பத்திதகநுக்ர

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

பண்ணுவதென்றும், காரணத்திற்கு அனுக்ரஹம் செய்வதென்றும், இரண்டு

ச்ருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

†வ்ரீஹி, தான்யங்களை ப்ரோக்ஷிக்கவேணும் என்னும் விதியில் ப்ரோக்ஷணமென்பது

அநுபதம்—

என்று அங்கங்கள் இரு வகைப்படும். யாகம் என்பது காரணம், ஸாதனம். யாகத்தையே (அதாவது காரணத்தின் உடலையே, யாகஸ்வரூபத்தையே) உண்டுபண்ணுவதில் உபயோகப்படுவது ஸந்நிபத்ய உபகாரகம். மாவினால் செய்யப்படும் புரோடாசத்தை (அப்பத்தை) தேவதைக்கு ஹோமம் செய்வதால் யாகத்தின் ஸ்வரூபம் ஸித்திக்கும். அந்த புரோடாசத்தைச் செய்வதற்கு தான்யத்தை உலக்கையால் குத்தி (அவகாதம் செய்து) பொடியாக்கவேண்டும். இந்த அவகாதம் யாகத்தை உண்டாக்குவதில் ஓர் அங்கம். இது ஸந்நிபத்ய உபகாரகமான அங்கம். தர்ஶ பூர்ணமாஸ யாகத்திற்கு ப்ரயாஜங்கள் அங்கம். அவையின்றியே யாகம் ஸித்தித்து விடுகிறது. யாகத்தை உண்டாக்குவதில் அவை உபயோகப்படுவதில்லை. யாகம் உண்டானதும் அதனால் ஓர் அத்ருஷ்டசக்தி உண்டாகும். ப்ரயாஜங்கள் என்னும் அங்கங்களின் அனுஷ்டானத்தால் மற்றோர் அத்ருஷ்ட ஶக்தி உண்டாகும். அது அங்காபூர்வம் எனப்படும். யாகத்தினாலுண்டான அபூர்வ ஶக்தி ஸ்வர்க்கம் முதலிய பலத்தை யுண்டாக்குவதற்கு வேண்டிய ஓர் அதிஶய விஶேஷத்தை அங்காபூர்வம் உண்டு பண்ணுகிறது. அங்காபூர்வம் கொடுக்கும் அதிஶயத்தோடு சேர்ந்து யாகாபூர்வம் ஸ்வர்க்கம் முதலிய பலத்தைக் கொடுக்கிறது. யாகத்திற்கு வெளியிலிருந்து அதாவது தூரத்திலிருந்து இப்படி உபகாரம் செய்வதால் ப்ரயாஜங்கள் என்னும் அங்கங்கள் தூராத் உபகாரகம். தூராத் என்பதற்கு தூரத்திலிருந்து என்று பொருள். யாகத்தை யுண்டாக்குவதில் உபகரிக்காமற் போனாலும் வெளியே இருந்து பலத்தை யளிக்க ஓர் ஶக்தியைக் கொடுத்து உபகரிக்கிறது. முதல் சொன்ன அங்கம் த்ருஷ்ட முறையாகவே (கண்ணுக்குத் தெரிந்தே) உபகரிக்கிறது; அவகாதம் என்பது யாகத்திற்கு வேண்டிய புரோடாசத்தை உண்டு பண்ணுவதில் உபயோகப்படுவதை நாம் கண்ணால் பார்க்கிறோம். இது நம் கண்ணுக்குத் தெரிந்த உபகாரம். ப்ரயாஜங்கள் ஓர் அத்ருஷ்ட ஶக்தியைக் கொடுத்து நம் கண்ணுக்குத் தெரியாமல் உபகரிக்கின்றன. அவற்றின் உபகாரம் அத்ருஷ்ட முறையான உபகாரம் இவ்விதமான அங்கங்கள் ஒன்றும் இந்த நிஷ்பாபஞ்சிகரண நியோகத்தில் ஏற்படாது என்று தூஷணம். அங்கங்கள் இல்லாவிடில் ஸாதனமே ஸித்திக்காது.

† "வ்ரீஹி தான்யங்களை ப்ரோக்ஷிக்கிறான்" என்ற விதியில் ப்ரோக்ஷணம்

ஸ்ரீபாஷ்யம்:—

ஹகார்யுஹேஷிஸா । உபயவிதா ச ந ஸம்பவதி, ந ஹி ஈத்ருஸாஹி ஹகார்யபேதபிங்நா ! உபயவிதா ச ந ஸம்பவதி. ந ஹி முக்காபி

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

விதமான பிரிவுகளை யுடையது. இரண்டுவித இதிகர்த்தவ்யதைகளும் நீர் சொல்லும் ப்ரபஞ்ச நிவ்ருத்தி யென்னும் காரணத்திற்கு ஸம்பவிக்காது.

சீந்தப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

அத்ருஷ்ட முறையாக யாகத்திற்கு பலத்தைக் கொடுக்கும் ஸக்தி விஷயத்தில் அனுக்ரஹம் செய்யும். இப்படி (ஸங்நிபத்யோபகாரக) அங்கங்களின் இரண்டு ப்ரகாரங்கள் என்று இங்கே அபிப்ராயம். அதனாலென்ன என்று கேழ்க்கக் கூறுகிறார்— 'இரண்டு விதமாயும்' என்று. இரண்டு விதமான என்கிற பாஷ்ய பதத்திற்கு 'உண்டுபண்ணுவதில் உபயோகப் படுவதும்' 'அனுக்ரஹம் செய்வதும்' என்று அர்த்தம். ‡ உண்டு பண்ணுகிறது என்கிற முதல் பக்ஷத்தில் ¶ முதலில் த்ருஷ்ட முறையாய் உபயோகப் படுவது என்னும் ப்ரகாரத்தில் தூஷணம் கூறுகிறார் —" நஹி ", என்று. முழு ப்ரபஞ்சமும் தொலைகிற தென்னும் ஸாதநத்தின் உடலில் உண்டி

அரும்பதம் :—

என்பது அத்ருஷ்ட முறையாக உபகரிக்கும். மாவாகச் செய்யவேண்டிய தான்யத்திற்கு நம் கண்ணுக்குத் தெரியாத ஓர் அத்ருஷ்ட ஸம்ஸ்காரத்தைச் செய்யும் இந்த ப்ரோக்ஷணம் யாகத்தை யுண்டுபண்ணுவதற்கு வேண்டிய புரோடாசத்தை உண்டு பண்ணுவதில் உபயோகப்படுவதால் இதுவும் ஸங்நிபத்யோபகாரகம், த்ருஷ்ட முறையாக உபகாரகம், அத்ருஷ்ட முறையாக உபகாரகம் என்று ஸங்நிபத்யோபகாரகமான அங்கமோவென்றால், அத்ருஷ்ட முறையாக மட்டிலும் உபகரிக்கும்.

‡ யாகத்தை யுண்டு பண்ணுவதில் உபயோகப் படுவது ஸங்நிபத்யோபகாரகம். யாக மென்னும் ஸாதநத்திற்கு பலத்தை யுண்டுபண்ணும் ஸக்தியை யனுக்ரஹிப்பது ஆராதபகாரகம். தான் ஸாக்ஷாத்தாக யாகத்தைப் போல் ஸ்வர்க்க ஸாதநமாகாமல் யாகம் தன் பலத்தை யுண்டு பண்ணுவதற்கு வேண்டிய ஸக்தியையனுக்ரஹிக்கிறது.

¶ ஸங்நிபத்யோபகாரக அங்கம் என்பது முதல் பக்ஷம். அது த்ருஷ்ட முறையென்றும் அத்ருஷ்ட முறை யென்றும் இருவகையல்லவோ. அவ்விரண்டில் எவ்வகையானது என்று கேழ்வி.

ஸ்ரீ பாஷ்யம் :—

வாதாதிவஸ் கூத்ஸ்நஸ்ய ப்ரபஞ்சஸ்ய நிவர்தக: கோபி த்ருஷ்ய இதி த்ருஷ்டார்த்தா நுபபத்தி: ! நாபி நிஷ்பந்நஸ்ய காரணஸ்ய கார்யோத்ப

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

குண்டாந்தடியால் (குடம் முதலியதை) ஒங்கி யடிக்கும் அடிபோல ப்ர பஞ்சம் முழுவதையும் த்வம்ஸம் செய்யக் கூடிய ஒன்றும் காணப்படாதசால் நீர் காரண மென்று சொல்லும் ப்ரபஞ்ச நிவ்ருத்தியை த்ருஷ்டமான வழியாக

சீருதப்ரகாசிகை தமிழ்மொழி பெயர்ப்பு—

பண்ணுவதும், பாவரூபமும், த்ருஷ்டார்த்தமுமான அங்கம் ஸித்தியாது என்று பொருள். * காரணத்தின் உடலே உண்டு பண்ணுவதற்கு அத்ருஷ்ட முறையாக உபயோகப்படும் அங்கம் என்பதே. அப்ராமாணிகமாகையாலும், அப்படி ஓர் அங்கம் இருந்தால் ப்ரபஞ்சம் ஸத்யமாக ஆக வேண்டிவருதலாலும் அந்த பக்ஷத்தில் தூஷணம் ஸ்பஷ்ட மாகையால் அதைத் திருவாக்கினால் ஸாதிக்க வில்லை. § பிறகு அனுக்ரஹ மென்னும் பக்ஷத்தை தூஷிக்கிறார்— "நாபி" என்று. அது அஸம்பாவிதம் என்பதை உபபாதிக்கிறார்—"அநுக்ராஹகம்" என்று. அநுக்ராஹகம் என்பது ஸாத நத்திற்குப் பிறகு உண்டாகவேண்டியது. "முழு உலகத்தின் தொலைதல்" என்கிற ஸாத னத்திற்கு பிறகும் அநுக்ராஹகம் என்பது நிற்கு மென்றால் காரணமே ஸித்திக்காமல் போகும். எப்பொழுது ஸாதநஸ்வரூபம் ஸித்தித்ததோ அப்பொழுது அனுக்ராஹகம் காணப்படாது. ஆகையால் அனுக்ராஹகம் என்பதும் ஸம்பவிக்காது என்று பொருள்.

அரும்பதம்:—

* நம் கண்ணுக்குத் தெரிந்த வழியில் ப்ரபஞ்சத்தைத் தொலைக்கிற தென்றால் உலக்கை அல்லது கடப்பாறையைக் கொண்டு உலகத்தை இடித்து எறிந்து விடக் கூடுமா? இடித்ததை எங்கே தள்ளுகிறது?

§ உலகத்தைத் தொலைக்க வேண்டு மென்கிற ஒரு விதி யிருக்கால்லவோ அதை யனுஷ்டிப்பதனால் ஓர் அத்ருஷ்டத்தைக் கல்பிக்கலாம். அப்படி விதியே ஸாக்ஷாத்தாக இல்லாததால், இல்லாத ஓர் நியோகத்தால் ஓர் அத்ருஷ்ட ஸக்தியேற் படு மென்று பேசுவதே அப்ராமாணிகம். அத்ருஷ்ட ஸக்தியினால் ப்ரபஞ்சம் தொலையும் என்றால் ஸேதுவைப் பார்ப்பதால் தொலையும் பாபங்கள் ஸத்யமாய் உள்ளது போல ப்ரபஞ்சம் ஸத்யமாக வேண்டி வரும். இந்த தூஷணங்கள் ஸ்பஷ்ட மாதலால் ஸ்ரீ பாஷ்யத்தில் ஸாதிக்க வில்லை.

ஸ்ரீபாஷ்யம் :—

தாவந்ந ஹ்ரஹஸ்ஸம்பவதி, அந்ந ஹ்ராஹகாம்ஸஸ்தாவேந க்ருத்ஸ்நப்ரப
ஞ்ச நிவ்ருத்திரூபகரண ஸ்வரூபாலித்தேः ப்ரஹ்மணோத்விதீயத்வ
ஜ்ஞாநம் ப்ரபஞ்ச நிவ்ருத்திரூபகரண ஸரீரம் நிஷ்பாதயதீதி சேத்,
தேநைவ ப்ரபஞ்சநிவ்ருத்திரூபா மோக்ஷஸ்ஸித்த இதி ந கரணாதி

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

செய்விப்பது ஸம்பவிக்கிறதில்லையே. கரணம் உண்டுபண்ணப்பட்ட பிறகு அது பலத்தை யுண்டு பண்ணுவதற்கு (அத்ருஷ்ட பலத்தினுல் அனுக்ரஹம் செய்வ தென்பதும் ஸம்பவிக்காது. ப்ரபஞ்ச நிவ்ருத்தி யென்னும் அங்கி (கரணம்) உண்டான பிறகே அதற்கு அனுக்ரஹம் செய்யும் ஒரு அங்கம் உண் டென்றல் அங்கியின் ஸ்வரூபமே ஸித்தியாமற்போகுமே. ப்ரஹ்மம் இரண் டாவது பொருளற்ற அத்விதீயமான வஸ்து என்கிற ஞானம் ப்ரபஞ்சத்தின் நிவ்ருத்தியென்பதின் ஸ்வரூபத்தை உண்டுபண்ணுகிற அங்கம் என்று சொல் லுகிறோமென்றல், அந்த அங்கத்தினுலேயே ப்ரபஞ்சத்தின் நிவ்ருத்தியை ஸ்வரூபமாக வுடைய மோக்ஷமென்கிற பலமே ஸித்தித்துவிடுவதால் கரணம்

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

ஸாதனத்தின் உடலே உண்டாக்குவதற்கு வேண்டிய அங்கம் உண்டு என்று சொல்லி ஸாதனத்தின் ஸித்தியை எதிரி சொல்லுவாரோ என்று ஸங்கிக்கிறார்—"ப்ரஹ்மத் தீர்" என்று தூஷிக்கிறார்" அதினுலேயே " என்று. "கரணதி நிஷ்பாத்யம்" என் னும் பாஷ்ய பதத்தின் பொருளைக் கூறுவோம். கரணத்தால் ஸாத்யம் நியோகம். ‡ நியோகத்தால் ஸாத்யமான பலம் 'ஆதி' பதத்தால் க்ரஹிக்கும் பொருள். கரண மாலுல் அது தன் கார்யத்தைச் செய்யும். கார்யம் செய்யாததால் கரணத்வமே

அநுபதம்:—

‡ இங்கே நியோகம் என்பது நியோகம் என்னும் விதியை யனுஷ்டிப்பதால் உண்டாகும் அத்ருஷ்ட ஸக்தி. அந்த நியோக ஸக்தியால் பலம் உண்டு பண்ணப் படும்.

ஸ்ரீபாஷ்யம் :—

நிஷ்பாத்யமவஶிஷ்யத இதி பூர்வமேவோக்தம்! அபாவரூபத்வே
சாபாவாதேவ ந கரண ஸரீரம் நிஷ்பாதயதி, நாப்யநுக்ராஹகः,
அதோ நிஷ்ப்ரபஞ்ச ப்ரஹ்மவிஷயோ விதிர் ந ஸம்பவதி—அந்யோப்யா

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

முதலியவற்றால் செய்யவேண்டிய கார்யம் ஒன்றும் பாக்கியிராது என்று முன்பே சொன்னோம். இதிகர்த்தவ்யதையென்பது அபாவ ரூபம் என்றால் அபாவமாயிருப்பதினாலேயே அது கரணத்தின் ஸ்வரூபத்தை யுண்டுபண்ணவும் மாட்டாது; அதற்கு அனுக்ரஹமும் செய்யவும்மாட்டாது. ஆகையால் நிஷ்ப்ரபஞ்சமான ப்ரஹ்ம விஷயமான விதி ஸம்பவிக்காது.

(த்யாக நியோக வாதியென்கிற) மற்றொருவர் கூறுகிறார். வேதாந்த

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

அயுக்தம் என்று பொருள். பிறகு அபாவரூபமான அங்கத்தை தூஷிக்கிறார்—"அபாவரூப மென்றால்" என்று. 'அபாவாதேவ' என்னும் பாஷ்ய பதத்திற்கு அபாவரூபமான அங்கம் அப்ராமாணிக மாகையாலேயே என்று பொருள். நிவ்ருத்தி ரூபமான ஸாந்தி முதலிய குணங்கள் அபாவ ரூபமான அங்கமாகமாட்டா. ஏனெனில் அவை ஞானத்தை யுண்டு பண்ணுகிற படியால் ப்ரபஞ்சத்தின் நிவ்ருத்தி யென்கிற ஒரு ஸாதனத்தை யுண்டு பண்ணு மென்று சொல்லுவது கூடாது. ‡ இங்கே அபாவத்தாலேயே யென்று ஏவகாரத்தை ப்ரயோகித்திருப்பதால் முன்பு அத்ருஷ்டமான ப்ரயோஜனத்திற்காக பாவ ரூபமான அங்கம் என்பது அப்ராமாணிக மென்று நினைக்கப்பட்டது என்ற தெரிகிறது. தூஷணத்தை முடிக்கிறார்—"ஆகையால்" என்று. "விதி" என்கிற பாஷ்ய பதத்திற்கு நியோகம் அல்லது கட்டளை என்று அர்த்தம். அதாவது ப்ரபஞ்சத்தை ஒழிக்கிற விஷயமான கட்டளை என்று பொருள்.

அநுபதம்:—

‡ ஸமம் (ஸாந்தி), தமம் (தாந்தி), திதிக்ஷை (பொருத்தல்), உப்ரதி (ஒழிவு) என்னும் ஸாதனங்களை ஸமதமாதி ஸாதனங்க ளென்று சொல்லுவர். இதெல்லாம் ஜ்ஞானத்திற்கு அந்தரங்கமான அங்கம். இவை நிவ்ருத்தி (ஒழிவு ரூபம்), அதாவது அபாவரூபம். இந்த அங்கங்கள் ஜ்ஞானத்திற்கு ஸாதனமே யல்லாது ப்ரபஞ்ச நிவ்ருத்தி யென்னும் கரணத்திற்கு அங்கமாகாது.

ஸ்ரீபாஷ்யம்:—

ஹ—யத்யபி வேதாந்தவாக்யாநாம் ந பரிநிஷ்பந்நப்ரஹ்மஸ்வரூப பரதயா ப்ரமாண்யம், ததாபி ப்ரஹ்ம ஸ்வரூபம் ஸித்யத்யேவ ! குதः ! த்யாநவிதிஸாமர்த்யாத் ! ஏவமேவ ஹி ஸமாமநந்தி ! * ஆத்மாவா

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

வாக்யங்களுக்கு ஸித்தமான ப்ரஹ்மஸ்வரூபத்தை போதிப்பதிலேயே நோக்கு உண்டாகையால் ப்ராமாண்யம் ஸித்திக்காவிட்டாலும், ப்ரஹ்மஸ்வரூபம் ஸித்திக்கவே ஸித்திக்கும். எப்படி ஸித்திக்கும் என்று கேட்டால்; த்யான விதியின் ஸாமர்த்யத்தினாலே யென்போம். பின்வருமாறு தானே வேதாந்தங்களில் த்யானவிதிகள் கூறுகின்றன. ''அடீ ஆத்மாதான் பார்க்

சீநதப்பாகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

ஆகையால் ப்ரவ்ருத்தியை (செய்கையை) கட்டளையிடும் வாக்யத்தினாலேயே ப்ரஹ்ம ஸ்வரூபம் ஸித்திக்கும் என்று சொல்லுவது ஸாத்யமல்லவென்று ஏற்பட்டது.† பிறகு த்யானத்தில் விதி சொல்லும் வாதியாகிய த்யாக நியோகவாதியின் பக்ஷத்தை ஆரம்பிக்கிறார்—''மற்றொருவன் சொன்னான்'' என்று. ப்ரஹ்ம விஷயத்தில் வேதாந்தவாக்யங்கள் ஸ்வதந்த்ரமாக ப்ரமாணமாகாதென்று ஒப்புக் கொண்டு பேசுகிறார்—''எப்படி இருந்தாலும்'' என்று. நல்லது, பின் எப்படி ப்ரஹ்மத்தின் ஸித்தி ஏற்படும் என்று கேழ்க்கக் கூறுகிறார்—''அப்படிக் கிருந்தாலும்'' என்று. ஒன்றைக் கொன்று விரோதம் வருமே என்கிற அபிப்ராயத்தினால் கேழ்க்கிறார்—''எதனாலே'' என்று. ஹேதுவைக் கூறுகிறார்—''த்யான விதி'' என்று. த்யான விதி என்பது என்ன? அதன் ஸாமர்த்யம் எப்படி என்று கேழ்க்கக் கூறுகிறார்—

அரும்பதம் :—

† ஸித்த வஸ்துவாக ப்ரஹ்மத்தை போதிக்காமல் ஒரு செய்கையைக் கட்டளையிடும் ப்ரவர்த்தக வாக்யத்தைக் கொண்டு அத்விதீய ப்ரஹ்ம ஸ்வரூபத்தில் ப்ராமாண்யம் வரையில் கொண்டு போய் விடலாமென்று ஆசைப் பட்டு நிஷ்ப்ரபஞ்சீகரண விதியை ஒரு வேதாந்தி சொல்ல, அந்த விதியில் யாக விதியில் போல அவஶ்யமாக வேண்டிய அம்ஶங்கள் எப்படிக் கூடுமென்று மீமாம்ஸகர் அலசி விட்டார். ப்ரபஞ்சமே அடியோடு இல்லை, நிர்விஶேஷ ப்ரஹ்மம் ஒன்று தானாளது என்ற கக்ஷியைக் கைக் கொண்டதால் ஒரு கேழ்விக்கும் பதில் சொல்லக் கூட வில்லை.

ஸ்ரீபாஷ்யம் :—

ஸோ ஒஷ்டவ்யஃ, நிதி⁴யாஸிதவ்யஃ, ய ஆ⁴த்மா அபஹதபாப்மா விஜரோ விமிருத்யுர்விஶோகோ விஜிக்⁴ரத்ஸோ(அ)பிபாஸஃ ஸத்யகாமஃ ஸத்யஸங்கல்பஃ, ஸோ(அ)ந்வேஷ்டவ்யஃ ஸ விஜிஜ்ஞாஸிதவ்யஃ, ஸர்வாம்ʼஶ்ச லோகானாப்நோதி ஸர்வாம்ʼஶ்ச காமான், யஸ்தமாத்மானமநுவித்³ய விஜானாதி யாவான் வா ஆத்மனோ மஹிமா தாவதே³வைஷ விபூ⁴திர்யாவதே³வைஷ விபூ⁴திஸ்தாவதே³வைஷ ஜ்யாயாம்ʼஶ்ச, ஸ ஏஷ ப்ரஜாபதிரேதத்³ப்ரஹ்மைதத்³தே³வா இதி ஹ ஸ்ம ப்ரஜாபதிராஹ ப்ரஜாபதிராஹ

அரே த்³ரஷ்டவ்யஃ, நிதி⁴த்யாஸிதவ்யஃ, ய ஆத்மா அபஹதபாப்மா ஸோ ந்வேஷ்டவ்யஃ ஸ விஜிஜ்ஞாஸிதவ்யஃ, ஆத்மேத்யேவோபாஸீத, ஆத்மாந

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

கப்படவேண்டும்'' ''த்யானம் செய்யப்படவேண்டும்'' ''பாபமற்ற ஆத்மா யாதோ அது தேடப்படவேண்டும். அது விரும்பி யறியப்படவேண்டும்'' ''ஆத்மாவென்றே உபாஸிக்கக்கடவன்'' ''ஆத்மா என்கிற லோகத்தையே உபாஸிக்கவேண்டும்'' என்று. இங்கே த்யாநத்தை விஷயமாகவுடைய

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

இதை த்யாக நியோகவாதி தூஷிக்கிறான்—"அது அயுக்தம் என்று ஆரம்பித்து". ஏனென்ற கேள்விக்கு கூறுகிறார்—"வாக்யார்த்த" என்று. ப்ரபஞ்சத்திற்கு மித்யாத்வத்தைச் சொல்லுபவர் ¶ ஜ்ஞானத்தினால் பந்தம் தொலைவதற்கு அனுபபத்தி எப்படிச் சொல்லுகிறார் என்று கேட்கக் கூறுகிறார்— "அப்படிக்கிருந்தாலும்" என்று. ஜ்ஞானத்தினால் தொலைதலை ஒப்புக்கொண்டாலும் அதற்கும் இதற்கும் வைஷம்யம் உண்டு என்று கூறுகிறார்— "அப்படிக் கிருந்தாலும்" என்று. காதின் வழியாய் கேட்கும் ஶாஸ்த்ர ஜ்ஞானமென்னும் பரோக்ஷ ஜ்ஞானம் ப்ரத்யக்ஷமான ப்ரபஞ்சப்ரமத்தை பாதிக்கமாட்டாதென்பதற்கு த்ருஷ்டாந்தம் கூறுகிறார்—"கயிறு முதலியது" என்று. முதலியது என்கிற ஶப்தத்தினால் பூமியின் பிளப்பு முதலியது க்ரஹிக்கப்படும். ஸர்ப்பத்திற்கு எதிர்த்தட்டான ஜ்ஞானம் என்கிற பாஷ்ய பதத்திற்கு கயிற்றின் ஜ்ஞானம் என்று அர்த்தம். அதனால் பயம் போகாவிட்டால் நம்பிக்கை யுள்ள

அநுபதம்—

¶ இவ்விரண்டு வாதிகளுக்கும் ப்ரபஞ்சம் பொய், ப்ரஹ்ம மொன்றே உண்மை, ஜீவன் ப்ரஹ்மமே தான்.

ஸ்ரீபாஷ்யம்:—

ஸாநாயாம் நாயம் ஸர்வத்ர ரஜ்ஜுரேஷ்டத்வாவோவதெஸ்ஜநித
வரோகஷஸவபுவிவரீதஜ்ஞாநநிவர்த்தநேந ஸர்பநிவ்ருத்திஸ்புநாஸ்
ஸுவோவதெஸஸ்ய து ஸர்பநிவ்ருத்திஹேதுத்வம் வஸ்துயாதாத்ம்ய
வரோகஷநிமித்தநிவ்ருத்திஹேதுத்வெந. ததா ஹி ரஜ்ஜுஸர்பஸ்ய
நஸர்யாஸ் வராவ்ருத்தேஃ புருஷஸ்ய நாயம் ஸர்பஸ் ரஜ்ஜுரேஷ
த்தயாவோவதெஸோந தத்வஸ்து யாதாத்ம்யதர்ஸநே ப்ரவ்ருத்தஸ்ததெவ

மாநாயாம் நாயம் ஸர்போ ரஜ்ஜுரேஷேத்யாப்தோபதேஸஜநித
பரோகஷ ஸர்ப்பவிபரீதஜ்ஞாநமாத்ரேண பயாநிவ்ருத்தி தர்ஸநாத்!
ஆப்தோபதேஸஸ்ய து பயநிவ்ருத்தி ஹேதுத்வம் வஸ்து யாதாத்ம்யாப
ரோகஷநிமித்தப்ரல்ருத்திஹேதுத்வேந! ததா ஹி ரஜ்ஜுஸர்ப்பதர்ஸ
நபயாத் பராவ்ருத்தஃ புருஷோ நாயம் ஸர்போ ரஜ்ஜுரேஷே
த்தயாப்தோபதேஸோந தத்வஸ்து யாதாத்ம்யதர்ஸநே ப்ரவ்ருத்தஸ்ததேவ

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

கொண்டே யிருக்கையில் "இது ஸர்ப்பமல்ல; இது கயிறுதான்" என்று ஆப்த ருடைய உபதேசத்தினால் ஸர்ப்பத்திற்கு விரோதமான பரோகஷ ஜ்ஞானமுண் டாவதால் மட்டும் பயம் நீங்குவதைக் காணவில்லை, ஆப்தோபதேஸம் பயத் தைத் தொலைக்கக் காரணமாவதற்கு வஸ்துவின் உண்மையை ப்ரத்யகஷமாய்க் கண்டு கொள்வதற்கு நிமித்தமான ஒரு ப்ரவ்ருத்தியை உண்டு பண்ணித்தான் பிறகு அதைச் செய்யவேண்டும். அதெங்ஙனேயென்றால்; பழுதைப் பாம் பைப் பார்த்து பயத்தினால் திரும்பின புருஷன் "இது பாம்பல்ல; பழுதை தான்" என்று ஆப்தர் சொல்லும் உபதேசத்தைக் கேட்டு அந்தப் பொரு ளின் உண்மையை நேரில் பார்ப்பதற்கு ப்ரவ்ருத்தித்து, அந்த வஸ்துவையே ப்ரத்யகஷத்தால் பார்த்து பிறகு பயத்திலிருந்து நீங்குகிறான். ஆப்த வாக்கி

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

ஆப்தருடைய உபதேஸ வாக்யம் வீணுகுமே என்று கேட்கக்கூறுகிறார்— "ஆப்த ருடைய உபதேசத்தின்" என்று. இதனால் முதல் ஸூத்ரத்தில் 'ப்ரபலமான ப்ர மாணத்தால் பாதிக்கப் பட்டு விட்டதால் பயம் முதலிய கார்யம் போய் விடுகிறது' என்கிற பாஷ்ய பங்க்தியின் அர்த்தம் தெளிவாகிறது. நம்பிக்கை யுள்ள ஆப்தரின் உபதேஸம், பயம் முதலிய கார்யத்தைத் தொலைப்பது கயிறு என்கிற வஸ்துவின் உண்மையைக் கண்ணால் கண்டு அபரோகஷமாகத் தெரிந்து கொள்வதற்குக் காரண மான ப்ரவ்ருத்தியை த்வாரமாக வைத்துக் கொண்டுதான் என்றல்லவோ அந்த பாஷ்ய பங்க்தியின் பொருள். இந்த அர்த்தத்தை த்ருஷ்டாந்தத்தில் விளக்குகிறார்— "ததா ஹி" என்று. அபரோகஷமான ஜ்ஞானமே அபரோகஷமான ப்ரபஞ்ச

ஸ்ரீபாஷ்யம் :—

ப்ரத்யக்ஷேண த்ருஷ்ட்வா பயாந்நிவர்த்ததே ! ந ச ஸப்த ஏவ ப்ரத்யக்ஷ
ஜ்ஞாநம் ஜநயதீதி வக்தும் யுக்தம், தஸ்யாநிந்த்ரியத்வாத் ! ஜ்ஞாந
ஸாமக்ரீஷ்விந்த்ரியாண்யேவ ஹ்யபரோக்ஷஜ்ஞாதாநி ந சாஸ்யாநபிஜ்ஞம்
ஹிதபலகர்மாநுஷ்டாநம்ருதிதகஷாயஸ்ய ஸ்ரவணமநநநிதித்யா
ஸந விமுகீக்ருதபாஹ்ய விஷயஸ்ய புருஷஸ்ய வாக்யமேவாப
ரோக்ஷஜ்ஞாநம் ஜநயதி ! நிவ்ருத்தப்ரதிபந்தே தத்பரேபி புருஷே

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

யமான ஸப்தமே ப்ரத்யக்ஷமான ஜ்ஞானத்தை யுண்டுபண்ணுகிறதென்று சொல்லுவது யுக்தமல்ல. ஏனென்றால்; சப்த ரூபமான அந்த வாக்யம் இந்த்ரியமல்ல. ஜ்ஞானத்தை யுண்டுபண்ணும் ஸாமக்ரிகளில் இந்த்ரியங்கள் தான் ப்ரத்யக்ஷ ஜ்ஞானத்தை ஸாதிக்கும். கர்மத்தினால் கிடைக்கக்கூடிய பலங்களை உத்தேசிக்காமலும், விரும்பாமலும், விஹிதமான கர்மங்களை அனுஷ்டிப்பதினால் பாப மலங்களைப் போக்கி ச்ரவணம், மனனம், நிதித்யாஸம் முதலியவைகளால் பாஹ்ய விஷயங்களில் பராங்முகனாகி அவற்றைக் கண்ணெடுத்துப் பார்க்காத புருஷனுக்கு மஹா வாக்யமே அபரோக்ஷமான ஜ்ஞானத்தை யுண்டுபண்ணுமென்று சொல்லவொண்ணாது. ஏனென்றால்; ப்ரதிபந்தங்கள் நீங்கி ப்ரஹ்மபரனாகவே யிருக்கும் புருஷனுக்குக் கூட ஜ்ஞா

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

ப்ரமத்திற்கு விரோதியாகட்டும். வேதமென்னும் சப்தம் அபரோக்ஷமான ஜ்ஞானத்தை யுண்டு பண்ணு மென்று எதிரி சொல்லும் பதிலை ஆக்ஷேபித்துக் கூறுகிறார் — "ந ச" என்றும் ஹேதுவைக் கூறுகிறார் — "அதீன்" என்றும் வ்யாப்தியை விளக்கிக் காட்டுகிறார் — "ஜ்ஞான" என்றும். இந்த்ரிய மல்லாவிட்டாலும் வெளிச்சம் முதலியதற்கு அபரோக்ஷ ஜ்ஞானத்தை யுண்டுபண்ணும் தன்மையைக் கண்டிருக்கிறோமே யென்று ஹேதுவிற்கு வ்யபிசார தோஷம். இந்த்ரியத்தையே ப்ரதானமாக வுடைய காரணக் கூட்ட மென்னும் ஸாமக்ரி

ஸ்ரீபாஷ்யம் :—

ஜ்ஞாநஸாமக்ரீவிஶேஷாணாமிந்த்ரியாதீநாம் ஸ்வவிஷயநியமாதிக்ரமா
தர்ஶநேந ததயோகாத் ! ந ச த்யாநஸ்ய வாக்யார்த்தஜ்ஞாநோபா
யதா, இதரேதராஶ்ரயத்வாத் ! வாக்யார்த்தஜ்ஞாநே ஜாதே தத்விஷய

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

னத்தையுண்டுபண்ணும் ஸாதநங்களில் சிலதான இந்திரியம் முதலியவைகள் தங்கள் தங்களுக்கு ஏற்பட்ட விஷயங்களில் தான் ப்ரஸரிக்கக் கூடும் என்கிற நியமத்தை தாண்டுவதைக் காண்கிலோம். த்யானமென்பது வாக்யார்த்த ஜ்ஞானத்தைக் குறித்து ஸாதனமாகுமென்று சொல்லவொண்ணாது. ஏனெனில்; அப்படிச்சொன்னால் "வாக்யார்த்த ஜ்ஞானம் உண்டானால் அத

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

யில் சோதனதால் என்று இங்கே தாத்பர்யம். 'ஜ்ஞானஸாமக்ரிகளுள்' என்கிற பாஷ்ய பதத்திலுள் இது ஸூசிக்கப் பட்டது. பரிகரங்களோடு கூடிய ஜ்ஞான ஸாமக்ரிகளான இந்திரியம், லிங்கம், ஶப்தம், உபமானம், அனுபபத்தி, அனுபலப்தி முதலியவற்றில் என்று அர்த்தம். † "இந்த்ரியங்களே" என்று வெளிச்சம் முதலியதனுல் ஸஹகரிக்கப்பட்ட என்று சேர்த்துக் கொள்ள வேணும். இந்திரியம் மட்டுமே யோகிக்கு மறைத்திருப்பது முதலியதைக் காட்டுகிறதே அப்படியே நாம் சொல்லும் உத்தமாதிகாரிக்கு ஶ்ருதிவாக்யமே ப்ரஹ்ம விஷயமாக அபரோக்ஷமான ஜ்ஞானத்தையுண்டுபண்ணு மென்று எதிரி சொல்லுவதை ஆக்ஷேபித்துப் பரிஹரிக்கிறார்—"ந ச" என்று. 'அஸ்ய' என்கிற பாஷ்ய பதத்திற்கு இந்த புருஷனுக்கு என்று பொருள்.

அநுபதம்:—

† ப்ரமாணங்கள் 6 என்று சொல்லுவர். ப்ரத்யக்ஷம், அனுமானம், ஶப்தம், உபமானம், அர்த்தாபத்தி, அனுபலப்தி (அபாவம்) என்று. அவ்வாறையும் இங்கே கூறுகிறார். இந்திரிய மென்று ப்ரத்யக்ஷத்தையும், லிங்கம் என்று அனுமானத்தையும், ஸத்ருஶம் என்ற உபமானத்தையும், அனுபபத்தி என்று அர்த்தாபத்தியையும் மேலே குறித்திருக்கிறது. இங்கே ஜ்ஞான ஸாமக்ரியையைப் பற்றிப் பேசுவதால் ப்ரத்யக்ஷத்திற்குக் காரணமான இந்திரியத்தையும், அனுமிதிக்குக் காரணமான ஹேது என்னும் லிங்கத்தையும், உபமானத்திற்குக் காரணமான ஒற்றுமை என்னும் ஸாத்ருஶ்யத்தையும், அர்த்தாபத்திக்குக் காரணமான அனுபபத்தியையும், ப்ரமாணங்களின் பெயர்களாகக் குறிப்பிட்டிருக்கிறது

ஸ்ரீபாஷ்யம் :—

யாகம், யாகை நிவ்ருத்தை வாக்யார்த²ஜ்ஞானமிதி ! ந ச யாக

த்யாகம், த்யாகே நிர்வ்ருத்தே வாக்யார்த்தஜ்ஞானமிதி ! ந ச த்யாக

ஸ்ரீ பாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

ஞல் அறியப்படும் பொருள் விஷயமாக த்யானம் விதிக்கும். த்யானம் விதித்தால் அதனால் வாக்யார்த்த ஜ்ஞானம் உண்டாகும் " என்று இப்படி

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

ஹேதுவைக் கூறுகிறார்—" நீங்கின " என்று. " அநபிஸம்ஹித " என்று தொடங்கிய இரண்டு பதங்களையும் திருவுள்ளத்தில் வைத்துக் கொண்டு இரண்டு விசேஷணங்களைக் கூறுகிறார்—"ப்ரதிபந்தம் நீங்கி ப்ரஹ்மபரனாகவே இருப்பவனிடம்" என்று. 'ஸ்வ விஷய நியமத்தை அதிக்ரமிப்பதைக் காணுமையால்' என்கிற பாஷ்ய பதத்தில் விஷய என்கிற ஸப்தத்திற்கு ஸாத்யம் என்று பொருள். தன்னுலே ஸாதிக்கப்படும் ஜ்ஞானத்தை அதிக்ரமிக்கக் காணுதலால் என்று பொருள். ¶ ஸப்தத்தினுல் ஸாதிக்கபடும் ஜ்ஞானம் பரோக்ஷமே. ஸப்தமோ வென்றுல் தனக்கு ஸாத்யமான பரோக்ஷஜ்ஞானத்தைத் தாண்ட மாட்டாது என்று பொருள். மனமென்பது பரோக்ஷம், அபரோக்ஷம் ஆகிய இரண்டு ஜ்ஞானங்களுக்கும் பொதுவான காரணமாகையாலும், வேத ஸப்தமோ வென்றுல் அனுமானத்தில் ஹேதுவான லிங்கத்தைப் போல பரோக்ஷ ஜ்ஞானத்தை மட்டும் உண்டுபண்ண ஸமர்த்தமாதலாலும்,

---

அநுபதம்:—

¶ அந்தந்த ப்ரமாணம் அதற்கு விஷயமும் ஸாத்யமுமானதைத் தான் விளக்கும். காது பார்க்காது. கண் கேட்க்காது. அது போல் ஸப்த ப்ரமாணம் (ஆப்த வாக்யம்) ப்ரத்யக்ஷத்தை உண்டு பண்ண மாட்டாது. த்யான நியோகம் என்னும் த்யானுத்ருஷ்டத்தால் ஏற்படும் அத்ருஷ்ட ஸக்தியால் ப்ரஹ்மத்தைப் பற்றி அபரோக்ஷமான அனுபவம் உண்டாகுமே யல்லாது, அச்வைதிகள் சொல்லுவது போல் ஸப்தத்தாலே மட்டும் ப்ரஹ்மாபரோக்ஷ ஜ்ஞானம் உண்டாகா தென்று இந்த வாதியின் ஸக்ஷி. இந்தச் ஸக்ஷி நமக்கும் இஷ்டம். நமக்கும் அவர்களுக்கும் சில பொதுவான கொள்கைகள் உண்டு: (i) ஜீவன் முக்தியை ஒப்பாதது; (ii) ஸாப்தாபரோக்ஷத்தை ஒப்பாதது; (iii) மோக்ஷத்திற்கு ஒரு ப்ரகாரத்தில் த்யான ஜன்யமான அத்ருஷ்டத்தைக் காரணமாக ஒப்புக் கொள்ளுவது. இந்த மூன்று அம்சத்தையும் த்யான நியோக வாதி ஒப்புக் கொள்ளுவதாலும் இம்மூன்றையும் கொண்டே அத்வைத மதத்தை ப்ரதிவதனம் செய்யக்கூடுமாதலாலும், அத்வைத மதத்தைக் காட்டிலும் இந்த மதம் ஸ்ரேஷ்ட மென்று திருவுள்ளம் பற்றி இந்த மதத்தைக் கொண்டு அத்வைத மதத்தை ப்ரதிவதநம் செய்யப் பட்டது.

ஸ்ரீபாஷ்யம் :—

வாக்யாயஂ ஜ்ஞாநியொஜிஜ்ஞ விஷயக்வம், தயா ஸதி த்யாநஸ்ய வாக்யா

வாக்யார்த்தஜ்ஞாநயோர்பிந்நவிஷயத்வம், ததா ஸதி த்யாநஸ்ய வாக்யா

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

அந்யோந்யாஸ்ரயம் வரும். த்யானத்திற்கு விஷயம் வேறு, வாக்யார்த்த

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

யோகியின் மனஸோடு ஸாம்யமில்லை யென்று பொருள். * நல்லது—ஸப்தத் திலுலேயும் அபரோக்ஷமான ஜ்ஞானம் பிறக்கிறதே. 'பத்தாவது பேர்வழி நீயாவாய்' என்கிற வாக்யத்திலுல் பத்தாவது பேர்வழி நான் என்று அபரோக்ஷ ஜ்ஞானம் பிறப்பதைக் காண்கிறோமே என்று கேழ்க்கக் கூறுகிறார்—அப்படிக் கில்லை. பத்தாவது நீ என்று உபதேஸம் கிடைத்த பிறகு வேகமாக வரும் ப்ரத்ய க்ஷத்திற்கு உள்ள ஸாமக்ரியால் உண்டாகும் ஜ்ஞான்த்தால் முன் உண்டான பரோக்ஷ ஜ்ஞானச்சோடு பேதத்தை க்ரஹிக்க முடியாமலிருப்பதால் ப்ரத்யக்ஷத் தன்மையை ஆரோபமே செய்யப் படுகிறது. ‡ உபதேஸத்திற்கு முன்பே ஒன்பது பேர்களே

அநுபதம்—

* ப்ரதிபந்தகமான பாபங்கள் தொலைத்து வெளி விஷயங்களில் மனம் செல்லா மல் உள்ளேயே நோக்கும் மன துடையவன் யோகி. அவன் மனத்திலுல் மட்டும் அறிபவன். மனமெனும் கருவி இந்த்ரிய ஜ்ஞானமான ப்ரத்யக்ஷத்திற்கும், பரோக்ஷ ஜ்ஞானமான அனுமானம் முதலியதற்கும் பொதுவானது. ஆகையால் யோகியின் மனது ப்ரத்யக்ஷம், பரோக்ஷம் இரண்டிற்கும் காரணமாகலாம். அனுமானத்தைப் போல ஆப்த வாக்ய மென்னும் ஸப்தமும் பரோக்ஷ ஜ்ஞானத்தை மட்டுந்தான் உண்டு பண்ணும். ஆகையால் ஸப்தம் யோகி மனஸுக்கு ஸமமாகாது.

‡ 'தஸமஸ்த்வமஸி' என்கிற உபதேஸ வாக்யம் "பத்தாவது பேர்வழி நான் தான் என்று தன் விஷயமான பத்தாமவன் என்னும் அபரோக்ஷ ஜ்ஞானத்தை உண்டு பண் ணுவதாக அத்வைதிகள் கதை சொல்லுவர். இதற்கு பதில் 10 சிறுவர்கள் சேர்ந்து ஆறு தாண்டினார்கள். 10-ப் பேரும் அக்கரை போய்ச் சேர்ந்தார்கள். 10-ப்பேரும் க்ஷேமமாய் அக்கரை சேர்ந்தோமா என்று பார்க்க வ்யக்திகளைக் கணக்கிட ஆரம்பித் தார்கள். ஒவ்வொருவனும் தன்னை விட்டு விட்டு பாக்கி 9-பேர்களே மட்டும் எண் ணினான். 10-வது மனிதனைக் காணோமே என்று எல்லோரும் அழுதார்கள். அங்கே வந்தவன் ஏன் அழுகின்றீர்கள் என்று கேட்டு அழுகைக்குக் காரணத்தைத் தெரிந்து கொண்டு 9-பேர்களைத் தொட்டுத் தொட்டு ஒன்றுவன், இரண்டாவன் என்று உரக்க எண்ணி 10-வது பேர் வழியைத் தொட்டி (காணுமற் போனதாக நினைத்த) "10-வன் நீ தான்" என்று சொன்னான். அப்படியே ஒவ்வொருவருக்கும் தொட்டுக் காண்பித்து

ஸ்ரீபாஷ்யம் :—

யது ஜ்ஞாநோபாயதா நஸ்யாத் நஹ்யந்யஜ்ஞாநஜ்ஞேயவ்யதிரேகே

ர்த்தஜ்ஞாநோபாயதா நஸ்யாத் ! நஹ்யங்யத்யாநமந்யேளங்முக்யமுத்பா

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

ஜ்ஞானத்திற்கு விஷயம் வேறு என்று இவ்விரண்டிற்கும் விஷய பேதம்

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

எண்ணின எண்ணிக்கையிலுள் உண்டான ஸம்ஸ்காரத்தின் பலத்தால் தாமதமே யில்லாமல் உடனே பத்தாவது என்ன என்கிற அபேக்ஷா புத்தி † உண்டாகிறது. எப்

அரும்பதம் :—

நீ 10-வதாவாய் என்று உபதேசித்தார். இந்த உபதேச வாக்யத்தால் தான் பத்தாமவன் என்று எல்லோருக்கும் அபரோக்ஷம் உண்டாகிற தென்று சொல்லுவர். தன்னைக் குறித்து தான் பத்தாவன் என்கிற உபதேசத்தைக் கேட்டு தானே பத்தாவது ஆளென்று ஓர் ஜ்ஞானம் உண்டாவதுண்டு. ஆனால் அந்த ஜ்ஞானத்தில் தான் என்னும் தன் ஸ்வரூபம் மட்டும் அபரோக்ஷம் (ஸ்வயம் ப்ரகாசம்), 10-வது என்பது அபரோக்ஷமல்ல. 1, 2, 3 என்று எண்ணுகையில் 2-வது, 3-வது என்கிற அபேக்ஷா புத்திகளில் கலப்போடு கூடிய மனதில் 10-வது என்ன என்கிற அபேக்ஷையைத் தீர்த்து இன்னது தான் பத்தாவது என்று தெரிந்து சொள்ளும் அறிவிற்கு இந்த வாக்யம் காரணமாகும். 10-வது என்று உண்டாகும் ஜ்ஞானம் அபரோக்ஷ மல்ல. "இது குடம்" என்று ஒருவர் பேசி குடத்தைக் காட்டும் பொழுது அதைக் கேள்க்கிறவனுக்கு குடத்தைப் பார்ப்பதனால் ப்ரத்யக்ஷம் ஏற்படுமே யல்லாது வாக்யத்தைக் கேட்பதனால் ப்ரத்யக்ஷம் ஏற்படுவதில்லை. குடத்தில் கண்ணைச் செலுத்துவதற்கு மட்டும் வாக்யம் காரணமாகும். ஒரே ப்ரத்யக்ஷ ஜ்ஞானம் இரண்டு ப்ரமாணங்களால் ஏற்படாது. அதிலேமேலாக ஜ்ஞானம் ஏற்படுவதில் இரண்டு ப்ரமாணங்களையும் பிரித்து எதனால் எந்த அம்சம் ஸித்திக்கிற தென்று நாம் சோதிக்கிறதில்லை. 10-வது என்னும் ஜ்ஞானத்தை அபரோக்ஷம் என்று நினைப்பதும் பேசுவதும் ப்ராந்தியே. இரண்டு ஜ்ஞானங்களையும் சோதித்துப் பிரிக்காததின் குற்றம். இந்த த்ருஷ்டாந்தமே ஸித்திக்காததால் இதைக் கொண்டு ப்ரஹ்மம் நீ என்று சொல்லும் வாக்யத்தைக் கேட்பதனால் தானே ப்ரஹ்மம் என்று அபேத ப்ரத்யக்ஷம் உண்டாவதாக பிறர் கூறி சொல்லுவது பயன் படாது.

† 10-வது ஆளைக் காணுமே என்று அழுது கொண்டிருந்தார்கள். 1-வன், 2-வன் என்று எண்ணி வந்து, 9 எண்ணி முடிந்ததும் 10-வன் யார் என்கிற, அபேக்ஷாபுத்தி (அறிய ஆசை) தீவ்ரமாயிருக்கிறதே. "நீ தான் பத்தாவன்" என்று காட்டிய தும் அபேக்ஷை பூர்ணமாகி, வேகமாக, நான் என்று தன் ஸ்வரூபத்தைப் பற்றிய ஸ்வ

ஸ்ரீபாஷ்யம் :—

உயதி। ஜ்ஞாதாயஷ்டூதிவஹதிரூவவ்ய யூாநவ்ய வாக்யாயஷ்

கயதி ! ஜ்ஞாதார்த்தஸ்ம்ருதிலந்தநிரூபஸ்ய த்யாநஸ்ய வாக்யார்த்த

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

சொல்ல வொண்ணுது. அப்படிக்காணுல் த்யானம் வாக்யார்த்த ஜ்ஞாநத்தைக் குறித்து உபாயமாகமாட்டாது. ஒருபொருளின் விஷயமான த்யானம் வேறொரு பொருளில் ப்ராவண்யத்தை யுண்டுபண்ண மாட்டாதல்லவா ? அறியப்பட்ட விஷயத்தை இடைவிடாமல் தொடர்ச்சி

சுதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

படி இது குடம் என்று சொன்ன பொழுது குடத்தைப் பார்ப்பவனுக்கு அபரோக்ஷ ஜ்ஞானமானது கண் என்கிற இந்த்ரியத்தால் ஏற்படுகிறதே யொழிய இது படம் என்கிற வாக்யத்தால் ஏற்படுகிற தில்லையோ. வாக்யமோ அபரோக்ஷ ஜ்ஞானத்திற்குக் காரணமான கண்ணின் வ்யாபாரத்திற்குக் காரணம் மட்டும் ஆகுமோ. அப்படியே பத்தாவது நீயாவாய் என்கிற வாக்யம் பத்தாவது நான் என்கிற அறிவுக்குக் காரணமான முன் வாஸனையோடு கூடிய அபேக்ஷிக்கப்படும் பத்தாவது வஸ்துவின் அறிதலுக்கு ஹேது வாகுமே யல்லாது அபரோக்ஷமான அனுபவத்திற்கு ஹேதுவாகாது. அந்தந்தப் பொருள் காணப்படுவதற்குவேண்டிய ஸாமக்ரியை முன்னிட்டுக் கொண்டு வரும் உபதேஸ வாக்யம் அதற்கு வேண்டிய ஸாமக்ரியாக மாட்டாது. "விவாதத்திலுள்ள ப்ரத்யக்ஷ ஜ்ஞானம் வாக்யத்தால் பிறப்பதல்ல-ப்ரத்யக்ஷ ஜ்ஞானமான படியாலே. 'நீ பத்தாவது' என்கிற வாக்யத்தைக் கேட்காதவனுக்கு ‡ 'பத்தாவது நான்' என்று உண்டாகும் அறிவைப் போல." "விவாதத்திலுள்ள வாக்யம் ப்ரத்யக்ஷமான அறிவை யுண்டு பண்ணுவ

அரும்பதம்:—

யம் ப்ரகாஸ ஜ்ஞானமும் 10-வன் என்ற ஸாப்த ஜ்ஞானமும் சேர்ந்து உண்டாவ தில் இரண்டையும் சாதாரணமாகப் பகுத்துப் பிரிக்கிற தில்லை.

‡ அவர்கள் சொல்லும் அனுமானத்திற்கு எதிர்த்தட்டாக இது ஓர் ப்ரத்யனுமானம். ஆனல் இது அவர்கள் அனுமானத்தைப் போலப் பழுதாகாது. அவர்கள் சொன்ன த்ருஷ்டாந்தம் நாம் ஒப்புக் கொள்ளாதது. அது அஸித்தம். இந்த த்ருஷ்டாந்தம் எல்லோரும் ஒப்புக் கொள்ளுவது. தாங்களாகச் சிறிது நேரம் திண்டாடி விட்டு, தன்னை விட்டு எண்ணினேமே என்பதைத் தானுகவே தெரிந்து கொண்டு, தான் 10-வன் என்று அறியும் போது அந்த ஜ்ஞானம் ஸாப்தத்தால் உண்டானதாகச் சொல்ல இடமில்லையே, அது தானுக உண்டான அபரோக்ஷ மென்றுதானே சொல்ல வேண்டும். இந்த த்ருஷ்டாந்தத்தை அவர்கள் ஆக்ஷேபிக்க முடியாது.

ஸ்ரீபாஷ்யம் :—

ஜ்ஞானவ தேவுகூவேஜுநீயே । யெயஷ்ரவ்விஷயஜ்ஞானஸ்ய ஹே

ஜ்ஞானபூர்வகத்வமவர்ஜநீயம் ! த்யேயப்ரஹ்மவிஷயஜ்ஞாநஸ்ய ஹே

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

யாய் நிஜைந்துகொண்டேயிருப்பது என்கிற த்யானம் வாக்யார்த்த ஜ்ஞா னத்தை முன்னிட்டுக்கொண்டே வாவேண்டுமேயொழிய வேறு வழியால் வராது. ஏனென்றால்; த்யானம் செய்யப்படவேண்டிய ப்ரஹ்மத்தின் விஷ யமான ஜ்ஞானம்வேத ஸமூஹத்தின் அர்த்தத்தாலல்லது வேறு காரணத்தால்

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

தல்ல—வாக்யமான படியாலே. ப்ரத்யக்ஷமான அறிவை உண்டு பண்ணுகிறதில்லை யென்று ஒப்புக் கொள்ளப் படும் மற்ற வாக்யங்களைப் போல." (இப்படிக்கு இரண்டு அனுமானங்கள்). இப்படி அதி வேகமாக ஜ்ஞானகாரணங்கள் வேலை செய் வதால் பொருளின் உண்மையான தன்மையை நேரில் புலன்களால் அறிந்து தெளிந்து கொள்ளும்படி செய்வதற்கு வாக்யம் ஹேதுவாவதால் வாக்யத்தால் அப ரோக்ஷமான அறிவு ஏற்படுகிறதென்று சொல்ல இயலாது என்று பாஷ்ய தாத்பர் யம். வாக்யத்தால் ஏற்படும் "பத்தாவது நான்" என்கிற அறிவில் அந்த ஜ்ஞானத் திற்கு விஶேஷ்யமான 'நான்' என்னும் பொருள் ப்ரத்யக்ஷமாய் இருக்கும் காரணத்தி னால் மட்டும் அதோடு விஶிஷ்டமான மொத்த அறிவில் உள்ளடங்கிய விஶேஷணம் ஸமூஹத்திற்கும் ப்ரத்யக்ஷத்வம் ஏற்படுவதாகக் கூறி சொல்லக் கூடாது. நான் என் னும் பொருளோடு சேர்ந்து அனுபவத்திற்கு வருகிற எல்லாவற்றிற்கும் அபரோக்ஷத் தன்மை யுண்டென்கிற நியமமில்லை. ஸுகமும் துக்கமும் இப்பொழுது வருவதனால் முன்பு செய்திருந்ததாக அனுமிக்கப் படும் நல்வினை தீவினைகளை யுடைய புருஷ னுக்கு "நான் புண்யம் செய்தவன்" "நான் பாபம் செய்தவன்" என்கிற அறிவு உண்டாகும் பொழுது 'நான்' என்பதோடு கூட அனுபவிக்கப் படும் புண்யத்திற்கும் பாபத்திற்கும் ப்ரத்யக்ஷத்வம் கிடையாதே. * ஒரு தர்மத்திற்கு ஆஶ்ரயமான தர்மீ ப்ரத்யக்ஷமாவதால் மட்டும் அதோடு சேர்ந்துள்ள தர்மமும் ப்ரத்யக்ஷமாக வேண்டு மென்றால், மலையில் நெருப்பு உண்டு என்று புகை கண்ணுக்குத் தெரிவதால் அனுமிக் கப்படும் நெருப்புக்கும் ப்ரத்யக்ஷத்வம் வரத்தெரியும். இதெல்லாம் "ஸ்வவிஷய

அநுபதம்:—

* புண்யம், பாபம் இரண்டும் அத்ருஷ்டம். அவை ஈஶ்வராணுடைய ப்ரீதி, கோ பங்கள். ஈஶ்வரனே புலன்களுக்கு எட்டாதவன். அவனுடைய திருவுள்ளங்கள் நம் அறிவிற்கு எட்டாதவையே. ஸுகதுக்க பலன்களைக் கொண்டு நாம் புண்ய பாபங்களைச் செய்திருப்பதை ஊஹிக்க வேண்டும் அவை ப்ரத்யக்ஷமல்ல.

ஸ்ரீபாஷ்யம்:—

கூஞ்ஞாவாஸம்ஹவாஜ் । நச யூ்ஞாநநிமித்தம் ஜ்ஞாநம் வாக்யாந்தராஜந்யம்,

த்வந்தராஸம்பவாத் । நச த்யானமூலம் ஜ்ஞாநம் வாக்யாந்தராஜந்யம்,

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

ஸம்பவியாது. த்யானத்திற்குக் காரணமான ஜ்ஞானம் வேறுவாக்யத்தால் உண்

சீநதப்பாகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

நியமாதிக்ரமேண ததயோகாத் ' என்கிற பாஷ்ய வாக்யத்திற்கு அபிப்ராயம். * இப்படிக்கு ஸ்ப்தத்திற்கு அபரோக்ஷமான ஜ்ஞானத்தை யுண்டு பண்ண ஸாமர்த்யம் இல்லை யென்று தூஷிக்கப் பட்டது. இதற்கு மேல் ஒரு வாக்யத்தின் (அதாவது 'தத்த்வமஸி' என்னும் மஹா வாக்யத்தின்) பொருளை அறிவதற்கு த்யானம் உபாயமாகும் என்று சொல்லுவதை அந்யோந்யாஸ்ரய தோஷத்தைக் கொண்டு தூஷிக்கிறார் —"நச" என்று தொடங்கி. அந்யோந்யாஸ்ரய தோஷத்தைப்பரிஹரிப்பதற்காக த்யானம் தொடங்குவதற்கு முன்னிருந்த ஜ்ஞானம் வேறொன்றைப் பற்றியது, பின்னுலுண்டாகும் ஜ்ஞானம் வேறொன்றைப் பற்றியது என்று இரண்டுக்கும் விஷயம் வேறு என்று சொல்லுவது அயுக்தம் ‡ என்று கூறுகிறார்—"நச த்யான" என்று. ஏனென்று கேழ்க்கக் கூறுகிறார்— "அப்படியானால்" என்று. ஏன் உபாயமாகாது என்று கேழ்க்கக் கூறுகிறார்—"நஹ்யந்ய த்யாநம்" என்று. இரண்டிற்கும்

அநுபதம்:—

* அத்தத்த ப்ரமாணம் அதற்கு ஏற்பட்ட எல்லையைத் தாண்ட முடியாது.

‡ 'தத்த்வமஸி' என்கிற வாக்யத்தைக் கேட்டு அதன் பொருளைத் தெரிந்து கொண்டவுடனே ஸம்ஸார பந்தம் போக வில்லையே என்று கேட்டால், ஒரு தடவை கேட்டது போதாது; கேட்டதைப் பல தடவை ஒபாஸ்ருத்தி செய்து கொண்டு வந்தால் அந்த த்யான பலத்தால் ஒரு கால விசேஷத்தில் அந்த வாக்யத்தின் பொருள் திடீரென்று நெஞ்சில் அநுபவத்திற்கு வந்து, உடனே பந்தம் தொலையும் என்கிறார்கள். இதில் அந்யோந்யாஸ்ரய தோஷம் உண்டு. 'த்யானம்' என்பது என்ன? ஐக்யவாக்யத்தின் பொருளைத் திரும்பவும் திரும்பவும் இடைவிடாமல் நினைப்பது தானே: வாக்யத்தின் பொருளை அறிந்து தானே அதை த்யானம் செய்ய வேண்டும். த்யானத்திற்கு முன்பே வாக்யத்தின் பொருள் தெரிய வேண்டும், வாக்யத்தின் பொருளை நன்முய் உணர த்யானம் வேண்டும் என்று இப்படி அந்யோந்யாஸ்ரய தோஷம் வரும். முதலில் அறியப்படும் வாக்யப்பொருள் வேறு; பிறகு கடைசியில் பந்தத்தைத் தொலைக்கும் அறிவான வாக்யப் பொருள் வேறு; என்று பரிஹாரம் சொல்ல முடியாது. முன்பும் பின்பும் நினைக்கப்படும் வாக்யம் 'தத்த்வமஸி' என்கிற ஒரே வாக்யந்தானே: எத்தனை தடவை ஆவர்த்தி செய்தாலும் அந்த வாக்யத்திற்கு விஷயம் ஒன்று தானே

ஸ்ரீபாஷ்யம்:—

நிவர்தகஜ்ஞாநம் தத்த்வமஸ்யாதிவாக்யஜந்யமிதியுக்தம் ! த்யாநமூல
மிதம் வாக்யாந்தரஜந்யம் ஜ்ஞாநம் தத்த்வமஸ்யாதிவாக்யஜந்யஜ்ஞாநேநைக
விஷயம், பிந்நவிஷயம் வா ! ஏகவிஷயத்வே ததேவேதரேதராஸ்ரய

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

டாகிறதென்றும் பந்தத்தைப் போக்கடிக்கும் ஜ்ஞானம் 'தத் த்வமஸி' முதலிய மஹாவாக்யங்களால் உண்டாகிறதென்றும் சொல்லுவது யுக்தமல்ல. வேறு ஸ்ருதி வாக்யத்தால் உண்டாகிற ஜ்ஞானம் த்யானத்திற்குக் காரணமாகும் என்று நீங்கள் சொல்லும் ஞானம் 'தத் த்வமஸி' முதலிய மஹா வாக்யத்தால் ஏற்படும் ஜ்ஞானத்தோடு ஒரே விஷயமானதா அல்லது வேறு விஷயமானதா?

ச்ருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

விஷயம் ஒன்றே யானாலும் ப்ரபஞ்சப்ரமத்தை மூடிவாகத் தொலைக்கும் வாக்யார்த்த ஜ்ஞானத்திற்கு த்யானத்தின் அபேக்ஷை யிருக்கலாம். த்யானத்திற்கு வாக்யார்த்த ஜ்ஞானத்தின் அபேக்ஷை யுண்டென்று எப்படிச்சொல்லலாம் என்று கேள்க்கக் கூறுகிறார்— "அர்த்தம் தெரிந்த" என்று. த்யானத்திற்குக் காரணமான ஜ்ஞானம் வேறொரு காரணத்தால் ஏற்படுவது. பின்னால் உண்டாகப் போகிற வாக்ய ஜந்ய ஜ்ஞானத்தால் அது ஏற்படுவதல்ல என்று இப்படி த்யானத்திற்கும் வாக்யார்த்த ஜ்ஞானத்திற்கும் காரணங்கள் வெவ்வேறாயிருப்பதால் அந்யோந்யாஸ்ரய தோஷம் பரிஹரிக்கப் பட்டதாகும் என்று பூர்வபக்ஷி சொல்லக்கூடியதை ஸங்கித்து இரண்டிற்கும் காரணம் வேறு வேறு என்று சொல்ல இயலாதென்கிறார்—"நியேய" என்று. "ஹேயத்வந்தராஸம்பவாத்" என்கிற பாஷ்ய பதத்திற்கு ப்ரஹ்மம் ப்ரத்யக்ஷம் மூகிலிய ப்ரமாணங்களுக்கு விஷயமாகாததால் என்று பொருள். அதைப் பரிஹரிப்பதற்காக இரண்டுவாக்யமும் வெவ்வேறு என்று சொல்லுவார்களோ வென்று ஸங்கித்து அப்படிச் சொல்லுவது அயுக்தம் என்று கூறுகிறார்— "ந ச" என்று. விகல்பித்து தூஷிக்கிறார்—"த்யான ஸமம்" என்று. "இரண்டிற்கும் விஷயம் ஒன்றேயென்றால் முன் சொன்ன அந்யோந்யாஸ்ரய தோஷமே என்று". வேறு வாக்யத்தால் ஜ்ஞானம் உத்பத்தியாகுமென்றால் அதுவும் 'தத்த்வமஸி' வாக்யத்தால் உண்டாகும் ஜ்ஞானத்திற்கு ஸத்ருஸமான விஷய முள்ளதாயிருக்கவேண்டியதால் அந்த ஜ்ஞானத்திற்கும் த்யானத்தின் அபேக்ஷை வேண்டும், த்யானத்திற்கும் வாக்யார்த்த ஜ்ஞானத்தின் அபேக்ஷை வேண்டும் என்று இப்படி ஒன்றை யொன்று ஆஸ்ரயிக்கும் தோஷம் வருமென்று தாத்பர்யம். இரண்டு வாக்யங்களுக்கும் விஷயம்

ஸ்ரீபாஷ்யம் :—

கூழி । ஹிஜவிஷ்யகே யூாநேந கதள நூவ்யாவாஹநாவம்ஹவ: ।
கிம் வ, யூாநஹ்ய யெயயூாத்ராஹ்யநேகவ்ய வம்ஹாவெகூஷகூாஞ்ஷ்ய வ
ஹ்ரு வ்ராஹெத்தகூவிஷயவாகூாயஜ்ஞாநொ தத்தள ஹ்ரூஷ்டஆரொண
நொவயொம ஹதி வாகூாயஜ்ஞாநஸாத்ராஹவிஹ்ராநிவ்ருத்திம் வதத:
ஸ்ரவணமநநிதித்யாஸநவிதீநாமாநர்த்தக்யமேவ யதோ வாக்யாதா

த்வம் ! பிந்நவிஷயத்வே த்யாநேந தத்தளங்முக்யாபாதநாஸம்பவ: !
கிம் ச, த்யாநய த்யேயஸ்த்யாத்ராத்யநேகப்ரபஞ்சாபேக்ஷத்வாந்நிஷ்ப்ரப
ஞ்சப்ரஹ்மாத்மைகத்வவிஷயவாக்யார்த்தஜ்ஞாநோத்பத்தௌ த்ருஷ்டத்வா
ரேண நோபயோக இதி வாக்யார்த்தஜ்ஞாநமாத்ராதவித்யாநிவ்ருத்திம் வதத:
ஸ்ரவணமநநிதித்யாஸனவிதீநாமாநர்த்தக்யமேவ யதோ வாக்பாதா

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

என்று உங்களைக் கேட்போம். ஒரே விஷயமென்றால் அன்யோன்யாச்ரய தோஷம். இரண்டும் வெவ்வேறு விஷயமென்றால், த்யானத்தினால் மஹா வாக்யத்தின் ஜ்ஞானம் ஸரஸமாய் நெஞ்சிற் படும்படி செய்யும் என்பது அஸம்பாவிதம். மேலும், த்யானம் என்பது த்யானம் செய்யப்படும் பொருள். த்யானம் செய்பவன் முதலிய அனேக பேதங்களை அபேக்ஷித்திருப்பதால், ப்ரபஞ்சம் நீங்கி ப்ரஹ்மமும் ஆத்மாவும் ஒன்று என்னும் ஐக்யத்தை விஷயீகரிக்கும் வாக்யார்த்த ஜ்ஞானம் உண்டாவதில் த்ருஷ்டமான வழியாக உபயோகப்படக்கூடியதல்லவாகையால் வாக்யார்த்த ஜ்ஞானத்தினால் மட்டும் அவித்யை அடியோடு நிவ்ருத்தியாகும் என்று சொல்லுகிறவருக்கு ச்ரவணம், மனனம், நிதித்யாஸனம் இவைகளை விதிக்கும் சாஸ்த்ரம்

ச்ரீருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

வேறு என்று சொல்லும் சுருதியிலுள்ள தூஷணத்தைக் கூறுகிறார்— "வேறு" என்று. த்யாநம் என்பது வாக்யார்த்த ஜ்ஞானத்திற்கு விரோதியே யாகும் என்று கூறுகிறார்— "மேலும்" என்று. "த்யாநம் செய்கிறவன் முதலிய" என்கிற பாஷ்ய பதத்தில், 'முதலிய' என்கிற பதத்திற்கு சாந்தி முதலிய குணங்கள் என்று பொருள். (த்ருஷ்ட முறையாக) அத்ருஷ்ட வழியாக உபயோகப்படுவதை அத்வைதிகள் இதனால் தொலைக்கப் பட வேண்டிய ப்ரபஞ்ச மென்கிற பேத வாஸனை ஸத்யம் என்று ஏற்பட்டு விடுமோ வென்று பயந்து விட்டு விட்டார்கள் என்று த்யாந நியோகவாதியின் அபிப்ராயம். கேவலம் வாக்யார்த்த ஜ்ஞானத்தால் மட்டும் அஜ்ஞானம் தொலையும் என்பதை நிரஸித்ததால் ஜீவன்முக்தி பென்று அவர்கள் சொல்லுவதும் நிரஸிக்கப் பட்ட தாகும் என்று கூறுகிறார்— "யாது கார

ஸ்ரீபாஷ்யம் :—

வரோக்ஷ ஜ்ஞாநாஸம்பவாத்வாக்யார்த்தஜ்ஞாநேநாவித்யா நிவர்த்
தே, யத ஏவ ஜீவந்முக்திரபி தூரோத்ஸாரிதா । கா யெயம் ஜீவ
ந்முக்திः । ஸஶரீரஸ்யைவ மோக்ஷ இதி சேத், மாதா மே வந்த்யேதி
வதஸங்கதார்த்தம் வசः, யதஸ்ஸஶரீரத்வம் பந்தः, அசரீரத்வமேவமோக்ஷ
இதி த்வயைவ ஸ்ருதிபிருபபாதிதம் ! அத ஸஶரீரத்வப்ரதி

ஸ்ரீ பாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

கள் வீணேயாகும். இப்படி ப்ரத்யக்ஷஞானம் வாக்யத்திலிருந்து உண்டா
வது அஸம்பாவிதமாகையால் வாக்யார்த்த ஞானத்தினால் அவித்யை நிவ்ருத்
திக்கமாட்டாது என்கிற காரணத்தினாலேயே ஜீவன்முக்தி யென்பதும் வெகு
தூரம் தள்ளுபட்டு ஓடிப்போம். நீங்கள் சொல்லும் ஜீவன்முக்தி யென்பது
என்ன ? ஸரீரத்தோடு இருப்பவனுக்கே மோக்ஷம் அதுவாகும் என்பீரோ,
என் தாயார் மலடி என்பதைப்போல் உம்முடைய பேச்சு அஸங்கதமாகும்.
எனென்றால்; ஸரீரத்தோடு கூடியிருப்பது பந்தமென்றும், ஸரீரமில்லாம
லிருப்பதே தோஷமென்றும் உம்மாலேயே ஸ்ருதிகளைக்கொண்டு உபபாதிக்
கப்பட்டிருக்கிறது. ஸரீரத்தோடு இருப்பதாகத் தோன்றிக்கொண்டே

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

ணம் பற்றி" என்று. "வெகுதூரம் வெரட்டப் பட்டது" என்கிற பாஷ்ய பதத்
திற்கு வாக்யத்தினால் அபரோக்ஷ ஜ்ஞானம் ஒருக்கால் ஏற்படுமானாலும் அதைப்
போன்ற பரஸ்பர விரோதத்தினால் ஜீவன்முக்தி நிரஸ்தமாகும். வாக்யத்திலிருந்து
அபரோக்ஷ ஜ்ஞானம் பிறப்பது ஸம்பவிக்காதாகையால் வெகு தூரம் தள்ளி விடப்
பட்டதாகும் என்று தாத்பர்யம். "இது என்ன" என்று. இம் என்கிற வாக்ய
ஸ்பத்திற்கு பரிஹாஸமான நிந்தையில் தாத்பர்யம். அல்லது ஒரு விகல்பத்தில்
அபிப்ராயம் கொண்டு கேள்வியாகவும் கொள்ளலாம். இந்த ஜீவன்முக்தியின் ஸ்வ
ரூபம் எப்படி யென்று ஸங்கித்துக் கேழ்க்கிறார்—"ஸரீரத்தோடு" என்று. ஒன்
றுக் கொன்று விரோத மிருப்பதைக் காட்டுகிறார்—"என் தாயார்" என்று. விரோ
தத்தை உபபாதிக்கிறார்—"யத:" என்று. இந்த விரோதத்தைப் பரிஹரிப்பதற்
காக அவர்கள் சொல்லக் கூடியதை ஸங்கிக்கிறார்—"அத" என்று. ஸரீரத்தோடு

ஸ்ரீபாஷ்யம்:—

ஹாஹெ வத³ஸாதே⁴ யஷ்யாயம் ப்ரதிஹாஹோ மியேதி ப்ரதயஃ, தஸ்ய ஸஶரீரத்வநிவ்ருத்திரிதி। ந மியேதி ப்ரதயெந ஸஶரீரத்வம் நிவ்ருத்தம் ஹெது கரணம் ஸஶரீரத்வநிமி³த்தத்வாத், ஸஜீவதோபி முக்திஸ்ஸஶரீரத்வமித்யாப்ரதிபாஸநிவ்ருத்திரேவெதி கோயம் ஜீவந்முக்தி

பாஸே வர்த்தமாநே யஸ்யாயம் ப்ரதிபாஸோ மித்யேதி ப்ரத்யயः, தஸ்ய ஸஶரீரத்வநிவ்ருத்திரிதி! ந மித்யேதி ப்ரத்யயே ஸஶரீரத்வம் நிவ்ருத்தம் ஹேத்வாதி³கம் ஸஶரீரஸ்ய முக்திः, அஜீவதோபி முக்திஸ்ஸஶரீரத்வமித்யாப்ரதிபாஸநிவ்ருத்திரேவேதி கோயம் ஜீவந்முக்தி

ஸ்ரீ பாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

யிருக்கையில் அப்படித் தோன்றுவது பொய் யென்கிற எண்ணம் எவனுக்கு உண்டாகிறதோ அவனுக்கு ஸஶரீரத்வம் போய்விட்டதென்று சொல்லுகிறேமென்றால்; அது கூடாது. பொய் யென்கிற எண்ணத்தினால் ஸஶரீரத்வமே போய்விடுகிறதென்றால் ஶரீரமிருப்பவனுக்கு முக்தி யென்பது எப்படிக் கூடும்? உயிரில்லாதவனுக்குக்கூட ஶரீரம் இருப்பதென்கிற பொய்த் தோற்றத்தின் நிவ்ருத்தியே முக்தியாகுமாதலால் உயிரோடிருப்பவனுக்கு முக்தியென்று ஜீவன்முக்தி சொல்லுவதில் என்ன விசேஷம்? ஶரீரத்தோ

சீநுதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

இருக்கும் நிலைமை போகும் என்று சொல்வதற்கு ஸஶரீரத்வத்தின் வேறாகுதல் போம் என்று ஜீவன்முக்தி வாதியின் அபிப்ராயம். அதை தூஷிக்கிறார்—"இல்லை" என்று, ஶரீரம் ஸத்ய மென்று அவர்கள் ஒப்புக் கொள்ளாததால் அது அழிந்து போய்த் தொலைத்தது என்று அவர்கள் சொல்லுவதில்லை. ஆகையால் அதன் தோற்றம் தொலையு மென்றுவது அதன் தோற்றம் உண்மை என்கிற அபிமானம் தொலையு மென்றுவது அவர்கள் சொல்ல வேணும் என்று அபிப்ராயப் பட்டு முதல் பக்ஷத்தை விவரித்துக் கூறி அதனால் அவர்களுக்கு இஷ்டம் ஸித்திக்காது என்று தூஷிக்கிறார்—"அப்பா!" என்று. "ஸஶரீரத்வம்" என்கிற பாஷ்யத்தில் பதத்திற்ஶரீர மிருப்பது போல் தோற்றம் என்று பொருள். ஏனென்றால் அடுத்த வாக்யத்தில் தோற்றம் என்கிற ஶப்தத்தையே ப்ரயோகிக்கிறார்—"ஶரீரமுள்ளவனுக்கு முக்தி எப்படிக் கூடும்" என்று. ஶரீரமுள்ளவனுக்கு முக்தி எப்படிச் சொல்லக் கூடும் என்று பொருள். அதையே உபபாதிக்கிறார்—'உயிரில்லாதவனுக்கு" என்று "மித்யாப்ரதிபாஸம்" என்கிற பாஷ்ய ஶப்தத்திற்கு ப்ராந்திஜ்ஞானம் என்று தாத்பர்யம். உயிரோடிருப்பவனுக்கும், இல்லாதவனுக்கும் முக்திகளுக்கு பேத மில்லாததால் ஶரீரமுள்ளவனுக்கு முக்தி யுண்டு என்று சொல்ல இயலாது என்று தாத்பர்யம். இரண்டாவது பக்ஷத்

ஸ்ரீபாஷ்யம் :—

ரிதி விமோஷ: । அத ஸஶரீரத்வப்ரதிபாஸோ வாயிதோஷி
யஸ்ய ஶ்வம்ஜ்ஞாநவந்நவதுதே, ஸ ஜீவந்முக்த இதி சேத்,
ந । ப்ரஹ்மவ்யதிரிக்தஸகலவஸ்துவிஷயத்வாத் பாதகஜ்ஞாநஸ்ய
காரணஸ்தாவித்யாகர்மாதிதோஷஸ்ஸஶரீரத்வப்ரதிபாஸோ ஸஹ

ரிதி விமோஷ:! அத ஸஶரீரத்வப்ரதிபாஸோ பாதிதோபி
யஸ்ய த்விசந்த்ரஜ்ஞாநவதநுவர்த்ததே, ஸ ஜீவந்முக்த இதி சேத்,
ந! ப்ரஹ்மவ்யதிரிக்தஸகலவஸ்துவிஷயத்வாத் பாதகஜ்ஞாநஸ்ய
காரணஸ்தாவித்யாகர்மாதிதோஷஸ்ஸஶரீரத்வப்ரதிபாஸோ ஸஹ

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

டிருப்பதாகத் தோற்றம் பாதிக்கப்பட்டுப்போனலும் இரட்டைச் சந்திரன் என்கிற ப்ரமஜ்ஞானம்போல் யாருக்குப் பின்பும் தொடர்ந்து வருகிறதோ அவன் ஜீவன்முக்தனுவான் என்று நீங்கள் சொன்னல் அதுவும் ஸரியல்ல. ஏனென்றல்; மஹா வாக்யத்தாலுண்டாகும் பாதகஜ்ஞானம் ப்ரஹ்மம் தவிர மற்றெல்ல வஸ்துக்களையும் பாதித்து விடவேண்டும். (ப்ரமமான தோற்றத்திற்கு) காரணமான அவித்யை, கர்மம் முதலிய தோஷம் ஸரீரத்தின் தோற்றத்தோடு கூட அந்த பாதகஜ்ஞானத்தாலேயே பாதிக்கப்பட்டு விடுவதால்

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

தை ஸங்கிக்கிறார்—"அத" என்று. இங்கே முன்பு பாஷ்யத்தில் ஸரீரமிருப்பதின் தோற்றம் இருக்கையில் என்று தொடங்கிய க்ரந்தத்தின் தாத்பர்யம் பாஷ்யகாரரால் விவரித்ததாகிறது. தூஷிக்கிறார்—"இல்லை" என்று. ஏனென்று கேள்க்கக் கூறுகிறார்—"ப்ரஹ்மம்" என்று. "அவித்யா கர்மாதி" என்கிற பாஷ்ய பதத்தில் ஆதி பதத்தால் வாஸனை யென்பது க்ரஹிக்கப் படுகிறது. அதனலேயே பாதிக்கப்படும் என்கிற பாஷ்ய பதங்களுக்கு பாதக ஜ்ஞானத்தால் பாதிக்கப் படும் என்று பொருள். இரட்டைச் சந்திரன் தோற்றம் முதலியதில் ஸாதிக்கபடுவதற்கும் மறுபடியும் தோற்றம் என்கிற பாதிதாநுவ்ருத்தி காணப்படுகிறதே என்று எதிரி சொல்லுவதை ஸங்கித்து பதில் கூறுகிறார்—"இரட்டைச் சந்திரன் முதலிய விடத்தில்" என்று. ரஜ்ஜு என்னும் பழுதைக்கயிறு கயிறே தான் என்று உண்மை தெரிவதால் சிப்பியில் வெள்ளி யென்கிற ப்ராந்தி தொலையாதே யென்று தாத்பர்யம். முதல் ஸூத்ரத்தில் 'பாதிதாநுவ்ருத்தி' என்னும் கருத்தை நிராகரிக்கும் பொழுது தோஷம் வாஸ்தவமான படியால் அது ஜ்ஞானத்தால் பாதிக்கப் படமாட்டாதாகையால் ப்ராந்தி அனுவர்த்திக்கிறது என்று கூறப்பட்டது. இங்கோ வென்றல், சந்த்ரன் ஒன்றே யென்கிற பாதக ஜ்ஞானத்திற்கு கண்ணிலுள்ள தோஷம் விஷயமாகாததால் அது பாதிக்கப் படாததால் சந்த்ரனிரண்டு என்கிற ப்ராந்தி

ஸ்ரீபாஷ்யம் :—

தெதெவ வாயித உதி வாயிதாநுவ்ருத்திநு ஸுயதெ வதுஸுழி।

தேஸைவ பாதித இதி பாதிதாநுவ்ருத்திர்ந ஸுக்யதே வக்தும் !

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

பாதிக்கப்பட்டதற்கும் பின் தொடர்ச்சி என்கிற பாதிதாநுவ்ருத்தி சொல்லக்கூடியதல்ல. சந்திரன் இரண்டு என்கிற ப்ராந்தி ஜ்ஞானத்தில் அந்தத்

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

ஜ்ஞானம் தொடர்ந்துவருகிறது என்று கூறப்படுகிறது என்று பேதம். பழைய மாயாவாதியும் எல்லாம் மித்யை பென்பதைச் சொல்லுவதால் இப்படி பேதம் கூறப்பட்டது. ¶ ஜீவன்முக்தி பென்பதற்கு ஸ்ருதியின் விரோதத்தைக் காட்டுகிறார்—

அநுபதம்—

¶ பழைய மாயாவாதி என்பவர் இங்கே த்யானநிஷ்டாவாதி. அவர் தேஹமும் தொலையும்போதுதான் ஸம்ஸாரம்தொலையும் என்கிறார். தத்த்வமஸி வாக்யத்தின் பொருளின் ஜ்ஞானம் வந்ததும் முக்தி வருவதாக அவர் சொல்லுகிறதில்லை. அவர் மதப்படி வாக்யார்த்த ஜ்ஞானம் வந்தபிறகு அதை தேஹத்தின் முடிவுவரை த்யானம் செய்து கொண்டே யிருக்க வேண்டும். த்யானவிதிக்ய யனுஸரித்து த்யானம் செய்வதனால் தேஹத்தை விடும்பொழுது ஓர் அத்ருஷ்ட முண்டாகி அதுபர்யந்தம் ஐக்யவாக்கியத்தை ஆவ்ருத்தி செய்ததால் உண்டாகும் ஐக்யஜ்ஞானம் அந்த அத்ருஷ்ட பலத்தினால் ஐக்ய ஸாக்ஷாத்காரமாக ஏற்படுகிறது. அந்த ஸாக்ஷாத்காரம் வந்ததும் ப்ரபஞ்சம் பாதிக்கப் பட்டுத் தொலைகிறது. முதல் ஸூத்ரத்தில் ஸ்ரீபாஷ்ய காரர் பாதிதத்திற்கு அநுவ்ருத்தி கூடாதென்று தூஷித்த ப்ரகாரம் வேறு; இங்கே அதையே பழைய மாயாவாதி தூஷிக்கும் ப்ரகாரம் வேறு. கண்ணிலுள்ள தோஷ தோஷத்தால் சந்திரன் இரண்டென்று கலக்கம் உண்டாகும். சந்திரன் ஒருவனே இரட்டையல்ல என்று நம்பிக்கையுள்ள ஆப்தர் சொன்னலும் சந்திரன் இரண்டு என்கிற கலக்கம் போக வில்லையே என்று அத்வைதிகள் தங்களுக்கு அநுகூலமாக காட்டும் த்ருஷ்டாந்தம். கண்ணிலுள்ள தோஷம் ஸத்யமாகையால் இந்த தோஷம் உள்ளளவும் இரட்டைச் சந்திரன் என்கிற பொய்த் தோற்றம் அநுவர்த்திக்கலாம்; உங்களுக்கு ப்ரபஞ்சம் பொய்யாயிற்றே; அது எப்படித் தொலையாமல் நிற்கலாம் என்று நாம் முன்பே தூஷித்தோம். ப்ரபஞ்சம் பொய்யென்று இந்த வாதியும் சொல்லுவதால் இது விஷயத்தில் நம்மைப் போல் இவர் தூஷிக்கமுடியவில்லை. கண்தோஷம் ஸத்யமானதால் என்று இவர் பேசமுடிய வில்லை. ஆகையால் இவர் வேறு விதமாக தூஷிக்கிறார். அதெப்படி ?— ''சந்திரன் இரண்டு'' என்று ப்ராந்தியான தோற்றம். அந்தப் பொய்த் தோற்றத்திற்கு மூல காரணம் கண்ணிலுள்ள வ்யாதி அந்த வ்யாதி

ஸ்ரீபாஷ்யம் :—

[illegible]

த்விசந்த்ராதேள தது தத்ப்ரதிபாஸஹேதுபூதகதோஷஸ்ய பாதக ஜ்ஞாநபூதசந்த்ரைகத்வஜ்ஞாநாவிஷயத்வேநாபாதிதத்வாத் த்விசந்த்ரப்ரதி பாஸாநுவ்ருத்திர்யுக்தா ! கிஞ்ச, * தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே அத ஸம்பத்ஸ்யே இதி ஸத்வித்யா நிஷ்டஸ்ய ஸரீரபாதமாத்ர மபேக்ஷதே மோக்ஷ இதி வதந்தீயம் ஸ்ருதிः ஜீவந்முக்திம் வாரயதி ! ஸைஷா ஜீவந்முக்திராபஸ்தம்பேநாபி நிரஸ்தா * வேதாநிமம் லோக

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

தோற்றத்திற்குக் காரணமான கண்ணின் காசகாமாலாதி தோஷம் சந்த்ரன் ஒருவனே என்கிற பாதக ஜ்ஞானத்திற்கு விஷயமாகாததால் அதனால் பாதிக்கப்படுகிறதில்லையாதலால் சந்திரன் இரண்டு என்கிற ப்ராந்தியான தோற்றம் அநுவர்த்திப்பதென்பது யுக்தமாகும். மேலும், "ஸத்வித்யா நிஷ்டனுக்கு ப்ரஹ்மஸம்பத்தி வருவதற்கு ஸரீரத்திலிருந்து விடுதலையாவது மட்டும்தான் தாமதம்" என்கிற ஸ்ருதி அவனுக்கு மோக்ஷம் கிடைப்பதற்கு ஸரீரம் கீழேவிழ வேண்டியதொன்றுதான் அபேக்ஷை யென்று சொல்லுகிற இந்த ஸ்ருதி ஜீவன்முக்தி பக்ஷத்தை அடியோடு தள்ளிவிடுகிறது. நீங்கள்

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

"மேலும்" என்று ஸ்ம்ருதி விரோதத்தைக் கூறுகிறார்—"இந்த ஜீவன்முக்தி" என்று. ஆபஸ்தம்பஸூத்ரவசனத்தில் வேதங்களே யென்கிற ஸப்தத்திற்கு தர்மார்த்த காமங்களுக்கு ஸாதனமான வைதிக கர்மங்களே யென்று பொருள். அவற்றின் பலத்தை ஆபஸ்தம்ப ஸூத்ரத்தில் சொல்லுகிறார்— "இந்த லோகத்

அநுபதம் :—

தோஷம் பின்பு ஆப்தர்கள் சந்திரன் ஒன்றே என்று சொல்லும் வாக்யத்தால் ஏற்படும் ஞானத்திற்கு விஷயமாவதில்லை. பின்புள்ள ஸரியான ஜ்ஞானத்தில் விஷயமாகாததை அதனால் பாதிக்க முடியாது.

ஸ்ரீபாஷ்யம் :—

ऽऽ-ஊ வரிதஞ்ஜ்யாத்தாநஸிஹ்ஹெஷு। வ-ஒ கேஷ்ஒவ்ராவணம் தவ்ரா ஹ

'மமுஞ்ச பரித்யஜ்யாத்மாநமந்விச்சேத்! புத்தே கேஷமப்ராபணம் தச்சா

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

சொல்லும் ஜீவன்முக்தி; ஆபஸ்தம்பராலும் பின்வருமாறு நிரூபிக்கப்பட்டது "வேதங்களையும் இந்த லோகத்தையும் அந்தப் பரலோகத்தையும் தள்ளி விட்டு ஆத்மாவை மட்டும் தேடவேண்டும். ஜ்ஞானம் வந்தவுடனே முக்தி

ஸ்ரீருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

தையும் அந்த லோகத்தையும்" என்று. "புத்தே" என்னும் அந்த ஸூத்ர பதத்திற்கு வாக்யார்த்த ஜ்ஞானம் பிறந்தவுடன் என்று அர்த்தம். "கேஷமப்ராபணம்" என்கிற பதத்திற்கு மோக்ஷம் என்று அர்த்தம். "அந்த ஸாஸ்த்ரங்களுக்கு விருத்தம்" என்கிற ஆபஸ்தம்பர் வாக்யத்தில் ஸாஸ்த்ரங்களோடு என்கிற பன்மைக்கு வாக்யார்த்த ஜ்ஞானத்திற்குப் பிறகு உபாஸனத்தை விதிக்கும் வேதாந்த வாக்யங்களோடும், "ஆயுஷ் காலம் முழுவதும் அவன் இப்படியே ஆவ்ருத்தி செய்து கொண்டு" என்று பரமபத ப்ரயாணம் வரையில் உபாஸனத்தின் அனுவ்ருத்தியைச் சொல்லும் ஸாஸ்த்ரங்களோடும், மோக்ஷம் இந்த ஸரீரம் விழுந்து விடுவதை மட்டும் அபேக்ஷித்திருக்கும் என்பதைச் சொல்லும் வாக்யங்களோடும் "அந்த ஸுஷும்ணா நாடியால் மேலே கிளம்புகிறவன் அம்ருதத்வத்தை யடைகிறான்" என்று ஒரு குறிப்பிட்ட நாடி வழியாக வெளிக் கிளம்ப வேண்டியதைச் சொல்லும் ஸாஸ்த்ரங்களோடும், அர்ச்சிராதி மார்க்கத்தால் ஒரு குறிப்பிட்ட தேஸத்தை யடைவதைச் சொல்லும் வாக்யங்களோடும் இப்படி அநேக ஸாஸ்த்ரங்களோடு விரோதம் வருமென்று பொருள். § "விப்ரதிஷித்தம்" என்கிற ஸூத்ரபதத்திற்கு விரோஷமாய்

அநுபதம்:—

§ இங்கே பாஷ்யத்தில் ஜீவன்முக்திக்கு ஸ்ருதி விரோதமும் ப்ரத்யக்ஷ விரோதமும் உண்டென்று காட்டுவது போல் ஆபஸ்தம்பர் முதலில் அநேக ஸ்ருதிகளுக்கு விருத்தம் என்பதைக் கூறிப் பிறகு ப்ரத்யக்ஷத்திற்கு விருத்தமென்றும் கூறுகிறார். 'விப்ரதிஷேதம்' ஸமமான பலத்தை யுடைய ப்ரமாணங்களுக்குள் விரோதத்தைச் சொல்லும். இங்கே சில ஸ்ருதிகள் ஜீவன் முக்தியையும் பல ஸ்ருதிகள் ஜீவன் முக்தி இல்லை யென்பதையும் சொல்லுகிறபடியால் அநேக ஸ்ருதிகளை யனுஸரித்து அதற்கு விரோத மன்னியில் ஜீவன் முக்தியைச் சொல்லும் சில ஸ்ருதிகளுக்குப் பொருள் கொள்ளவேண்டுமென்பதைக் காட்ட ஆபஸ்தம்பர் ஸூத்ரத்தில் 'ஸாஸ்த்ரங்களோடு விரோதிப்பதால்' என்று பன்மையினால் காட்டப்பட்டது. வாக்யத்தின் பொருளே யறிந்த பிறகும் அதைமனனமும் த்யானமும் செய்ய வேண்டுமென்றும், தேஹம் விழும் வரையில், ஆயுள் முழுவதும் அதை இடைவிடா

ஸ்ரீபாஷ்யம்:—

ஹெவீஉ திஷிஜழி। ஊஜெ வெஸ கூஷிஉ ராவ்ணிஹெவ ந
ஊஃவிஷவமஹெத। ஹதெந வரம வ்யாவ்யாதிதி। சுநெந ஜாந

ஸ்த்ரைர்விப்ரதிஷித்தம்! புத்தே சேத் கூஷமப்ராபணமிஹைவ ந
துக்கமுபலபேத! ஏதேன பரம் வ்யாக்யாதமிதி! அநேந ஜ்ஞாந

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

யென்னும் கூஷமம் ஸித்திக்குமென்பர் சிலர்— அது அனேக வேத ஸாஸ்த்ரங்களோடு விரோதிக்கும். ஜ்ஞானம் வந்தவுடனே மோகூஷம் வந்துவிடுவதாலல், இங்கேயே துக்கத்தின் அனுபவம் நமக்கு இல்லாதிருக்கவேண்டுமே.

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

ப்ரதிஷேதிக்கப் பட்டது. ஸமான பலங்களான ப்ரமாணங்களால் தகையப் படுகிற தென்பதல்ல. ஆனல் ப்ரபலமான ப்ரமாணங்களால் அடிக்கப் படும். ப்ராபல்யம் என்பது அநேகம் சேர்ந்தால் பலம் அதிகம் என்கிற ந்யாயத்தினல் என்று தாத்பர்யம். ப்ரத்யகூ விரோதத்தையும், ஆபஸ்தம்ப மஹரிஷியின் ஸூத்ர மென்கிற ஸ்ம்ருதியே கூறுவதைக் காட்டுகிறார்—"ஜ்ஞானம் வந்த பொழது" என்று. இதனல் மற்றதும் வ்யாக்யானம் செய்யப் பட்டதாகும் என்கிற ஆபஸ்தம்ப வாக்யத்தில் "இந்தப்படி ஸாஸ்த்ரங்களுக்கும் ப்ரத்யகூங்களுக்கும் (ஜீவன்முக்தி யென்பது) விருத்தமாயிருப்பதால்" ஔடுலோமி மதத்தை யனுஸரித்துச் சொல்லப்பட்ட மற்றதும் அடியோடு தள்ளப்பட்டதாகும் என்று பொருள். அல்லது எப்படி இங்கே துக்கத்தின் அனுபவமிருக்கிறதோ அப்படியே மூக்தியிலும் துக்கானுபவம் வரும் என்று அர்த்தம் கொள்ளலாம். அல்லது எப்படி துக்க நிவ்ருத்தி காணப்படுவதில்லையோ அப்படியே ஸுகத்தின் நிவ்ருத்தியும் காணப்படுவதில்லை யென்று அர்த்தம் கொள்ளலாம். ஜீவன்முக்தியை நிரஸிப்பதற்காக உதாஹரிக்கப் பட்ட ஆபஸ்தம்ப வசனத்தால் வாக்யார்த்த ஞானத்தால் மட்டும் மோகூஷம் ஸித்திக்கும் என்கிற பகூமும் நிரஸிக்கப் பட்டதாகும் என்று கூறுகிறார்—"இதனல்" என்று. ஜீவன்முக்தியின் நிரஸனத்தை முடிவு செய்கிறார்—"ஆகையால்" என்று. ஜீவன்முக்தியை நிராஸம் செய்வதால் தன் மதம் ஸ்திரமாக ஸித்திக்கும் என்பதைக் கூறுகிறார்—"ஆகையால்" என்று. வாக்யார்த்த ஜ்ஞானத்தால் மட்டும் மோகூஷம் ஸித்திக்கும் என்று

அரும்பதம்:—

மல் த்யானம் செய்ய வேண்டுமென்றும், ஞானம் வந்த பிறகும் மோகூஷம் கிடைக்க ஸரீரம் விழும் வரையில் தாமத முண்டென்றும், ப்ரஹ்மகாடி வழியாய் வெளிப் பட்டால்தான் மோகூஷம் கிடைக்கு மென்றும், அர்ச்சிராதி மார்கத்தால்தான் மோகூஷம் கிடைக்குமென்றும் அநேக ஸ்ருதிகள் ஜீவன்முக்தி பகூத்திற்கு விருத்தம்.

ஸ்ரீபாஷ்யம் :—

சாத்ரான்மோக்ஷஸ்ய நிரஸ்தஃ। கதஸ்கலஹேதுநிவ்ருத்திரூபா சாக்ஷிஜீவ தோ ந ஸம்பவதி, தஸ்மாத்ஜ்ஞாநநியோகேந ப்ரஹ்மாபரோக்ஷஜ்ஞாநஸ லேநைவ பந்தநிவ்ருத்திஃ। ந ச நியோகஸாத்யத்வே மோக்ஷஸ்யாநித்ய த்வப்ரஸக்திஃ—ப்ரதிபந்தநிவ்ருத்திமாத்ரஸ்யைவ ஸாத்யத்வாத்। கிஞ்ச,

மாத்ராந்மோக்ஷஸ்ய நிரஸ்தஃ! அதஸ்கலஹேதுநிவ்ருத்திரூபா முக்திர்ஜீவ தோ ந ஸம்பவதி, தஸ்மாத் த்யாநநியோகேந ப்ரஹ்மாபரோக்ஷஜ்ஞாநஸ லேநைவ பந்தநிவ்ருத்திஃ! ந ச நியோகஸாத்யத்வே மோக்ஷஸ்யாநித்ய த்வப்ரஸக்திஃ—ப்ரதிபந்தநிவ்ருத்திமாத்ரஸ்யைவ ஸாத்யத்வாத்! கிஞ்ச

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

இதனால் அவர்கள் சொல்லும் மற்ற பக்ஷங்களும் நிரஸ்தமாகும்" என்று தர்மஸூத்ரத்தில் ஆபஸ்தம்பர் வார்த்தை. இதனால் ஞானத்தினால் மட்டும் உடனே மோக்ஷம் கிடைத்துவிடுகிறதென்கிற பக்ஷம் நிரஸ்தமாகிவிடும். ஆகையால் எல்லா பேதங்களும் நீங்கிப்போவதென்று நீங்கள் சொல்லும் யுக்தி உயிரோடிருப்பவனுக்கு ஸம்பவிக்கமாட்டாது. ஆகையால் ப்ரஹ்மத் தின் ஸாக்ஷாத்கார ரூபமான ஞானத்தை பலமாகவுடைய த்யான நியோகத் தினால்தான் பந்தம் தொலையும், நியோகத்தினால் மோக்ஷம் ஸாதிக்கப்படுகிற தென்று சொன்னால், மோக்ஷத்திற்கு அநித்யத்வம் வரமாட்டாது. ஏனென் றால்; ப்ரதிபந்தத்தின் அழிவு மட்டும் தானே ஸாதிக்கப்படுகிறதென்று சொல்லுகிறோம். மேலும், நியோகத்தினால் ஸாக்ஷாத்தாக பந்தம் தொலைக்

சீருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

சொல்லும் வாதியால் கூறப்பட்ட ஆக்ஷேப பரிஹாரம் எமக்கும் உள்ளதுதான் என்று கூறுகிறார்—"ந ச நியோக" என்று. ப்ரபஞ்சம் 'நியோக' மென்னும் விதியினால் (அத்ருஷ்டத்தால்) தொலையு மென்றால் ப்ரபஞ்சம் உண்மையாக ஆகுமே என்று ஸங் கித்துக் கூறுகிறார்—"மேலும்" என்று. த்யாநநியோக பக்ஷத்திற்கு வரும் அநுப பத்தியைப் பரிஹரிப்பதில் நோக்காகையால் "மேலும்" என்கிற ஸப்தம் ப்ரயோகிக் கப் பட்டது. நியோகத்திற்கு ப்ரபஞ்சத்தைத் தொலைக்கும் ஸக்தி, ஜ்ஞான மூலமாக ஏற்படுவதால் தொலைக்கப்படும் ப்ரபஞ்சம் ஸத்யமாகாது என்று தாத்பர்யம். †

அநுபதம்—

† இந்த வாதிக்கும் அத்வைதிக்குப் போல ப்ரபஞ்சம் பொய்யானதால் அது ஐக்ய ஸாக்ஷாத்காரத்தால் தொலையக் கூடியதே.

ஸ்ரீபாஷ்யம் :—

ந நியொமெந ஸாக்ஷாஸ் ஸாஸ்த்ரவ்ருத்திஃ க்ரியதெ, கிந்து நிஷ்ப்ரபஞ்ச ஜ்ஞாநைகரஸப்ரஹ்மாபரோக்ஷ்யஜ்ஞாநெந! நியொகஸ்து ததாபரோ க்ஷ்யஜ்ஞாநம் ஜநயதி! கதம் நியொகஸ்ய ஜ்ஞாநொத்பத்திஹெதுத்வமிதி செத் கதம் வா பவதொঽநிஸம்ஹிதபலாநாம் கர்மணாம் வெதநொத்பத்தி

ந நியோகேந ஸாக்ஷாத் பந்தநிவ்ருத்திः க்ரியதே, கிந்து நிஷ்ப்ரபஞ்ச ஜ்ஞாநைகரஸப்ரஹ்மாபரோக்ஷ்யஜ்ஞாநேந! நியோகஸ்து ததாபரோ க்ஷ்யஜ்ஞாநம் ஜநயதி! கதம் நியோகஸ்ய ஜ்ஞாநோத்பத்திஹேதுத்வமிதி சேத் கதம் வா பவதோঽநபிஸம்ஹிதபலாநாம் கர்மணாம் வேதநோத்பத்தி

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

கப்படுகிறதென்று நாங்கள் சொல்லவில்லை, ப்ரபஞ்சமற்றுப்போய் கேவலம் ஞானமொன்றையே ரஸமாகவுடைய ப்ரஹ்மத்தின் ஸாக்ஷாத்கார ஞானத்தி னால்தானே ப்ரதிபந்தம் தொலைகிறதென்கிறோம். நியோகமோ வென்றால் அந்தப்ரஹ்மத்தின் அபரோக்ஷமான ஞானத்தை உண்டுபண்ணுகிறது. எப்படி நியோகம் அந்த ஞானத்தை யுண்டுபண்ணக் காரணமாகும் என்று நீங்கள் கேள்ப்பீர்களேயானால், பலத்தை யுத்தேசிக்காத கர்மங்களின் அனுஷ் டானம் ப்ரஹ்மஞானம் உத்பந்நமாவதற்குக் காரணமாகும் என்று நீங்கள்

ச்ருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

நியோகம் ஜ்ஞானத்தை யுண்டு பண்ணும் விஷயத்தில் எப்படி உபகரிக்கிறது என்று தெரிய விருப்பத்தினால் கேட்கிறார்—"எப்படி" என்று. ஜ்ஞானம் ஏற்படுவதில் த்ருஷ்டமான முறையால் நியோகத்தினால் யாதொரு உபகாரமும் ஸம்பவிக்க மாட் டாது அதனால் எப்படி உபகாரம் என்பதற்கு பதில் சொல்லித் தீரவேண்டும் என்று தாத்பர்யம். ஒரு பதில் கேள்வியால் பரிஹாரம் செய்கிறார்—"கதம்வா" என்று. "வேதநோத்பத்திஹேதுத்வம்" என்கிற பாஷ்ய பதத்திற்கு இச்சையின் மூலமாக அறிவை யுண்டு பண்ணுவதற்குக் காரணமாகுதல் என்று பொருள். "அறிய விரும்பு கிறார்கள்" என்கிற ச்ருதிவாக்யமல்லவோ உதாஹரிக்கப்படப் போகிறது. *

அநுபதம் :—

* "ப்ரயோஜனத்தை அபேக்ஷிக்காத வேதாநுவசநத்தாலும், யக்ஞத்தாலும், தாநத்தாலும், தபஸினாலும், ப்ரஹ்மத்தை அறிய விரும்புகிறார்கள்" என்று ச்ருதி. யக்ஞம் முதலிய ஸாதனங்கள் அறிவதற்கு ஆசையுண்டாவதைக் குறித்து ஸாதனமே யல்லாத அறிவிற்கு ஸாதன மல்ல வென்று அத்வைதிகள் கூறி. அத்ருஷ்ட ஶக்தி யால் மனதை சுத்தப் படுத்தி யக்ஞம் முதலியதை மனதில் ப்ரஹ்மத்தை யறிய

ஶ்ரீபாஷ்யம் :—

ஹேதுத்வம் மதோ நைர்மல்யத்வாரேணேதி சேத் மமாபி ததைவ! மம து நிர்மலே மநஸி ஶாஸ்த்ரேண ஜ்ஞாநமுத்பாத்யதே! தவ து நியோ கேந மநஸி நிர்மலே ஜ்ஞாநஸாமக்ரீ வக்தவ்யேதி சேத், த்யாநநியோக

ஶ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

எப்படிச் சொல்லுகிறீர்கள் என்று நாம் கேட்போம். மனதை மலமறக் கழுவி நிர்மலமாக்குவதன் மூலமாய் என்று நீங்கள் பதில் சொன்னால் அப் படியேதான் எங்களுக்கும் என்று சொல்லுகிறோம். "நிர்மலமாகச் செய்யப் பட்ட மனதில் ஶாஸ்திரத்தினால் ஞானம் உண்டுபண்ணப்படுகிறது என்று எங்கள் கொள்கை, உங்களுக்கோவென்றால் நியோகத்தினால் மனது நிர்மல மான பிறகு ப்ரஹ்மஞானம் உண்டாவதற்கு ஸாமக்ரியை நீங்கள் புதிதாகச் சொல்லவேணும்" என்று நீங்கள் சொல்வீர்களேயானால், த்யானநியோ

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

பரிஹாரத்தை ஸங்கிக்கிறார்—"மனஸ—" என்று. அது இருவருக்கும் ஸமம் என் பதைக் கூறுகிறார்—"எனக்கும்" என்று. மறுபடியும் ஸங்கிக்கிறார்—"எனக்கோ வென்றால்" என்று. மனதோ பொதுவான காரணம். அது இருந்த போதிலும் அஸாதாரணமான ஒரு காரணத்தின் அபேக்ஷையுண்டு. அது எனக்கு இருக்கிறது. உமக்கு அந்தக் காரணம் எது என்று நீர் சொல்ல வேணும் என்று நீர் கேட்டால் என்று அர்த்தம். வைஶேஷிகர் முதலிய வாதிகள் ஒப்புக்கொள்ளும் மானஸ ப்ரத்ய க்ஷத்தில் போலவும் மிகவும் உத்தமமான அத்ருஷ்டத்தோடு சேர்ந்த மனதை மட் டும் காரணமாக வுடைய "அதை யெல்லாம் தர்ம வீர்யத்தால் உள்ளது உள்ளபடி நீ நன்றாய்ப் பார்ப்பாய்" * முதலிய வசனங்களால் ஸித்திக்கும் யோகி ப்ரத்யக்ஷத்

அநுபதம் :—

ஆசையை யுண்டுபண்ணும் என்கிறார்கள். அது போலவே த்யான விதியை அனுஷ் டிப்பதால் உண்டாகும் அத்ருஷ்ட ஶக்தியால் மனது நிர்மலமாகி ஐக்யத்தின் ஸாக்ஷாத் காரம் உண்டாகலா மென்று இந்த வாதியின் கக்ஷி. இந்த ஸ்ருதியில் "விவிதிஷந்தி" என்பதற்கு அறிய விரும்புகிறார்கள் என்று பொருள்.

* இது ராமாயணத்தில் வால்மீகிக்கு ப்ரஹ்மா யோகி ப்ரத்யக்ஷத்தை அனுக்ர ஹித்த ஸ்லோகம்.

ஸ்ரீபாஷ்யம்:—

நிர்மலம் மந ஏவ ஸாதனமிதி ப்ரூம: । கேநாவகம்யத இதி சேத் பவதோ வா கர்மபிர்மநோ நிர்மலம் பவதி, நிர்மலே மநஸி ச்ரவண மநநநிதித்யாஸைஸ்ஸகலேதரவிஷயவிமுகஸ்யைவ ஸாஸ்த்ரம் நிவ

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

கத்தால் நிர்மலமாகச் செய்யப்பட்ட மனது ப்ரஹ்ம ஞானத்தை யுண்டுபண் ணுவதற்கு ஸாதனம் என்று நாங்கள் பதில் கூறுவோம். இது எங்கே யிருந்து தெரிகிறது என்று எங்களைக்கேட்டால் "கர்மங்களால் மனது நிர் மலமாகிறது, நிர்மலமான மனதில் ச்ரவணம், மநநம், நிதித்யாஸநம் இவைக ளால் மற்ற எல்லா விஷயங்களையும் கண்ணெடுத்து பார்க்காதவனுக்கு ஸாஸ்

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

தில் போலவும் மனதே அஸாதாரண காரணமாகும் என்று பரிஹரிக்கிறார்—"தத்யா நம்" என்று. வெறும் மனது மட்டும் ஸாதாரண காரணமானாலும் மிகவும் நிர்மல மான ஒரு உயர்ந்த மனது அஸாதாரண காரணமாவது யுக்தம் என்று தாத்பர்யம். இது எந்த ப்ரமாணத்தால் ஏற்படுகிறது என்று கேட்கிறார்—"எதனால்" என்று. இதை யறிவிக்கும் ப்ரமாணத்தின் ஸ்வாரஸ்யம் தன் பக்ஷத்தில் அதிகம் என்கிற வைஷம்யத்தைக் காட்டுவதற்காக ப்ரஸ்நம் பண்ணுகிறார்—"உமக்குத் தான் எப் படி" என்று. விரும்பி த்யானம் செய்வதால் விஷயங்களிலிருந்து விரக்தமான மனதை யுடையவனுக்கு ஸாஸ்த்ரத்தினால் த்வைதத்தைத் தொலைக்கும் ஞானம் உண் டாகும் விஷயத்தில் ப்ரமாண மென்று எதிரி நினைக்கும் ச்ருதி வாக்யங்களை எடுத்து ஸங்கிக்கிறார்—"அறிய விரும்புகிறார்கள்" என்று தொடங்கி. "ப்ரஹ்மத்தை யறிகி றான், ப்ரஹ்மமாகவே யாகிறான்" என்கிற ச்ருதி வாக்யத்தில் அறிகிறான் என்கிற ஸப்தத்திற்கு வாக்யார்த்த ஞானத்தில் தாத்பர்யம் என்று எதிரியான அத்வைதியின் அபிப்ராயம். மனஸு ஞானத்திற்கு ஸாதனம் என்பதற்கு ப்ரமாணத்தைக் காட்டு கிறார்—"எனக்கும்" என்று. "கண்ணுல்,க்ரஹிக்கப்படவில்லை" என்று தொடங்கிய ச்ருதி வாக்கியம் "மனதே ஸாதனம்" என்று ஸ்வரஸமாகத் தெரிவிக்கிறது. "ப்ரஹ் மத்தை யறிகிறான்" என்று தொடங்கிய ச்ருதி வாக்யத்தில் அறிவைச் சொல்லும் வேதந ஸப்தமானது வாக்யார்த்த ஞானத்தைச் சொல்லுவதாக ஸ்வரஸமாக ஏற்படாது. வேறு ச்ருதிகளோடு சேர்ந்து ஒரே அர்த்தமாகப் பொருள்கொள்ளு வதாலும் வாக்யார்த்த ஞானத்தைச் சொல்லுவதாக ஏற்படாது. ஏனென்றால் வாக் யார்த்த ஞானம் மோக்ஷோபாயம் என்று ஸ்பஷ்டமாகச் சொல்லும் வேறு ச்ருதி யில்லாமையால் என்று அபிப்ராயம். ப்ரபஞ்சம் பொய் என்று சொல்லும் கச்யபின்

ஸ்ரீபாஷ்யம்:—

தமேதமாத்மானம் வேதானுவசனேன ப்ராஹ்மணா விவிதிஷந்தி யஜ்ஞேன தா
நேன தபஸாநாஶகேன * ஏதமேவ விதித்வா முனிர்ப்ராஹ்மணோ நிர்வேதமாயாத்யேவ
ர்த்தகஜ்ஞாநமுத்பாதயதீதி கோவகம்யதே * விவிதிஷந்தி யஜ்ஞேந தா
நேந தபஸாநாஶகேந * ஸ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய: *

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

த்ரம் ப்ரபஞ்ச நிவர்த்தகமான ஞானத்தை யுண்டுபண்ணுகிறதென்று எந்த ப்ரமாணத்தால் தெரிகிறதென்று நாம் உங்களைக் கேட்போம். "ஆசையற்ற யஞ்யத்தாலும், ஆசையற்ற தானத்தாலும், ஆசையற்ற தபஸாலும், ப்ரஹ்மத்தை யறிய விரும்புகிறார்கள்," "கேட்கப்படவேண்டும், மநநம் செய்யப்

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

பேரில் வரும் எல்லா ஆக்ஷேபங்களும் அதற்குச் சொல்லும் பரிஹாரங்களும் இவ்விரண்டு வாதிகளுக்கும் ‡ ஏகரூபம். பரோக்ஷமான, (ப்ரத்யக்ஷ மல்லாததும் காதினால் கேட்பதுமான) ஞானம் ப்ரத்யக்ஷமான ப்ரமத்தை (ப்ரஹ்மத்தியை) ப்போக்கும் ஶக்தி யுடைய தென்று ஒப்புக் கொள்வதும், * ஶாஸ்த்ரத்திற்கும் ப்ரத்யக்ஷத்திற்கும் விரோதம் வருவதும் ¶ ஶ்ருதியின் ஸ்வாரஸ்யம் குறைவதும் § உங்கள்பக்ஷத்தில் அதிகமான தூஷணம் என்று இவ்விரண்டு பக்ஷங்களுக்குள் வைஷம்யத்தைக் காட்டுவதற்காக அது எப்படி

அரும்பதம்:—

‡ அத்வைதிக்கும், ஞான நியோகவாதிக்கும்.

* ப்ரஹ்மமே நீ என்று கேட்டவுடன் ஒன்றே என்கிற ஞாக்ஷாத்காரம் வருவதில்லை. ப்ரபஞ்சத்தின் தோற்றம் ப்ரத்யக்ஷம். பழுதை பாம்பாகத் தோன்றுவது கிட்ட நெருங்கி நேரில் பழுதை யென்ற காக்ஷியால்தான் போகும். ஒருவர் சொல்லுவதைக் கேட்டுமட்டும் போகாது. அத்வைதிகள் கக்ஷியில் உள்ள இந்த அஸ்வாரஸ்யம் ஞான நியோகவாதி மதத்தில் இல்லை.

¶ ப்ரஹ்மமே நீ என்று கேட்டதும் ஜீவன்முக்தனாகி விடுவதாக ஶாஸ்த்ரம் சொல்லுவதாக அத்வைதிகள் கக்ஷி. அது ப்ரத்யக்ஷத்திற்கு நேர் விரோதமாயிருப்பதால் அவர்கள் மதப்படி ஶாஸ்த்ரத்திற்கும் ப்ரத்யக்ஷத்திற்கும் விரோதமாகிறது.

§ 'ப்ரஹ்மத்தை யறிகிறான்' என்னும் ஶ்ருதியில் அறிவை ஸாக்ஷாத்காரம் என்று கொள்ளுவது ஸ்வரஸம். கேள்வி ஞானத்தை மட்டும் பொருளாகக் கொள்ளக் கூடாது. இப்படி ஶ்ருதி ஸ்வாரஸ்யமும் அவர்களுக்கு குறைவு.

ஶ்ரீபாஷ்யம் :—

ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதீத்யாதிபிஶ்ஶாஸ்த்ரைரிதி சேத், மமாபி * ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய: * ப்ரஹ்மவிதாப்நோதி பரம் ந சக்ஷுஷா க்ருஹ்யதே நாபி வாசா * மநஸா து விஶுத்தேந * ஹ்ருதாமநீஷா மநஸாபிக்லுப்த இத்யாதிபிஶ்ஶாஸ்த்ரைர்த்யாந நியோகேந மநோ நிர்மலம் பவதி, நிர்மலஞ்ச மநோ ப்ரஹ்மாபரோக்ஷஜ்ஞாநம் ஜநய

ஶ்ரீ பாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

படவேண்டும், விரும்பி த்யானம் செய்யப்படவேண்டும்," "ப்ரஹ்மத்தை யறிகிறான், ப்ரஹ்மமே யாகிறான்" முதலிய ஶாஸ்த்ரங்களால் உங்கள் கொள்கை யேற்படுகிறது என்று நீங்கள் சொன்னால், "கேட்கப்படவேண்டும், மநநம் செய்யப்படவேண்டும், விரும்பி த்யானம் செய்யப்படவேண்டும்," "ப்ரஹ்மத்தை யுபாஸிப்பவன் எல்லாவற்றிற்கும் மேற்பட்டதை யடைகிறான்," "கண்ணால் க்ரஹிக்கப்படுகிறதில்லை, வாக்கிற்கும் எட்டுகிறதில்லை, விஶுத்தமான மனஸினாலோ வென்றால் அது க்ரஹிக்கப்படும், மநதை வஶப்படுத்தின புத்தியால் அறியப்படும்." முதலிய ஶாஸ்த்ரங்களால் த்யாந நியோகத்தால் மநம் நிர்மலமாகுமென்றும், நிர்மலமான மனது ப்ரஹ்மத்தின்

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

அது எப்படி என்று பதில் கேள்வி கேட்கிற வழியாய் அந்தந்த ஶங்கைகளைப் பரிஹரித்தார். பாஷ்யத்தில் "இதி" என்கிற பதம் ஒரு வாக்யத்தோடு மட்டும் ஒட்டுவதல்ல. த்யாநநியோகவாதி முதல் முதல் இது வரையிலும் சொல்லிவந்த ப்ரகரண மூழுவதோடும் அதை ஒட்டிக் கொள்ளவேணும். ப்ரஹ்மம் உபாஸிக்கத் தக்கதல்ல என்று நிஷேதத்தைக் காட்டும் ஶ்ருதியைக் கொண்டு ஶங்கிக்கிறார்— "இதுவல்ல" என்று. பரிஹரிக்கிறார்— "அப்படிக்கில்லை" என்று. அந்த ஶ்ருதி வாக்யத்திற்கு இப்படி அர்த்தம் நிர்வஹிப்பது யுக்தமல்ல வென்று பொருள். உபாஸிக்கக் கூடாதென்ற நிஷேதம் காணப் படுகிறதே யென்று கேள்க்கக் கூறுகிறார்—"இங்கே இல்லை" என்று. பின் அதற்கு என்ன அர்த்தம் என்று கேள்க்கக் கூறுகிறார்—"ஆநலோ" என்று. ப்ரஹ்மம் ஜகத்தைக் காட்டிலும் வேறு ரூப முடையது என்பதை இந்த ஶ்ருதி ப்ரதிபாதிப்பதாகச் சொல்லுவது எப்படி என்று கேள்க்கக் கூறுகிறார்—"இதுவாக எதை" என்று. "இதுவாக எதை உபா

ஸ்ரீபாஷ்யம் :—

தீத்யவகம்யத இதி நிரவத்யம் ।* நேதம் யதிதமுபாஸத இத்யுபா
ஸ்யத்வம் ப்ரதிஷித்தமிதி சேத் ! நைவம், நாத்ர ப்ரஹ்மண உபாஸ்ய
த்வம் ப்ரதிஷித்யதே, அபி து ப்ரஹ்மணோ ஜகத்வைரூப்யம் ப்ரதி
பாத்யதே ! யதிதம் ஜகதுபாஸதே ப்ராணிந:, நேதம் ப்ரஹ்ம !
ததேவ ப்ரஹ்மத்வம் வித்தி, யத்வாசாநப்யுதிதம் யேந வாகப்யுத்யத

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

அபரோக்ஷமான ஞானத்தை யுண்டுபண்ணும் என்பது எங்களுக்கு ஹித்திக் கிறபடியால் எங்கள் கொள்கை தோஷமற்றதே. "இது என்று ஜநங்கள் உபாஸிக்கும் இந்த வஸ்து ப்ரஹ்மமல்ல" என்று ப்ரஹ்மத்திற்கு உபாஸ்யத்வம் நிஷேதிக்கப்படுகிறதே யென்று நீங்கள் ஆக்ஷேபித்தால், அந்த ஸ்ருதிக்கு அது பொருளல்லவென்று பதில் சொல்லுவோம். ப்ரஹ்மத்தின் உபாஸநம் இங்கே இந்த ஸ்ருதியில் நிஷேதிக்கப்படவில்லை. ஆனால் ப்ரஹ்மம் ஜகத்தைப்போலல்லாமல் வேற்றுமையுடையது என்பதுதான் இந்த ஸ்ருதியில் தாற்பரியம். ஜநங்கள் இந்த ஜகத்தின் பொருள்களை யுபாஸிக்கிறார்களே ! அந்த இதெல்லாம் ப்ரஹ்மமல்ல. எது வாக்கினால் சொல்லமுடியாதோ, எதனால் வாக்கு சொல்லப்படுகிறதோ, அதையேதான் ப்ரஹ்ம

சீநுதப்ராகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

ஸிக்கிறார்களோ" என்ற ஸ்ருதியில் இதுவாக என்கிற அம்ஸத்தை நிஷேதிப்பதில் அதற்கு தாத்பர்யம் என்று பாவம். "மனதை ப்ரஹ்ம மென்று உபாஸிக்கக் கடவன்" முதலிய ஸ்ருதி வாக்யங்களால் விதிக்கப்படும் ப்ரதீகோபாஸனங்களில் உபாஸ்யங்கள் பரிச்சின்ன விஷயங்களல்லவா? இது ப்ரஹ்மமாகாது. ஆனால் பரிச்சின்னமல்லாத அதுவே பரப்ரஹ்மமாகும் என்று பொருள். இதனால் "அது தெரிந்ததைக் காட்டிலும் வேறு" முதலிய ஸ்ருதி வாக்யமும் ப்ரஹ்மத்தைக் காட்டிலும் ஜகத்தின் ரூபம் வேறுனது என்று வ்யாக்யானம் செய்ததாகிறது "எது வாக்கினால் சொல்லப் படுவதல்லவோ" என்கிற ஸ்ருதிவாக்யத்தில் 'சொல்லப் படாததல்லவோ' என்பதற்கு சொல்லுவதற்கு ஸக்யமல்லாதபடி அபரிச்சின்னம் என்று பொருள். 'அப்படிக் கொள்ளாவிட்டால்' என்கிற பாஷ்ய பதத்தால் அதே ச்ருதி வாக்யத்தில்

ஸ்ரீபாஷ்யம் :—

இதி வாக்யார்த்த: ! அந்யதா தத்தேவ ப்ரஹ்மச்வம் வித்தீதி விருத்யதே, த்யாநவிதிவையர்த்த்யஞ்ச ஸ்யாத் ! அதோ ப்ரஹ்மஸாக்ஷாத்காரபலே நத்யாநநியோகேகைவாபரமார்த்தபூதஸ்ய க்ருத்ஸ்நஸ்ய த்ர ஷ்ட்ருத்ருச்யாதி ப்ரபஞ்சரூபபந்தஸ்ய நிவ்ருத்தி: !!

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

மென்று நீ யறியவேண்டும். இப்படிப் பொருள் கொள்ளாவிட்டால் அதையே ப்ரஹ்மமென்று நீ யறி என்று சொல்லியிருப்பது நிஷேதிக்கும். த்யாநத்தை விதிக்கும் வாக்யங்களும் வ்யர்த்தமாகத் தெரியும். ஆகையால் ப்ரஹ்ம ஸாக்ஷாத் காரத்தை பலமாகவுடைய த்யாநநியோகத்தினால் பார்க்கிறவன், பார்க்கிறது, முதலிய அனேக பேதங்களையுடைய ப்ரபஞ்சம் என்கிற பொய்யான பந்தம் முழுவதும் நிவர்த்திக்கும்.

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

அதையே ப்ரஹ்மமென்று நீ அறி (உபாஸனம் செய்) என்று கூறுவதோடு விரோதம் கூறப்பட்டது. † "த்யானத்தை விதித்திருப்பது வீணாகும்" என்கிற பாஷ்ய பதங்களால் த்யானத்தை விதிக்கும் வேறு வாக்யத்தோடு விரோதம் கூறப்பட்டது. ¶ தன் பக்ஷத்தை முடிவு செய்கிறார்—"ஆகையால்" என்று.

அநுபதம்:—

† "எது வாக்கினால் பேசப்படாததோ, எதனால் வாக்கெல்லாம் பேசப்படுகிறதோ, அதையே ப்ரஹ்மமென்று நீ அறி; இது என்று எதை உபாஸிக்கிறார்களோ அந்த இதை (ப்ரஹ்மமாக) நினையாதே" என்கிற கேநோபநிஷத்து வாக்யம் இங்கே விஷயம். ப்ரஹ்மத்தை அறி என்று ப்ரஹ்ம ஞானத்தை இதே வாக்யத்தில் விதித்திருப்பதால் இந்த வாக்யத்திலேயே உள்ள விரோதத்தை இங்கே கூறப்பட்டது.

¶ ப்ரஹ்மத்தை த்யானம் பண்ண வேண்டுமென்று வேறு ச்ருதிவாக்யங்களோடு உபாஸனம் கூடாதென்ற அத்வைதிகளின் கொள்கைக்கு விரோதத்தை இங்கே காட்டப்படுகிறது.

ஸ்ரீபாஷ்யம்:—

யதபி கைஶ்சித்துக்தம், பேதாபேதயோர் விரோதோ நவித்யத
இதி! ததயுக்தம், ந ஹி ஸ்ரீதோஷ்ணதம: ப்ரகாஶாதிவத்பேதாபேதா
வேகஸ்மிந் வஸ்துநி ஸங்கச்சேதே! அதோச்யேத, ஸர்வம் ஹி வஸ்து ஜாதம்

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

(பேதாபேதவாதத்தை அனுவாதம் செய்து த்யானநியோகவாதி அதை தூஷித்து தன் வாதத்தை முடிக்கிறார்.) பேதாபேதங்களுக்கு பரஸ்பர விரோதம் காண்கிறதில்லை யென்று சிலர் சொல்லுவது யுக்தமல்ல. ஸ்ரீதோஷ்ணங்களைப்போலவும், இருட்டு வெளிச்சங்களைப்போலவும் பேதாபேதங்கள் ஒரு வஸ்துவில் பொருந்தமாட்டாது. பின்னருமாறு நீங்கள்

சந்ரதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

தான் என்று சொல்லுவதேயாலும் அந்த யுக்தி புருஷார்த்தமான பரமாத்மா உண்மையாகவே ப்ரதிபாதிக்கப் படுகிறான் என்பதிலும் தாத்பர்யம். தேஹாத்ம பேதத்தை ஸாதிக்கும் மற்ற ஹேதுக்களும் இதோடு பொருந்துவதால் ப்ரமமூலம் என்கிற நிச்சயமில்லை என்று சொல்லுவதேயாலும் "அந்த பேதத்தை ஸாதிக்கும் வேறு ஹேதுவினாலேயே தேஹாத்மபேதம் ஸித்தமாவதால் அதற்காக வேதாந்த வாக்யங்களின் அபேக்ஷையில்லாததால் கர்மவித்திக்கு மோக்ஷமாக வேதாந்தங்களை அத்யயனம் முதலியது செய்வது ஒட்டாது. இவ்வாறாக ஸாஸ்த்ரங்கள் நிரூபகரான வித்வான்களால் அதிகரிக்கப்படவேண்டியதால் ஒருக்கால் அவை சொல்லும் பொருள் உண்மையாயிருக்கலாமோ வென்கிற ப்ராந்தியினால் புருஷார்த்தமாகலாமென்று சொல்லுவது அநுபபந்நம் ‡ என்கிற ஸித்தாந்தக்கக்ஷியை மூதலிப்பதற்காக ப்ரவ்ருத்தியைச் சொல்லும் வாக்யங்கள் ப்ரதிபந்திகளாகும்" என்கிற அபிப்ராயத்தால் "ஔபநிஷதேவ்யபி" என்று தொடங்கிய பாஷ்ய வாக்யம் ப்ரவ்ருத்தித்தது (பூர்வபக்ஷியால்) சொல்லப்பட்ட ஹேது விபரீதத்தில் முடியும் என்பதை விளக்கிக் கொண்டு அதிகரணத்தின் அர்த்தத்தை முடிக்கிறார்—"ஆதையால்" என்று. காரண வாக்யங்களின் அர்த்தத்தைக் கூறுகிறார்—"நிகில" என்று. நிகில என்கிற பாஷ்ய ஸப்தம் பூர்வபக்ஷிகள் நித்யமென்று நினைக்கும் ஆகாஸம் முதலியதுகளும் கார்யந்தான் என்பதை அறிவிப்பதற்காக. 'ஏக' என்கிற பாஷ்ய ஸப்தம் நிமித்தோபாதாந காரணங்கள் ஒன்றே யென்பதைக் காட்டுவதற்காக. "யதோ வா இமானி" என்கிற வாக்யத்தில் சோதக வாக்யத்தின் அர்த்தமும் உள்ளடங்கியிருக்கிறது என்கிற அபிப்ராயத்தினால்கூறுகிறார். இங்கே நிகில என்கிற பாஷ்ய ஸப்தத்தினால் ஹிதஹித்துக்களில்முறை

அநுபபதம்:—

‡ நீண்ட காலம் குருகுலவாஸம் செய்து வேதங்களையும் அங்கங்களையும் குருமுகமாக ஓதி க்ரஹிக்கப்படும் வேதவித்யை அறிவிக்கும் ஸ்வர்க்காதி பலங்கள் பொய்யாகுமோவென்று ஸங்கிக்கலாகாது என்று மீமாம்ஸகர்கள் கர்மவிதிகளின் ப்ராமாண்யத்தை ஸமர்த்திக்கும் யுக்தி, வேதாந்த வாக்யங்களின் ப்ராமாண்யத்தையும் ஸமர்த்திக்கும்.

ஸ்ரீபாஷ்யம் :—

மஸ்ய வாவஸ்ருʼ வதʼ ஸங்கல்பமாத்ராதʼ ஸமுத்திஷ்ட²ந்தி கல்யாணகுணாகராதி
வயிகாதிʼயாநந்தʼ ப்ரஹ்மாஸ்தீதி போத⁴யதீதி ஸித்தʼ ॥

கந்தம் ஸார்வஜ்ஞ்யஸத்யஸங்கல்பத்வாத்யநந்தகல்யாணகுணகரமந
வதிகாதிʼயாநந்தம் ப்ரஹ்மாஸ்தீதி போதயதீதி ஸித்தம் !!

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு—

போக்குவதாயும், ஸர்வக்ஞத்வம், ஸத்ய ஸங்கல்பத்வம் முதலிய ஸகல கல் யாணகுணக்கடலாயும், எல்லையற்ற நிரதிஸய ஆனந்தமுமான ப்ரஹ்மம் இருக்கிறது என்று அறிவிக்கிறது என்பது ஸித்தம்.

ஸுதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

யே யிருக்கும் க்லேச கர்மாதிகளும், ஜந்மாதிகளும் சொல்லப்படுகின்றன. பந்தம் என்கிற பாஷ்ய பதத்திற்கு "ஒரு காலத்தில் தோஷஸம்பந்தத்திற்குயோக்யனாகலாம்" என்பதை விலக்குவதால் எப்பொழுதும் தோஷப்ராப்யநீசத்வத்தைச் சொல்லுகிறது. ஜகத்காரணத்வத்திற்கு உபயோகியான குணங்களைக் கூறுகிறார்—"ஸார்வக்ஞ்ய" என்று. இந்த அதிகரணத்தால் ஸித்திக்கும் அர்த்தத்தைக் கூறுகிறார்—"அநவ தி க" என்று. (போதயதி) என்று அத்யயனம் செய்விப்பது முதலியது உபபந்ந வதற்காக புருஷார்த்தமாவது அபேக்ஷிக்கப்படுவதாலும் விவேகிகளான பரீக்ஷகர்க ளால் அதிகரிக்கப்பட வேண்டிய சாஸ்த்ரம் அதில் சொல்லப்படும் பொருள்கள் உண்மையில் இல்லை யென்கிற நிச்சயமிருந்தால் புருஷார்த்தமாவது அநுபபந்த மாகையாலும் அது 'வேதத்தின் அத்யாபனம், அத்யயனம்' உபபந்நமாவதற்காக ப்ரவ்ருத்தியைச் சொல்லும் பொருளில் விதிவாக்யங்களைப்போல், § சொல்லும் பொருள் உண்மையில் ப்ராமாண்யத்தை அவச்யம் அங்கீகரிக்க வேண்டியதால்,

---

அநுபதம்:—

§ மீமாம்ஸகருக்குபதில் சொல்லுகிறோம். வேதத்தின் அத்யாபனம் விதிக்கப் பட்டிருப்பது வீண்போகாமலிருப்பதற்காக வேத வாக்யங்கள் அறிவிக்கும் அர்த்தம் ப்ரயோஜநமுடையதாயிருக்க வேண்டும். யாக கர்மங்களே வேத வாக்யங்கள் விதிக் கின்றன. அந்த யாக கர்மங்களுக்கு ப்ரயோஜனமாகச் சொல்லப்பட்ட அந்த யாக விதிகள் ப்ரயோஜந மற்றதாகும். அந்த வேத வாக்யங்களைத் தெரிந்து கொள்வ தற்காக விதிக்கப்படும் அத்யயனமும் அத்யாபனமும் வீணாகும். ஆகையால் அத்யய னமும் அத்யாபனமும் வீண்போகாமலிருப்பதற்காக யாகத்திற்குப் பலமாகச் சொல் லப்படும் ஸ்வர்க்கலோகம் வீண் பொய்யான ஆசை வார்த்தையல்ல. ஸ்வர்க்கம் பொய்யென்ற பாதஜ்ஞானம் உண்டாகிறதில்லை யாகையாலும் வேதஶாஸ்த்ரம் சொல்லுவது உண்மையாயிருக்க வேண்டுமென்கிற நம்பிக்கையாலும் ஸ்வர்க்க பலத்

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

"மூன்கூறியலக்ஷணமுடைய ப்ரஹ்மத்தை 'யதோ வா' இமாநி என்ற ஸ்ருதி வாக்யம் தாத்பர்யத்தோடு ப்ரதி பாதிக்கிறது" என்று அர்த்தம்.

ப்ரஹ்மவிசார ஸாஸ்த்ரத்தின் ஆரம்பத்தை செய்ய ந்யாயமில்லை யென்று ஆக்ஷேபம் வர அதை ஸமர்த்தனம் செய்வதற்காக ஏற்பட்ட சதுஸ்ஸூத்ரி என்கிற இந்த முதல் நான்கு ஸூத்ரங்களும் அத்வைதிகள் பக்ஷத்திற்கு ஒட்டாது. ஏனெனில்; இந்த சாஸ்த்ரத்திற்கு விஷயமும் ப்ரயோஜனமும் அவர்கள் மதத்தில் ஒட்டவ தாதலால். இந்த ஸாஸ்த்ரம் அவர்கள் மதப்படி ஆரம்பிக்கவே கூடாதபோகும் இதை விளக்குவோம்: இந்த சாஸ்த்ரத்திற்கு விஷயம் ப்ரஹ்மமா? அல்லது பேதம் பொய் யென்பதா? அல்லது ஜீவனும் ப்ரஹ்மமும் ஒன்று என்பதா? முதல் கக்ஷி ஒவ்வாது. ஏனெனில்; ப்ரஹ்மம் அறிவுக்கு விஷயமென்று அவர்கள் ஒப்புக்கொள்ளுகிற தில்லை. அறிவுக்கு விஷயமானால் குடம் முதலியதைப் போல ஞானரூபமில்லாமல் ப்ரஹ்மம் ஜடப்பொருளாக வேண்டிவரும் என்று அவர்களே ஆபத்தி கொடுத்திருக்கிறார்கள். உண்மையில் அறிவுக்கு விஷயமாவதில்லை; கேவலம் லோக வ்யவஹாரத்தால் மட்டும் அறிவுக்கு விஷயமாகும் என்று சொல்லுகிறோம் என்றால்; குடம் அறிவுக்கு விஷயமாவது எப்படி வ்யாவஹாரிகமோ அப்படியே ப்ரஹ்மம் அறிவுக்கு விஷயமாவதும் வ்யாவஹாரிகம் என்று நீங்கள் சொல்லுகிற படியால் குடத்தைப் போலவே ப்ரஹ்மமும் ஜடமாகட்டுமே என்று நாங்கள் கொடுக்கும் ஆபத்தியைத் தடுக்க முடியாது. ப்ரஹ்மம் வாஸ்தவமாக அறிவுக்கு விஷயமாகும் தன்மை யென்கிற வேத்யத்வத்தை யுடையதல்ல என்பதை நீங்கள் ஸாதிக்க உபயோகப்படுத்தும் அனுமானத்தில் குடத்தை வ்யதிரேக த்ருஷ்டாந்தமாகச் சொல்லுவது ஒட்டாது. ஏனென்றால்; குடத்தினிடத்தில் உண்மையில் அறிவுக்கு விஷயமாவதில்லை என்பது இல்லை யென்று சொல்ல வொண்ணாது. அதை விளக்குவோம்: அநுபூதி (அறிவுஸ்வரூபமான ப்ரஹ்மம்) வாஸ்தவத்தில் அறியக் கூடும் விஷயமல்ல. தானே அநுபூதியாய் (அறிவாய்) இருப்பதால். எதெது வாஸ்தவத்தில் அறியப்படுவதற்கு விஷயமாகுமோ அதது அநுபூதியாகமாட்டாது. (அறிவு ஸ்வரூபமல்லாத ஜடப் பொருளாகும்.) குடத்தைப் போல இவ்வாறு ப்ரயோகிக்கும் அனுமானத்தில் அநுபூதித் தன்மை யில்லாத குடம் என்கிற வ்யதிரேக த்ருஷ்டாந்தத்தில் நீங்கள் ஸாதிக்க விரும்புகிற ஸாத்யத்தின் இல்லாமை இருக்கமாட்டாமற் போகுமே. குடம் என்பது உங்கள் மதத்தில் வாஸ்தவத்தில் அறிவுக்கு விஷயமாகும் பொருளல்லவே. ப்ரஹ்மம் என்னும் அநுபூதி அறிவிற்கு விஷயமானால் அநுபூதி யல்லாமல் ஜடமாகட்டுமே என்று நாங்கள் கேழ்க்கும் கக்ஷியை ‡ ஆதரிக்காமல் விட்டுவிடுகி

அநுபந்தம்:—

தைச் சொல்லும் யாக விதிவாக்யங்கள் ஸப்ரயோஜனமாகி அந்தக்காரணத்தால் ப்ரமாணமாகும் என்று மீமாம்ஸகர்கள் சொல்லுகிறார்கள். இந்த யுக்தி யெல்லாம் ப்ரஹ்ம ஸ்வரூபத்தைச் சொல்லும் வேதாந்த வாக்யங்களுக்கும் ஸமானம் என்பது ஸித்தாந்தக் கக்ஷி.

‡ இங்கே கக்ஷி என்பது 'தர்க்கம்" அதாவது "நெருப்பில்லை யென்பாயேல் புகையும் இல்லாமற்போம்" என்கிற ஆபத்தி (ப்ரஸங்கம்).

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

மேரும்; அந்தக் கக்ஷியை விட்டுவிட்டு ப்ரஹ்மம் அறிவிற்கு விஷயமாகலாம் என்று அங்கீகாரம் செய்கிறோம் என்று நீங்கள் சொன்னாலும் ப்ரஹ்மம் ஸாஸ்த்ரத்திற்கு விஷயமாவது உங்கள் மதத்தில் ஒட்டாது. ப்ரத்யக்ஷம் யாதொரு தர்மம், ப்ரகாரம், விசேஷம் முதலியதும் இல்லாத கேவலம் ஸத்தை மட்டும் (அதாவது ஸந்மாத்ரத்தை) க்ரஹிச்சும் என்று சொல்லும் உங்கள் மதத்தில் ஸாஸ்த்ரம் வீணாக வேண்டிவரும். ப்ரத்யக்ஷம் முதலிய மற்ற ப்ரமாணங்களால் க்ரஹிக்கப்படாத விஷயங்களிலல்லவோ ஸாஸ்த்ரம் ப்ரயோஜன முள்ளதாகும். பேசம் மித்யை என்பதுதான் சாஸ்த்ரத்திற்கு விஷயம்என்கிற இரண்டாவது கக்ஷியும் ஒவ்வாது. காணப்படுவதெல்லாம் பொய் என்று காணப்படுதல் என்கிற ஹேதுவினாலேயே பேதமெல்லாம் மித்யை என்று மித்யாத்பாதமாநத்தால் ஸாதிக்கிறோமென்று விருதகூறும் உங்கள் மதத்தில் ஸாஸ்த்ரம் வீணேயாகும். புலன்களால் காணப்படும் பொருள்களே நமக்கு க்ரஹணம் செய்விக்கும் ப்ரத்யக்ஷம் முதலிய ப்ரமாணங்களுக்கு விரோதமாகக் காணப்படும் பொருள்கள் பொய்யென்று சொல்லுகிற ப்ரபஞ்ச மித்யாத்வம் என்பதை 'ஸோர்யன்தான் யாகத்தில் பசுவைக்கட்டும் பூபஸ்தம்பம்' என்கிற வேத வாக்யத்தில் எப்படி ஸோர்யனுக்கும் பூபஸ்தம்பத்திற்கும் அவ்விரண்டையும் வேறுவேறுக க்ரஹணம் செய்யும் ப்ரத்யக்ஷத்திற்கு விரோதமாக அபேதமென்கிற ஐக்யத்தை ஸாஸ்த்ரம் ப்ரதிபாதிக்க வல்லதல்லவோ அப்படியே பரத்யக்ஷத்தால் உண்மையென்று ஸித்திக்கும் ப்ரபஞ்சத்தை அந்த மூலப்ரமாணத்திற்கு விரோதமாக பொய்யென்று ஸாஸ்த்ரம் ஸாதிக்க வல்லமையற்றதால் ஸாஸ்த்ரத்திற்கு விஷயமேயில்லை யென்று நிர்விஷயத்வம் † வரும். ப்ராப்தமல்லாத விஷயத்திலல்லவா சாஸ்த்ரம் ப்ரமாணமாகும். ப்ராப்தி யென்பது ப்ரமாணாந்தரங்களால் ஸாதிக்கப்படுவதற்கு விஷயமாவது என்று மட்டுமல்ல; ப்ரமாணாந்தரத்தால் பாதிப்பதற்கும் உட்படாததும் ப்ராப்தம் என்கிற பதத்தில் சேர்த்த பொருளென்றல்லவா அந்த ந்யாயத்தின் நிஷ்கர்ஷம். முன் கூஷணத்தில் பார்த்த தீபத்தின் சுடர் வேறு; இப்பொழுது பார்க்கும் சுடர் வேறு என்கிற சுடர்பேத அநுமாநத்தைப்போல் இது ஆகாது என்று அதற்கும் இந்த விஷயத்திற்கும் உள்ள மூன்று விதமான வைஷம்யம் முன்பே விஸ்தரித்துக் காட்டியிருக்கின்றோம். வேறு ப்ரமாணங்களோடு விரோதிக்காமை ஒரு தாத்பர்ய அடையாளம். ஆகையால் ப்ர

அநுபதம்—

† ப்ரஹ்மம் ஸாஸ்த்ரத்தால் அறியப்படுமென்று சொன்னால், அறியப்படும் குடம் முதலியதைப்போல ப்ரஹ்மமும் பொய்யென்று ஏற்படும். ஆகையால் ப்ரஹ்மம் ஸாஸ்த்ரத்தினால் அறிவிக்கப்படும் விஷயம் என்னும் பேச்சை விட்டுவிட்டு ப்ரபஞ்சம் பொய்யென்பது மட்டும்தான் இந்த வேதாந்த சாஸ்த்ரத்தினால் அறிவிக்கப்படும் விஷயமென்று ஸங்கரபாஷ்யத்தில் இந்த அதிகரணத்தில் கூறப்பட்டது. ப்ரபஞ்சம் பொய்யென்று ஸாஸ்த்ரம் ப்ரத்யக்ஷத்திற்கு விரோதமாக அறிவிக்க ஸமர்த்தமல்ல. ப்ரத்யக்ஷத்தால் ஸாதிக்கப்படும் ஓர் விஷயத்தை ப்ரமாணமாக அறிவிக்க ஸாஸ்த்ரத்திற்கு அதிகாரமில்லை. ப்ரபஞ்சம் பொய்யென்னும் கக்ஷி ப்ரத்யக்ஷத்தால் பாதிக்கப்படுகிறது ஆகையால் ப்ரபஞ்சம் பொய்யென்பது ஸாஸ்த்ரத்திற்கு விஷயம் என்று சொல்ல இயலாது.

சீருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

மாணந்தரத்தோடு விரோதிக்கும் விஷயத்தில் வேதத்திற்கு தாத்பர்யத்தைச் சொல்லுவது கூடாதென்பதும் முன்பே காட்டியிருக்கிறோம். ஆகையால் ப்ரத்யக்ஷ ஸித்தமான பேதம் மித்யையென்பது ஸாஸ்த்ரத்தால் ஏற்படும் விஷயமாகலாம் என்றும் சொல்லும் இரண்டாம் கக்ஷி அயுக்தம். ஜீவனுக்கும் ப்ரஹ்மத்திற்கும் ஐக்யம் ஸாஸ்த்ரத்தால் ப்ரதி பாதிக்கப்படும் விஷயமாகும் என்று சொல்லும் மூன்றாவது கக்ஷியும் ஒட்டாது. அப்படிச்சொன்னால் ப்ரஹ்மத்திற்கு உங்களுக்கு அநிஷ்டமான வேத்யத்வம் வரும். ஸாஸ்த்ரத்தினால் உங்கள் மதப்படி ஜீவப்ரஹ்மங்களுக்கல்லவா ஐக்யம் சொல்லப்படுகிறது. கடத்திற்கும் படத்திற்கும் ஸாஸ்த்ரத்தால் ஐக்யம் உங்கள் மதத்தில் சொல்லப்பட வில்லையே. ஜீவனும் ப்ரஹ்மமும் ஒன்று என்று ஸாஸ்த்ரம் சொல்லும் பொழுது ப்ரஹ்மம் என்கிற ஸப்தத்தினால் ப்ரஹ்மம் என்னும் வஸ்துவை நமக்குத் தெரிவிக்காவிட்டால் அதற்கும் ஜீவனுக்கும் ஐக்யம் எப்படிச் சொல்லக்கூடும்? ஜீவன் ஒருவனேயென்று சொன்னால் ஜீவனுக்கும் ப்ரஹ்மத்திற்கும் ஐக்யம் ஸித்திக்க மாட்டாதல்லவா? கடம் ஒன்று என்று சொன்னால் கடத்திற்கும் படத்திற்கும் எப்படி ஐக்யம் ஸித்தியாதோ அப்படித்தானே இதுவும். ஐக்யத்தை உபதேசிக்கும் "இந்த ஆத்மா ப்ரஹ்மம்" முதலிய ஸ்ருதிவாக்யங்களில் மட்டும் ப்ரஹ்மத்திற்கு ஸப்தத்தினால் அறியப்படும் தன்மையை ஸ்வீகரித்து ஒப்புக்கொள்ள வேண்டியது என்று சொல்லுவீரேயானால், முக்யமாகவே ப்ரஹ்மம் ஸாஸ்த்ரத்தினால் ப்ரதிபாதிக்கக்கூடும் என்று ஏன் நீங்கள் ஒப்புக்கொள்ளலாகாது? நீங்கள் அதை ஒப்புக்கொள்ளாததற்கு பலம் "எல்லா வேதங்களும் எதன் ஸ்வரூபத்தை கூறுகின்றனவோ" என்று தொடங்கி "விஷ்ணுவின் எல்லாவற்றிற்கும் மேற்பட்ட அந்த பதத்தை" முதலிய ஸ்ருதிகளுக்கு அஸ்வாரஸ்யம் ஏற்படுவதுதான். இன்னமும் உங்களை கேட்கிறோம்: உபதேசிக்கப்படுகிற ஐக்யம் ப்ரஹ்ம ஸ்வரூபத்தைக் காட்டிலும் வேறன்று அல்லது வேறு? வேறல்ல வென்றால் ப்ரஹ்ம ஸ்வரூபமே ஸாஸ்த்ரத்தால் அறிவிக்கப் படுகிறது என்கிற பக்ஷமே அது. அப்படி ஒப்புக் கொண்டால் ஸாஸ்த்ரோபதேசமும் வ்யர்த்தமாகுமென்றும் தோஷமும் மற்ற தோஷங்களும் வரும். ஸ்வரூபம் மட்டும் தெரிக்கத்தானே. ஐக்யமென்பது ப்ரஹ்ம ஸ்வரூபத்தைக் காட்டிலும் வேறு என்று சொன்னால் அப்படி வேறான ஐக்யம் பரமார்த்தமா அல்லது மித்யையா? ஸ்வரூபத்தைக் காட்டிலும் வேறான ஐக்யமென்பது ஸத்யமானால் உங்களுடைய நிர்விசேஷாத்வைவாதத்திற்கு பங்கம் வரும். ஐக்யம் பரமார்த்த மல்ல வென்றால், எப்படி தீப ஜ்வாலைகளின் ஐக்யமும் தேஹாத்மாக்களின் ஐக்யமும் பொய்யென்று சொல்லும் பொழுது ஜ்வாலைகளின் பேதமும் தேஹாத்மாக்களின் பேதமும் ஸத்யமாகுமோ அப்படியே ஜீவப்ரஹ்ம பேதமும் பரமார்த்தமாக வேண்டி வரும். இன்னமும் உங்களைக் கேட்போம். ஜீவப்ரஹ்மங்களுக்கு ஐக்யமென்று சொல்லுவது அந்தக்கரணத்திற்கும் ஞானத்திற்கும் ஐக்யமா, அல்லது ஞானத்திலால் அவச்சிந்நமான அந்தக்கரணத்திற்கும் ஞானத்திற்கும் ஐக்யமா? அல்லது அந்தக்கரணத்தினால் அவச்சிந்நமான ஞானத்திற்கும் கேவல ஞானத்திற்கும் ஐக்யமா? கூடப் பொருளுக்கும் அஜ—த்திற்கும் ஐக்யம் ஸம்பவியாதாகையால் முதலாவது கக்ஷி ஒவ்வாது. விஸிஷ்டத்தோடு ஐக்யத்தை ஒப்புக் கொண்டால் விசேஷணமாகவோ விசேஷ்யமாகவோ அந்த விஸிஷ்டத்திற்குள் சேர்ந்த அந்தக்கரணத்திற்கும் ஞானத்தோடு ஐக்யம்

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

வரத்தெரியுமாகையால் இரண்டாவது மூன்றாவது கக்ஷிகளும் ஒவ்வா. 'அக்கக் காரணமும் ஞானமும் மூன்றையே ஜடமும் அஜடமுமாகையாலும் ஸத்யமும் பொய் யுமாகையாலும் அவ்விரண்டிற்கும் ஐக்யம் ஒட்டாதென்று முன்பே சொன்னோம். அந்தக்காரணத்தினால் உபலக்ஷிதமான அறிவோடு ஐக்யத்தை ப்ரதிபாதிப்பது ஸாஸ்த் ரத்திற்கு விஷயம் என்று சொல்லுவீரேயானால் அத்தக்காரணத்தால் உபலக்ஷிக்கப் பட்ட அறிவுக்கு எத்தோடு ஐக்யம் உபதேசிக்கப்படுவதாகச் சொல்லுகிறீர்கள். தன் னோடு தானே ஐக்யம் என்றும், அல்லது வேறொரு அறிவோடு என்றும்? தன்னோடு தானே என்றால் உபதேசம் வீணேயாகும். எந்தப் பொருளும் அது தன்னைக் காட்டிலும் வேறல்லவென்ற உபதேசிக்க வேண்டிய தில்லையே. தனக்கே தன்னைக் காட்டிலும் வேற்றுமை ஸம்பவிக்கக் கூடுமா? வேறொரு அறிவோடு ஐக்யம் உபதேசிக் கப்படுகிறதென்றால் வாஸ்தவத்திலேயே வேறான அறிவோடா அல்லது வாஸ்தவத் தில் வேறல்லாத அறிவோடா? முதல் கக்ஷியை நீங்கள் ஒப்புக்கொள்ளாததாலும் அது ஒட்டாதாகையாலும் நீங்கள் சொல்லமுடியாது. வாஸ்தவத்தில் வேறல்லாத அறிவோடு என்ற இரண்டாவது கக்ஷியைச் சொன்னால் பேதத்திற்கு க்ரஹணம் இருக்கிறதா இல்லையா? இல்லை யென்றால் ஐக்யத்தை யுபதேசிப்பது வீணேயாகும். பேதத்திற்கு க்ரஹணம் உண்டு என்றால் பேதம் பொய்யென்று உபதேசிப்பது தானே ஐக்யோபதேசம். பேதம் பொய்யென்பது அனுமானத்தாலேயே ஸித்திக்கிறதென்று உங்கள் கொள்கையாகலால் ஸாஸ்த்ரத்திற்கு விஷயமே யில்லாமற்போம். "பே தம் ஸத்யமானால் அது கக்ஷிக்கு விஷயமாக ந்யாயமில்லையே" என்று இது போன்ற தர்க்கத்தை பக்கபலமாக வுடைய ஸாஸ்த்ரம் பேதம் பொய்யென்று காட்டுவதில் ப்ரமாணம் என்று சொல்லக்கூடுமாதலால் ஸாஸ்த்ரம் விஷயமில்லாமற் போகாது என்று நீங்கள் சொன்னால், அதுகூடாது. தர்மம் என்றால் அதற்கு ஹிம்ஸாரூபத்வம் கூடாதே யென்கிற தர்க்கத்தைப் பக்கபலமாகவுடைய "எல்லாப்ராணிகளையும் ஹிம் ஸிக்கக் கூடாது" என்கிற ஸாஸ்த்ரத்தைக்கொண்டு பசுவின் ஹிம்ஸை அதர்மமாகு மென்று ப்ரதிபாதிப்பது எப்படிக்கூடாதோ அப்படியே ஸாஸ்த்ரத்தால் ஸித்திக் கும் பேதத்தின் பொய்மையை ஸாஸ்த்ரமே ப்ரதிபாதிப்பது கூடாதாகையாலும் தன் னோடு ஸம்பந்தப்பட்ட வஸ்துக்களின் பேதத்தால் வேறுவேறுயிருக்கும் ஸம்யோகம் இச்சை முதலியவற்றுக்குள் ஒன்றுக்கொன்று பேதமிருப்பது போல அறிவுகளுக் கும் ஒன்றுக்கொன்று பேதம் ப்ரத்யக்ஷம் முதலிய ப்ரமாணங்களால் ஸித்திப்பதால் அதற்கு விரோதமாக அத்யந்தம் அஸங்கதமாய் பல அறிவுகளுக்குள் காணப்படும் பேதம் மித்யையென்று ஸாஸ்த்ரம் ப்ரதிபாதிக்கவல்லதல்லவாகையாலும், அக்கால த்தில் (தூக்கத்தில்) இவன் இதோ இந்த நான் இருக்கிறேன் என்று இப்பொ ழுது தன்னை யறிவதுபோல அறிவதும் பேசுவதும் இல்லையே; "தூங்குகிற வன் எப்பொழுது ஸ்வப்நம் ஒன்றையும் காணவில்லையோ!" "ப்ராணன்களிட மிருந்து தேவர்களும் தேவர்களிடமிருந்து லோகங்களும்" இது முதலிய ஸாஸ்த் ரங்களாலும், ப்ரத்யக்ஷம் முதலிய ப்ரமாணங்களாலும், காலம் விஷயம் ஆச்ரயம் இவை மூன்றைக் கொண்டும் அறிவுகளுக்குள் ஒன்றுக்கொன்று பேதம் ஸித் திக்கிறது. (இங்கே உதாஹரித்த மூன்றாவது ச்ருதிவாக்யத்தில்) 'தேவர்' என் கிற பதத்திற்கு இந்திரியங்களென்றும், லோகங்கள் என்கிற பதத்திற்கு ஆலோகநமான காட்சி அறிவுகளும் பொருள். இப்படிக் கொத்த வேதவாக்யங்க

சந்தப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

ளாலும், ப்ரத்யக்ஷம் முதலிய ப்ரமாணங்களாலும், காலத்தைக் கொண்டும், விஷயத்தைக் கொண்டும், அறிகிறவனென்னும் ஆச்ரயத்தைக் கொண்டு, அறிவுகள் ஒன்றுக்கொன்று வேற்றுமையுடைய பல பல வென்பது திண்ணம். மேற் சொன்ன மூன்றுவது ஸ்ருதியில், சொல்லும் ஞானபேதம் அந்தக்கரணத்தின் வ்ருத்தி ஞான பேதங்களைப் பற்றியது, என்று சொல்வீரேயானால்; ஸ்வப்ந விஷயமான அந்த ஸ்ருதிக்கு வ்ருத்திஞானந்தான் விஷயம் என்று ஏற்பட்டால் ஸ்வரூபஞானத்தின் ஐக்யம் ஸித்திக்கலாம், ஸ்வரூபஞானத்தின் ஐக்யம் ஸித்தித்தால் ஞானங்களின் பேதத்தைச் சொல்லும் அந்த ஸ்ருதி வ்ருத்திஞானத்தின் விஷயமாகலாம் என்று இப்படி அந்யோன்யாஸ்ரய தோஷம் வருமாதலாலும்; அறிகிறவன், அறியப்படுவது என்கிற இரண்டு ஆகாரங்களோடு விசிஷ்டமாய்த் தோன்றுகிற ஞானம் அந்தக்கரணத்தின் ஒரு செய்கையானால் மூன்றுபடிகளும் தாண்டின ஞானம் என்பது முயல் கொம்பைப்போல் இல்லாத பொருளாகுமாகையால் அந்த ஞானங்களின்பேதம் பொய் என்று ப்ரதிபாதிப்பது முயற்கொம்புகளின் ஞானம் பொய் யென்று ப்ரதிபாதிப்பது போலாகுமாகையால் ஶாஸ்த்ரத்திற்கு விஷயம் ஸித்தியாது. அனுபவிக்கப் படுவதாக எல்லோரும் ஒப்புக்கொள்ளும் ஞானங்களுக்கே ஒன்றுக்கொன்றுள்ள பேதம் பொய்யென்பதை ஶாஸ்த்ரம் ப்ரதிபாதிக்க வல்லமையுள்ளதல்ல. எனென்றால் அப்படிச் சொல்லுவது ஶாஸ்த்ரத்திற்கு விருத்தம்; ப்ரத்யக்ஷத்திற்கும் விருத்தம். யாகத்தில் பஶுக்களை ஹிம்ஸிப்பது அதர்மமென்று சொல்லுவது அதை விதிக்கும் ஶாஸ்த்ர விருத்தமாகையால், ஒரு ப்ராணியையும் ஹிம்ஸிக்கக் கூடாதென்கிற பொதுவான ஶாஸ்த்ரம் யாகத்தில் பஶுஹிம்ஸையை அதர்மமென்று போதிக்க ஶக்தமல்ல. யாகத்திலுள்ள யூபஸ்தம்பம் ஸூர்யனை யென்று சொல்லும் வேதவாக்யம் ப்ரத்யக்ஷத்தோடு விரோதிப்பதால் அவ்விரண்டின் ஐக்யத்தை போதிக்கவல்லதல்ல. இவ்விரண்டு சந்தர்ப்பங்களைப்போல் இங்கேயும் ஶாஸ்த்ரத்திற்கும் ப்ரத்யக்ஷத்திற்கும் விரோதம் வருவதால் ஶாஸ்த்ரத்தாலும் ப்ரத்யக்ஷத்தாலும் ஸித்திக்கும் ஞானபேதத்தைப் பொய்யென்று ஶாஸ்த்ரம் ஸாதிக்கவல்லதல்ல. ஆகையால் ஶாஸ்த்ரத்திற்கு விஷயமே இல்லாமல் போவதால் உங்கள் மதத்தில் இந்த ஶாஸ்த்ரம் ஆரம்பிக்கத்தக்கதல்ல. அப்படியே ஶாஸ்த்ரத்திற்கு ப்ரயோஜனமும் உங்களுக்கு ஒட்டமாட்டாது. எங்களனையென்றால்; ஶாஸ்த்ரத்திற்கு இரண்டுவிதமாய் ப்ரயோஜனம் சொல்லலாம். ஒரு பலத்தை ஸாதித்துக்கொடுக்க உபாயமாகிறது என்கிற அவாந்தரப்ரயோஜனம் ஒன்று, அதனால் ஸாதிக்கப்படும் பரமப்ரயோஜனம் ஒன்று. ஆக இருவிதம். அதில் ஸம்ஸாரபந்தத்தைத் தொலைக்கும் ஞானம் ஸித்திப்பது அவாந்தர ப்ரயோஜனம். மோக்ஷம் முக்யப்ரயோஜனம். இப்பொழுது உண்டாகும் வேதார்த்தவாக்யத்தால் ஏற்படும் ஞானம் பந்தத்தைப் போக்கக்கூடியதல்ல வென்பது நீங்களும் ஒப்புக்கொள்ளும் விஷயம். வஸிஷ்டர், பராஶரர், க்ருஷ்ணத்வைபாயனர் முதலியவர்களுக்குக்கூட பிறக்காத ஞானம் மற்றவர்களுக்குப் பிறக்கலாம் என்று சொல்லுவது அடியோடு ஸம்பாவிதமல்ல. அவர்களுக்கு அப்படிப்பட்ட ஞானம் உண்டாயிற்றென்று சொல்லுவீரேயானால், பேதத்தின் தோற்றமே உண்டாகக்கூடாது. அது (அவர்களுக்கு) இனி தொலைந்துபோகும் என்று சொன்னால் அதனாலேயே அவர்களைக் காட்டிலும் வேறல்லாத மற்றெல்லோருக்கும் பேதத்தின தோற்றம் தொலைந்து போய்விடுமென்று சொல்லக்கூடுமாதலால் இந்த ஶாஸ்த்ரம் ஆரம்பிக்க வேண்டியதில்லை

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

யென்றே வரும் ப்ரபஞ்சம் உண்மையானபடியாலேயே அது ஞானத்தால் தொலைக்கக்கூடியதல்ல. அதனால் ப்ரபஞ்சத்தைத் தொலைக்கக்கூடிய ஸாமர்த்திய முள்ள ஸாஸ்த்ர ஞானம் அஜ்ஞாந்கர ப்ரயோஜனமாகாது. ஆகையால் அந்த அஜ்ஞாந ப்ரயோஜனத்திற்காக ஸாஸ்த்ரத்தை ஆரம்பிக்கலாமென்று சொல்லமுடியாது. நீங்கள் சொல்லும் முக்ய ப்ரயோஜனமும் ஸித்தியாது. ஏனென்றால் ஞாதாவுக்கும் ஜ்ஞேயத்திற்கும் பேதம் உண்மையாகையால் அது தொலைவது அஸம்பாவிதம். மேலும் உங்களைக் கேட்போம்: ஸாஸ்த்ரத்தை ஸ்ரவணம் செய்ய அதிகாரம் கேவல சைதன்யத்திற்கு மட்டுமா? அல்லது அறிகிறவன் என்கிற ஞாதாவிற்கா? கேவல சைதன்யத்திற்கு அதிகாரம் என்கிற முதல் கக்ஷி ஒவ்வாது. கேவலமான அறிவிற்கு கேட்கும் தன்மை ஸம்பவியாது. ஞாதாவுக்கு அதிகாரம் என்கிற இரண்டாவது கக்ஷியும் கூடாது. அறிகிறவனுக்கு தானுக ஸித்திப்பீவது (ஞானம்) புருஷார்த்தமாகாதாகையால் ஸாஸ்த்ர ஸ்ரவணம் முதலியதில் அவனுக்கு ப்ரவ்ருத்தி ஸம்பவிக்கமாட்டாதே. எவனுக்கு ஸுகம் உண்டாவதும் துக்கம் விலகுவதும் புருஷார்த்தமாகும்? அஹம் அர்த்தத்திற்குத்தானே (நானென்று தோன்றும் பொருளுக்குத்தானே) ஸுகமும் துக்கத்தின் நிவ்ருத்தியும் புருஷார்த்தமென்று சொல்லலாம். நான் துக்கமற்றவனும் ஸுகியாகவும் ஆகக்கடவேன் என்றல்லவோ நமக்குத் தோற்றம் ஏற்படுகிறது. புருஷார்த்தத்தோடு கூடிய அந்த அஹமர்த்தத்திற்கு (நானென்னும் பொருளுக்கு) நாஸம் வருவது எப்படிப் புருஷார்த்தமாகும்? வேறெதைப் புருஷார்த்தத்தான் அர்த்திக்கும் புருஷனேயில்லாமற் போனபோது புருஷார்த்தமாகும்? பின்வருமாறு நீங்கள் எங்களை ஒருக்கால் கேட்கக்கூடும். அது எப்படியெனில்;—உங்கள் பக்ஷத்தில் (அதாவது ஸித்தாந்தி பக்ஷத்தில்) பத்தனுக்கு ஸம்ஸாரிக்கு ஸாஸ்த்ரத்தில் அதிகாரமா அல்லது முக்தனுக்கா? பத்தனுக்கு என்றால்: பத்தத்தன்மைபோய் பத்தன் நாஸமடைவது அவனுக்குப் புருஷார்த்தமாகாதாகையால் பத்தத் தன்மையைத்தொலைக்கும் ஸாஸ்த்ர ஸ்ரவணத்தில் அவனுக்கு ப்ரவ்ருத்தியுண்டாகாது. தேஹம் முதலிய உபாதியோடு கூடிய பத்தனுக்கு அந்த ரூபம் தொலைவது அவனுடைய ஸொந்த நாஸத்தானேயாகும். முக்தனுக்கு அதிகாரமென்றால் அவனுக்கு ஸாஸ்த்ரத்தின் அபேக்ஷையில்லாததால் அவனுக்கு அநதிகாரமே யாகும். வர்தேதியான தேஹத்தை உபாதியாயுடைய ஆகாரம் நாஸமடைவது அபுருஷார்த்தமல்ல. ஏனென்றால்; துக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்ட ஸ்வாபாவிகமான ஆத்மஸ்வரூபம் அழியாமல் அப்படியே நிற்பதால் என்று நீங்கள் (ஸித்தாந்திகள்) ஸமாதானம் சொல்வீர்களேயானால் அப்படிக்காயின் அறியும் தன்மையும், மனமென்கிற உபாதியின் மூலமாக ஏற்படுகிறபடியால் அது போனாலும் சைதன்ய ஸ்வரூபம் நிற்கிறபடியால் புருஷார்த்தமில்லையென்று நீங்கள் கக்ஷி சொல்ல வொண்ணுது. (இதற்குப்பதில்) இப்படி நீங்கள் சொல்லும் வாதம் ஸரியல்லவென்று ஸித்தாந்திகளான நாங்கள் மறுதளிக்கிறோம். சைதன்ய ஸ்வரூபத்தில் வாஸ்தவமான ஞாத்ருத்வத்தை நீங்கள் ஒப்புக்கொள்ளாததாலும் ஞாத்ருத்வத்தை சைதன்யத்தினிடத்தில் ஆரோபணம் செய்கிறோம் என்று சொல்லுவதற்கு அந்த ஞாத்ருத்வம் வேறோரிடத்தில் ஸத்யமாக இருக்கவேண்டியது அவஸ்யமாகையாலும் அப்படி வேறொரு ஞாதா சைதன்யத்திற்கு தர்மமாக இல்லாமையாலும், உங்கள் கக்ஷி அயுக்தம். சைதன்யம் என்கிற அறிவுதான் ஆத்மஸ்வரூ

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

பமென்றும், அறிகிறவனுடைய ஞாதா அந்த சைதன்ய ஸ்வரூபத்திற்கு தர்மமென்றும், சொல்லுகிற பக்ஷத்தில்தான் நீங்கள் சொல்லும் ப்ரதிபந்திக்கக்கூடியேயாகும். நான் ஸுகீ, துக்கீ என்று சொல்லுமிடங்களில் ஸுகமும் துக்கமும் நான் என்னும் அஹமர்த்தமான பொருளுக்கு தர்மமாவதுபோல நான் அறிகிறேன் என்று சொல்லுமிடத்திலும் அறிவு நான் என்னும் அஹமர்த்தத்திற்கு தர்மமாகவும் அஹமர்த்தம் தர்மியாகவும் அனுபவிக்கப்படுவதை ஒருவரும் மறுக்கவொண்ணாது. ஸுகத்திற்கும் துக்கத்தின் நிவருத்திக்கும் ஆஸ்ரயமான அந்த நான் என்னும் பொருளின் நாமரூப அபுருஷார்த்தந்தான் ஆகும். ஆஸ்ரயமான தர்மி நஷ்டித்துப் போனால் ஸுகம் தொலைவது யாருக்குப் புருஷார்த்தமாகும்? ஜடமான ப்ரக்ருதியின் ஸம்பந்தத்தால் பத்தத்திற்கு உள்ளாவது அந்த உபாதியை முன்னிட்டு ஔபாதிகமான துக்கத்தை விலக்கிறபடியால் நான் அழுக்காயிருக்கிறேன் என்று நினைப்புள்ளவனுக்கு அழுக்கைப் போக்குவது புருஷார்த்தமாவது போல பந்தத்தால் ஏற்படும் ஔபாதிக துக்க நிவ்ருத்தியும் புருஷார்த்தமாகாமற் போகாது. மிகவும் ப்ரீதிக்குப் பாத்ரமான தர்மியான ஆத்மஸ்வரூபம் அப்படியே ஸ்திரமாய் நிற்கிறபடியாலும், அநிஷ்டமான பந்தம் தொலைவது இஷ்டமான படியாலும் அது புருஷார்த்தம். 'லோகாநுபவத்தால் அஹமர்த்தமே ஸ்வரூப மென்று நீங்கள் சொல்லுகிறீர்களா? அல்லது விவேகிகளான ஸாஸ்த்ரக்ஞரின் அனுபவத்தால் அப்படிச் சொல்லுகிறீர்களா? லோகாநுபவத்தால் சொல்லுகிறோமென்றால், நான் பருத்தவன், நான் இளைத்தவன், என்று லோகநிருஷ்டியால் அனுபவம் ஏற்படுவதால் பெருத்தல் சிறுத்தலோடு கூடிய தேஹம் தொலைவது அபுருஷார்த்தமாகவேண்டி வரும். நிரூபகர்களின் அனுபவத்தைக் கொண்டு சொல்லுகிறோமென்றால், ஸ்தூலத்தன்மை, இளைத்ததன்மை இவைகள் எப்படி ஆத்மாவினிடத்தில ப்ரமத்தால் ஆரோபிக்கப் படுகின்றனவோ அப்படியே நான்என்னும் ப்ரதீதிக்கு விஷயமாகும் ஞாதாவும் ஆத்மாவினிடம் ஆரோபிக்கப் படுகிறவனே யாதலாலும் அவன் ஆத்ம ஸ்வரூபனல்லாதாலும் நான் என்னும் பொருள் தொலைவது அபுருஷார்த்தமல்ல" என்று நீங்கள் சொல்லுவதாகச் சொன்னால் அது ஒவ்வாது. என்னுடைய கை, என்னுடைய கால் என்று உலகப் பார்வையால்கூட நான் என்னும் பொருள் தேஹத்தைக் காட்டிலும் வேறு என்று விளங்குவதாலும், நான் என்னும் பொருள்தான் ஆத்மா வென்னும் விஷயத்தில் ஸ்ருதி ஸ்ம்ருதிகளையும் ஸூத்ரங்களையும் முன்பே காட்டியிருப்பதால் நிரூபகரான ஸாஸ்த்ரக்ஞருடைய அனுபவத்தாலும் அஹமர்த்தமே ஸ்வரூபம்என்று ஏற்படுகிற படியாலும், தேஹம்தொலைவதற்கும் அஹமர்த்தம் தொலைவதற்கும் யாதொரு விதத்திலும் ஸாம்யமில்லாததாலும் அஹமர்த்தம் தொலைவது அபுருஷார்த்தம், அதாவது 'விரும்பக்கூடாதது' என்னும் சுருதியை நீங்கள் தடுக்க முடியாது. ஆகையால் உங்கள் மதத்தில் இந்த ஸாஸ்த்ரத்திற்கு விஷயமும் ப்ரயோஜனமும் இல்லாமற் போவதால் மிருஷா வாதிகளான (மித்யாத்வவாதிகளான) உங்கள் பக்ஷத்தில் இந்த ஸாஸ்த்ரம் ஆரம்பிக்கத்தக்கதல்ல வென்று நாங்கள் சொல்லும் தோஷம் அப்படியே நிற்கிறது. எது நித்யம் எது அநித்யம் என்று பகுத்தறிதலான நித்யாநித்யவஸ்து விவேக மென்பது இந்த ஸாஸ்த்ரம் ஆரம்பித்த பிறகு ஸித்திக்க வேண்டியதாதலாலும், இந்த ஸாஸ்த்ரத்தை யாரம்பிப்பதற்கு முந்தி அதிகாரத்திற்கு வேண்டிய பூர்வ வ்ருத்தம் ஆகாதாகையாலும், முதல் ஸூத்ரத்தில் "அத" என்கிற முதல் பதத்திற்கு அத்வைதிகள் சொல்லும்

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

அர்த்தம் ஒட்டாதென்று முன்பே காட்டியுள்ளோம். வேதாந்தம் தவிர மற்ற ஸாஸ்த்ரங்களால் ஏற்படும் நித்யாநித்யவஸ்துவிவேகம் வேதாந்தத்தோடு விரோதிப்பதாலும் அந்த ஸாஸ்த்ராந்தரங்களிலேயே மோக்ஷோபாயத்தை யுபதேஸித்திருப்பதால் அதைத் தேடுவதற்காக அந்த ஸாஸ்த்ரத்தைவிட்டு வெளியேபோவதற்கு ஆகாங்க்ஷை பிறவாததால் அங்கே சொல்லியிருக்கும் நித்யாநித்ய விவேகம் வேதாந்தங்கள் மூலமாக ப்ரஹ்ம விசாரம் செய்ய ஹேதுவாகமாட்டாமையாலும், நித்யாநித்ய வஸ்துக்களின் விஷயமாய் மேலாகயேற்படும் ஆபாத ப்ரதீதி (மேல்பொருள்) கர்மகாண்டம் ப்ரஹ்மகாண்டம் இரண்டிற்கும் பொதுவானபடியால், அந்த ஆபாத ப்ரதீதி, நியகமாய் ப்ரஹ்மவிசாரத்தையே செய்யும்படி செய்யுமென்று சொல்லக்கூடாமையாலும் இதிஹாஸ புராணங்களில் ஸம்ஸாரம், விபரீதஜ்ஞானம் இவைகள் நீங்கினஞானம் ஏற்படாததாலும், அவைகளில் ஏற்படும் நித்யத்வாநித்யத்வங்களின் ப்ரதீதி தர்மார்த்த காமங்கள் என்கிற த்ரிவர்கங்களில் வைராக்யத்தையுண்டு பண்ணப்போதாமையால் ப்ரஹ்ம விசாரத்தைக் குறித்து ஹேதுவாகாதபடியாலும் முதல் ஸூத்ரத்தில் இரண்டாவதாகிய "அத:" என்கிற பதத்திற்கு அவர்கள் சொல்லும் பொருளும் உபபந்நமல்ல. பொதுவாக எது நித்யமோ அது க்ரஹிக்கத்தக்கது, எது அநித்யமோ அது தள்ளத்தக்கது; என்கிற ஸாமான்ய விவேகந்தான் நித்யாநித்ய விவேகம் † என்று நீங்கள் உத்ப்ரேக்ஷிப்பதும் அயுக்தம். வேதாந்தங்களில் நித்யமான புருஷார்த்தத்தை ப்ரதிபாதிப்பதைக் காண்கிறபடியால் வேதாந்தம் ஆரம்பிக்கத்தக்கது; வேதாந்தங்களை ஆரம்பித்தால் அவைகளில் நித்யமான புருஷார்த்தத்தின் ப்ரதிபாதனம் காணப்படும் என்று அந்யோந்யாஸ்ரயம் வருமாகையாலும், ஸாஸ்த்ராந்தரங்களிலும் நித்யமான புருஷார்த்தம் இருக்கலாம் என்று ஸம்பாவனை செய்யக்கூடுமாதலால் நித்யாநித்ய வஸ்து விவேகம் ப்ரஹ்ம விசாரத்திலேயே மூட்டி விடும் என்று சொல்லக் காரணமில்லையாகையாலும் ஸாஸ்த்ராந்தரங்களில் நித்ய புருஷார்த்தம் கிடையாதென்பதும், வேதாந்தங்களில் நித்ய புருஷார்த்தம் உண்டென்னும் நிச்சயமும் இந்த ஸாரீரக ஸாஸ்த்ரத்தில் தர்க்கபாதம் என்கிற இரண்டாவது அத்யாயத்தின் இரண்டாவது பாதத்தை ஸேவித்த பிறகுதான் ஏற்படக்கூடுமாதலாலும், முன் சொன்னதுபோல அந்யோந்யாஸ்ரய தோஷம் வருகையாலும், வேதாந்தங்களில் நித்யபுருஷார்த்த முண்டென்றும், மற்ற ஸாஸ்த்ரங்களில் அது இல்லையென்றும் குருவின் உபதேஸத்தைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம் என்றும்; ப்ரஹ்மத்தை யுபாஸிப்பதையும் குரு வசனத்தாலேயே தெரிந்து கொள்ளக்கூடுமாதலால் இந்த ஸாரீரக மீமாம்ஸையின் அபேக்ஷையில்லாமற் போவதால் இந்த ஸாஸ்த்ரத்தை யாரம்பிக்கக்கூடாதென்று ஏற்படத்தெரியும். ஜீவப்ரஹ்மைக்யங்களின் ஐக்யம் ஸாஸ்த்ரத்திற்கு விஷயம் என்று சொல்லும் பக்ஷத்தில் ப்ரஹ்ம ஜிக்ஞாஸை என்கிற ஸூத்ர பதம் ஒட்டுவதில்லை. அந்த ஸப்தத்தால் ப்ரஹ்மத்திற்கல்லவா அறிய விரும்பப்படும் தன்மையும் விசாரிக்கப் படவேண்டிய தன்மையும் சொல்லப்படுகிறது. அந்த ஸப்தத்தால்

அரும்பதம்:—

† இந்த கக்ஷி வாசஸ்பதிமிஸ்ரர் பாமதியில் கூறியது.

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு —

ஜீவப்ரஹ்மங்களின் ஐக்யம் விசாரிக்கப்பட வேண்டியதாக ஏற்படுகிற தில்லையே எப்படி தர்மஜிக்ஞாஸை என்கிற பதம தர்மத்திற்கு மட்டும் ஜிக்ஞாஸ்யத்வத்தைச் சொல்லுகிறதோ கர்மா தர்மங்களின் ஐக்யத்தின் ஜிக்ஞாஸ்யத்வத்தை எப்படி சொல்லமாட்டாதோ அந்தப்ரகாரமாகத்தானே ப்ரஹ்மஜிக்ஞாஸை என்கிற பதமும் பொருள் கொடுக்கும். யாதொரு விசேஷமும் இல்லாத நிர்விசேஷ வஸ்துவிற்கு லக்ஷணம் சொல்லுவது என்பதே ஓட்டாது. விசேஷண முறையாக லக்ஷணம் சொன்னால் வஸ்து ஸவிசேஷமாக வேண்டிவருமாதலாலும், உபலக்ஷண முறையாக லக்ஷணத்தைக் கூறவந்தால் முன் தெரிந்த ஆகாரத்தைக் காட்டிலும் வேறுனதும், உபலக்ஷணத்தால் தெரிவிக்கப்பட வேண்டியதுமான வேறு ஆகாரமே யில்லாததாலும், உபலக்ஷணம் வ்யர்த்தமாகுமானபடியாலும், புதிதாய் ஞாபிக்கப்படுகிற வேறு ஆகாரத்தை ஒப்புக் கொண்டால் வஸ்து ஸவிசேஷமாக வேண்டுமாகையாலும் உபலக்ஷணபக்ஷமும் உங்களுக்குக் கூடிவராது. ஸ்வரூபம் மட்டுமே உபலக்ஷணத்தால் அறிவிக்கப்படும் வஸ்துவென்று சொல்வீரேயானால் அந்த ஸ்வரூபம் முன்பே அறியப் பட்டதா அல்லது அறியப்படவில்லையா? முன்பே அறியப்பட்ட தென்றால் உபலக்ஷணம் வ்யர்த்தமாகும். முன்பே அறியப்படவில்லையென்றால் வஸ்து ஸ்வயம்ப்ரகாச மல்லாமற் போம். அதை உபலக்ஷணத்தால் காட்டுவதும் முக்யமாகாது. கழனியான தன்மை யென்கிற ஆகாரத்தால் முன்பே அறியப்பட்ட கழனிக்கு தேவதத்தனுக்கு ஸொந்தம் கொக்கு உட்கார்ந்திருப்பதால் ஞாபிக்கப்படுவதல்லவோ உபலக்ஷ்யத்வமாகும். முன்பு தெரியாத விஷயமான ப்ரபஞ்சமில்லாமை (ப்ரபஞ்ச மித்யத்வம்) உபலக்ஷணத்தால் உபலக்ஷிக்கப்படுகிற புது ஆகாரம் என்பீரேயானால்; ப்ரபஞ்ச மித்யத்வம் என்பது ஸ்வரூபத்தைக்காட்டிலும் வேறுனால் அத்தோடு கூடிய ஸ்வரூபம் ஸவிசேஷமாக வேண்டிவரும். ஸ்வரூபத்தைக் காட்டிலும் வேறன்று என்றால்; ஸ்வரூபம் முன்பே தெரிந்து விட்டபடியால் உபலக்ஷணம் வீணாகும். இன்னமும் உங்களைக்கேட்போம், ஜகத்காரணத்வத்தை ப்ரஹ்மத்திற்கு லக்ஷணமாகச் சொல்லுவதினால் ப்ரபஞ்சத்தின் வ்யாவருத்தி எப்படி ஸித்திக்கும்? காரணத்வமாவது காரணமான ப்ரஹ்மமும் கார்யமான ஜகத்தின் பொய்யான கல்பனைக்கு ஆதாரமாவதே யாதலால் ப்ரஹ்மத்தினிடத்தில் ஆரோபிக்கப்படுகிற பொய்யான ப்ரபஞ்சத்தைக் காட்டிலும் கல்பனையான தோற்றத்திற்கு ஆதாரமான ப்ரஹ்மம் ஸத்யம் ஆகுமாதலால் வ்யாவருத்தி ஸித்திக்கும் என்று சொல்வீரேயானால் அது ஒவ்வாது. கடம் முதலியதற்கு அதிஷ்டானமான மண்ணைப்போல ஜகத்திற்கு அதிஷ்டானமான ப்ரஹ்மமும் பொய்யாக வேண்டிவருதலால் ப்ரஹ்மத்திற்கே வ்யாவருத்தி வந்துதீரும். கடம் முதலியதற்குக் காரணமான மண் முதலியது அதற்குங் காரணமான வேறு வஸ்துவில் கல்பிக்கப்படுவதால் மண் முதலியது பொய்யாகிறது; காலதரயத்திலும் இருக்கும் எல்லாக் கார்யங்களுக்கும் அதிஷ்டானமான ப்ரஹ்மம் வேறொரு பொருளில் ப்ரமத்தால் கல்பிக்கப் படுகிறது என்று சொல்வது அஸாத்யமானபடியால் அது பொய்யாகாது என்று நீங்கள் பதில் சொன்னால் அதுவும் ஒவ்வாது. "இது ஸ்ருஷ்டிக்கு முன்னே ஸத் தென்னும் ப்ரஹ்மமாகவே யிருந்தது." என்கிற ச்ருதியில் இது என்று சொல்லப்படும் கார்யத்தைப்பற்றிமட்டும் அதிஷ்டானம் என்று ஏற்படுவதால் ப்ரஹ்மம்கூட வேறொரு காரணத்தில் ஆரோபிக்கப்படுகிறது என்று சொல்வதற்கு யாதொரு விரோதமும் இல்லாததாலும் பீஜாங்குரந்யாயத்தால் ப்ரஹ்மத்திற்கு எற்படும் அநாதித்வத்தை

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

ப்ரவாஹத்திலே அகாதி யென்ற உபபத்தி சொல்லக்கூடுமாதலாலும், உங்கள் பரிஹாரம் நிற்கமாட்டாது. எல்லாக் கார்யங்களுக்கும் காரணமான ப்ரஹ்மத்திற்கு வேறு காரணமிருக்கலாம் என்பது ஸ்ருதியால் நிஷேதிக்கப்படுவதால் ப்ரஹ்மத்திற்கு கார்யத்வமே கிடையாது என்று ஏற்பட்டு அதற்கு ஸத்யத்வம் ஸித்திப்பதால் ப்ரபஞ்சத்தின் வ்யாவ்ருத்தி ஏற்படுவதற்குத் தடையில்லை யென்று நீங்கள் மேல்கோடி சொன்னால் அப்படியாயின் கார்யத்வம் இல்லை என்பதைக் கொண்டே ஜகத்தின் வ்யாவ்ருத்தி ஸித்திக்கையில் காரணத்வத்தைச் சொல்லுவது வ்யர்த்தமாவதால் கார்யத்வம் இல்லை யென்கிற ஸ்ருதியே லக்ஷணவாக்யமாக உதாஹரிக்கப் படவேண்டுமே. யொழிய "யதோ வா இமானி" யென்கிற காரணவாக்யத்தை லக்ஷணமாக உதாஹரிக்க முடியாது என்று பதில் சொல்லுவோம். கார்யத்வம் இல்லை யென்கிற ஸ்ருதியையே லக்ஷண வாக்யமாகச் சொல்லி விடுகிறோம் என்றால், அப்படியாயின் 'அவர் காரணமும் கரணங்களுக்கு அதிபரான ஜீவர்களுக்கு அதிபருமாவார். அவருக்கு வேறொரு உத்பாதகனுவது அதிபனுவது கிடையாது' என்கிற கார்யத்வ நிஷேதமான ஸ்ருதி 'கரணாதிபர்களுக்கு அதிபர்' என்று சொல்லப்படும் ஈஸ்வரனைச் சொல்லுவதால் லக்ஷிக்கப் படுகிறவஸ்து நிர்விஶேஷமான ப்ரஹ்மமாக இருக்கவேண்டு மென்கிற உங்கள் அபிமதம் ஸித்திக்காமற்போம். மேலும் விசாரிப்போம். ஜகத்காரணத்வம் என்கிற குறிப்பிட்ட லக்ஷணம் லக்ஷிக்கப்படுகிற பொருளில் நிர்விஶேஷத்வத்திற்கு விரோதியாகும். எனென்றால்; ஜகத்காரணத்வம் உண்டென்று சொல்லும்பொழுது ஸர்வக்ஞத்வம் முதலிய குணங்கள் அந்தப்பொருளுக்கு இருக்க வேண்டி வரும். 'காரணத்வத்திற்கு உபயுக்தமான ஸர்வக்ஞத்வம் முதலியதும் யாதொரு தர்மமுமில்லாத ப்ரஹ்மம் என்னும் வஸ்துமாத்ரத்திற்கு' என்று நீங்கள் சொல்லுதல் அது கூடாது. ஸர்வக்ஞத்வம் என்னும் குணத்தால் ப்ரஹ்ம மென்னும் வஸ்துமாத்ரம் உபலக்ஷிக்கப்பட்டு விடுவதால் ஸர்வஶக்தித்வம் முதலிய குணங்களையும் வேறு உபலக்ஷணமாக நீங்கள் சொல்லுவது வ்யர்த்தமாகும். மரத்தின் கோயிலுல் சந்த்ரனை உபலக்ஷண முறையாகக் காட்டியபிறகு உப்பரிகையின் உச்சியை அதற்கே வேறு உபலக்ஷணமாகச் சொல்லுவதில் என்ன ப்ரயோஜனம். மேலும், ஸர்வக்ஞத்வம் என்னும் குணத்தால் நிர்விஶேஷமான பொருளை யுபலக்ஷிக்கிறோம் என்று நீங்கள் சொல்லுவது அத்யந்த விருத்தம். தன்னையே (ஸர்வக்ஞத்வத்தையே) ஒரு விஶேஷ தர்மமாக வுடைய ஆஶ்ரயமான ப்ரஹ்ம மென்னும் பொருளைத்தானே அது நிர்விஶேஷமென்று காட்டும் என்பது எப்படி ஸம்பவிக்கும்? அந்த ஸர்வக்ஞத்வ குணமே உபலக்ஷிக்கப்படும் ப்ரஹ்மமென்னும் பொருளில் ஸர்வஶக்தித்வம் முதலிய வேறு தர்ம விஶேஷங்கள் இல்லை யென்று ஒருக்காலும் விளக்க ஸமர்த்தமாகாது. இந்தக் காரணங்களால் லக்ஷண ஸூத்ரமாகிய இரண்டாவது ஸூத்ரமும் ப்ரஹ்மம் நிர்விஶேஷம் என்னும் கக்ஷிக்கு விருத்தம். மூன்றாவது ஸூத்ரமும் உங்களுக்கு ஒட்டாது. நிர்விஶேஷமான ப்ரஹ்மமும் ஶாஸ்த்ரத்திற்கு தாத்பர்யமானால் ஜகத் காரணத்திற்கு வேண்டிய ஸர்வக்ஞத்வம் முதலியதை மூன்றாவது ஸூத்ரம் ஸமர்த்தனம் செய்வதாகச் சொல்லும் உங்கள் பாஷ்யம் எப்படி நிர்விஶேஷ வஸ்துவில் தாத்பர்யத்தை ஸாதிக்க உபயோகப்படும்? ப்ராஸங்கிகமாகக் கூட ஸர்வக்ஞத்தை ஸமர்த்திப்பதாகச் சொல்லுவது உங்கள் கொள்கையான நிர்விஶேஷித்வத்திற்கு விரோதிப்பதால் அனுசிதந்தானே. 'மேலும், ருக் வேதம் முதலிய ஶாஸ்த்ரம் அதில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களைக் காட்டிலும் அதிக விஷயமான ஞான

க்ருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

முடைய் ஒருவனைக் காரணமாகவுடையது. எனெனில்; அந்த ஶாஸ்த்ரம் வாக்ய மாகையாலே' யென்று நீங்கள் சொல்லும் அனுமானமும் ஸங்கதமல்ல. எப்படி யென்றால், அதிக விஷயமான ஞானமுடையவனைக்கர்த்தாவாக வுடையது என்பது உங்களுக்கு ஸாத்யமா? அல்லது அப்படிக்கொத்தவரை வக்தாவாகவுடையது என்பது ஸாத்யமா? அல்லது அப்படிக்கொத்தவரால் உச்சரிக்கப்படுவது என்பது சாத் யமா? முதல் பக்ஷத்தைச் சொன்னால் த்ருஷ்டாந்தத்தில் ஸாத்யமே யில்லை யென்கிற தோஷம். எனென்றால்; ஆகாஶத்திற்கு குணமான ஶப்தம் காளிதாஸன் முதலிய காவ்ய கர்த்தாக்களை உபாதான காரணமாக உடையதல்லவே. இரண்டா வது கக்ஷியும் ஒவ்வாது; அதை நீங்கள் சொன்னால் வேதத்திற்குப் பௌருஷேயத் வம் வருமாகையால். மூன்றாவது கக்ஷியும் ஒவ்வாது: வ்யபிசார தோஷம் வருவ தால். வேதவாக்யத்தையாவது வேறு வாக்யத்தையாவது உச்சரிக்கும் பாலர் முதலியவர்களுக்கு அந்த வாக்யங்களைக்காட்டிலும் அதிக விஷயமான ஞானம் இல்லையே. மூன்றாவது ஸூத்ரத்திற்கு ப்ரஹ்மம் ஶாஸ்த்ரத்தை ப்ரமாணமாக வுடையது என்ற உங்கள் வ்யாக்யானம் ப்ரஹ்மம் அனுபவத்திற்கு வரு வதை ஒப்புக் கொள்ளாமல் மறுக்கும் உங்கள் மதத்திற்கு ஒட்டாது. மூன் ஸூத்ர மான ஶாஸ்த்ரயோநி ஸூத்ரத்தில் ப்ரஹ்மத்தை கண்டோக்தமாகத் குறிப்பிடாத தால் நான்காவது ஸூத்ரத்திலுள்ள "அது" என்னும் பதத்திற்கு ப்ரஹ்மம் பொரு ளென்று ப்ரஹ்மத்தின் பராமர்ஶத்தைச் சொல்வது ஸ்வரஸ மல்ல. ப்ரபஞ்ச ப்ர மத்தை நிவர்த்திக்கும் வாக்யார்த்தஞானத்தை யுண்டுபண்ணுவதால் வேதாந்த வாக் யங்களுக்கு ப்ரயோஜன ஸித்தி யேற்படும் என்று ஸமன்வய ஸூத்ரத்திற்கு நீங்கள் பொருள் சொல்லுவது ஒட்டாது. எனெனில்; கேவலம் வாக்யார்த்த ஞானத்தால் மட் டும் பந்தம் நிவ்ருத்திக்கும் என்று சொல்லுவது ஶாஸ்த்ரத்தாலும் ப்ரத்யக்ஷத்தாலும் பாதிக்கப்படுகிறது. வாக்யார்த்தஞானம் வந்தபிறகும் பந்தம் தொடர்ந்து தோன்றுவது பாதிதாநுவ்ருத்தியால் என்று நீங்கள் சொல்லும் அந்யதாஸித்தியை முன்பே தூஷி த்தோம். மேலும் ப்ரமம் நிவ்ருத்தியாகிறதென்று நீங்கள் சொல்லுவது யாருக்கு? கேவல சைதன்யத்திற்கா? அல்லது சேதனனான ஞாதாவுக்கா? கேவல சைதன்ய த்திற்கு ப்ரமம் வந்து நிவர்த்திக்கிறதென்று சொல்ல வொண்ணாது. அது சைதன்ய மென்னும் குணமில்லாத அசேதனமாகையால் ப்ராந்திக்கு ஆஶ்ரயமாகமாட்டாது. அறிவுடைய சேதனனல்லவா ப்ராந்திக்கு ஆஶ்ரயமாவான். ஜடத்தன்மைதான் ப்ரபஞ்சத்திற்கு ஆஶ்ரயமாகாததற்குக் காரணமாகும் என்று நீங்கள் சொன்னால் அது வும் கூடாது. நீங்கள் ஜடமென்று சொல்லும் ஞாதாவிடத்தில் ப்ரமத்திற்கு ஆஶ்ர யமாகாமை யில்லாததினாலே ஸாத்யமான ப்ரமத்திற்கு ஆஶ்ரயமாகாமையோடு ஸம மான வ்யாப்தி யில்லாமையால் ஜடத்வம் அதற்கு காரணமென்று சொல்ல இய லாது. சேதனனுக்கு ப்ரமம் நிவ்ருத்திப்பது உங்கள் பக்ஷத்தில் புருஷார்த்தமா காது. நிவர்த்திக்கப் படவேண்டிய பொருள்களில் ஞாதாவும் சேர்ந்தவனாகையால் அவனைக் குறித்து தன்னுடைய நாஶம் அபுருஷார்த்தந்தானேயாகும். ராஜாவுக்கு சன் ஶத்ருக்களின் நிவ்ருத்தி புருஷார்த்தமாவது போல ஞானஸ்வரூபனான ஆத்மா வுக்கு ஞாதாவின் நிவ்ருத்தி புருஷார்த்தமாகும் என்று நீங்கள் சொன்னால், அது ஸரி யல்ல. ஞாதாவே ஆத்மாவாகையாலும் ஞாதாவுக்கு தர்மமாகத் தோன்றுகிற ஞானத் திற்கு இச்சைத்வேஷ முதலிய தர்மங்களைப் போல ஆத்மஸ்வரூபமாகமாட்டாதாத

சுருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

லாலும், ஆத்மதர்மமான ஞானமே ஆத்மா வென்று சொன்னாலும் அந்த ஞானம் புருஷார்த்தத்தை அர்த்திக்க மாட்டாதாகையால் அதற்கு புருஷார்த்தத்தை உடையது என்கிற ஸம்பந்தம் ஒட்டாதாகையாலும் ஞானத்திற்கு ஞாதாவின் நிவ்ருத்தி புருஷார்த்தம் என்பது ஸம்பவிக்காது. புருஷனால் அர்த்திக்கப்படுவதல்லவா புருஷார்த்தமாகும். ஞானம் ஆத்மாவாகு மென்றும், புருஷார்த்தத்தை யடைவதாகு மென்றும் ஒப்புக் கொண்டாலும் ஞானத்தை யபேக்ஷித்து ஞாதாவின் நிவ்ருத்தி புருஷார்த்தமாகு மென்பது அயுக்தம். ஏனெனில்; ஞானத்தைக் குறித்து ஞாதா தக்கம் தக்க காரணங்கள் இவைகளுக்குள் ஒன்று ஆகமாட்டானே. ஸுக துக்கங்களை யனுபவிக்கும் போக்தாவைக் குறித்து ஸுகமும் அதன் காரணங்களும் துக்க நிவ்ருத்தியும் தக்க ஹேதுக்களின் நிவ்ருத்தியும் அல்லவா புருஷார்த்தமாகும். ஞானத்திற்கு ஞாதா துக்கரூபனல்லவே; துக்கத்தை யுண்டு பண்ணுகிறவனுமல்லவே. ஞானம் துக்கத்திற்கு போக்தா வென்பது அஸம்பாவிதமாயிற்றே. ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளே போதிப்பதால் ஸாஸ்த்ரம் ப்ரயோஜன முடையதாகு மென்கிற கக்ஷித்யான நியோகவாதச்சை எதிர்க்கும் பொழுது உம்மாலேயே நிரஸிக்கப் பட்டது. ஆகையால் ஸாஸ்த்ரத்திற்கு நீங்கள் சொல்லுகிறபடி ப்ரயோஜனத் தன்மை ஒட்டமாட்டாது.

யாதவப்ரகாசரைச் சேர்ந்தவர்கள் தாபத்ரயங்களால் அடிபடுவதை அறிந்து கொண்டபிறகு அதை சமனம் செய்வதற்கு சமனம் செய்யக் கூடிய உபாயத்தில் புருஷனுடைய ப்ரவ்ருத்தி உண்டாகும் என்கிற காரணத்தாலேயே ப்ரஹ்மம் ஒன்றே விசாரிக்கப்பட வேண்டும். ப்ரதானம் முதலியவை விரும்பி யறியத்தக்கவையல்ல என்று முதல் ஸூத்ரத்தின் அர்த்தத்தை வர்ணிக்கிறார்கள். ப்ரஹ்மம் ஜிஞ்ஞாஸ்ய மாகட்டும். அதனால் ப்ரதானம் முதலியதற்கு ஜிஞ்ஞாஸ்யத்வம் இல்லை யென்பது ஏற்படாது. ஏனெனில்; அவைகளுக்குள் ஒன்று தான் ப்ரஹ்ம சப்தத்தின் பொருளாகும். ஸாஸ்த்ரத்தினால் ப்ரஹ்ம மென்னும் ஒரு பொருளை அனுவாதம் செய்து அதன் ஞானம் விதிக்கப்படுகிறது. ஒரே வாக்யத்தால் ஒரே பொருளை அனுவதித்தல், விதித்தல் என்கிற இரண்டு கார்யமும் செய்யப்படுவ தென்பது கூடாது அனுவாதமென்பது வேறு ப்ரமாணத்தை அபேக்ஷிக்கும். பல வாதிகளால் என்னென்ன தத்வப்ரகாரங்கள் காரணப்பொருளாக ஊஹிக்கக் கூடியதோ, ப்ரமாணந்தரங்களைக்கொண்டு அவை யெல்லாம் கல்பிக்கப் பட்டிருப்பதால் அவற்றைக் காட்டிலும் வேறுதத்வம் காரணமாயிருக்கலாம் என்று உத்ப்ரேக்ஷிப்பது அஸாத்யம். ஆகையால் அவர்கள் சொல்லியிருக்கும் பொருள்களில் ஒன்றை அறிய வேண்டுமென்று விதிப்பதற்காக ஸாஸ்த்ரத்தால் அனுவாதம் செய்யப்படுகிறது என்கிற சங்கையைப் பரிஹரிப்பதற்காக ஜன்மாதி ஸூத்ரம் ப்ரவ்ருத்தித்தது. கேவலம் ஸத்தாக மட்டும் இருக்கும் ஸ்வரூப முடையதும் அனேக சக்திகளோடு கூடியதும் ஒன்றேயாயும் இரண்டாவதில்லாததுமாயும் இருப்பதான ப்ரஹ்மத்தினிடமிருந்து சிதசித் ப்ரபஞ்சம் மூழுவதற்கும் ஜன்மஸ்திதிலயங்கள் ப்ரதிபாதிக்கப்பட வேண்டும். ஆகையால் இப்படிப்பட்ட தத்வம் மற்ற வாதிகளால் ஊஹிக்கப் படாததால் அவர்களால் கல்பிக்கப்பட்ட காரணப்பொருள்களில் ஒன்று ப்ரஹ்ம சப்தத்தின் அர்த்தம் என்று சொல்லுவது அயுக்தம் என்று ஜன்மாதி ஸூத்ரத்தின் அர்த்தத்தைக் கூறினார்கள். இப்படிக்காணால் வேறு ப்ரமாணத்தால் ப்ரஹ்மம் ஸித்தியாததால் அதை எப்படி சாஸ்த்

சந்தப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

ரம் அனுவாதம் செய்யும் என்று ஸங்கை வர அதற்குப் பரிஹாரமாக "ஸாஸ்த்ரயோ நித்வாத்" என்று ஸூத்ரகாரர் கூறுகிறார். உபநிஷத்துகளுக்குள்ளேயே ஒரு வாக்யத்தால் ப்ரதிபாதிக்கப் பட்டதை இன்னொரு வாக்யத்தால் அனுவாதம் செய்வது யுக்தமே. வேறு ப்ரமாணங்களால் முன்பு ஒருக்காலும் முகர்ந்து பார்க்கப் படாத வஸ்துவை ப்ரதிபாதனம் செய்யும் ஸாமர்த்ய முடையது என்பது வேதசப்தத்தின் மஹிமை யென்று ஸூத்ரதாத்பர்யத்தைச் சொல்லுகிறார்கள். அப்படிக்கிருந்தாலும் ஸித்தமான பொருளில் ஸப்தத்திற்கு வ்யுத்பத்தியில்லாததாலும், ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளே போதிக்காத வாக்யத்திற்கு ப்ரயோஜனமில்லாததாலும், ப்ரஹ்மம் ஸாஸ்த்ர ப்ரதிபாத்யமாகாது என்பதைப்பரிஹரிப்பதில் நோக்குடையது ஸமன்வய ஸூத்ரம் என்று வ்யாக்யானம் செய்கிறார்கள். இப்படி அர்த்தம் சொல்லும் அவர்கள் பக்ஷத்தில் முதல் ஸூத்ரத்தில் மூன்று விதமான தர்க்கங்களால் அடிபடுவதின் ஞானம் "அத" என்கிற முதல் ஸப்தத்தால் சொல்லப்படுகிற பூர்வ வ்ருத்தம் என்பதை முன்பே ப்ரதிக்ஷேபம் செய்தோம். 'ப்ரத்யக்ஷம் முதலியதால் அப்படித் தெரிவதினால்' என்று நீங்கள் சொல்ல விரும்பினால் தர்க்கத்தில் தவறுவதற்குப் பரிஹாரம் ஆயுர்வேதம் முதலியதால் ஸித்திக்கக் கூடுமே—ஸ்வர்க்கம் முதலியதும் தாபத்ரயங்களுக்குள் சேர்ந்ததாகு மென்கிற ஞானம் ஸாங்க்ய ஸாஸ்த்ரம் முதலிய வேதாந்தங்களைக் காட்டிலும் வேறான ஸாஸ்த்ரத்திலிருந்து ஏற்படுகிற தென்றால்; 'மோக்ஷத்தின் உபாயமும் அந்த ஸாங்க்யாதி ஸாஸ்த்ரங்களிலேயே ஸுலபமாகக் காண்பதால் வேதாந்தங்களின் அபேக்ஷையில்லாமற் போகுமாதலாலும், வேதத்தால் ஸ்வர்காதிகளும் தாபத்ரயங்களில் சேர்ந்தது என்கிற ஞானம் ஏற்படுகிறதென்று சொல்லுவதே யாஞல் கர்ம விசாரத்தின அபேக்ஷை அப்படிக்கொத்த ஞானம் ஏறபடுவதற்கு அவஸ்யமான படியால், கர்ம விசாரம் அவஸ்யமான பூர்வ வ்ருத்தம் என்று ஒப்புக்கொள்ள வேண்டி வருமானபடியாலும்' என்கிற காரணங்களைக் காட்டி முன்பு ப்ரதிக்ஷேபம் செய்திருக்கிறோம். ப்ரதானம் முதலியது ஜிக்ஞாஸ்யமல்ல வென்று காட்டுவதில் முதல் ஸூத்ரத்திற்கு நோக்கு என்று சொல்லுவதையும் முன்பே நிரஸித்தோம். ஸ்ருதிக்கு விரோத மில்லாத அம்ஸங்களில் ஸாங்க்யம் முதலிய ஸாஸ்த்ரங்கள் உங்களால் அங்கீகரிக்கப்படுவதாலும், ஸ்ருதிக்கு விருத்தமான அம்ஸங்களில் அந்த ஸாஸ்த்ரங்களுக்கு அப்ராமாண்யம் பூர்வ மீமாம்ஸையிலுள்ள விரோதாதிகரணந்யாயத்தால் ஏற்படுவதாலும், அந்த ஸாஸ்த்ரங்களில் சொல்லும் ப்ரமேயங்கள் நல்லனவல்ல வென்று தர்க்க பாதத்தில் காட்டப் போகிற படியாலும், வேதாந்த வாக்யங்கள் ப்ரதாநம் முதலியதை காரணமாக ப்ரதிபாதிக்க வில்லை யென்பதை ஈக்ஷத்யதிகரணம் முதலியதில் சொல்லப்போவதாலும், செய்ததையே மறுபடியும் ஸூத்ரம் செய்கிற தென்கிற தோஷம் வருமாதலாலும், ப்ரதானம் முதலியதின் ஜிக்ஞாஸ்யத்வத்தை முதல் ஸூத்ரம் நிஷேதிக்கிறது என்று வ்யாக்யானம் செய்யக் கூடாதென்று முன்பு நாம் நிரஸனம் செய்த ப்ரகாரம். மற்றவாதிகளால் சொல்லப்படும் ப்ரகாரமல்லாமல் அதற்கெல்லாம் விலக்ஷணமாக உபநிஷத்து ப்ரதிபாத்யமான காரணப் பொருள் இருப்பதால் மற்ற வாதிகளால் கல்பிக்கப்பட்ட ப்ரதானம் முதலிய தத்வங்களில் ஒன்றைக் காரணத்தைச் சொல்லும் ப்ரஹ்ம ஸப்தம் போதிக்கலாம் என்கிற ஸங்கையை நிராஸம் செய்வது ஜன்மாதி ஸூத்ரத்தின் கார்யம் என்று சொல்லுவது அயுக்தம். ஏனெனில்; ஸ்ருஷ்டி கர்த்ருத்வம் முதலிய விஸேஷண பேதங்களால் விஸேஷ்யமான

ச்ருதப்ரகாசிகை தமிழ் மொழிபெயர்ப்பு—

ப்ரஹ்மமும் பிந்நமாகுமோ வென்கிற ஸங்கையைப் பரிஹரிக்காவிட்டால் அத்விதீய மான ஒரு வஸ்து ஸமஸ்த ஜகத்துக்கும் காரணமாகும் என்று ப்ரதிபாதிப்பது ஒட் டாமற் போகும். புறச்சமயிகள் கல்பிக்கும் தத்வங்களைக் காட்டிலும் வேதாந்தங் களால் ப்ரதிபாதிக்கப்படும் தத்வத்திற்குள்ள வைலக்ஷண்யம் சித சித் ப்ர பஞ்சத்திற்கு அத்விதீயமான காரணப் பொருளாவதிலுலே யென்றல்லவோ நீங்கள் சொல்லுவது. வேதாந்தங்களால் அறியப்பட வேண்டிய தத்வத்திற்கு நீங்கள் சொல்லுகிறபடி ப்ரக்ருதி முதலியதைக் காட்டிலும் உள்ள வைல க்ஷண்யம் ஈக்ஷத்யதிகரணம் முதலியவைகளில் சொல்லும் ந்யாயங்களின் உதவி யில்லாமல் ஸித்திக்க மாட்டாது. இந்த ஜந்மாதி ஸூத்ரத்தில் பின்னல் அந்த அதிகரணங்களில் சொல்லப்போகிற ந்யாயங்களைத்தவிர வேறு ஒரு ந்யாயத்தையும் இங்கே சொல்லாததாலும் மேலதிகரணங்களில் சொல்லப்போகிற பூர்வபக்ஷ யுக்திகளுக்கு அங்கே சொல்லப்போகிற ந்யாயங்களின் உதவி யில்லாமல் பரிஹாரம் செய்வது அஶக்யமாகையாலும், இந்த ஜந்மாத்யதிகரணத்தில் ப்ரதாநா திகளின் காரணத்வத்தை ஸூத்ரகாரர் நிரஸிக்கிறார் என்று சொல்ல வொண்ணாது; பின்னல் சொல்லப் போகிற ந்யாயங்களே உபஜீவித்து இங்கே ப்ரதாநாதி தத்வங் களைக் காரணப் பொருளான ப்ரஹ்மமல்ல வென்று நிரஸிக்கிறார் என்று சொன்னல். அந்த அதிகரணங்களிலேயே வேதாந்த ப்ரதிபாத்யமான காரணப் பொருளுக்கு ப்ரதா நாதிகளைக் காட்டிலும் வைலக்ஷண்யமும், ப்ரதாநாதிகள் ஜிக்ஞாஸ்யமல்ல வெனறும் ஸித்திப்பதால் செய்ததையே செய்கிறதென்கிற க்ருதகரத்வமென்னும் தோஷம்வரும். ஒரு வேதாந்த வாக்யத்தால் ப்ரதிபாதிக்கப்பட்ட ஒரு பொருளே வேறு வேதாந்த வாக்யத்தால் அநுவாதம் செய்வது ஸம்பவிக்கலாம் என்பதை ஶாஸ்த்ர யோந்யதிகரணம் ஸாதிக்கிறது என்று சொல்லுவதும் அயுக்தம். ஏனென்றால் அதுவும் க்ருதகரமே. (செய்ததையே திருப்பி செய்வதாகும்). "அக்நிஹோத் ரத்தை ஹோமம் செய்கிறான்" என்கிற ஶ்ருதிவாக்யத்தால் விதிக்கப்பட்ட ஹோமம் "தயிரைக் கொண்டு ஹோமம் செய்கிறான்" என்கிற வேறு ஶ்ருதி வாக்யத்தால் அநுவாதம் செய்யப்படுகிறது என்பது மூன் காண்ட மாகிய கர்ம காண்டத்திலேயே ப்ரஸித்தம். ஆக்நேயம் முதலிய ஆயாகங்கள் அவைகளுக்குள்ள உத்பத்தி வாக்யத்தால் விதிக்கப்பட்டதை "யவன் இப்படி அறிந்து (வித்வானாக) பௌர்ணமாஸீ என்பதை யஜனம் செய்கிறானே, எவன் இப் படி யறிந்து அமாவாஸ்யையை யஜனம் செய்கிறானே" என்கிற ஶ்ருதிவாக்யங்கள் அனுவாதம் செய்கின்றன வென்பது அங்கங்கே பூர்வ மீமாம்ஸா ஶாஸ்த்ரத்தில் ப்ர ஸித்தம். ஆகையால் வேறுவேறு வாக்யங்களால் விதிப்பதும், அனுவாதம் செய்வதும் ஸம்பவிக்கலாம் என்பதை இங்கே சொல்லிக்கொடுக்க வேண்டிய அவசியமில்லை. ஸமந்வய ஸூத்ரம் வேதாந்தங்களுக்கு ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ரூபமான ஆகார மில் லா விடினும், வேதாந்த ஶாஸ்த்ரங்களான வாக்யங்கள் ப்ரயோஜன முள்ளவைதான் என்பதை ப்ரதிபாதிப்பதில் நோக்குடையது என்று நீங்கள் வர்ணிப்பது எங்களுக்கு இஷ்டமே. ஆனால், அந்த ஸமந்வய ஸூத்ரத்திற்கு ஸித்தமான பொருள்களில் ஶப் தத்திற்கு வ்யுத்பத்தி உண்டு என்பதை ப்ரதிபாதிப்பதிலும் நோக்குண்டு என்று நீங் கள் சொல்லுவது அயுக்தம். ஏனென்றால், ஸித்தமான பொருள்களில் ஶப்தத்திற்கு வ்யுத்பத்தி, முதல் ஸூத்ரத்தாலேயே ஸமர்த்திக்கப்பட்டுவிட்டது. அந்த ஸூத்

ரத்தில் அதை ஸமர்த்திக்காமல் நீங்கள் சொல்லுகிறபடி அர்த்தம் சொன்னால் அந்த ஸூத்ரம் வ்யர்த்தமாகு மென்பதை முன்பே உபபாதகம் செய்தோம். ஸித்தமான பொருளொன்றிலும் ஸப்தத்திற்கு ஸக்தியில்லை யென்று சொல்லும் கக்ஷியை நிரஸித்து ஸப்தத்திற்கு ஸித்தமான பொருளில் ஸக்தியை ஸமர்த்திக்காவிட்டால் ஸித்தமான மற்றப் பொருள்களைக் காட்டிலும் வைலக்ஷண்யம், ஸித்தமான பொருளே விதானம் செய்து பிறகு அநுவாதம் செய்வது, ஸித்தமான பொருளே ஸ்வயம் ப்ரயோஜனமாவது முதலிய விஷயங்களை நிரூபணம் செய்வதற்கு இடமேயில்லாமற்போகுமாதலால் ஜைமாதி ஸூத்ரம் தொடங்கிய மூன்று ஸூத்ரங்கள் கிளம்புவதற்கு ஸித்தமான பொருள்களில் ஸப்தத்திற்கு வ்யுத்பத்தி முன்பே நிரூபிக்கப் பட்டிருக்க வேண்டியது அவஸ்யமாகையாலும், நீங்கள் சொல்லுகிறபடி பின்னால் நான்காவது அதிகரணத்தில் ஸாதிக்கப் போகும் ஸித்தே வ்யுத்பத்தியை யுபஜீவித்து முன்னதிகரணங்கள் கிளம்புகின்றன வென்று சொன்னால் அறிவு ஸஹஜமாய் ஏற்படக் கூடிய க்ரமத்திற்கு அழகாய் ஒவ்வாதாகையாலும், முதல் சூத்ரத்தில் அவஸ்யமாய் அபேக்ஷிக்கப்படும் ஸித்தே வ்யுத்பத்தியை விதிப்பதை விட்டு விட்டு அபேக்ஷிக்கப்படாத அர்த்தத்தை விதிப்பதாகச் சொல்லுவது கூடாதாகையாலும் நீங்கள் வர்ணிக்கும் ஸூத்ர வ்யாக்யானக்ரமம் அழகல்ல. ஆகையால் நான்கு ஸூத்ரங்களுக்கும் ஸ்ரீபாஷ்யகாரரால் ஸாதிக்கப்பட்ட அர்த்தங்களே விளக்குவதில் நோக்கு என்பதுதான் உசிதம்.

ஸமந்வயாதிகரணம்

முற்றிற்று.

கூரகுலாதிபர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸமந்வயாதிகரணச்சுருக்கம்.

இந்த அதிகரணத்தோடு முகவுரை என்கிற பேடிகை முடிகிறது. மூன்று பேடிகைகள் அடங்கிய இந்த முதல் பாதத்தில் முதல் நான்கு ஸூத்ரங்கள் முகவுரை என்னும் முதல் பேடிகை. ப்ரக்ருதமான வேதாந்த மீமாம்ஸா சாஸ்த்ரத்தின் ஆரம்பத்தை ஆக்ஷேப நிரஸந பூர்வகமாக விளக்கிக் கச்செய்யும் ப்ரயோஜனத்தை யுடையது உபோத்காதம் என்னும் முதல் பேடிகை. வேதாந்த வாக்யங்களைக்கொண்டு ப்ரஹ்மஸ்வரூபாதிகளைப்பற்றி விசாரிக்கக் கோரித் தொடங்கப்படும் இந்த ஸாஸ்த்ரம் ஆரம்பிக்கத்தக்கதல்ல; கர்மகாண்டத்தைப்போல் வேதாந்த வாக்யங்கள் பயனைக் கொடுக்கும் ஒரு கார்யத்தைச் செய் என்றுவது, நிங்கை விளைவிக்கக்கூடிய தீய செய்கைகளை விலக்கென்றுவது உபதேசிக்காததால் அவை சொல்லும் பொருளில் அவற்றிற்கு ப்ராமாண்யம் இல்லாததால் என்று இப்படி பூர்வ மீமாம்ஸகர் எனப் பெயர் கொண்ட ஓர் பூர்வபக்ஷி செய்யும் ஆக்ஷேபத்தை நிரஸித்து வேதாந்த வாக்யங்கள் பரம ப்ரயோஜனமான ப்ரஹ்மமென்னும் ஆனந்தப்பொருளையும் அதன் ஸ்வபாவம் ஸம்பந்தம் முதலியதையும் விளக்கிக்கொண்டு தாம் சொல்லும் பொருளில் பூர்ணமான தாத்பர்ய ப்ராமாண்யமும் உடையன; ஆகையால் வேதாந்த வாக்யங்களைக்கொண்டு ப்ரஹ்மஸ்வரூபத்தைப்பற்றி விசாரிக்கும் இந்த ஸாஸ்த்ரம் ஆரம்பிக்க யோக்யமானதே யென்பதை இந்த ஸமந்வயாதிகரணத்தில் ஸாதிப்பதால் இவ்வதிகரணம் இந்த முகவுரை பேடிகையில் நன்ருய்ச் சேரும். வேதாந்த வாக்யங்களுக்கெல்லாம் ப்ரஹ்மத்தினிடத்தில் தாத்பர்யமாக ஒட்டுவதென்னும் ஸமந்வயத்தை இங்கே ஸமர்த்திப்பதால் இந்த ஸமந்வயாத்யாயத்தில் இவ்வதிகரணம் ஸங்கதமென்பது திண்ணம். ஸமந்வயாத்யாயத்தில் ஸமந்வயாதிகரணம் நன்ருய் ஸங்கதமே, ஸமர்விதமே. "இந்த ஜகத்தின் ஜந்மம் ஸ்திதி முதலியவைகள் எதிலிருந்து, எதனால், லித்திக்கின்றனவோ" என்னும் ப்ரஹ்மலக்ஷணத்தைப் பணிக்கும் வேதாந்தவாக்யம் ப்ரஹ்மத்தினிடத்தில் தாத்பர்யத்தோடு ப்ராமாண்யமுள்ளதே யென்பதை இங்கே ஸமர்த்திப்பதால் இம் முதல் பாதத்தில் இவ்வதிகரணம் ஸங்கதியுடைத்து. வேதாந்தத்திலுள்ள ஜகத் காரணத்தைப்பற்றிய லக்ஷண வாக்யம் ப்ரஹ்மத்திற்குப் பொருந்தாது என்னும் ஆக்ஷேபங்களைப்

பரிஹரீத்து ப்ரஹ்மத்திற்கு அந்த லக்ஷணம் பொருந்தும் என்று ஸமர்த்திப் பது இந்த முதல் பாதத்தின் கார்யம். இதற்கு முன் அதிகரணமான ஸாஸ்த்ர யோநித்வாதிகரணத்தில் ப்ரஹ்மம் வேதாந்த ஸாஸ்த்ரத்தால் அறி விக்கப்படுவதில் யாதொரு தடையுமில்லை யென்று ஸாதித்தார். ஸாஸ்த்ரம் தவிர மற்றப்ரமாணங்களாலேயே காரணப்பொருள் அறிவிக்கப்படுகிறதென் றும், அதைத் தெரிந்துகொள்ள ஸாஸ்த்ரம் வேண்டாம் என்றும் அபூர்வமல் லாத பொருளை ஸாஸ்த்ரம் அறிவிக்க ஸக்தியற்றது என்றும், அங்கே ஆக்ஷே பங்கள் செய்யப்பட்டு வேறு ப்ரமாணமான அனுமானம் முதலியதால் ப்ரஹ் மம் விளக்கிக்காதென்று காட்டி ஸாஸ்த்ரம் ப்ரஹ்மம் என்ற காரணப் பொருளை அபூர்வமாக அறிவிப்பதால், ஸாஸ்த்ரம் ப்ரஹ்மவிஷயத்தில் ப்ரமா ணமே, ப்ரஹ்மத்தை ஸாஸ்த்ரத்தைக்கொண்டுதான் அறியவேண்டும் என்று ஸாதிக்கப்பட்டது. அங்கே செய்யப்பட்ட தீர்மானத்தின்பேரில் இங்கே மற்றோர் காரணத்தையிட்டு ஆக்ஷேபம் செய்யப்படுகிறது. முன் அதிகர ணத்தோடு இந்த ஸங்கதியை ஆக்ஷேப ஸங்கதி யென்பர். ஒரு பொருளில் வேத வாக்யங்களுக்கு தாத்பர்யம் உண்டோ இல்லையோ வென்று கண்டு பிடிக்க தாத்பர்ய லிங்கங்கள் என்ற சில அடையாளங்கள் உண்டு. மற்றொரு ப்ரமாணத்தாலும் அறிவிக்கப்படாத அபூர்வ விஷயமாயிருப்பது அபூர்வத் வம் என்கிற ஓர் தாத்பர்ய அடையாளம். சொல்லும்பொருள் ப்ரயோஜனம் உடையதாயிருப்பது பலம் என்று பெயரையுடைய மற்றோர் தாத்பர்ய அடை யாளம். முன்னதிகரணத்தில் அபூர்வத்வம் என்னும் அடையாளம் விளக்கப் பட்டது. இங்கே ப்ரயோஜனமுடைமை என்னும் தாத்பர்ய அடையாளம் காட்டப்படுகிறது. இவ்வழியாலும் முன்னதிகரணத்தோடு இவ்வதிகரணம் ஸங்கதம்.

இங்கே ஆக்ஷேபிக்கும் பூர்வபக்ஷி குமாரிலபட்டருடைய பூர்வ மீமாம்ஸா க்ரந்தங்களை யனுசரித்த மீமாம்ஸகர். அவர் ப்ரபஞ்சம் பொய் யல்ல, மெய்யேயென்றும், ஆத்மாக்கள் பல வென்றும் ஒப்புகிறவர். ஆனால் வேதத்திலுள்ள கர்மவிதிகள், கர்ம நிஷேதங்கள் ஆகிய ஆக்ஞா பாகங்கள் தான் தாம் சொல்லும் பொருளில் ஸ்வயமாய், ஸ்வதந்த்ரமாய் முழுக்கருத் தடைய ப்ரமாணமென்றும், ப்ரம்மமென்னும் முன்பேயுள்ள ஒரு வஸ்துப் பொருளைப்பற்றி கதைகள் பேசும் வேதாந்த வாக்யங்கள் ப்ரஹ்ம விஷயத் தில் உட் கருத்துள்ள ப்ரமாணமல்ல வென்றும், இல்லாததைச்சொல்லிக் குழந்தைகளுக்கு ஆசை காட்டி தாத்காலிக இன்பத்தைக்கொடுக்கும் வாக் யங்கள் சொல்ப சந்தோஷத்தைக் கொடுத்தாலும், சொல்லும் பொருளில் ஸத்யப்ரமாணமாக எப்படி ஆகவில்லையோ அப்படியே வேதாந்த வாக்யங்க ளும் சொல்லும் பொருளில் உண்மைக் கருத்தில்லாமலே ஆசை வார்த்தை யாகப் பேசலாமென்றும், வேதங்களில் வேதாந்த பாகங்கள் பயனற்ற ஊஷர பூமியென்றும் வாதிக்கிறார். "அபௌருஷேயமான வேதவாக்யமோ, அல்

லது நம்முடைய லௌகிக வாக்யமோ, ஓர் ப்ரயோஜனமுள்ள கார்யத்தைச் செய்யென்றுவது, தீங்கை விலக்கும் அபாயச்செய்கையைச் செய்யாதே யென்றுவது கட்டளையிட்டால்தான் அதை ஶாஸ்த்ரமென்னும் கட்டளை யென்று சொல்லலாம்." என்று குமாரிலர் ஶ்லோகம். ஶாஸனம் செய்தால் தானே ஶாஸ்த்ரம் எனக் கூடும். பயனுடைய நற்செய்கையின் ப்ரவ்ருத்தியையாவது தீய செய்கையின் நிவ்ருத்தியையாவது பேசும் ஶாஸ்த்ரபாகந்தான் ப்ரயோஜனமுடையதும் ஸ்வயம் ப்ராமாண்யமுடையதுமாகும். நற்செய்கையில் ப்ரவ்ருத்தியைக் கட்டளையிடும் விதிவாக்யங்கள் ஸ்வர்க்காதி ஸுகத்தை யடையும் உபாயத்தை யறிவிக்கின்றன. தீய செய்கைகளை விலக்கும் நிஷேத வாக்யங்கள் துக்கம் அணுகாமைக்கு உபாயத்தை யறிவிக்கின்றன. ஸுகமும் துக்கநிவ்ருத்தியும்தானே ப்ரயோஜனமாகும். கர்மகாண்டத்தில் விதி (சோதனை) யென்றும், மந்த்ரமென்றும், அர்த்தவாதமென்றும், மூன்று பாகங்கள் உண்டு. சோதனை யென்பது இதைச்செய், இதைச்செய்யாதே என்று கட்டளையிடும் வாக்யங்களை உட்கொள்ளும். இந்த வாக்யங்கள் நேராக ப்ரயோஜனமுடைய பொருளை விளக்குவதால் ஸ்வயமாய், ஸ்வதந்த்ரமாய் ப்ராமாண்யமுடையன. விதிக்கப்படும் யாக ஹோமங்களில் தேவதையை யுத்தேசித்து ஹவிஸ்ஸை ஸமர்ப்பிக்கும் போது தேவதாஸ்வரூபத்தை த்யானிக்கவேண்டிய ப்ரகாரத்தை விளக்கிக்கொண்டும், அனுஷ்டிக்கப்படவேண்டிய செய்கையின் ப்ரகாரத்தை ப்ரகாசப்படுத்திக்கொண்டும் மந்த்ரங்கள் விதி வாக்யத்தோடு ஒரே வாக்யமாகச் சேர்ந்து அதற்கு சேஷமாக ப்ரயோஜனமுடையனவாகின்றன. விதிக்கு சேஷமாக (உபகாரமாக) அதோடு அவையும் ஒரே வாக்யமாகி மந்த்ரங்களுக்கு ப்ராமாண்யம். ஸ்வதந்த்ரமாக மந்த்ரங்கள் ஸாமான்யமாய் ப்ரமாணமல்ல. அர்த்தவாதங்கள் விதிக்கும் யாகத்தையோ உத்தேஶ்ய தேவதையையோ புகழ்ந்து பேசும், அல்லது அவரிப்படிச்செய்தார், இவரிப்படிச்செய்தார் என்று கதைகளைப்பேசி விதி வாக்யத்தில் விதிக்கப்படும் செய்கை நல்லதென்று மெச்சுவதையோ விலக்கப்படும் செய்கையை நிந்திப்பதையோ காட்டும். அர்த்தவாதங்கள் பேசும் புகழ்களும் நிந்தைகளும் சொல்லும் கதைகளும் அப்படியே உண்மை யென்று கொள்ளலாகாது. விதி வாக்யம் விதிக்கும் செய்கையைத் துதிப்பதாக மட்டும் பொதுவில் ஒரு கருத்தை மாத்திரம் கொண்டு அது 'நல்லது' 'உயர்ந்தது' என்னும் ஓர் பதப்பொருளை மட்டும் அந்த அர்த்தவாதவாக்யங்களெல்லாம் பெற்று விதி வாக்யத்தோடு ஒரு வாக்யமாகி (பதைகவாக்யமாகி) விதியைத் துதிப்பது என்கிற ஒரு பொருளை மட்டும் வஹித்து கொஞ்சம் ப்ரயோஜனமுடையதாகி விதிக்கு சேஷமாகச் சிறிது மணம் பெறும். விதிக்கட்டளைகளல்லாமல் ப்ரஹ்மஸ்வரூபத்தைப்பற்றிக் கதைசொல்லும் வேதாந்த வாக்யங்கள் அர்த்தவாத வாக்யங்களே. பூர்வ காண்டத்திலுள்ள அர்த்தவாதங்களைப்போலவே இந்த வேதாந்த அர்த்தவாதங்களுக்கும் சொல்லும் பொருளில் தாத்பர்யமும் ப்ராமாண்யமுமில்லை. கட்டளை ரூப மல்லாததால் ப்ரயோஜனமும் இல்லை. ப்ரத்

யக்ஞம் என்னும் ப்ரமாணம் யாதொரு ப்ரயத்ந மன்னியில் அனுயாஸமாக நமக்குப் பொருள்களைக் காட்டுகிறது. ப்ரத்யக்ஷ அறிவிற்கு யாதொரு ச்ரமம் வேண்டியதில்லையாதலால் அந்த அறிவு ப்ரமாணமாவதற்கு அறிவிக்கப்படும் பொருள் ப்ரயோஜனமுடையதாயிருக்கவேண்டும் என்கிற நிர்பந்தமில்லை. கல்லையும் மண்ணையும் காட்டும் ப்ரத்யக்ஷம் ப்ரயோஜனமில்லாவிடினும் ப்ரமாணமே. வேதஸாஸ்த்ரத்தை எத்தனையோ ஸ்ரமப்பட்டு நீண்ட காலம் குருகுல வாஸம் செய்து பல கஷ்ட நியமங்களோடு வேதங்களையும் அங்கங்களையும் கசடறக்கற்று அறியவேண்டியிருக்கிறது. அப்படிக் கஷ்டப்பட்டு அறியப்படும் வேதஸாஸ்த்ரம் ப்ரயோஜனமுள்ள பொருளை யறிவிக்கும் இடங்களில்தான் ப்ரமாணமென்று ஒப்பலாம். ஸுகப்ராப்தி தக்க நிவ்ருத்தி என்னும் ப்ரயோஜனங்களை யறிவிக்கும் ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ரூபமான வேத வாக்யங்கள் ப்ரமாணமாகுமேயல்லாது ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளை யறிவிக்காமல் ப்ரஹ்மமென்னும் ஓர் பொருளைப்பற்றிக் கதைபேசும் அர்த்தவாதங்கள் சொல்லும் பொருளெல்லாம் உண்மையாகாது என்று இப்படி அவர்கள் ஆக்ஷேபம்.

அவர்கள் சொல்லும் ஆக்ஷேப யுக்திகளின் சங்கிலித்தொடர் பின் வருமாறு—வெகுகாலம் கஷ்டப்பட்டு க்ரஹிக்கப்படும் வேத வாக்யங்களான ஸாஸ்த்ரம் ப்ரமாணமாவதற்கு "ப்ரயோஜனமுடைமை" இன்றியமையாதது. ப்ரயோஜனமுடையதாவதற்கு ப்ரவ்ருத்தியையாவது நிவ்ருத்தியையாவது சொல்லும் வாக்யமாக இருக்கவேண்டும். வேதாந்தங்களோ ப்ரஹ்மமென்று ஏதோ முன்பே உள்ளதாகச்சொல்லும் ஸித்தப்பொருளின் ஸ்வரூபத்தையும் ஸ்வபாவத்தையும் பற்றி கர்மகாண்ட அர்த்தவாதங்களைப்போல் கதை சொல்லுகின்றன. ப்ரஹ்மமென்பது ஸாத்யமான ஒரு கார்யமல்ல. அதைச் செய்யவும் முடியாது, விலக்கவும் முடியாது. ஆகையால் அது ப்ரவ்ருத்தியைச் சொல்லும் விதியோடாவது நிவ்ருத்தியைச் சொல்லும் நிஷேதத்தோடாவது வாக்கியப் பொருளாக ஸாக்ஷாத்தாக அன்வயிக்கக் கூடியதல்ல. இதற்கு முன்பு முதல் அதிகரணத்தில் ஸித்தமான ப்ரஹ்மமென்னும் வஸ்துவை ஸுபம் அறிவிக்க ஸக்தியுடைய தென்று நிரூபிக்கப் பட்டது. வேண்டிய மட்டும் அதைப் பேசட்டும், அறிவிக்கட்டும். அதனால் என்ன ப்ரயோஜனம். ஒரு செய்கையைச் செய்தல்லவோ ப்ரயோஜன மடையலாம். முன்பேயுள்ள ஒரு பொருளைப்பற்றிக் கதை கேட்டதால் என்ன ப்ரயோஜனம் ஸித்தித்து விடும். ப்ரஹ்மஸ்வரூப வாக்யங்கள் ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ரூப மில்லாததால் அந்த வாக்யங்களுக்கு ஸப்ரயோஜனத்வமில்லை—ஆகையால் சொல்லும் பொருளில் உண்மையான தாத்பர்யமில்லை. ஆகையால் ப்ரஹ்ம விஷயத்தில் ப்ராமாண்ய மில்லை. ஆகையால் ப்ரஹ்ம மென்பது வேதாந்த ஸாஸ்த்ரத்தைக்கொண்டு விரும்பி யறியத்தக்கது என்று சொன்ன ஜிக்ஞாஸ்யத்வம் ஸித்திக்காது. இப்படி வரும் ஆக்ஷேபத்தை இந்த ஸூத்ரம் பரிஹரிக்கிறது.

ஸூத்ரத்தின் பதப்பொருள்— "அது (முன் ப்ரஹ்மத்திற்குச்சொன்ன ஸாஸ்த்ரயோநித்வம்) (ப்ரஹ்மத்திற்கு) உள்ளவே யுள்ளவே யுள்ளது; ஏனெனில் (ப்ரஹ்மம் நன்றாக ஸ்வயம் ப்ரயோஜனமான ஸர்வோத்க்ருஷ்ட ஆனந்தமாக வேதாந்த வாக்யங்களோடு) (நேர் தாத்பர்யப்பொருளாக) அந்வயிப்பதாலே" தத் என்னும் முதற் பதம் நம் மதத்தில் "முன் ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட சாஸ்த்ரயோநித்வம்" என்பதைக் குறிக்கிறது.—"ப்ரஹ்மம் ஸாஸ்த்ர மூலமாய் அறியப்பட யோக்யம்" என்று முன் ஸூத்ரத்தில் ஸாதிக்கப்பட்டது. ஸங்கரபாஷ்யத்தில் இவ்வதிகரணத்தில் முதல் வாக்யம்—"எப்படி ப்ரஹ்மத்திற்கு ஸாஸ்த்ர ப்ரமாணகத்வம் சொல்லக்கூடும்?" என்று. அதன் வ்யாக்யானமான பாமதியில் 'ப்ரஹ்மத்தின் ஸாஸ்த்ரப்ரமாணகத்வம் முன் ஸூத்ரத்தில் ப்ரதிக்ஞையாக மட்டும் பேசப்பட்டது. அதை இந்த ஸூத்ரத்தால் ஸாதிப்பதற்காகத் தொடங்குகிறார்' என்று முதல் வாக்யம். 'ப்ரதிக்ஞை செய்யப்பட்ட ஸாஸ்த்ர ப்ராமாண்யத்தை இந்த ஸூத்ரத்தால் உபபாதிக்கிறார்' என்று மற்றோர் வ்யாக்யானம். சங்கர பாஷ்யத்தில் இவ்வதிகரணத்தில் ஸித்தாந்தத்தில் முதல் யோஜனை முடியுமிடத்தில் 'ஆகையால் ப்ரஹ்மத்திற்கு சாஸ்த்ர ப்ரமாணகத்வம் ஸித்தம்' என்று நிகமனம். இதனால் "தத்" என்னும் பகூஷ பதம் ஸாஸ்த்ர யோநித்வத்தைக் குறிக்கிறதென்பது ஸ்வரஸப்பொருளென்று தெளிவாகிறது. ஆயினும் அவர்கள் ஸூத்ரத்தின் பொருளுரையில் "தத்" என்பதற்கு 'ப்ரஹ்மம்' என்று பொருளுரைக்கிறார்கள். க்ரியை ரூபமல்லாத ஸித்தப்ரஹ்மம் விதி நிஷேதங்களுக்கு யோக்யமல்லாததால் அதைப்பேசும் வேதாந்த வாக்யங்களுக்குப் பேசும் பொருளில் தாத்பர்யமில்லை, ப்ராமாண்யமில்லை யென்ற ஆக்ஷேபத்தை 'து' என்கிற இரண்டாவது பதம் தள்ளுகிறது—"இல்லை என்பது ஒவ்வாது, ப்ராமாண்யம் உள்ளவே யுள்ளது" என்று அதன் பொருள். "ஸம்" என்பதற்கு 'நன்றாக' என்று பொருள். நன்றாக, அழகாக, நேராக, மற்றொன்றுக்கும் ஸோஷமல்லாமல் ஸ்வதந்த்ரமாக, ஸாக்ஷாத்காக, ப்ரஹ்மம் வேதாந்தவாக்யங்களின் தாத்பர்யப்பொருளாக அந்வயிக்கிறது. என்ன நன்மை? என்ன அழகு? க்ரியா ரூபமான தர்மத்தை விதிக்கும் வாக்யங்களைக் கேட்டபிறகு எத்தனையோ கஷ்டப்பட்டு எத்தனையோ த்ரவ்யம் செலவழித்து யாகத்ரவ்யங்களைச் சேர்த்து நம் ஸ்வரூபத்திற்கு அனுகூலமல்லாத, நஸ்வரமான அல்ப ஸ்வர்க்காதி ஸுகத்தை ப்ரயோஜனமாகப் பெறலாம். வேதாந்த வாக்யங்களோவென்றால், ப்ரஹ்மம் என்னும் ஆனந்தகனப்பொருள் நம் மனதிற்குள்ளேயே கோயில்கொண்டு, நமக்குப் பேரின்பத்தை அளிப்பதற்கே கங்கணம் கட்டிக்கொண்டு, நம்மை அடைக்கலங்கொண்டு நம் ரக்ஷண பரத்தை ஏற்றுக்கொள்ள நம்முடைய அபேக்ஷையையும் இசைவையும் ப்ரதீக்ஷித்துக்கொண்டிருக்கிறது என்றும், நிஜத்தமாத்ரத்திலே துக்கங்களைப்போக்கி இன்பத்தைத்தரும் இனிய உதார புருஷனென்றும், தஞ்சமாகிய தந்தை தாயொடு தானுமாய் அவையல்லனுமாவான்

என்றும், காணுமற் போன குழந்தை எப்பொழுது வருவானே, கிடைப்பானே என்று ஆவலுடன் காத்திருக்கும் பிதாவைப் போல் நம் வரவை எதிர்பார்த் திருக்கிறானென்றும், ப்ரஹ்மஸ்வரூபஸ்வபாவங்களை அறிவிக்கும் வேதாந்த வாக்யங்கள் ப்ரஹ்மத்தை ஸ்வயம் ப்ரயோஜனமான பரமானந்தப்பொருளாக வும் ஜகத்காரணமான ஜகதீச்வரப் பொருளாகவும் விளக்குகின்றன. அதன் நிஜப்பே ஸுகரூபம். "அவனை ஸ்மரிப்பதில் என்ன ஆயாஸம்? நினைத்த போதே ஸுகத்தை யளிக்குமே," என்றூர் ப்ரஹ்லாதர் தம்முடைய தோழ ரான குழந்தைகளுக்கு. அவரை அர்ச்சிப்பதற்கு த்ரவ்யச்செலவு உண்டோ? "'புரிவது புகை பூவே" "அக்ரீதை: அர்ச்யபாவாத்" என்று அப்பாசு ஸங்க்ரஹமாக ரத்னவளி. விலைக்குவாங்காத பொருள்களைக்கொண்டு பூர்ண மாய் அர்ச்சிக்கலாம். கஷ்டப்பட்டு பட்டினிகள் கிடந்து எத்தனையோ பொருட்செலவுசெய்து யாகத்தைச் செய்து ஸ்வர்க்கம் என்னும் அல்ப ஸுகத்தை யடையும் உபாயத்தை யறிவிக்கும் கர்மகாண்ட வாக்யங்கள் சொல்லும் பொருளில் ஸத்யமான ப்ராமாண்ய முடையன, அவை சிறந்த ப்ரயோஜனத்தை நமக்கு அறிவிக்கின்றன என்று மீமாம்ஸகரான உங்கள் கக்ஷி—மலையைக்கெல்லி எலியைப் பிடிக்கிறீர்கள்—அபாஸ்ரமப்பட்டு எத் தனையோ காலங்கழித்து அல்ப ப்ரயோஜனமே கிடைக்கும். அதுவும் அஸ் திரம், துக்க மிஸ்ரம். "ஸம்பாசலம்," மின்னின்னிலையில. 'பஹுளதுக்கம்' எத்தனையோ கஷ்டத்தால் ஸாத்யம், 'அநர்த்த ஹேது:' கிடைக்கும் ஸுக மும் உண்மையில் அநர்த்தமே யாகும். அல்பமும் அஸ்திரமும் அநர்த்தமு மான ஸுகத்தைக் கஷ்டப்பட்டு அடையும் உபாயத்தை அறிவிக்கும் வேத வாக்யங்களுக்கு ப்ரயோஜனத்தோடு அன்வயமுண்டென்றும், அதனால் சொல் லும் பொருளில் தாத்பர்யமும் ப்ராமாண்யமும் உண்டென்றும் சொல்லு கிறீர்கள். ஞான மாத்ரத்தால் ஸந்துஷ்டமாகி எல்லையற்ற ஆனந்தமான தன்மையை யனுபவித்து ஆனந்திக்கும்படி அருளும் அத்யுதாரமான ஆனந்த மய ப்ரஹ்மத்தை அறிவிக்கும் வாக்யங்கள் ப்ரயோஜன பர்யவஸாயி யல்ல வென்றும், சொல்லும் பொருளில் அந்த வாக்யங்களுக்கு உண்மையான தாத் பர்யம் இல்லை யென்றும் பேசுகிறீர்கள். யாதொரு ச்ரமமும் இல்லாமல் சுல பமாய் அடையக்கூடியதாயும் நினைப்பே ஆனந்தமாயும், அடையவேண்டிய பரம புருஷார்த்தமாயும், ஸ்வயம் ப்ரயோஜனமாயும், வேதாந்த வாக்யங்க ளால் அறிவிக்கப்படும் ப்ரஹ்மம் அந்த வாக்யங்களோடு உட்கருத்தாக அன்வ யிக்காமற் போமோ? "நன்றூய் ப்ரயோஜனமாக அன்வயிக்கிறது" என்று "ஸமன்வயாத்" என்னும் ஹேதுவுக்குப் பொருள். "உன் வீட்டில் நிதி யிருக்கிறது" என்று ஓர் உண்மையான ஆப்தர் சொல்லும் வாக்யம் செய்கை ரூபமல்லாவிடினும் ப்ரயோஜனமுடையதல்லவோ? அதிக ச்ரமப் படாமல் தன் வீட்டிலிருந்தே ஓர் நிதியை அடையும்படி செய்யவில்லையோ? "உனக்கு ஆண்பிள்ளை பிறந்திருக்கிறது" என்று ஒருவர் தெரிவிக்கும் வாக் யம் ப்ரயோஜனமுடையதல்லவோ? இன்பத்தையளிக்காதோ? ப்ரயோ

ஜனத்தைப் பயக்கும் ஓர் பொருளை ஒருவாக்யம் விளக்கினால் அந்த வாக்கியம் ஒரு செய்கையைச் செய்யச் சொல்லாவிடினும், முன்புள்ள விஷயப்பொருளைச் சொன்னலும், அது புருஷார்த்தத்தை பயப்பதே. கொள்ளக் குறைவிலனும், வேண்டிதெல்லாம் தருமவனுமான ஜகத் பிதாவான பொருளை யல்லவோ வேதாந்தவாக்யங்கள் அறிவிக்கின்றன. காட்டில் தவறிப்போன ராஜகுமாரன் வேடுவச்சேரியில் வளர்ந்து பின்பு சில காருணிகர் 'உன் தகப்பனார் சக்ரவர்த்தி; உன்னைக்காணுமல் ஆவலுடன் உன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்' என்று அவனுக்கு அறிவித்தால் யாதொரு ச்ரமமும் படாமல் அவன் தகப்பனிருக்குமிடம் சென்றவளவிலேயே பிதாவின் ஸகல போகங்களையும் தானும் கூட அனுபவிப்பான். ப்ரஹ்மத்தோடு தனக்கு முன்பே புத்ர ஸம்பந்தம் இருந்தும், அதையறியாமலிருந்தவனுக்கு அந்த ஸம்பந்தத்தையறிவிக்கும் தார்மிகர் வாக்கியத்தினாலேயே அவனுக்கு மஹத்தான ப்ரயோஜனம் ஸித்திக்கிறது. ஸம்பந்தத்தின் அறிவே ஸுகத்தைக் கொடுத்து அனாயாஸமாக இருவரின் பிரியமான இன்பச் சேர்க்கைக்கு ஸாதனமும் ஆகிறது.

ஸ்ரீபாஷ்யத்தில் முதலில் மீமாம்ஸகர் பூர்வ பக்ஷத்தை சுருக்கமாகக் காட்டி அதற்கு ஸித்தாந்தி சொல்லும் பரிஹாரத்தையும் சுருக்கமாகக் காட்டப்பட்டது. ஸூத்ரத்தின் பொருளையும் முதலில் ஸாதிக்கப்பட்டது. மேலே மீமாம்ஸகர் பூர்வபக்ஷத்தை மறுபடியும் விஸ்தரித்து ஓரோர் வாதமாகப் பல வாதங்களைக் காட்டி கடைசியில் மீமாம்ஸகரைக்கொண்டு அவர் பூர்வபக்ஷத்தைப் பேசச்செய்து அதன்பேரில் ஸித்தாந்தத்தை மறுபடியும் ஸாதித்து அதிகரணத்தைப் பூர்த்தி செய்யப்படுகிறது. மேலே பலவாதங்கள் வரப்போவதால் அதிகரணார்த்தம் நெஞ்சில் முதலிலேயே தெளிவதற்காக இவ் வதிகரணத்தில் மீமாம்ஸகர் பூர்வபக்ஷத்தையும் ஸித்தாந்தத்தையும் முதலிலேயே ஒருதரம் சுருக்கமாகக் காட்டப்பட்டது.

இங்கேயுள்ள வாதக்ரமங்களைப் பத்து வாதபாகங்களாகப் பிரிக்கலாம்:—

(i) (முதல் வாதம்) மீமாம்ஸகர் பூர்வபக்ஷம். ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ரூபமல்லாததால் விஷயப்பொருளான ப்ரஹ்மத்தினிடத்தில் வேதாந்தங்களுக்கு தாத்பர்யமில்லை, ப்ராமாண்யமில்லை என்று தீர்மானம் பேசப்படுகிறது.

(ii) நிஷ்ப்ரபஞ்சீகரண நியோகவாதம். ஓர் செய்கையைச் செய்யும்படி சொன்னல்தான் வேதாந்தங்களுக்கு ப்ரஹ்மஸ்வரூப விஷயத்தில் ப்ராமாண்யம் கொள்ளலாம் என்று மீமாம்ஸகர் சொல்லும் பூர்வபக்ஷக் கக்ஷியை ஒப்புக்கொண்டு வேதாந்தங்கள் ப்ரஹ்மவிஷயமான ஓர் செய்கையைக் கட்டளை யிடுகின்றன; ப்ரஹ்மத்தைத் தவிர மற்ற ப்ரபஞ்சம் முழுவதையும் இல்லை யென்ற நிணைப்பின் த்யானத்தை நீண்டகாலம் செய்து ப்ரபஞ்சத்தை சூன்யமாக்கும்படி வேதாந்தங்கள் ஓர் விதிக் கட்டளையிடுகிறதாகப் பொருள் கொள்

ளுகிறோம்; அக்கட்டளைப்படி த்யானம் (பாவனை) செய்துகொண்டேவந்தால் ப்ரபஞ்சம் தொலைந்து ப்ரஹ்மஸ்வரூபத்தோடு ஒன்றுகி ஸாஸ்வதமான பரிபூர்ணானந்தத்தையடையலாம். இந்தவாதி அத்வைதிகளைப்போல ஜகத்து பொய்யென்றும், ப்ரஹ்மம் ஒன்றே ஸத்யமென்றும், ப்ரஹ்மமாகவே ஆவதுதான் முடிவு என்றும் சுருதி சொல்லுகிறவர். இவரைப் பழைய மாயாவாதிகளில் ஒருவர் என்று சொல்லுவர். மீமாம்ஸகர் விதிவாக்யமாய் இருந்தால்தான் வேத வாக்யங்களுக்கு ப்ராமாண்யம் ஏற்படும் என்று சொல்லும் சுருதியை ஒப்புக் கொண்டு ப்ரபஞ்சத்தை நிஷ்ப்ரபஞ்சமாய்ச் செய்யவேண்டும் என்று ஓர் விதியை வேதாந்தங்களிலிருந்து ஏற்படுத்திக்கொண்டு அந்த வழியாக அத்விதிய ப்ரஹ்மவிஷயத்தில் வேதாந்தங்களுக்கு தாதபர்யத்தையும் ப்ராமாண்யத்தையும் ஸ்தாபித்திருக்கிறார்கள்.

(iii) நிஷ்ப்ரபஞ்சீகரண நியோகவாதத்தை மீமாம்ஸகர் எதிர்த்து அதை நிரஸிக்கிறார்.

(iv) அதற்குமேல் த்யானநியோகவாதி என்னும் மற்றோர் பழைய மாயாவாதியின் வாதம் கிளம்புகிறது: அவரும் ப்ரபஞ்சம் பொய்யென்றும், ப்ரஹ்மம் ஒன்றே ஸத்யமென்றும் சொல்லுகிறார். ஆனால் அவர் ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ரூபமல்லாவிடில் வேதவாக்யங்கள் ஸ்வதந்த்ரமாக ப்ரமாணமாக மாட்டா என்பதை ஒப்புக்கொண்டு ப்ரஹ்மத்யானத்தை வேதாந்தங்கள் விதித்துக் கட்டளையிடுகின்றனவென்றும், அந்த த்யானவிதியை அனுஷ்டித்து அதனால் உண்டாகும் அத்ருஷ்டபக்தியால் பந்தங்கள் தொலைந்து மோக்ஷம் வித்திக்கும் என்கிறார்கள். ஸங்கர பாஷ்யத்தில் மூன்றுவது அத்யாயத்தில் உபயலிங்காதிகரணத்தில் நிஷ்ப்ரபஞ்சீகரண நியோகவாதத்தை விஸ்தாரமாகக் காட்டி, அதை நிரஸித்துளது. த்யானநியோகவாதத்தை இந்த ஸமன்வயாதிகரணத்தில் ஓர் பூர்வபக்ஷமாக விஸ்தாரமாகக் காட்டி, அதைப் பரிஹரித்துத் தம்முடைய அத்வைத பக்ஷத்தை ஸ்தாபித்திருக்கிறார். வேதாந்தங்கள் முக்தமான பரப்ரஹ்மத்தின் த்யானத்தை விதிப்பதாக அத்வைதத்தில் ஒப்புகிறதில்லை. விதியை ஒப்புக்கொண்டால் அந்த விதியை அனுஷ்டிப்பதால் ஓர் அத்ருஷ்ட பக்தி உண்டாவதை ஒப்புக்கொண்டே தீரவேண்டும். அத்ருஷ்ட பக்தியை ஒப்புக்கொண்டால் அதனால் நீங்கும் பந்தமாகிய ப்ரபஞ்சம் ஸத்யமென்று ஏற்பட்டுவிடும். ஸேது தர்ஸனத்தால் பாபம் தொலைவது அத்ருஷ்ட பக்தியாலே. அத்ருஷ்ட பக்தியால் தொலையும் பாபங்கள் மித்யையல்ல தத்வ ஜ்ஞானத்தால் மட்டும் தொலைவதாயிருந்தால், ப்ரபஞ்சம் பழுதைப் பாம்பைப்போலே பொய்யாகலாம். அத்ருஷ்டத்தை ஒப்புக்கொண்டால் அதனால் தொலையும் ஸம்ஸாரம் பொய்யாகாமல் ஸத்யமாகுமேயன்று பயந்து அவர்கள் ப்ரஹ்ம ஜ்ஞானத்தைப் பற்றி விதியை ஒப்புகிறதில்லை. ஸங்கர பாஷ்யத்தில் இவ்வதிகரணத்தில் ஸ்தங்களுக்கு ஸித்தப் பொருளை ஸ்வதந்த்ரமாய்க் காட்டும் பக்தியில்லை என்று ப்ரபாகர

மீமாம்ஸகர் ஆக்ஷேபிப்பதையும் பூர்வபக்ஷமாகக் காட்டி அதைப் பரிஹரிக்கப்பட்டுளது. ஸித்தப் பொருளின் ஸத்தங்களுக்கு வ்யூத்பத்தியை ஸ்ரீபாஷ்யத்தில் முதல் அதிகரணத்திலேயே ஸமர்த்திக்கப்பட்டுளது. ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ரூபமல்லாத வேத வாக்யங்களுக்கு ப்ரயோஜனமில்லை யென்றும், அதனால் அந்த வாக்யங்களுக்கு அவை சொல்லும் பொருளில் தாத்பர்யமும் ப்ராமாண்யமும் இல்லையென்றும், அந்த பாஷ்யத்தில் இவ்வதிகரணத்தில் விஸ்தாரமாகக் காட்டப்பட்டுப் பரிஹரிக்கப்பட்டது. மீமாம்ஸகருடைய அந்த பூர்வபக்ஷத்தைப் பற்றிய ஆக்ஷேபங்களும், ஸமாதானங்களும் அனேகமாய் இரண்டு பாஷ்யங்களிலும் ஏக ரூபம். த்யானநியோகவாதியின் வாதம் ஸ்ரீசங்கருடைய அத்வைத வாதத்தைக் காட்டிலும் உயர்ந்ததென்றும், அவர்கள் யுக்திகள் பேரில் ஸங்கர பாஷ்யத்தில் கூறப்பட்ட யுக்திகள் ஸாரமல்லவென்றும் திருவுள்ளம்பற்றி ஸ்ரீபாஷ்யத்தில் த்யானநியோக வாதத்தை முதலில் உபன்யஸித்து அதற்குமேல் ஸங்கர பாஷ்யத்தில் கூறிய அத்வைத யுக்திகளைக்கொண்டு ஆக்ஷேபங்களைக் காட்டி அந்த ஆக்ஷேபங்களை த்யானநியோகவாதியைக் கொண்டு பரிஹரிக்கப்பட்டிருக்கிறது. ப்ரஹ்ம த்யானத்தை விதிக்கும் வேதாந்த வாக்யங்களுக்கு ப்ரஹ்ம விஷயத்தில் தாத்பர்யமும் ப்ராமாண்யமும் உண்டென்று த்யானநியோகவாதி ஸாதிப்பது 4-வது வாத பாகம்.

(v) த்யானநியோகவாதி பக்ஷத்தின் பேரில் இவ்வதிகரணத்தில் ஸங்கர பாஷ்யத்தில் கூறப்பட்ட அத்வைத யுக்திகளைக்கொண்டு ஆக்ஷேபித்து அத்வைதத்தைத் தீர்மானிப்பது 5-வது வாத பாகம்.

(vi) த்யாநநியோகவாதியின் பேரில் ஸங்கர பாஷ்யத்தில் கூறப்பட்ட ஆக்ஷேபங்களைப் பரிஹரித்து நவீனமான அத்வைதத்தை நிரஸிப்பது 6-வது வாத பாகம்.

(vii) பேதாபேதவாதி தன்னுடைய வாதத்தைப் பேசுகிறார். பாஸ்கரும் யாதவப்ரகாஸரும் பேதாபேதவாதிகள்.

(viii) அவர்கள் பேதாபேதவாதத்தை த்யாநநியோகவாதி நிரஸித்துத் தம் வாதத்தைத் தீர்மானிக்கிறார்.

(ix) த்யாநநியோகவாதத்தை இந்த அதிகரணத்தின் பூர்வபக்ஷியாகிய மீமாம்ஸகர் நிரஸித்துத் தம்முடைய பூர்வபக்ஷத்தைத் தீர்மானிக்கிறார்.

(x) மீமாம்ஸகர் பூர்வபக்ஷத்தை நிரஸித்து ஸித்தாந்தம் ஸ்தாபிக்கப்படுகிறது.

இங்கே வாதிக்கும் பூர்வபக்ஷிகள் 5 பேர்:—(1) பூர்வ மீமாம்ஸகர், (2) நிஷ்ப்ரபஞ்சீகரணநியோகவாதி, (3) த்யானநியோகவாதி, (4) நவீன அத்வைதவாதி, ஆதாவது ஸ்ரீஸங்கரர் அத்வைதம், (5) பேதாபேதவாதி. யாதவ ப்ரகாஸர், பாஸ்கரர் ஆகிய இருவரும் பேதாபேதவாதிகள். இருவர் வாதத்தையும் சேர்த்து ஒரு வாதமாக பேதாபேதவாதம் இங்கே உபன்யஸிக்கப்பட்டது.

I. இவ்வதிகரணத்தின் பிரதான பூர்வபக்ஷியாகிய பூர்வ மீமாம்ஸகருடைய மேல் கக்ஷி. முன்பு ஸித்தாந்தி உரைத்த பரிஹாரத்தையும் ஆக்ஷேபித்து அதற்கு மேல் கக்ஷி சொல்லுகிறார். முன்பு ஸித்தாந்தி ஒரு கக்ஷி சொன்னார். அதாவது— "ப்ரயோஜனமுள்ளதைத்தான் ப்ரமாணம் அறிவிக்கவேண்டுமென்று நிர்பந்தமில்லை. 'ப்ரயோஜனமுடைமை' ப்ரமாண்யத்திற்கு இன்றியமையாததல்ல. நமக்கு ப்ரயோஜனமற்றதும் ப்ரதிகூலமுமான தூர்கந்தம் முதலியதையும் ப்ரத்யக்ஷ ப்ரமாணம் அறிவிக்கிறதே; கல்லோலமும் மண்ணையும் காட்டும் ப்ரத்யக்ஷ ப்ரமாணம் ப்ரயோஜனமான பொருளைக் காட்டாவிடினும் ப்ரமாணந்தானே. ஸப்தமென்னும் ப்ரமாணம் எதை அபூர்வமாக உரைக்கிறதோ, உரைக்கப்படும் அப்பொருள் ப்ரயோஜனமுள்ளதல்லாவிடினும் அதை உரைக்கும் ஸப்தம் அது விஷயத்தில் ஏன் ப்ரமாணமாகாது? மற்ற ப்ரமாணங்களால் அறியாததை அறிவித்தால்தான் ஸப்தம் ப்ரமாணமாகும் என்பதை ஒப்புகிறோம். ப்ரஹ்மம் மற்ற ப்ரமாணங்களால் அறியக்கூடியதல்லவென்று முன்பே காட்டினோம். ஆகையால் ப்ரஹ்மம் நீங்கள் சொல்லுகிறபடி ப்ரயோஜனமற்றதாயினும் அதைத் தெரிவிக்கும் ஸாஸ்த்ர வாக்யம் ஏன் ப்ரமாணமாகக்கூடாது?" ஸித்தாந்தியின் இந்தக் கக்ஷியின் பேரில் பூர்வ மீமாம்ஸகர் சொன்ன பதிலாவது—"ப்ரத்யக்ஷ அறிவு நாம் ப்ரமப்படாமல், தானே யுண்டாகிறது, வேண்டாமென்றாலும் நிர்பந்தமாய் உண்டாகிறது. ஸாஸ்த்ரத்தை எத்தனையோ கஷ்டப்பட்டுத்தானே அறியவேண்டியிருக்கிறது. ப்ரயோஜனமில்லாததைக் கஷ்டப்பட்டு அறிவரோ. ப்ரயோஜனமுள்ள ஒரு பொருளைத் தெரிவித்தால்தான் ஸாஸ்த்ரத்தை அதன் விஷயத்தில் ப்ரமாணமென்று ஒப்பக்கூடும்." பூர்வ மீமாம்ஸகரின் இந்தக் கக்ஷியை ஸித்தாந்தி ஒப்புக்கொண்டார். அப்படி ஒப்புக்கொண்டதை ஆகாரமாக வைத்துக்கொண்டு அதற்கு மேல் பூர்வ மீமாம்ஸகர் கக்ஷி சொல்லுகிறார். ப்ரயோஜனத்தைக் கொடுக்கும் ஒரு காரியத்தைச் செய் என்றாலது தீங்கை விளைவிக்கும் ஒரு காரியத்தைச் செய்யாதே என்றாலது அறிவிக்கும் வாக்யங்கள்தான் ஸ்வயமாக ப்ரயோஜனமுடையனவாகும். ஸ்வர்க்கத்தைக் கொடுக்கும் ப்ரயோஜனமுள்ள யாகமென்னும் ஒரு காரியத்தை ஒரு வேத வாக்கியம் கட்டளையிட்டால் அக்கட்டளைக்கு ஸௌகர்யமாக அந்த யாகமென்னும் செய்கையை நிறைவேற்ற அவசியம் வேண்டிய தான்யம் பசு முதலிய யாக த்ரவ்யங்களையும் யாக ஹோமத்திற்கு உத்தேச்யமான ஹோம தேவதையையும் அவையெல்லாம் முன்பேயுள்ள ஸித்தப் பொருளாக இருந்தாலும் யாக விதிக்கு ஸௌகர்யமாக (உபயோகமாக) அப்பொருள்களை வேத வாக்யங்கள் அறிவிக்கலாம். அப்படி யாகவிதிகளுக்கு ஸௌகர்யமாக ப்ரஹ்மத்தை ஸாஸ்த்ரம் அறிவிப்பது உங்களுக்கு இஷ்டமில்லை. ஸ்வயமாக மற்றொன்றுக்கு ஸௌகர்யமில்லாமல் ப்ரஹ்மத்தை ஸாஸ்த்ரம் அறிவிக்கவேண்டுமென்று நீங்கள் ஆசைப்படுகிறீர்கள். வேதத்தில் தேவதைகளைப் பற்றி கதைகள் சொல்லும் பாகங்கள் அர்த்த வாதங்கள். உபநிஷத்துக்களும் ப்ரஹ்மமென்னும் ஓர் தேவதை

யைப் பற்றி கதை சொல்லும் அர்த்தவாதங்களே. அர்த்தவாதங்கள் விதிக் கட்டளைகளில் நமக்கு ருசி உண்டாவதற்காக அவ்விதி காரியத்தையோ அதற்கு ஸம்பந்தப்பட்ட தேவதையையோ ஸ்தோத்ரம் செய்து அது நல்ல தென்று புகழ்ச்சியை மட்டும் காட்டும். அர்த்தவாத வாக்யங்கள் சொல் லும் ஸ்தோத்ரப் பொருள்களெல்லாம் உண்மையென்பதில்லை. விதிக்கப் பட்ட செய்கையில் ருசியை உண்டாக்க, இல்லாததையெல்லாம் சொல்லித் தருவதுண்டு. அர்த்தவாத வாக்யங்களுக்கு அவை சொல்லும் பொருள் களிலெல்லாம் உண்மையான ப்ராமாண்யம் இல்லையென்று முன்பே பூர்வ மீமாம்ஸையில் அர்த்தவாதாதிகரணத்தில் நிர்மானிக்கப்பட்டது. ஒரு ஸந் தோஷ ஸமாசாரத்தைச் சொல்லும்பொழுது அந்த ஸமாசாரத்தைப் பற்றி ஏற்படும் அறிவுதானே இன்பமாயிருக்கிறது. ஸமாசாரம் பொய்யானாலும் அந்தப் பொய்யைத் கேட்டதினால் உண்டாகும் அறிவும் தத்காலத்திற்கு இன்பமாக இருக்குமே. இன்பமான அறிவு ஏற்படுவதனால் உள்ள ப்ரயோஜ னத்தால், பொய்யைச் சொல்லும் வாக்யம் ப்ரமாணமாய் விடுமோ! முன்பே உள்ளதான ஒரு பொருளைப் பற்றிச் சொல்லும் கதை கேட்கையில் இன்பமா யிருந்தாலும், அது உண்மையாயிருக்கவேண்டுமென்று நிர்பந்தமில்லை. ஸ்வர்க் கம் முதலிய பலன்களைக் கொடுக்கும் காரியங்களைச் செய்யும்படி விதித்தால் அந்த விதியை அனுஷ்டிப்பதால் ப்ரயோஜனம் வருவது நிச்சயம். இன்ப மாகச் சொல்லும் கதைகளான வாக்யங்கள் தத்காலம் இன்பமென்னும் ப்ர யோஜனத்தைக் கொடுத்தாலும் சொல்லும் கதையெல்லாம் உண்மையாயிருக் கவேண்டுமென்கிற நிர்பந்தமில்லை. குழந்தைகளை ஏமாற்றி ஆசை காட்டுவ தற்காக உண்மையல்லாத சங்கதிகளையும் சொல்லி இன்பமென்னும் ப்ரயோஜ னத்தை யுண்டாக்கிவிடலாம். ஆகையால் ப்ரயோஜனத்தைக் கொஞ்சம் கொடுப்பதனால் மட்டும் விதித்தப் பொருளைப் பற்றி இன்பமாய்ப் பேசும் வாக் யங்கள் ப்ரமாணமாகமாட்டாது. ப்ரவ்ருத்தியைச் சொல்லும் வாக்யங்களோ வென்றால் ப்ரயோஜனமுள்ள ஒரு காரியத்தைச் செய்து அதனால் அத்ருஷ்டத் தை ஸம்பாதித்துக் கொடுத்து ஸ்வர்க்கம் முதலிய பலன்களை அடையச் செய் யும். ஆகையால் ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ரூபமல்லாத வேதாந்த வாக்யங்கள் அவை சொல்லும் ப்ரஹ்ம ஸ்வரூபாதி விஷயங்களில் உண்மையான ப்ரமாண மாகமாட்டா. ஆகையால் விதிகளல்லாத வேதாந்த வாக்யங்களைக் கொண்டு ப்ரஹ்ம ஸ்வரூபாதிகளை உண்மையாக அறிவதாக நினைத்து இந்த வேதாந்த வாக்யப் பொருள் விசார ஸாஸ்த்ரம் ஆரம்பிக்கத்தக்கதல்ல.

II. நிஷ்ப்ரபஞ்சீகரண நியோக வாதம்:— இந்த வாதி ஓர் அத்வைத வேதாந்தி. ஜகன் மாயா வாதம் (பழைய மாயா வாதம்) என்று இரண்டு வாதங்கள் உண்டு. அதில் ஒன்று இந்த நிஷ்ப்ரபஞ்சீகரண நியோக வாதம். இதை கௌட மீமாம்ஸகர் வாதம் என்பர். ஸாலிகாநாதர் என்பவர் இயற்றிய 'ப்ரகரண பஞ்சிகை' முதலிய க்ரந்தங்களில் இந்த வாதம் ஆஸ்ரயிக்கப்பட்டி

ருக்கிறதென்பர். மற்றொரு பழைய மாயா வாதம் த்யானநியோகவாதம் எனப்படும். அந்த வாதத்தை மண்டனமிஸ்ரர் தம் க்ரந்தங்களில் விளக்கியிருக்கிறார். இவ்விரண்டு வாதிகளும் ஓர் செய்கையை விதித்தால்தான் வேதாந்த வாக்யங்கள் சொல்லும் விஷயத்தின் ப்ராமாண்யம் ஸ்வயமாக ஏற்படக்கூடும் என்று மீமாம்ஸகர் சொல்லும் நிர்பந்தத்தை ஒப்புக்கொண்டு வேதாந்தங்கள் ப்ரஹ்ம விஷயத்தில் ஓரோர் விதமாய் விதிகளைப் பேசுகின்றதென்று காட்டி அந்த வகையில் வேதாந்தங்களுக்கு ப்ரஹ்ம ஸ்வரூபாதி விஷயங்களில் ப்ராமாண்யத்தை ஸாதிக்கிறார்கள். நிஷ்ப்ரபஞ்சீகரண நியோக வாதத்தை ஸ்ரீ ஸங்கரர் தம் பாஷ்யத்தில் உபயலிங்காதிகரணத்தில் விரிவாக உபன்யஸித்து நிராகரித்திருக்கிறார். ஸ்ரீ பாஷ்யாதி ஸித்தாந்த க்ரந்தங்களிலும் அந்த வாதத்தை நிரஸிக்கும் ப்ரகாரம் ஸ்ரீ ஸங்கர பாஷ்யத்தின் க்ரமத்தைப் போன்றதே. தத்வமுக்தாகலாபத்திலும், ஸர்வார்த்த ஸித்தியிலும் மற்ற க்ரந்தங்களிலும் பின் வருமாறு இந்த வாதம் ஸங்க்ரஹிக்கப்பட்டது. "ஆகாயத்தில் விசித்ர வர்ணங்களான மாட மாளிகைகளும் நகரங்களும் வெறுந் தோற்றமாகத் தோன்றுவதுண்டு. ஆகாயம் அந்த வெறுந் தோற்றமான கந்தர்வ நகரங்களோடு கூடியது (அவற்றோடு ஸத்விதீயம்) என்று காணுகிறவு ஏற்படுவதுபோல வெறுந் தோற்றமான நம் புத்திமாத்ர கல்பித ப்ரபஞ்சமாகிய இரண்டாவது பொருளோடு கூடியதாக ஆகாயம்போல எங்கும் பரந்ததும் உருவமற்றதுமான ப்ரஹ்மம் தோன்றுகிறது. ப்ரபஞ்சத்தோடு ஸத்விதீயமாகத் தோன்றும் ப்ரஹ்மத்தை, ப்ரபஞ்சமென்னும் தோற்றத்தைத் தள்ளி, நிஷ்ப்ரபஞ்சமாக (ப்ரபஞ்சமற்றதாக)ச் செய்," என்று வேதாந்தங்கள் மொத்தமாகச் சேர்ந்து ஓர் விதியை நமக்கு அறிவிப்பதாகப் பொருள் கொள்ளுகிறோம். ப்ரஹ்மத்தை ப்ரபஞ்ச சூன்யமாகச் செய்யவேண்டும் என்னும் இந்த அறிவை ஓயாமல் பாவனை செய்து ஆவ்ருத்தி செய்துகொண்டே வந்தால் ப்ரபஞ்சத்தின் தோற்றம் மெள்ளமெள்ள அகன்று கடைசியில் அடியோடுநசித்து ப்ரபஞ்சமற்றதாக அத்விதீயமாக ப்ரஹ்ம ஸ்திதி ஸித்திக்கும். வேதாந்தங்கள் உபதேசிக்கும் இந்த விதியை நாம் ஸர்வ காலமும் பாவனை செய்து அனுஷ்டித்துக்கொண்டே வந்தால் அந்த விதியை அனுஷ்டிப்பதால் ஓர் அத்ருஷ்ட மூண்டாகிஅந்த அத்ருஷ்டத்தின் சக்தியால் ப்ரபஞ்சம் அடியோடு தொலைந்து அத்விதீய ப்ரஹ்மமாயிருப்பது என்னும் மோக்ஷ ஸ்திதி ஸித்திக்கும். "ப்ரபஞ்சத்தோடு கூடியதாகத் தோன்றும் ப்ரஹ்மத்தை ப்ரபஞ்சமற்றதாக (ப்ரபஞ்ச சூன்ய கேவல ப்ரஹ்மமாக)ச் செய்" என்கிற விதியை வேதாந்தங்களிலிருந்து கல்பிக்கும் வழியைக் காட்டுகிறார்கள். அப்படி ஸாக்ஷாத்தாக ஒரு விதி வேதாந்தங்களில் காணப்படாவிட்டாலும், "த்ருஷ்டியைக் காட்டிலும் வேறான த்ருஷ்டா என்பவனைப் பாராதே. அறிவைக் காட்டிலும் வேறான அறிகிறவனை நினையாதே" என்ற வேதாந்த வாக்யத்திற்கு நிஷ்ப்ரபஞ்சீகரண விதியில் தாத்பர்யம் கொள்ளவேணும். "அறிவு ஒன்றுதான் ஸத்யம், மற்றதெல்லாம் அஸத்யம்" என்கிறார் ஸ்ரீ பராசரர். அறிவு ஸ்வரூபமான ப்ரஹ்

மத்தைக் காட்டிலும் வேறொன்றையும் பாராதே என்று இந்த க்ரியா ரூபவாக்யத்திற்குப் பொருள். "அறிவு ஸ்வரூபமாக ப்ரஹ்மத்தைப் பார்; அறிவைத் தவிர வேறான அறிகிறவன் என்னும் ஜ்ஞாதாவையும், அறியப்படும் ப்ரபஞ்சத்தையும் பாராமல் சூன்யமாக்கு" என்று இந்த வேதாந்த வாக்யத்திற்குப் பொருள் சொல்லுகிறார்கள். "நேஹ நாநாஸ்தி கிஞ்சந" (இங்கே பேதம் ஒன்றுமில்லை); "நேதி நேதி" (இது இல்லை இது இல்லை) முதலிய ப்ரபஞ்ச நிஷேத ச்ருதிகளிலிருந்தும் இப்படி ப்ரபஞ்சத்தை இல்லாமற் செய்யும் நிஷ்ப்ரபஞ்சீகரணக் கட்டளையைக் கொள்ளுகிறோம் என்கிறார்கள். நியோகம் என பதற்கு இரண்டு பொருள் உண்டு. கட்டளை செய்யும் விதி ஒன்று. அச் செய்கையை அனுஷ்டிப்பதால் உண்டாகும் அபூர்வம், அத்ருஷ்டம் என்னும் (பலம் கொடுக்கும்) சக்தி இரண்டு. இவ்விரண்டு அர்த்தங்களிலும் இந்த சப்தம் ப்ரயோகிக்கப்படுகிறது. ஸந்தர்ப்பத்திற்குத் தக்கபடி இவ்விரண்டு பொருள்களில் ஒன்றை இந்த சப்தத்தின் பொருளாகக் கொள்ளவேணும். நியோகமென்னும் விதிக் கட்டளைக்கு ஐந்து அம்சங்கள் உண்டு. ஓர் கட்டளை வாக்யத்தை யறிந்ததும் நான் இதில் சொல்லும் ஓர் ப்ரயோஜனத்தையுத்தேசித்து இந்தச் செய்கையைச் சொல்லும்படி ஏவப்படுகிறேன் என்று புத்தியுண்டாகும் ஓர் ப்ரயோஜனத்தை யுத்தேசித்து ஓர் கருமத்தை ஏவுவது நியோகம். யாகம் செய்யக் கடவன் என்று கேட்டவுடன் முதலில் எனக்கு ஒரு உத்திரவு உண்டாகிறது என்று ஓர் அறிவு உண்டாகும். நியோஜ்யனை (கட்டளையிடப்படுகிற) ஒருவனைக் குறித்து நியோகம் ஏற்படும். நியோகம் பிறக்கையிலேயே நியோஜ்யனும் அதற்கு அபேக்ஷிதனாக இருக்கவேணும். க்ரியை என்கிற செய்கையும், கர்த்தாவென்னும் செய்பவனும் பின்னல்தான் ஏற்படுகிறார்கள். முதலில் நியோகத்திற்கும் புருஷனுக்கும் உள்ள ஸம்பந்தம் நியோஜ்ய ஸம்பந்தந்தான். அதை 'ப்ரைஷ ப்ரைஷ்ய' ஸம்பந்தம் என்பர். யஜமானன் உத்திரவு செய்கிறார், நான் இப்படி ஏவப்படுகிறேன் என்கிற அறிவு முதலில் உண்டாவது. பிறகு அந்தச் செய்கையைச் செய்யும்போது அவனே கர்த்தாவாகிறான். ஏவப்படுகிறவன் முதலில் நியோஜ்யன்; பின்பு கர்த்தா; பின்பு பலத்தை யனுபவிப்பவன். ஆக ஒருவனுக்கே மூன்று அவஸ்தைகளில் மூன்று பெயர்கள். நியோகமென்னும் விதிக் கட்டளைக்கு ஐந்து அங்கங்கள் வேண்டும்:—

(i) எந்தவ்யாபாரத்தில் (விஷயத்தில்) ஏவப்படுகிறான் என்கிற அபேக்ஷையால் கட்டளையிடப்படும் செய்கை அந்தக்கட்டளை யென்னும் நியோகத்திற்கு விஷயம். இது ஓர் அங்கம். யாகம் முதலிய செய்கைகள் நியோகத்திற்கு விஷயம். நியோகத்திற்கு விஷயமான யாகம் முதலிய செய்கை பலத்தை உண்டுபண்ணுவதற்கு ஸாதனமாவதால் அந்த முறையில் அதுவே காரணமும் ஆகும்.

(ii) எவன் கட்டளையிடப்படுகிறான்; யாரைக்குறித்து இந்தக் கட்டளை; என்று அபேக்ஷை வரும். இந்தக் கட்டளையைச் செய்யும்படி ஏவப்படுகிறவன் நியோஜ்யன்.

(iii) கட்டளையிடப்படுகிறவனுக்கு என்ன விசேஷணங்கள் இருக்க வேணும். இன்ன விசேஷணங்களையுடையவன் இந்த விதிக்கு அதிகாரி என்று கூட்டவேண்டும். ஸ்வர்க்கத்தை விரும்புகிறவன் ஓர் யாகத்தைச் செய்யக்கடவன் என்றால் அந்த ஸ்வர்க்கத்தில் விருப்பமுள்ளவனும் யாகத்தைச் செய்யவேண்டியதற்கு தகுந்த க்ருஹஸ்தனை முதலிய யோக்யதைகளும் அதிகாரமாகும். அதிகாரத்துக்கு வேண்டிய நியோஜ்ய விசேஷணங்கள் ஓர் அங்கம். அடைய ஆசைப்படும் பலம் இந்த நியோஜ்ய விசேஷணங்களில் சேரும்.

(iv) யாகத்தைச் செய்யவேண்டிய முறைகள் 'செய்யும்முறை' என்ற 'இதிகர்த்தவ்யதை யாகும்'.

(v) கட்டளையிடப்படும் செய்கையை (நியோகத்தை) அனுஷ்டிக்கிறவன் ப்ரயோக்தா (கர்த்தா) எனப்படுவன். நியோஜ்யனுக்கே இது ஒரு அவஸ்தை. ப்ரஹ்மம் குணமற்றது என்றும், ப்ரபஞ்சமாகிய இரண்டாவது பொருளற்றது என்றும் சொல்லுகிற ச்ருதிகள் ப்ரபஞ்சத்தை சூன்யமாக பாவனைசெய்து தொலைக்கும்படி செய்து அப்ரபஞ்சம் அடியோடு தோன்றுமல் செய்வதை நமக்கு மோக்ஷோபாயமாக அறிவிக்கின்றதென்றும், ப்ரஹ்மத்திற்கு குணங்களையும் விபூதிகளையும் சொல்லும் வாக்யங்களையெல்லாம், குணங்களையும் த்வைதத்தையும் நிஷேதிக்கும் வாக்யங்களோடு, ஒரே வாக்யமாகச் செய்து குணங்களையும் விபூதிகளையும் பாதித்து ப்ரபஞ்சத்தை சூன்யம் செய்வதை, ப்ரபஞ்சமற்ற கேவலப்ரஹ்மமாக நிற்கும் நிலையாகிய மோக்ஷத்திற்கு உபாயமாக எல்லா வேதாந்தங்களும் சேர்ந்து ஒரே வாக்யமாக விதிக்கின்றன என்று இந்த வாதியின் கொள்கை. "மனோமயன் ப்ராண சரீரன் ப்ரஹ்மம்" என்றவிடத்தில் 'மனோமயன்' என்பதற்கு மனம் ஒன்றை மட்டும் உபாதியாய் உடையது, மற்றோர் உபாதியும் இல்லாதது என்று பொருள். ப்ராண சரீரம் என்பதற்கு ப்ராணன் ஒன்றை மட்டும் உபாதியாக உடையது; வேறு உபாதி ஒன்றுமற்றது என்று பொருள். மனோமயன் என்றதைக் கொண்டு ப்ராணனைத் தள்ளிவிடலாம். ப்ராணமயன் என்றதைக் கொண்டு மனதைத் தள்ளிவிடலாம். இப்படி ஒரோர் விசேஷணங்களைக் கொண்டு மற்றதெல்லாவற்றையும் தள்ளி நிர்குணம் அத்விதீயம் என்றதிலேயே நிலை நிற்கவேண்டும். இந்த நியோகத்திற்கு விஷயமென்ன? பலம் என்ன? என்கிற கேள்விகளுக்கு இரண்டு ப்ரகாரமாய் பதில் கூறுகிறார்கள். 'ப்ரபஞ்சத்தைத் தொலைத்தல் (இல்லை செய்தல்)' என்பது விஷயம், மோக்ஷம் பலம் என்று ஓர் பதிலின் ப்ரகாரம். ப்ரஹ்மஜ்ஞானம் விஷயம், ப்ரபஞ்சநிவ்ருத்தி

பலம் என்று மற்றோர் வழி. ஸ்வர்க்கத்தை விரும்புகிறவன் யாகத்தை அனுஷ்டிக்கவேண்டும் என்பதுபோல மோக்ஷ பலத்தை விரும்புகிறவன் ப்ரபஞ்ச நிவ்ருத்தியைச் செய்யவேணும் என்று விதி. இது எப்படிக் கூடுமென்றால் இருட்டில் குடமிருந்தால் அக்குடத்தின் ஸ்வரூபம் முதலியது தெரியாது. அப்பொருளைப் பார்த்து ஸ்வரூபம் முதலியதை அறிவதற்காக அதை மறைக்கும் இருட்டைத் தொலைக்கவேண்டும். ப்ரஹ்மத்தை ப்ரபஞ்சம் மறைக்கிறதன்றோ! ப்ரஹ்ம ஸ்வரூபத்தை யறியவிரும்புகிறவன் ப்ரபஞ்சமென்னும் இருட்டை தொலைக்கவேண்டியது தானே! மோக்ஷத்தில் ஆசை நியோஜ்யனை அதிகாரிக்கு விசேஷணம்.

III. முற்கூறிய வாதத்தை மீமாம்ஸகர் தூஷிக்கிறார். ப்ரபஞ்சத்தைத் தொலை என்று நீர் சொல்லும் விதியை ஸ்ருதிகளில் காணோம். அப்படி ஒரு விதியைக் கல்பிக்கிறோம் என்று நீர் சொல்லுவதும் இயலாது. விதிக்க வேண்டிய அங்கங்களும் நீர் ஆசைப்படும் விதிக்கு ஒட்டமாட்டாது. பல வித்யைகளில் பல விதிகளிருக்க எல்லா வேதாந்தங்களிலும் ஒரே விதி வாக்யந்தான் உளது என்று நீங்கள் சொல்லுவதும் ஒவ்வாது. நீங்கள் சொல்லும் நியோகத்திற்கு ப்ரஹ்மத்தை அறிவது என்கிற ப்ராஹ்ம ஜ்ஞானம் (செய்யவேண்டிய) விஷயம் என்று ஓர் பக்ஷம் சொல்லுகிறீர்கள் அந்தப் பக்ஷத்தில் ப்ரஹ்ம ஜ்ஞானத்தை அனுஷ்டிப்பதன் மூலமாய் ஏற்படும் அத்ருஷ்டத்தின் பலத்தைக்கொண்டு ப்ரபஞ்சத்தைத் தொலைக்கலாம் என்று சொல்லுகிறீர்கள். ஶாஸ்த்ர விதிபை அனுஷ்டிப்பதால் உண்டாகும் அத்ருஷ்ட பலத்தால் ப்ரபஞ்சம் தொலையுமானால் ப்ரபஞ்சம் ஸத்யமாகிவிடும். இந்தப் பக்ஷம் மிகவும் தர்பலமாதலால் இதை அதிகமாய் ஆதரிக்காமல் ப்ரபஞ்சத்தின் நிவ்ருத்தி தான் விதிக்கு விஷயம் என்று உங்களுடைய முக்ய பக்ஷமென்று சொல்லுகிறீர்கள். ப்ரபஞ்ச நிவ்ருத்தியே விதிக்கு விஷயமானால் விதியினால் ஸாதிக்கப்படவேண்டிய நிஷ்ப்ரபஞ்ச ப்ரஹ்மத்தன்மையைச் சொல்ல முடியாது. ஸாதனமாகிய விஷயமும் ஸாத்யமும் ஒன்றாகிவிடுமே. ஸேதுவின் தர்சனத்தால் உண்டாகும் அத்ருஷ்டத்தால் தொலையும் பாபம் ஸத்யமாவது போல் உங்கள் நியோகத்தின் அனுஷ்டானத்தால் ஸாதிக்கப்படும் அத்ருஷ்ட ஶக்தியால் தொலையும் ப்ரபஞ்சமும் ஸத்யமாகும். உண்மையில் இல்லாததும் நம்முடைய ப்ராந்தியால் கல்பிக்கப்படுவதுமான பொருள் தத்வ ஜ்ஞானத்தால் (உண்மையறிவால்) தொலையக்கூடும். உங்களுக்கு ப்ரபஞ்சம் பொய்யானதால் அது உங்கள் நியோகாத்ருஷ்டத்தால் தொலையுமென்று சொல்ல முடியாது. உண்மையாயிருக்கும் ஸம்ஸார பந்தம் ஈஶ்வர ஸங்கல்பமென்னும் அத்ருஷ்டத்தால் நீங்கும் என்று சொன்னால் அது யுக்தமாகும். உங்கள் பக்ஷத்தில் யார் நியோஜ்யன்? ப்ரபஞ்சத்திற்குட்பட்ட ஜீவனா? அதற்கு அதீதமான ப்ரஹ்மமா? இரண்டிலொன்றைத் தானே சொல்ல வேணும். ஜீவன் நியோஜ்யன் என்பீரேல் ப்ரபஞ்ச நிவ்ருத்தியென்னும்

பலம் வருகையில் அதற்குட்பட்ட அவனும் தொலையவேண்டி வரும். ஜீவன் தன் நாசத்தைத் தானே தேடுவானா? ப்ரஹ்மம் நியோஜ்யமென்று சொல்ல முடியாது. ப்ரஹ்மம் ஸாஸ்த்ர விதிக் கட்டளைக்கு உட்பட்டதல்லவே! ப்ரஹ்லாதர், ஸுகர் முதலிய ஞானிகள் முக்தரான பொழுது தொலைந்து போன ப்ரபஞ்சம் மறுபடியும் எப்படித் தோன்றுகிறது? இந்த ஆக்ஷேபங்கள் இந்த வாதியின் பேரில் ஸங்கர பாஷ்யத்திலும் பணிக்கப்பட்டன. அவருடைய அத்வைதத்தின் பேரிலும் இதே ஆக்ஷேபங்கள் வருகின்றன. நிஷ்ப்ரபஞ்சோபாஸன நியோகவாதி ஓர் வழியாக ப்ரஹ்மத்தை ஓர் விதிவாக்யத்திற்கு விஷயமாக்கி வேதாந்தங்களுக்கு ப்ரஹ்ம விஷயத்தில் ப்ராமாண்யம் ஸமர்த்திப்பதாகப் பேசின சுக்ஷியை மீமாம்ஸகர் நிராகரித்துவிட்டார்.

IV. அதன் பேரில் த்யானநியோகவாதி கிளம்புகிறார். இந்த மதத்தை ஸங்கர பாஷ்யத்திற்கும் ப்ராசீனமான வ்ருத்திகாரர் மதம் என்று ஸங்கர பாஷ்யத்தின் ப்ராசீன வ்யாக்யானங்களில் பேசுகிறார்கள். இதை அத்வைத ஏகதேசி மதம் என்றும் சொல்லுகிறார்கள். மண்டனமிச்ரர் க்ரந்தங்களில் இம்மதம் ஆதரிக்கப்பட்டுளது. "ஜீவ ப்ரஹ்மங்களுக்குள் பேதமில்லை, ஜீவன் ப்ரஹ்மமாகவே ஆகிவிடுவது முக்தி, ப்ரபஞ்சம் ஸத்யமல்ல" என்ற இந்த அம்சங்கள் அத்வைதத்திற்கும் இந்த மதத்திற்கும் பொது. தத்த்வமஸி வாக்யத்தைக் கேட்டதும் உண்டாகும் ஜீவ ப்ரஹ்மங்களின் அபேத அறிவினால் மட்டும் மோக்ஷம் உடனே லபித்துவிடும் என்னும் அத்வைதக் சுக்ஷியை இந்த வாதி மறுதளிக்கிறார். தன்னைத் வேற்றுமையல்லாத ப்ரஹ்மத்தை தான்என்றே இடைவிடாமல் கடைசி வரையில் த்யானம் செய்துவந்தால் அந்த த்யானத்தினால் தேஹம் நீங்கும்போது உண்டாகும் அத்ருஷ்டத்தால் ஸம்ஸாரம் நீங்கி மோக்ஷம் லபிக்கும். இப்படிப்பட்ட த்யானத்தை "ஆத்மானன்றே (தான்என்றே) உபாஸிக்கக்கடவன்," "ஆத்மாவையே போக்ய மாக உபாஸிக்கக்கடவன்," "விஸ்தாரமான ஆத்மாவைத் தேடவேண்டும், அதை விரும்பி அறியவேண்டும்" முதலிய வேதாந்த விதி வாக்யங்கள் விதிக்கின்றன. இந்த வாக்யங்கள் விதிக்கும் த்யானத்தை ஆயுள்முழுதும் அனுஷ்டித்தால் அதனால் ஏற்படும் அத்ருஷ்ட மஹிமையால் ப்ரஹ்மத்தின் ஸாக்ஷாத்காரம் ஏற்பட்டு முக்தனாகிறான். ப்ரஹ்மத்தைத் தான்என்றே உபாஸிக்கும்படி இந்த த்யான விதிகள் சொல்லுவதைக் கேட்டு ப்ரஹ்மத்தின் தன்மையை நன்றாய் அறிய ஆசை உண்டாகும்போது "விக்ஞானம் ஆனந்தம் ப்ரஹ்ம" "ஸத்யம் ஞானமனந்தம் ப்ரஹ்ம" முதலிய ப்ரஹ்ம ஸ்வரூப வாக்யங்கள் ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை நமக்கு உள்ளபடி தெரிவிக்கின்றன. ப்ரஹ்மத்யான விதியை அனுஷ்டிப்பதற்கு த்யானம் செய்யப்படும் பொருளின் ஸ்வரூபத்தை அவஸ்யம் அறியவேண்டும். இன்ன பொருள் என்று தெரியாமல் எப்படி த்யானம் செய்வது? விதியின் அனுஷ்டானத்திற்கு இன்றியமையாத லிங்கப் பொருள்களை விளக்கும் வேத வாக்யங்கள் அந்த லிங்கப் பொருள்கள்

விஷயத்தில் ப்ரமாணமென்று மீமாம்ஸகர்கள் ஒப்புகிறார்கள். "யூபத்தில் பசு வைக்கட்டுகிறான்" என்று சொல்லுமிடத்தில் யூபம் இன்ன மரத்தை செதுக்கி செய்யப்படுவது என்பதையுணர்த்தும் வாக்யங்கள் ப்ரமாணமே. நமக்கு உலகத்தில் தெரியாத யூபம் என்னும் வைதிகப் பொருளை உணர்த்தும் வேத வாக்யங்கள் ப்ரமாணமாவதுபோல இந்த த்யான விதிக்கு அவசியம் வேண்டியதும் நாம் உலகத்தில் அறியாததுமான ப்ரஹ்மமென்னும் பொருளின் ஸ்வரூபத்தைப் பற்றி உணர்த்தும் வேதாந்த வாக்யங்கள் உண்மையான ப்ரமாணமே யென்று சொல்லுவதில் என்ன தடை? த்யான விதிக்கு ஸௌகர்யமாக ப்ரஹ்ம ஸ்வரூப வாக்யங்கள் உண்மையான ப்ரமாணமாகவே ப்ரஹ்மத்தை யறிவிக்கின்றன. உபாஸனம் த்யானம் என்னும் ஜ்ஞானம் விதிக்கத்தக்கதே. ப்ரஹ்மமென்னும் பொருளை இடை விடாமல் நினைத்துக்கொண்டேயிருக்கவேண்டும் என்னும் செய்கையை விதிவாக்யம் விதிக்கலாம். அது ஒரு புருஷன் தன் ப்ரயத்னத்தால் செய்யக்கூடிய வ்யாபாரமே. ப்ரத்யக்ஷத்தால் ஏற்படும் ஜ்ஞானம் விதிக்கத்தக்கதல்ல என்பது உண்மையே. அதற்கு நம் ப்ரயத்தினம் வேண்டியதில்லை. அத்வைதிகளும் ப்ரஹ்மத்தின் உபாஸனத்தை விதிக்கலாமென்று ஒப்புக் கொள்ளுகிறார்கள். ஆனால் ப்ரஹ்ம விஷயமான தத்வ ஜ்ஞானம் விதிக்கு போக்யமல்ல என்கிறார்கள். ப்ரஹ்ம ஸ்வரூபத்தைச் சொல்லும் வேத வாக்யங்களைக் கேட்டு அந்த வாக்யங்களின் பொருளாக ப்ரஹ்மஜ்ஞானம் தானேயுண்டாகும் என்கிறார்கள். ப்ரஹ்ம ஸ்வரூபத்தைக் கேட்கவேண்டும் என்று ஸ்ரவணத்தை விதிப்பதோடு நிற்காமல் கேட்ட பொருளை மனனம் செய்யவேண்டுமென்றும், நிதித்யாஸனம் செய்யவேண்டுமென்றும் ஸாஸ்த்ரம் விதிப்பதால் தத்வமஸி வாக்யத்தைக் கேட்டதும் தத்வ ஜ்ஞானம் பிறந்து உடனே இங்கேயே முக்தனாகி விடுகிறான் என்று அத்வைதிகள் சொல்வது ஒப்பத்தக்கதல்ல என்று இந்த வாதியின் கக்ஷி. வேதாந்தங்கள் விதிக்கும் ப்ரஹ்ம த்யானத்தை, அதாவது ஐக்ய த்யானத்தை, ஆயுள் முழுதும் அனுஷ்டித்து இந்த த்யான விதியை அனுஷ்டிப்பதால் ஏற்படும் அத்ருஷ்ட ஸக்தியின் மஹிமையால் ஐக்யத்தின் ஸாக்ஷாத்காரம் ஏற்பட்டு ப்ரஹ்மமாகிறான் என்று கக்ஷி. த்யான விதியை அனுஷ்டிப்பதால் உண்டாகும் அத்ருஷ்டம் ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரத்தை உண்டுபண்ணி அதன் மூலமாக அவித்யை என்னும் ஸம்ஸாரத்தைப் போக்குகிறது என்று இந்த வாதி சொல்லும் பக்ஷத்தை ஸ்ரீ பாஷ்யத்தில் அனுவாதம் செய்யப்பட்டது. இந்த வாதத்தில் த்யானம் செய்கிறவன் கர்த்தா; ஸாக்ஷாத்காரம் செய்யும் அவனே நியோஜ்யன் (விதிக்கப்படுகிறவன்) அவித்யை தொலைவதென்னும் பலம் அநுகாரி விசேஷணம்; ப்ரஹ்ம த்யானம் என்பது விஷயம், அதுவே ஸாதனம் (சாதனம்); செய்யும் முறை என்னும் அங்கங்கள் சமம், தமம் முதலியன. பலம் இன்னது என்பதைப் பற்றி மூன்று விதமாகச் சொல்லுகிறார்கள். (i) ப்ரஹ்மமேயாகுதல் (ii) அவித்யை தொலைதல் (iii) ஐக்ய ஸாக்ஷாத்காரம்.

V. தத்வமஸி வாக்யத்தைக் கேட்டு அதன் பொருளான ஐக்யத்தை அறிந்தவுடனே மூக்தி ஸித்திக்காதென்றும், தேகம் விழும் வரையில் அந்த ஐக்யத்தை இடைவிடாமல் த்யானம் செய்துகொண்டுவந்தால் அதனால் ஏற்படும் அத்ருஷ்ட ஸக்தியால் மோக்ஷம் ஸித்திக்கும் என்கிற பக்ஷத்தை ஆக்ஷேபித்து ஸங்கரரின் அத்வைதம் கிளம்புகிறது. தத்வமஸி வாக்யத்தைக் கேட்பதனால் ப்ரஹ்மமென்னும் ஒரே உண்மைப் பொருள்தானே என்று உணர்ந்த பின் த்வைதமென்னும் ஸம்ஸாரம் எப்படி நிற்கும்? ஒன்றேயாயுள்ள பொருள் தான் என்று அறிந்த பிறகு செய்யவேண்டியது யாதளது? இரண்டாவது பொருள் என்பதே பொய், பேதமென்பதே பொய், தான் ஒருவனேயுளன் என்று அறிந்தவன் அதன் பின் என்ன செய்யவேண்டும்? ஸாஸ்த்ரம் விதிக்கும் செய்கைகளை அனுஷ்டிப்பதால் உண்டாகும் அத்ருஷ்டத்தால் ஏற்படும் பயனெல்லாம் பரிமிதமும் ஸ்வரமுமாகும். மோக்ஷமோ, நித்யமென்று எல்லா வாதிகளும் ஒப்புகிறார்கள். அத்ருஷ்டத்தால் ஸாதிக்கப்படும் மனுஷ்ய கந்தர்வர்கள் முதலியவரின் ஆனந்தங்கள் ஏற்றத் தாழ்ச்சியுடைய தென்று ஆனந்த மீமாம்ஸையில் காண்கிறோம். நம் ப்ரமத்தால் தோன்றும் பழுதைப்பரம்பு பழுதை என்கிற உண்மையறிவினால் எப்படித் தானாகவே ஓடிப்போகுமோ அப்படியே அத்விதீய ப்ரஹ்மத்தினிடத்தில் நம் அக்ஞானத்தால் கல்பிக்கப்பட்டுத் தோன்றும் ப்ரபஞ்சம் ப்ரஹ்ம விஷயமான தத்வ ஜ்ஞானத்தால் தானே ஓடிப்போகும். பொய்யான ப்ரபஞ்சத்தைத்தொலைக்க அத்ருஷ்டம் எதற்கு? பழுதைப் பாம்பைத் தடிகொண்டடிக்கவேணுமோ! அதைத் தொலைக்க மந்த்ர சக்தி வேண்டுமோ? ஸ்வபாவமாகவே எல்லோரும் முக்தர் தான். கேவலம் நம் அக்ஞானத்தால்தான் ஸம்ஸாரமென்னும் ப்ராந்தி நமக்கு ஏற்பட்டிருக்கிறது. தத்வ க்ஞானத்தால் அந்த ப்ரமம் நீங்கவே ஸ்வபாவமாயுள்ள ஸம்ஸாரமற்ற மோக்ஷத் தன்மை தானே ப்ரகாசிக்கும். மோக்ஷம் என்பது புதிதாக ஸாதிக்கப்படுவதல்ல. தத்வ க்ஞானத்தால் அக்ஞானம் நீங்கும் போதே அக்ஞானத்தால் மறைந்திருந்த நம்முடைய ப்ரஹ்ம ஸ்வரூபத்தன்மை தானே (ஸ்வயமாக) ப்ரகாசிக்கும். கண்ணுக்கு முன்னுள்ள குடத்தை ஒருவர் இக்குடத்தைப் பார் என்று சொன்ன பின்தான் அறியவேண்டுமோ! அறிவு ஏற்படுவதற்குவேண்டிய ஸாமக்ரியை இருந்தால் அறிவு தானே உண்டாகும். அறிவைக் கட்டளையிட அவசியமில்லை. வேதாந்தங்கள் ஸ்ரவணத்தையும், மனனத்தையும், த்யானத்தையும் செய்யவேண்டுமென்று விதிக்கும் கட்டளைகளைக் காண்கிறோமேயென்றால் அந்த வாக்யங்களுக்கு ஐக்ய அறிவை விதிப்பதில் தாத்பர்யமில்லை. ஆனால் அவற்றிற்கு என்ன தாத்பர்யமென்றால், ப்ரஹ்ம ஸ்வரூபத்தை நமக்கு ப்ரகாசிக்க வொட்டாமல் தடை செய்யும் பேத வாஸனையைத் தொலைக்கவேண்டுமென்று தான் கருத்து. வெளியே நோக்கும் தன்மையில் பழகிய அறிவை வெளியே போகாமல் தடுத்தால் அறிவின் ஸ்வரூபமான ப்ரஹ்மம் தானே ப்ரகாசிக்கும்.

அறிவே வடிவான ப்ரஹ்மம் அறியப்படக் கூடியதல்ல. 'அது ஸ்வயமாகவே ப்ரகாசிப்பது. அக்ஞானத்தைப் போக்கிவிட்டால் அதுதானே ப்ரகாசிக்கும். வேதாந்த சாஸ்த்ரமும் ப்ரஹ்ம ஸ்வரூபத்தை நேராக அறிவிக்கத்தக்கதல்ல. ப்ரபஞ்சம் பொய்யென்னும் விஷயத்தைத் தான் வேதாந்தங்கள் அறிவிக்கின்றன. ப்ரஹ்மம் அறிவிற்கு விஷயம் ஆகக்கூடாதது என்று சாஸ்த்ரங்கள் நமக்கு அறிவிக்கின்றன. தத்வஜ்ஞானம் பிறந்தவன் ஜீவன் முக்தனே. ப்ரபஞ்சம் பொய்யென்று அவனுக்கு நிச்சய ஜ்ஞானமிருப்பதால் தக்தபட்டை (எரிபட்ட துணியை)ப் போல ப்ரபஞ்சம் தோன்றினாலும் அதனால் ஒரு கார்யமும் உண்மையில் ஏற்படாது. நெருப்பில் எரிந்து போன வஸ்த்ரம் அதே உருவாகத் தோன்றினாலும் அதை எடுத்து உடுத்த முடியாது. ஜ்ஞானக்னியினால் தக்தமான ப்ரபஞ்சம் அதே உருவமாக மேலுக்குத் தோன்றினாலும் ஜ்ஞானிக்கு அதனால் யாதொரு அநர்த்தமும் விளையாது. 'தத்த்வமஸி' வாக்யத்தின் பொருளைத் தெரிந்து கொண்ட பின்னும் மேலுக்குத் தோன்றும் ப்ரபஞ்சம் உண்மை என்று ஒருவனுக்கு அனுபவத்திற்கு வருமாயின், அவனுக்கு அந்த வாக்யத்தின் அறிவு நன்றாக உண்டாகவில்லை யென்று சொல்லுவோம். ஐக்ய ஜ்ஞானம் வந்தவனுக்கு ஸம்ஸாரம் உண்மையல்லவென்று நிச்சயமாயிருப்பதால் அவன் அதைத் தொலைப்பதற்கு வேறு ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. இருட்டில் காலைச் சுற்றியிருக்கும் பழுதையைப் பாம்பென்று ப்ராந்தியிருப்பவன் பாம்பல்லவென்று தெரிந்த பிறகு பாம்பு என்கிற பயத்தை நீக்கச் செய்யவேண்டுவதென்ன? நம்மைச் சுற்றிக் கொண்டிருக்கும் ஸம்ஸாரப் பாம்பு பொய்யென்று உண்மையாக அறிந்தபின் மேலுக்கு என்ன தோன்றினாலும் அவையெல்லாம் பொய்யென்ற அறிவு இருப்பதால் அவன் ஜீவன் முக்தனேயாவான்.

VI. முன் சொன்ன அத்வைத பக்ஷத்தை எதிர்த்து த்யானநியோகவாதி கக்ஷி சொல்லுகிறார். 'ஜீவனும் ப்ரஹ்மமும் ஒன்றே. ஸம்ஸாரம் பொய்' என்று சொல்லும் ச்ருதி வாக்யங்களைக் கேட்ட பிறகும் ஸம்ஸாரம் தொலைகிறதில்லையென்று நாம் ப்ரத்யக்ஷமாய்க் காண்கிறோம். ஜீவன் முக்தியில்லை என்பது சாஸ்த்ர முகத்தாலும் ஏற்படுகிறது. 'தத்த்வமஸி' வாக்யத்தின் பொருளைக் கேட்ட பிறகும் அதை மனனம் செய்யவேண்டுமென்றும், ஆயுள் முழுதும் த்யானம் செய்யவேண்டுமென்றும், சரீரம் விழும் வரையிலும் மோக்ஷம் தாமதிக்குமென்றும், சரீர வியோக காலத்தில்தான் மோக்ஷம் கைகூடுமென்றும் சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. ப்ரத்யக்ஷத்தால் தோன்றும் ப்ரபஞ்சத்தை ப்ரத்யக்ஷம் போல் ஸ்பஷ்டமாய் ஏற்படும் ஐக்ய உணர்வுதான் பாதிக்கும். 'தத்த்வமஸி' முதலிய வேதாந்த வாக்யங்களால் ஏற்படும் ஐக்ய உணர்வு கேள்வியுணர்வுதான் ஆகும். அது ப்ரத்யக்ஷம் போன்ற உணர்வு ஆகாது. 'இங்கே குடம் இருக்கிறது' என்று எதிரில் உள்ள குடத்தைப் பற்றிப் பேசும் வாக்யத்தினால் குடத்தின் ப்ரத்யக்ஷம் உண்டாவதில்லை. குடம்

என்னும் ப்ரத்யக்ஷம் காக்ஷி உணர்வினால் தான் ஏற்படுகிறது. குடத்தைப் பார்த்தவனிருந்த ஒருவனுக்கு அதைக் காட்டுவதற்காக ஒருவன் ஒரு வாக்யத்தைப் பேசுகையில் கண் பார்வையால் ஏற்படும் காக்ஷியுணர்வும் 'குடத்தைப் பார்' என்கிற வாக்யத்தின் உணர்வும் ஒரே காலத்தில் சேர்ந்து அதிவேகமாய் உண்டாவதால் இரண்டு உணர்வுகளையும் நாம் கவனித்துப் பிரிக்கிறதில்லை. ஆயினும் இரண்டு உணர்வுகளும் வேறு தான் ஸப்தத்தால் ப்ரத்யக்ஷ உணர்வு ஏற்படுமென்று அத்வைதிகள் சொல்லுவதை இந்த வாதி ஒப்புக்கொள்ளவில்லை. 'தத்த்வமஸி' வாக்யத்தைக் கேட்டதனால் உண்டாகும் ஐக்ய அறிவை இடைவிடாமல் ஆவ்ருத்தி செய்துகொண்டே வந்தால் ஆவ்ருத்தியென்னும் அந்த த்யானத்தினால் கடைசியில் உண்டாகும் அத்ருஷ்ட ஸக்தியால் த்யானம் செய்து வந்த ஐக்யத்தின் தெளிவான ஸாக்ஷாத்காரம் ஏற்பட்டு ஒரே ஸத்யப் பொருளான ப்ரஹ்ம ஸ்வரூபனாகி முக்தனாகிறான் என்று இவர்கள் கொள்கை.

VII. இதன் பேரில் பேதாபேதவாதம் கிளம்புகிறது. பாஸ்கரர், யாதவப்ரகாசர் இருவரும் பேதாபேதவாதிகள். அந்த வாதத்தில் (1) ப்ரபஞ்சமென்னும் பேதம் ஸத்யம். தத்வ ஸாக்ஷாத்காரத்தால் மட்டும் அது நீங்காது. (2) ஜ்ஞானம், கர்மம் இரண்டும் சேர்ந்து மோக்ஷோபாயம். மோக்ஷ ஸாதனங்கள் இரண்டு, அந்த இரண்டு ஸாதனங்களுக்கும் இரண்டு ஸாத்யங்கள் உண்டு. ஜ்ஞானம் என்னும் ஸாதனம் ப்ரஹ்ம ப்ராப்திபைக் கொடுக்கும். ஜ்ஞானத்திற்கு அங்கமான நிஷ்காம கர்மானுஷ்டானம் ஸம்ஸாரமாகிய ப்ரதிபந்தகத்தைப் போக்கும். ஸம்ஸாரத்தைத் தொலைப்பதற்கு கர்மானுஷ்டானம் இப்படி உபயோகப்படுவதால் அது மோக்ஷ ப்ராப்திக்கு ஸஹகரிக்கிறது. ப்ரஹ்மத்திற்கும் ஜீவனுக்கும் அபேதம் (ஐக்யம்) ஸ்வாபாவிகம்; பேதம் தேஹம் என்னும் உபாதியைப் பற்றியது; ஆனால் அந்த உபாதி ஸத்யம். அசித்திற்கும் ப்ரஹ்மத்திற்கும் பேதம், அபேதம் இரண்டும் உண்டென்று யாதவர், பாஸ்கரர் இருவரும் சொல்லுகிறார்கள். சித்துக்களுக்கும் ப்ரஹ்மத்திற்கும் பேதம், அபேதம் இரண்டும் ஸ்வாபாவிகமென்று யாதவர் பக்ஷம்; அவற்றுள் அபேதம் ஸ்வாபாவிகம், பேதம் உபாதியைப் பற்றியது என்று பாஸ்கரர் பக்ஷம். 'கர்ம ஸமுச்சிதமான ஜ்ஞானத்தால் மோக்ஷம் என்று ச்ருதி சொல்லுவதால்'' என்கிற ஸ்ரீபாஷ்ய வாக்யம் பாஸ்கர பாஷ்யத்திலுள்ள வாக்யத்தை அப்படியே எடுத்தது.' முக்தியில் முக்தர்கள் ப்ரஹ்மத்தோடு ஒன்றாகவேயிருந்து ஈச்வரனுடைய ஸகல ஐச்வர்யங்களையும் அனுபவிக்கிறார்கள்; ஜகத் ஸ்ருஷ்டி வ்யாபாரம் முதலிய ஐச்வர்யங்களையும் ப்ரஹ்மத்தோடு ஒன்றாக முக்தர்களும் அனுபவிக்கிறார்கள் என்பது பாஸ்கருடைய முக்யக் கருத்தான பக்ஷம். மோக்ஷதசையில் முக்தர்கள் ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறாக இருக்கிறார்கள். அவர்களுக்கு ஜகத் ஸ்ருஷ்டி முதலிய ஐச்வர்யமில்லை என்கிற ஒரு பக்ஷமும் கடைசி அதிகரணத்தில்

ஸித்தங்களின் ஒரு பொருளாக பாஸ்கர பாஷ்யத்தில் காட்டியுளது. உப்பளத்தில் ஒரு குச்சியைப் போட்டால் அது முழுவதும் உப்பாக ஆகிவிடுவது போல தத்வ ஜ்ஞானமுள்ள ஜீவன் ப்ரஹ்மத்திற்குள் அழைந்ததும் ப்ரஹ்மமாகவே ஆகிவிடுகிறான்; 'ப்ரஹ்மத்தையறிந்தவன் ப்ரஹ்மமாகவே யாகிறான்' என்று தாயான ச்ருதி உபதேசிப்பதால் அதன் தலையில் பாரத்தைப்போட்டு நாம் அப்படியே ஒப்புக்கொள்ளவேண்டும்; அது எப்படிக்கூடும் என்று கேள்க்கக் கூடாது. யாதவரும் பாஸ்கரும் மாயா வாதத்தை தூஷிப்பவர்கள். ஸங்கர பாஷ்யத்தில் ஆரம்பணாதிகரணத்தில் பேதாபேதவாதத்தைப் பூர்வபக்ஷமாகக் காட்டி தூஷிக்கப்பட்டது. ஒரே ப்ரஹ்மம் ப்ரஹ்மமாகவும், சித்துக்களாகவும், அசேதன ப்ரபஞ்சமாகவும் விரிந்திருக்கிறது. இவற்றுக்குள் பேதம் அபேதம் இரண்டும் உண்டென்று சுருதி சொல்லுகிறார்கள். சேதன சேதன ப்ரபஞ்சம் முழுவதும் ப்ரஹ்மத்தோடு ஒன்றுமாகவேணும், வேறுமாகவேணும். ஒரே காரணத்திலிருந்து உண்டாகும் பல காரியங்கள் காரணத்தோடு ஒன்றென்னும்படி காரண ஸ்வரூபமாயிருப்பதைக் கொண்டு ஒன்று (அபின்னம்) என்றும், தங்கள் தங்கள் வ்யக்தி (தனிப்பொருள்) ஸ்வரூபத்தால் வெவ்வேறு என்றும், பேசக்கூடும். மண், குடம், வாணலி பொம்மை முதலிய மண் பொருள்கள் மண் என்னும் காரண ஸ்வரூபத்தால் ஒன்று என்றும், கார்யமாகிய தத்தம் தனி ஸ்வரூபத்தால் வேறு என்றும் பேசுகிறோம். மரத்தின் கிளைகள் ஒன்றோடொன்று வேறு; ஆனால் மரப் பொருள் ஒன்று. காரணத்தோடு ஒன்றென்கிற அம்சத்தால் ப்ரஹ்மத்தோடு ஒன்றாகி மோக்ஷம் லபித்திக்கும்; கார்யங்களாகப் பல என்கிற அம்சத்தால் ஸகல ஸம்ஸார வ்யாபாரங்களும் சாஸ்த்ரத்தின் கர்ம விதிகளும் மோக்ஷ விதிகளும் ஒட்டுகின்றன. காரண ப்ரஹ்மத்தை இடைவிடாமல் த்யானித்தால் அதோடு ஐக்யம் லபித்திக்கும். ஸங்கர பாஷ்யத்தில் இந்த அதிகரணத்தில் பேதாபேத மதத்தை எடுக்கவில்லை. ஆனால் அதன் வ்யாக்யானமான பஞ்ச பாதிகைக்கு வ்யாக்யானமான விவரண க்ரந்தத்தில் ஜீவர்கள் ப்ரஹ்மத்தோடு ஒன்றுமாவார், வேறுமாவார் என்கிற பேதாபேத வாதத்தை அனுவாதம் செய்து தூஷித்திருக்கிறது. ஜாதி வ்யக்திகளைப் போலும், குணகுணிகளைப்போலும், கார்ய காரணங்களைப் போலும் பேதம் அபேதம் இரண்டையும் கொள்ளலாமென்று அந்த வாதியின் பக்ஷத்தைக் காட்டியிருக்கிறது. "இந்தப் பக்ஷம் இன்னும் அதிகப் பாபமானது (பாபீயான்)" என்று விவரணகார் பணிப்பு. அத்வைத பக்ஷத்தில் ப்ரஹ்மத்திற்சே அஜ்ஞானத்தை ஒப்புவதால் அத்வைதம் பாபமான பக்ஷம் என்று பேதாபேதவாதி தூஷித்ததற்குப் பதிலாக "உங்கள் பக்ஷம் இன்னமும் அதிக பாபமானது" என்று விவரணகார் பதில். "அத ஏவ பாபீயாநயம் பக்ஷ:" என்று விவரண வாக்யம். வேதார்த்த ஸங்க்ரஹத்தில் ஸ்ரீ பாஷ்யகாரரும் பேதாபேத வாதத்தைப் பற்றி அதே ப்ரகாரமாக "பாபீயாநயம் பக்ஷ:" என்று ஸாதித்தார்.

VIII. பேதாபேதவாதத்தை த்யானநியோகவாதி முகமாக நிரஸிக்கிறார். பல வ்யக்திகள் ஒரே ஜாதியாயிருப்பதால் ஒன்று; வேறு வேறு வ்யக்தியாயிருப்பதால் வேறு என்கிறார்கள். ஜாதியில் ஒற்றுமை, வ்யக்திகளில் வேற்றுமை என்றால் வேற்றுமை வ்யக்திகளிலும், ஒற்றுமை ஜாதியிலும் என்று வேறு வேறு பதார்த்தத்தில் தானே இரண்டும் ஏற்படுகிறது. ஒன்றிலேயே பேதம் அபேதம் இரண்டும் ஏற்படவில்லையே. ஜாதி வ்யக்தி இவை இரண்டிற்குள் பேதமா, அபேதமா, அல்லது இரண்டுமா? ஒன்றுக்கொன்று விருத்தமான பேதம், அபேதம் இரண்டும் ஒரே பொருளில் கூடியிருக்கலாம் என்று சொல்லும் ஓர் பக்ஷத்தை தூஷிப்பதற்கே வெட்கமாயிருக்கிறதென்று ந்யாயலிதாஞ்சனத்தில் ஸாதிக்கப்பட்டது. ப்ரஹ்மத்திற்கும் சேதனசேதன ப்ரபஞ்சத்திற்கும் பேதாபேதங்களைச் சொல்லுவதால் ஸாத்த ப்ரஹ்மம் என்பதே இல்லாமற் போகும். ஜீவனும் ப்ரஹ்மமும் ஒன்றுமாவார், வேறுமாவார் என்று சொல்லுகிறீர்கள். ஜீவனும் ப்ரஹ்மமும் ஒன்றென்பது ஸத்யமென்கிறீர்கள். அப்படியாயின் ப்ரஹ்மம் எப்படி ஜீவனுக்கு உபதேசிப்பது? தனக்குத் தானே ஒருவர் உபதேசித்துக்கொள்ளுவரோ? தானே குருவும் சிஷ்யரும் ஆவரோ? அத்வைத பக்ஷத்தில் அர்ஜுனனுக்கு கண்ணன் கீதையை உபதேசிப்பது என்பதே ஒட்டாது என்று கீதா பாஷ்யத்தில் விஸ்தாரமாக விளக்கப்பட்டது, இந்த ஆக்ஷேபத்தையே பேதாபேத வாதத்தின் பேரில் விவரணகார் பணித்திருக்கிறார். அதே தோஷம் அவருடைய அத்வைத பக்ஷத்தின் பேரிலும் வருகிறது. அப்படியே "ஒரு ஜீவன் ஜ்ஞானம் முற்றி முக்தனானால், உலகமே இல்லாமற் போகவேணும்; அல்லது எல்லா ஜீவர்களுக்கும் ஜ்ஞானம் முற்றி முக்தி வரும் வரையில் ஒருவரும் முக்தராகக் கூடாது, என்னும் ஆக்ஷேபங்களும் விவரணத்தில் பேதாபேதவாதத்தின் பேரில் கூறப்பட்டன. இந்த ஆக்ஷேபங்கள் அத்வைதத்தின் பேரிலும் உண்டு. முன்பு காட்டிய வழியாக த்யான விதிக்கு ஸௌகர்யமாக த்யானம் செய்யவேண்டிய பொருளைக் காட்டிலும் ப்ரஹ்ம ஸ்வரூப வாக்யங்களுக்கு ப்ரஹ்ம ஸ்வரூப விஷயத்தில் ப்ராமாண்யம் உண்டு என்று த்யானநியோகவாதி தன்னுடைய பக்ஷத்தை நிகமனம் செய்கிறார்.

IX. மீமாம்ஸகரான இவ்வதிகரண பூர்வ பக்ஷி த்யானநியோகவாதத்தின் பேரில் கக்ஷி சொல்லுகிறார். ப்ரஹ்மத்தை த்யானம் செய்யும்படி விதித்திருக்கும் த்யானவிதியைக்கொண்டு த்யானம் செய்யவேண்டிய ப்ரஹ்மத்தின் ஸ்வரூப ஸ்வபாவத்தைப் பற்றிச் சொல்லியிருப்பதெல்லாம் ப்ரமாணமென்று கொள்வது யுக்தமல்ல, ஸ்மரிக்கவேண்டிய பொருளைப் பற்றி இன்ன ஆகாரத்தோடு ஸ்மரிக்கவேண்டுமென்று சொல்லவேண்டியது அவசியமே, ஆனால் இன்ன ஆகாரத்தோடு ஒன்றை த்யானம் செய்யென்று இல்லாததையும் த்யானிக்கச் சொல்வதுண்டு: 'மனதை ப்ரஹ்மமாக உபாஸிக்கக்கடவன்' என்று த்யான விதி உளது. மனது ப்ரஹ்மமென்பது உண்மையல்ல. அப்படி

யிருந்தும் ஸாஸ்த்ரம் சொல்லும் அந்த விதிப்படி மனதை ப்ரஹ்மமென்று உபாஸித்தால் கீர்த்தி முதலிய பலங்கள் அத்ருஷ்ட ரூபத்தியால் கிடைக்கும். ப்ரஹ்மத்தைப்பற்றி வர்ணிக்கும் கதைகளைக் கேட்ட மாத்திரத்தால் ஸந்தோஷமுண்டானாலும் அதைக் கொண்டு மட்டும் ப்ரஹ்மத்தைப் பற்றிய பேச்செல்லாம் உண்மையென்று நிஷ்சயிக்கமுடியாது.

X. 'வேதாந்த ஸாஸ்த்ரத்தால் ப்ரமாணமாக அறிவிக்கப்படுதல்' என்னும் 'ஸாஸ்த்ர யோநித்வம், ப்ரஹ்மத்திற்கு உள்ளதே; ஏனெனில் ப்ரஹ்மம் வேதாந்தவாக்யங்களோடு ஸ்வயம் நிகரற்ற ஸர்வோத்க்ருஷ்டப்ரயோஜனமாக அன்வயிக்கிறது. ஸூத்ரத்தில் 'அது' என்பது மூன் ஸூத்ரத்தில் சொன்ன 'ப்ரஹ்மத்தின் ஸாஸ்த்ர யோநித்வத்தை'க் குறிக்கிறது. ப்ரவ்ருத்தியும் நிவ்ருத்தியும் தான் ப்ரயோஜனமூல்லனவாக ஸாஸ்த்ரத்தோடு அன்வயிக்கும் என்று மீமாம்ஸகர் கூறி. ப்ரயோஜனமூள்ள பொருளாக ஸாஸ்த்ர வாக்யத் தோடு ஒரு பொருள் அன்வயித்தால்தான் அந்தப் பொருள் விஷயத்தில் ஸாஸ்த்ர வாக்யம் ப்ரமாணமாகும் என்பதை ஒப்புக் கொள்ளுகிறோம். கர்ம காண்டத்தில் யாகங்களைச் செய்தால் ஸ்வர்க்காதி பலங்கள் கிடைக்கும் என்று சொல்லும் வாக்யங்களில் யாகங்கள் ப்ரயோஜனமூள்ளதாயிருப்பதால் சொல்லும் பொருளில் அந்த வாக்யங்களுக்கு ஸாக்ஷாத்தாக ப்ராமாண்யமுண்டு என்று சொல்லுகிறீர்கள். யாகச் செய்கைகளைக் கேட்டு அறிந்தவுடனே ப்ரயோஜனம் கை கூடாது எத்தனையோ கஷ்டப்பட்டு யாகத்தைச் செய்து வெகு காலங்கழித்து இந்த தேஹம் நீங்கின பிறகு ஸ்வர்க்க பலம் கை கூடலாம், அப்படிக் கிடைக்கும் ஸ்வர்க்க பலமும் பரிமிதமும் நஸ்வரமுமானது, இப்படி சிர காலங்கழித்து எவ்வளவோ ச்ரமப்பட்டுச் செய்யும் செய்கைகளுக்கு மிக ஸ்வல்ப ப்ரயோஜனம் கிடைப்பதை அறிவிக்கும் வேத வாக்யங்கள் ஸாக்ஷாத்தாக ப்ரமாணமென்று சொல்லுகிற நீங்கள் மாதர பிதா ஸ்மரணம் ஸுஹ்ருத்தாயும், ஸ்வயம் ஆனந்தகனமாயும், எல்லையற்ற ஆனந்தகுணக் கடலாயும் இருந்துகொண்டு தமக்கு ஸமமாகவே நமக்கும் அவ்வானந்தத்தை யளித்து தானும் ஆனந்திக்கக் காத்துக்கொண்டிருப்பதாயும், இந்த ஸம்ஸாரக் காட்டிலிருந்து நம்மை மீட்டுத் தம் வீடு சேர்ப்பதற்கே கங்கணம் கட்டிக் கொண்டிருப்பதாயும் உள்ள ஸர்வ வித பந்துவுமான ஓர் ஈச்வரப் பொருளை நமக்கு அறிவிக்கும் ஸாஸ்த்ரம் ப்ரயோஜனமற்றது, ஆகையால் ப்ராமாண்ய மற்றது என்று நீங்கள் சொல்லுவது உசிதமோ? அத்யந்தம் காரித்ரியத்தால் வருந்திக்கொண்டிருந்த தருவனுக்கு உன் தகப்பனார் ராஜா? நீ ராஜபுத்ரன்; உனக்கு ராஜ போகங்களைக் கொடுத்துத் தம்மோடு கூடவே தம் வீட்டில் வைத்திருக்கவேண்டுமென்ற ஆசையுடன் உன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று சொல்லும் ஆப்த வாக்யம் ப்ரயோஜனமற்றதாகுமோ? ஸர்வேச்வரனே பிதா; தேவதேவனான ஹரி எல்லோருக்கும் பிதா என்று ஸாஸ்த்ரங்கள் பித்ருபுத்ராதி ஸம்பந்தங்களை அறிவிக்கின்றன.

'எல்லையற்ற நிரதிசயமான ஆனந்தத்தையுண்டுபண்ணும் பரப்ரஹ்மம் உளது என்னும் வாக்யமே ப்ரயோஜன பர்யவஸாயியாகும்' என்று ஸ்ரீ பாஷ்யம். குழந்தைப் பருவத்தில் காட்டில் தவறிப்போன ராஜகுமார தருஷ்டாந்தமும், 'உன் வீட்டில் புதையல் இருக்கிறது' என்று சொல்லும் நிதி வாக்ய தருஷ்டாந்தமும் ஸ்ரீ பாஷ்யத்தில் இந்த அதிகரணத்தில் உதாஹரிக்கப்பட்டன. பரம புருஷார்த்தமும் பரம ஸுலபமும் ஸர்வவித பந்துவுமான ப்ரஹ்மமென்னும் தத்வத்தை நமக்கு அறிவிக்கும் ஸாஸ்த்ர வாக்யங்கள் ப்ரயோஜனமுள்ள பொருளை அறிவிக்கவில்லையென்றும், ப்ரமாணமல்லவென்றும் குழந்தைகளை ஏமாற்றுவதற்குப் பொய்யாக ஆசை காட்டும் வாக்யங்களைப் போல்வனவென்றும், மீமாம்ஸகர்கள் சொல்லும் கக்ஷியை அனுவாதம் செய்கையில் ஸ்ரீ பாஷ்யகாரரும் அதைப் பொறுக்கமாட்டாமல் மீமாம்ஸகர்கள் இப்படிப் பேசுவது "ராஜகுலத்தில் வளித்து ராஜ போகங்களை ராஜாவுடன் அனுபவிப்பவனுக்கு கைலேயக குலத்தில் ப்ரவேஸம் கிடைக்காததினால் அவன் ப்ரயோஜன சூந்யனாவான் என்பதைப் போன்றதேயாகும்" என்று அருளிச் செய்தார். கைலேயகமென்பது 'ஸ்வா'வைச் சொல்லும்; குலக்ரமாகதமான பாத்திய முறையையும் சொல்லும். கைலேயக குலமென்பதற்கு ஸ்வாவின் குலமென்றும், வேட்டைக்காக ஸ்வாக்களை வளர்க்கும் வேடுவர் குலமென்றும் பொருள் உரைக்கப்பட்டுளது. மீமாம்ஸகர்கள் கொண்டாடும் ஸ்வர்க்கபலம் இவ்விரண்டிற்கும் தூல்யமென்று ஸ்ரீ பாஷ்யகார் திருவுள்ளம். யாகங்களைச் செய்து ஸ்வர்க்கங்களை படைகிறவன் தேவதைகளுக்குப் பசு (உழைக்கும் ஜந்து) என்றும், அவனை அவர்கள் பக்ஷிக்கிறார்கள் என்றும் வேதம் சொல்லுகிறது. ப்ரஹ்ம வித்யை யில்லாதவன் பசுவுக்கு ஸமானம். வளர்க்கப்படும் ஸ்வாக்களுக்கு நல்ல உணவுகள் கொடுக்கப்பட்டாலும் அவற்றின் வ்ருத்தி ஊழிய வ்ருத்தியே. ஸேவையை ஸ்வவ்ருத்தி என்பர். ஸேவிக்கப்படும் தேவதைகள் இவரிடத்தில் உண்மையான ப்ரீதியில்லாமல் தங்களுக்கு வேண்டிய ஊழியத்தை மட்டும் வாங்கிக்கொண்டு புண்யம் ஒய்ந்த காலத்தில் இவனைக் கீழே தள்ளிவிடுகிறார்கள். ஈஸ்வரனே தான் ஸேஷியாகவிருந்தும் ஸேஷர்களான முக்தர்களைத் தம்முடைய ஆத்மாவைப்போல் அபிமானிப்பவர். ஒருக்காலும் அவன் பிரிவைப் பொருக்கமாட்டார். தன் வீட்டிலிருந்து அவனை கீழே ஸம்ஸாரத்திற்குத் திருப்பமாட்டார். "பிறை கொடுக்கிலும் போகவிடார்". கைலேயகனென்னும் பதத்தால் ராஜகுலம் இவனுக்கு வாஸ்தவத்தில் பிறவிக் குலமாயிருந்து ராஜ போகங்களை இவனுக்கு தாயப்ராப்தமான கைலேயகமாயிருந்தும் குல ப்ராப்தமான அந்த கைலேயக பாத்யத்தைத் தள்ளி கைலேய பதத்தின் மற்றோர் பொருளான ஸ்வாவின் குலத்தில் புஜிப்பதே பரம பாக்யமென்று நினைக்கிறானேயென்று பரிஹாஸத்திலும் திருவுள்ளம். குழந்தைப் பருவத்தில் தவறிப்போன ராஜகுமார தருஷ்டாந்தத்தை, ஸ்ரீ பாஷ்யத்தில் பிதாவாகிய ஈஸ்வரனும் ஜ்ஞானம் வந்த புத்ரனாகிய ஜீவனும் பரஸ்பரம் கூடி ஸமன்விதராகி இருவரும் பேரின்பமடைகிறார்

களென்று வெகு அழகாக ஸாதிக்கப்பட்டுள்ளது. ப்ரஹ்மமாகிய தகப்பனைப் பற்றிக் கேள்விப்படும் ஜீவனுகிய புத்ரன் தன்னுடைய ப்ரியமான பிதா ஸர்வேச்வரனென்று கேட்டு "நிரதிசயஹர்ஷ ஸமந்வித"னாக ஆகிறான்; ஆசார்யர்களால் இந்தப் புத்ரனுடைய அனுபவாகத்தைப் பற்றிக் கேட்ட பிதாவான ஈச்வரனும் "அவாப்த ஸமஸ்த புருஷார்த்தனாக ஆகிறான்; அதனைக் கொண்டதானே ப்ரயத்னம் செய்கிறான்; பிறகு அவ்விருவரும் அழகாக ஸங்கமத்தை யடைகிறார்கள்" என்று ஸாதிக்கிறார். இங்கே ஜீவன் நிரதிசய ஹர்ஷ ஸமன்விதனாகிறான் என்றதால் ஸ்ருத்ரத்தில் "ஸமன்வயாத்" என்பதற்கு அதிகாரியான ஜீவனுக்கு நிரதிசய ஸந்தோஷ ஸமன்வயம் ஏற்படுவதை அழகாக விளக்கப்படுகிறது. ஈச்வரனும் இச்சேர்க்கையால் அவாப்த ஸமஸ்த புருஷார்த்தனாகிறான் என்றதால் அவனுக்கும் உயர்ந்த ப்ரயோஜன லாபத்தை விளக்குகிறது. பிறகு இருவரும் அழகாகச் சேருகிறார்கள் என்றதால் ஜீவேச்வர்களுடைய ஸங்கமமென்னும் பரஸ்பர ஸமன்வயமும் ஸ்ருத்ர பதத்திற்கு அழகாகப் பொருள் கூடுவதையும் ஸ்ரீசிக்கிறார். இந்த ஸமன்வய அதிகாரத்தில் எல்லாம் அழகாக பரம ப்ரயோஜனத்துடன் அன்வயித்துக்கூடும் ரஸத்தை ஸ்ரீசிப்பதில் திருவுள்ளம். குழந்தைகளுக்கு ஆசை காட்டப் பொய்யாகச் சொல்லும் வார்த்தைகள் பொய்யென்று சிக்ரம் ஏற்பட்டுவிடுமாகையால் அந்த வார்த்தைகள் ப்ரயோஜனமுடையவை வென்று சொல்லவே முடியாது. அந்த த்ருஷ்டாந்தத்தைக் கொண்டு நமக்கு இனிமையாக ப்ரஹ்ம ஸ்வரூபத்தைச் சொல்லும் வாக்யங்களும் அப்ரமாணமாகலாமென்று சொல்லமுடியாது. ஸாஸ்த்ரம் சொல்லும் இந்தப் பொருள்களுக்கு என்றைக்கும் பாதம் (ஸ்தாயம்) வருவதில்லை. ஸ்வர்க்காதி பலங்களைச் சொல்லும் வேத வாக்யங்களை எப்படி நம்புகிறீர்களோ, அப்படியே இந்த வேதாந்த வாக்யங்களையும் நம்புவதற்கு என்ன தடை. கர்ம காண்டங்களில் வாயு முதலிய தேவர்களைப் பற்றி சொல்லியிருக்கும் அர்த்த வாதங்கள் ஸ்வயம் ப்ரயோஜனமாகாமல் வாயு தேவதை விஷயமான யாகத்தை திதிப்பதனால் மட்டும் ப்ரயோஜனமுடையனவாகின்றன; தம்மாலேயே ஸ்ப்ரயோஜனமாகவில்லை. ப்ரஹ்ம ஸ்வரூபத்தைச் சொல்லும் வேதாந்த வாக்யங்கள் பரம புருஷார்த்தமான ஆனந்த ப்ரஹ்மத்தை யறிவிப்பதால் ஸ்வயம் ப்ரயோஜனமுடையனவானபடியால் கர்மகாண்ட அர்த்தவாதங்களைப் போல சொல்லும் பொருளில் தாத்பர்யமில்லையென்று சொல்லமுடியாது. ஆகையால் "எதிலிருந்து இதெல்லாம் உண்டாகிறதோ" என்கிற தைத்தீய லக்ஷண வாக்யம் ஸர்வ ஜகத்திற்கும் ஒரே காரணமாயும், தோஷலேசமற்றதாயும், ஸகல கல்யாண குண பரிபூர்ணமாயும், எல்லையற்ற ஆனந்தமுமான ப்ரஹ்மம் உளதென்று பூர்ண தாத்பர்யத்தோடு நிரூபிக்கிறதென்பது ஸித்தம் என்று இவ்வதிகரணம் ஸ்ரீ பாஷ்யத்தில் நிகமனம் செய்யப்படுகிறது. "ஸ்வகலேக மருகீம் ஹரீகரம் ஸ்வகரீராவ்ருதாமிவ" என்று ஸுந்தர காண்டத்தில் அசோக வனத்தில் ஸிம்ஸுபா வ்ருக்ஷத்தடியில் ராக்ஷஸீகணங்களால் சூழப்பட்டு தன்னுடைய

ஸ்வந்த ராஜகுலமான பெருமாள் ஸந்நிதியைப் பிரிந்திருந்த பிராட்டியை வேட்டை நாய்க் கூட்டங்களால் சூழப்பட்டுத் தன் ஸ்வந்த ஜாதுகணமான மான் கூட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு வருந்தும் மான் பேடுக்கு ஸமமாக வர்ணித்திருப்பதை எம்பெருமானார் திருவுள்ளத்திற்கொண்டு ஸ்வ குலமான ராஜகுல வாஸத்திற்கு எதிர்த்தட்டாக கௌலேயகங்களென்னும் ஸ்வாக்களின் கூட்டத்தின் நடுவில் வஸிப்பதின் நிகர்ஷத்தை அருளிச் செய்ததாகவும் நினைக்கலாம். பெருமாளுடைய ராஜகுலத்திலிருந்து நழுவி ராஜபோகங்களையும் இழந்து ஸம்ஸார ஸமுத்ரத்தால் சூழப்பட்ட 'லங்கை' என்னும் தேசச் சிறையில் அகப்பட்டு வருந்தும் ஜீவனை 'லங்காருத்தவிதேஹராஜதநயா ந்யாயேந லாலப்யதே' என்றபடி லங்கையில் சிறையிருந்த பிராட்டிக்கு ஒப்பிடுவதுண்டு. ஈதை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு பெருமாளோடு ஸமன்விதமான தசைபோல ஜீவனும் ஸம்ஸாரச் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு பெருமாளோடு ஸமன்வயத்தைப் பெற்று வாழவேண்டுமென்று ஸ்ரீபாஷ்யகாரர் திருவுள்ளம். சிறையிலிருந்து விடுவிக்கும் ஈஸ்வரனும், விடுவிக்கப்பட்டுச் சேர்த்துக் கொள்ளப்படும் சேதனனும் ஆனந்த ஸமன்விதராகிறார்கள் என்பதையும் இந்த ஸமன்வயாதிகரணத்தில் எம்பெருமானாரால் அழகாக அருளிச் செய்யப்பட்டது.

ஸமந்வயாதிகரணச்சுருக்கம்
முற்றிற்று

கூரகுலாதிபர் திருவடிகளே சரணம்.